1937-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரை
ஏழாயிரம் பக்கங்களில் ஏழு பாகங்களாக
வெளிவந்த முதல் தமிழ் தஃப்ஸீர்

தப்ஸீருல் ஹமீத்
ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

1-ம் பாகம்

இரண்டு சூராக்கள் கொண்டது

ஆசிரியர்
சன்மார்க்க மூதறிஞர், அல்லாமா, மர்ஹூம்,
எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)
உத்தமபாளையம்

வெளியீடு
பனைக்குளம்
ஹாஜி. சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷுஐப்
கோலாலம்பூர், மலேஷியா.

ஆசிரியர் : உத்தமபாளையம் மௌலானல்ஹாஜ், அல்லாமா எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)

- 1933-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ந் தேதி திருக்குர்ஆனை தமிழில் மொழி பெயர்க்க ஆரம்பித்து 16 மாதங்களில் எழுதி முடித்தார். இம்மொழி பெயர்ப்பின் 10 ஜுஸ்வுக்களுடைய மொழி பெயர்ப்பு 1934ம் ஆண்டு கூத்தாநல்லூர் சாந்தி பிரகடன சபையால் திருமறைத் தமிழுறை எனும் பெயரில் வெளியிடப்பட்டது.
- 1937-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரை 7000 பக்கங்களில் ஏழு பாகங்களாக திருக்குர்ஆனுக்கு தமிழில் முதன் முறையாக விரிவுரை தந்தவர்.
- திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புப் பணியில் அல்லாமா, ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.
- 1930-களில் காதியானிகளுக்கு எதிராக மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் நடத்தி தமிழ் நாட்டில் காதியானிகளை வேரூன்ற விடாமல் தடுத்தவர். இப்பணியில் 70 உலமா பெருமக்கள் பங்கு பெற்று ஊர்ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தனர்.
- தமிழ்நாட்டிலுள்ள அரபுக் கல்லூரிகள் அனைத்தும் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் இணைய வேண்டும் என்பதற்காக மஜ்லிசுல் மதாரிசுல் அரபிய்யா எனும் சபையைத் தோற்றுவித்தவர்.
- சிங்கப்பூரில் தென்னிந்திய ஜம்இய்யத்துல் உலமா சபையைத் தோற்றுவித்து, அதன் கௌரவத்தலைவராக இருந்தவர்.
- ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளிகள் உருவாகக் காரணமானவர்.
- திருச்சி ஆல் இண்டியா ரேடியோவின் சன்மார்க்கச் சொற்பொழிவாளர்.
- சந்திரிகா மலையாள தினசரிப் பத்திரிக்கையின் வளர்ச்சிக்கு கேரள முன்னாள் முதல்வர் சி.ஹெச். முஹம்மது கோயா, பாபக்கி தங்ஙள் ஆகியோருடன் பாடுபட்டவர்.
- சைஃபுல் இஸ்லாம், ஹிஃபாஜத்துல் இஸ்லாம், பிரஸண்ட மஹா விகடன், மலாயா நண்பன் போன்ற இதழ்களின் துணை ஆசிரியர்.
- புகாரீ, நேர்வழி ஆகிய மாத இதழ்களின் ஆசிரியர்.
- ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லீம், கன்ஜுந்தக்காயிக், ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட நூற்களை தமிழில் மொழி பெயர்த்தவர்.
- மலேஷியா, சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன், ஸ்ரீலங்கா மற்றும் மேற்காசிய நாடுகளுக்குச் சென்று சன்மார்க்கப் பணி ஆற்றியவர்.

மற்றும் பல பத்திரிக்கைகள், மலர்கள் ஆகியவற்றில் கட்டுரைகள் பல....

بسم الله الرّحمن الرّحيم

الحمد لله الذي نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله فلا مضل له ومن يضلل فلا هادى له ونشهد ان لا اله الا الله وحده لا شريك له ونشهد ان محمدا عبده ورسوله

முன்னுரை

திருக்குர்ஆன் வரலாறு

உலகத்தில் மக்கள் தோன்றிய காலந்தொடுத்து எத்தனையோ நபிமார்களும் முர்ஸல்களும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஒரு சொற்படி 124 ஆயிரம் நபிமார்கள் இவ்வுலகில் தோன்றி இருப்பதாக நாம் அறிந்து கொள்கின்றோம். எந்த தேசத்துக்கும் எந்த சமூகத்துக்கும் இறைவன் தன்னுடைய நதீர்களையும், பஷீர்களையும் அதாவது பாவஞ் செய்வோருக்கு இறைவனின் தண்டனையுண்டு என்று எச்சரிக்கை செய்வோரையும், நன்மை செய்வோருக்கு இறைவனின் சன்மானமுண்டு என்று நற்செய்தி சொல்வோரையும் அனுப்பாமல் இருக்கவில்லை. எனவே உலகத்திலுள்ள எல்லாமக்களுக்கும் நேர்வழிகாட்டித் தன்னுடைய சன்மார்க்க நெறியில் மக்களை அழைப்பதற்காக இறைவன் எவ்விதப் பாரபட்சமின்றி யாவருக்கும் தீர்க்கதரிசிகளை அனுப்பிஇருக்கிறான் என்பது மறைக்க முடியாததும் மறுக்கமுடியாததுமான உண்மையாகும்.

இத்தகைய தீர்க்கதரிசிகளான நபிமார்களும் ரசூல்மார்களும் தங்களுக்கு இறைவனால் அருளப்பட்ட சட்டதிட்டங்களையும்

நியதிகளையும்தான் நாம் வேதங்கள் என்று மதிக்கிறோம். இத்தகைய வேதங்கள் பல நபிமார்களுக்கும் பலப் பலவாக இருந்தாலும் உலகத்தில் வேதங்கள் என்று தோன்றியவைகளெல்லாம் **தவ்ராத், ஸபூர்,இஞ்சீல்,ஃபுர்கான்** என்ற நான்கும் நூற்றிப்பத்து சுஹுஃபு களும்தான் என்று நிச்சயமாகத் தெரிகிறது. இவைகள் அல்லாத ஏனைய நூல்கள் வேதங்கள் இல்லை. எனவே, இவ்வேதங்களிலும் சுஹுஃபுகளிலும் இறுதியாக அருளப்பட்ட வேதம் **ஃபுர்க்கானுல் ஹமீத்** என்று செல்லப்படுகிற திருக்குர்ஆனாகும் இவ்வேதத்தை இறைவனிடமிருந்து பெற்று மக்களுக்கு அறிவித்தவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள். இவர்கள் இவ்வனியிற்றேன்றி இற்றைக்கு 1432 வருடங்களானாலும்,அவர்கள் மூலமாக நமக்கு அருளப்பட்ட இவ்வேதந்தோன்றி ஏறக்குறைய 13:92 வருடங்கள் தான் ஆகின்றன.

அதுவும் 23 வருட காலத்தில் கொஞ்சங்கொஞ்சமாக அருளப்பட்டிருக்கிறது இவ்வேதம் யாவற்றிற்கும் பின்னால் அருளப் பட்டு எல்லா தேசத்தாரும் எக்காலத்திலும் எடுத்து நடத்துவதற்குத் தகுந்த சட்டதிட்டங்கள் குறைவறச் சம்பூரணமாக இதிலமைந்திருப்பதால் இனிமேல் மக்களுக்கு வழிகாட்டுவதற்காகப் புதிய வேதம் தேவையில்லை என்பதும் அப்புதிய வேதத்தை அறிவிப்பதற்காக புதிய நபியோ ரசூலோ வரவேண்டிய அவசியமில்லை என்பதும் முஸ்லிம் களின் கொள்கையாகும். எனவே தம்மை முஸ்லிம் எனச் சொல்லிக் கொள்ளுபவர் எவரும் இந்த வேதத்துக்குப்பிறகு புதிய வேதம் வந்ததாகவோ புதிய நபி வந்ததாகவோ நம்பமாட்டார்கள்.ஆனால் இந்த வேதத்துக்கு முன்னுள்ள சகல வேதங்களையும்,எல்லா நபிமார் களையும் முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டு அவர்களையும், கௌரவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆயினும் ஏனைய வேதங்களிலுள்ள சட்டதிட்டங்களின்படி நடக்கக் கடமைப்பட்டில்லை. ஏனெனில், அந்த வேதங்கள் இக்காலத்தில் இல்லை என்றும், அவற்றின் பெயரால் இக்காலத்தில் அழைக்கப்பட்டுவரும் கிரந்தங்கள் இடைக்காலத்தில் மக்களின் கையாடலால் திரித்து எழுதப்பட்டும், இருக்கின்றன என்றும் நம்புகின்றனர். இவை இவ்வாறு திரித்தும்,புரட்டியும்,புகுத்தியும்

மாற்றியும் எழுதப்பட்டிருக்கின்றன என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடக்கூறுவதுடன் வேறு பல ஆதாரங்களும் உறுதிப்படுத்து கின்றன. ஆதலின், முற்காலத்தைய வேதங்களை முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டாலும், அவற்றின் பெயரால் இக்காலத்தில் வழங்கப் படும் கிரந்தங்கள் அந்த வேதங்களல்ல என்பது அவர்களின் உறுதியான நம்பிக்கை.

தவிரவும்,இந்த இறுதி வேதமான திருக்குர்ஆன் இத்தகைய திரித்தலுக்கும், புழுத்தலுக்கும் வயப்படாமல், அன்று அந்த நபிகள் நாதருக்கு இறைவனால் எவ்விதமாக அருளப்பட்டதோ அவ்விதமாக இன்றும்,இனி என்றும் இருந்துவரும் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையைச் சரித்திர ஆதாரங்களும் உறுதிப் படுத்துகின்றன.இவ்வேதம் மக்களின் கையாடலுக்கு இரையாகாமல் இருந்து வருகின்றதென்பதை உலகம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வேதத்தில் ஏனைய வேதத்துக்கேற்பட்ட கையாடல்கள் தோன்றி விடக் கூடாதென்பதற்காக ஆதிமுதற்கொண்டு இன்று வரை முஸ்லிம்கள் எச்சரிக்கையுடன் இருந்து வருகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹீ வந்தவுடன் அதனை எழுதிவைப்பதற்கெனச் சில ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாலேயே நியமிக்கப் பட்டிருந்தனர். இப்பெரியார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹீ வந்தவுடன் அதனை எழுதிவைப்பதில் கொஞ்சமும் தவறிவில்லை என்பற்குச் சரித்திர ஆதாரங்கள் பல இருக்கின்றன.

திருக்குர்ஆன் ஒன்று சேர்க்கப்பட்ட விபரம்

ஆனால், இக்காலத்தில் காகிதத்தில் புத்தக வடிவில் எழுதிவைக்கப்படுவதுபோல் அக்காலத்தில் எழுதிவைக்கப்படாமல், செங்கலிலும், தோலிலும்,இதுபோன்ற ஏனைய பொருட்களிலும் எழுதி அவைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னர் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக்

ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கலீஃபாவாக இருந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு சண்டையில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனஞ்செய்த ஸஹாபிகளில் நூற்றுக்கணக் கானவர்கள் யுத்தத்தில் உயிர்த் தியாகஞ் செய்து விட்டனர். இதனைக்கண்ட ஹளரத் உமர்ஃபாருக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் திருக்குர்ஆனை மனனஞ்செய்த பெரியார்கள் யாவரும் இவ்விதம் இறந்து விடுவார்களாயின் பிற்காலத்தில் திருக்குர்ஆன் சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுடன் பிற்காலத்தில் மத விரோதிகளும் தங்களின் சூழ்ச்சிகளை வேத வசனங்களிலும் செய்யத் துணிந்துவிடுவர் என நினைத்து, திருக்குர்ஆன் எழுதி வைக்கப்பட்டிருக்கின்ற ஏடுகளை ஒன்று திரட்டிவிட வேண்டுமென அக்காலத்து கலீஃபாவான ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாத ஒரு காரியத்தை எவ்வாறு செய்தல் கூடும் என்ற எண்ணத்தால் முதலில் தயங்கினார்கள். ஆயினும், பின்னர் அதன் அவசியத்தை உணர்ந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்டு வந்த வஹீயை எழுதி வைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த பெரியார் களின் ஒருவரான ஹளரத் ஜைப்னு தாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை அழைத்து திருக்குர்ஆனை ஒன்று திரட்டும் பணியைச் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.இப்பெரியார் இப்பணியைச் செய்ய ஆரம்பத்தில் தயங்கினார்கள். ஆயினும், இப்புனித காரியத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்தவுடன், அத்திருப் பணியைச் செய்ய ஆரம்பித்து திருக்குர்ஆனை ஒன்றுதிரட்டி கலீஃபாவான ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். இந்தக்குர்ஆன் ஹளரத் அபுபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் காலத்துக்கு பின் இரண்டாவது கலீஃபா ஹளரத் உமர் ஃபாருக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடமிருந்து.

இப்பெரியார் தமக்குப்பின் கலீஃபாவாக வருபவர் இன்னார் என முடிவு செய்யாததால் இத்திருக்குர்ஆனை நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வாழ்கைத் துணைவியாகவும், தமக்குப் புதல்வியாகவுமிருந்த உம்முல் முமினீன் ஹளரத் ஹஃப்ஸா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களிடம் அமானிதமாக ஒப்புவித்து விட்டு இவ்வுல வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள்.

நிற்க, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸஹாபிகள் பெரும்பாலும் மக்கா மதீனா, தாயிஃப் போன்ற இடங்களில் உள்ளவர்களாகவும், ஹிஜாஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்த போதிலும், அவர்களின் பேச்சு வார்த்தைகளும் பழக்க வழக்கங்களும், ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில், அவர்கள் ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக ஒரே குலத்தைச் சோர்ந்தவர்களாக இருக்கவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குரைஷிக்குலத்தில் ஷாஷிம் கிளையில் பிறந்தவர்கள். ஹளரத் அபூபக்கர் ஸித்தீக், உமர், உதுமான், (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியவர்கள் குரைஷிக் குலத்தில் பிறந்தவர்கள். ஆயினும், அவர்களின் கிளைகள் வெவ்வேறாகவே இருந்தன. இதுபோல் அன்ஸாரிகள் பனுஇஸ்மாயில்களாக இருந்தாலும் குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை. ஊர்கள் தோறும் பாஷைகள் வேறு என்பதுபோல் குறைஷிகளின் பேச்சு ஒரு மாதிரியும் வேறு குலத்தவரின் பேச்சு வேறு மாதிரியுமிருந்தது. எனவே திருக்குர்ஆனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றவர்களுக்குக் கற்பித்தாலும் அந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் வழக்குப்படியே அதனை ஓத ஆரம்பித்து விட்டனர். பின்னர் வெளியிடங்களுக்குப் பிரசாரத்துக் கெனச் சென்றிருந்த ஸஹாபிகள் திருக்குர்ஆனைத் தங்கள் குல வழக்கப்படியே தங்கள் சிஷ்யர்களுக்குப் போதித்திருந்தனர். இதையுணர்ந்த முக்கிய ஸஹாபிகளில் ஒருவரான ஹுதைஃபத் துப்னு யமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அக்காலத்தில் கலீஃபாவாக இருந்த ஹளரத் உதுமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹுஅவர்களிடம் வந்து திருக்குர்ஆனை வித்தியாசமான வழக்கில் ஓதுவதை அறிவித்து யூதர்களும் கிறிஸ்துவர்களும் தங்களுடைய வேதத்தில் மாறுபட்டிருப்பதுபோல் நம்மவரும் இவ்வேதத்தில்

மாற்றங்கொள்ளுவதற்கு முன் இந்த உம்மத்துக்கு வேண்டியதை செய்யுங்கள் என்று கூறினார்.

ஹளரத் உதுமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் உம்முல் மூமினீன் ஹளரத் ஹஃப்ஸா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களிடமிருந்த முற்கூறப்பட்ட திருக்குர்ஆனைத் தருவித்து, ஜைதுப்னு தாபித் ரலியல்லாஹுதஆலா அன்ஹு முதலிய பிரபல ஸஹாபிகளிடம் கொடுத்து அதற்குப் பிரதிகள் (பகர்ப்பு) எடுக்கும் படி திட்டமிட்டதுடன், குறைஷிகளின் வழக்கப்படி எழுதவேண்டும் எனக் கட்டளையிட்டார்கள்.

ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறைஷியாக இருந்தும்,திருக்குஆன் குறைஷிகளின் வழக்குப்படி அருளப்பட்டதுமே இதற்குக் காரணமாகும். இவ்வாறாக ஏழு பிரதிகள் (பகர்ப்புகள்) வரை எழுதப்பட்டு பல இடங்களுக்கும் அவற்றை அனுப்பி வைத்து இதற்கு மாறான வழக்கில் ஓதவும் கூடாது என்று கட்டளையிடப்பட்டது.

கலீஃபாக்கள் செய்த சேவை

எனவே,இந்த திருக்குர்ஆனானது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலேயே எழுதி முடிக்கப் பட்டிருந்தது. அவைகள் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு, ஹளரத் உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் பல பிரதிகள் (பகர்ப்புகள்) எடுக்கப்பட்டுப் பல இடங்களிலும் பரவச் சய்யப்பட்டது. ஹளரத் உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இப்பொழுதிருக்கிறதும், அதன் அசல் வழக்குமாகிய குறைஷிகளின் வழக்கில் குர்ஆனை நாடெங்கும் பரவச் செய்ததால், அப்பெரியருக்கு **ஜாமிஉல் குர்ஆன்** என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டது. அந்த குர்ஆனுக்கு **முஸ்ஹஃபு உதுமானி** என்றும் பெயர் வழங்கலாயிற்று. தவிர, அக்காலத்து முஸ்லிம்கள் பெரும்பாலும் அரபியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தனர். ஆதலால்,

தற்காலத்திலிருந்து வருகிற அறபி எழுத்துக்களுக்கு இப்பொழுதிருக்கிற ஜேர், ஜபர், பேஷ் போன்ற உயிர் எழுத்துக்குரிய அடையாளங்களும், நுக்தாக்களும் அக்காலத்தில் இல்லை. அக்காலத்தில் இருந்தவர்களுக்கு இவற்றில் எதுவும் அவசியமில்லை. இவற்றில் எதுவும் இல்லாமலே அவர்கள் திருக்குர்ஆனை திருத்தமாக ஓதும் ஆற்றல் உள்ளவர்களாக இருந்தனர். ஆனால் கிலாஃபத் ஆட்சி அறபு நாட்டிலிருந்து அண்டை நாடுகளிலும் வியாபித்து, அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவி வேத கிரந்தமான திருக்குர்ஆனை ஓத ஆரம்பித்த காலத்தில்தான் இவை யாவும் அவசியமாக ஏற்பட்டன

இவ்வாறு கிலாஃபத் ஆட்சி வெளிநாடுகளில் பரவி ஹளரத் அலிமுர்த்தஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நான்காவது கஃலீபாவாக இருந்து வந்த காலத்தில் அறபியை அறியாத ஒருவர் **நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது ரசூலும் இணைவைப்பவர்களை விட்டு விலகி இருக்கின்றனர்** 9:3 என்ற கருத்துள்ள வேத வசனத்தை **நிச்சயமாக அல்லாஹ் இணைவைப்பவர்களையும் அவனது ரசூலையும் விட்டு நீங்கி இருக்கிறான்** என்று பொருள் படும்படி அறபி வாக்கியத்தைப் பிழையுடன் ஓதியதை அபுல் அஸ்வதுத் தௌலியி ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்ற பெரியார் கேட்டு, திருக்குர்ஆனை பொருள் வித்தியாசம் படும்படி ஜனங்கள் ஓதுவதை கலீஃபா அவர்களுக்கு அறிவிக்கவே, அவர்களின் உத்தரவுப்படி மேற்படி பெரியார் அவர்களே முதல் முதலாக அறபிப் பாஷைக்கு இலக்கணமும், திருக்குர்ஆனின் வசனங்களைப் பிழை யில்லாது ஓதுவதற்காக உயிரெழுத்துக்குரிய அடையாளங்களையும் ஏற்படுத்தினார்.

இவற்றைத் தவிர ஹளரத் உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் திருகுர்ஆனை மேற்கூறிய விதமாக ஜனங்கள் அப்துல்மலிக்கிப்னு மர்வான் காலம் வரை ஓதி வந்தனர். அறபியல்லாதவர்களுக்குத் திருக்குர்ஆன் போதனை அதிகமாகப் பரவி, ஜனங்களும் அதில் அதிகம் ஈடுபட்டனர். ஆனால், அறபி எழுத்துக்களில் பா, தா, ஹா, ஜீம், நா, போன்ற பல எழுத்துக்கள் உருவத்தில் ஒன்றுபோலும் உச்சரிப்பில் வெவ்வேறாகவும் இருந்தன. அறபிப்பாஷையைக் கற்றுத் தெரிந்து கொள்ளாதவர்கள் அவற்றைப் பாகுபாடு செய்து படிப்பது மிகவும் சிரமமாகவும் அசாத்தியமாகவும் இருந்ததால், அக்காலத்தில் இராக், குராஸான் ஆகிய மாநிலங்களுக்கு கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜுப்னுயூஸுஃப் என்பவர் இந்த எழுத்துக்களுக்கு வித்தியாசந் தெரிந்து ஓதுவதற்கான அடையாளங்களை ஏற்படுத்துமாறு நஸ்ருப்னு காஸிமில்லைதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்ற பெரியாருக்குக் கட்டளையிட்டார். இக்கட்டளையின் பேரில்தான் இப்பெரியார் பா, தா, ஜா, ஹா யா, நா, முதலிய பல எழுத்துக் கிடையிலும் வித்தியாசங்காட்டுவதற்காக ஒற்றைப்புள்ளி, இரட்டைப் புள்ளிகளுள்ள அடையாளங்களை எழுத்துக்களுக்கு மேலிலும் கீழிலும் ஏற்படுத்தினார்.

திருக்குர்ஆனைப் பிழையின்றி ஓதும் பொருட்டு அவ்வக் காலங்களிலேயே பல பெரியார்களும், கலீஃபாக்களும், அரசு அதிகாரிகளும் எச்சரிக்கையுடன் பல ஏற்பாடுகளைச் செய்தனர். ஆயினும் அவற்றைப் பிழையின்றி ஓதுவதற்கு ஆசிரியர் இல்லாமல் முடியாத நிலையே இன்னமுமிருந்து வருகிறது. அன்றியும் திருக்குர்ஆனை ஓதும் முறைகளான கிரஅத்துகளையும் உணர்ந்து கொள்ள இயலாமலுமிருந்தது. இதையும் சீர்திருத்திவிட வேண்டுமென அக்காலத்து அறிஞர்களும், நிபுணர்களும், பெரியார்களும் ஒன்றுகூடி அவற்றை அறிவிக்கும் அடையாளங்களையும் ஏற்படுத்தினர்.

நாம் இதுவரை கூறியதிலிருந்து திருக்குர்ஆனைத் தவறில்லாமல் ஓத வேண்டும். அதில் எவ்வித வித்தியாசமும் இருக்கக் கூடாது. உலகத்தில் எத்தேசத்தவராயினும், எப்பாஷை பேசுபவர் ஆயினும் திருக்குர்ஆன ஓதினால், அதில் எவ்விதக் குறைவும் ஏற்படலாகாது. உலகமெங்கும் ஒன்றுபோல் அதை ஓத வேண்டும் என்ற ஒரு கொள்கைக்காகவே அறபிப் பாஷையில் இலக்கணமும், அதற்குரிய சட்டதிட்டங்களும், அகர, இகர, உகர, ஒற்றுக்குரிய அடையாளங்களும், இன்னும் வேண்டிய சீர்திருத்தங்களும் செய்யப் பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் செய்த பல அரிய பெரிய சேவைகளில்

அறபிப் பாஷையின் வளர்ச்சிக்குரிய இலக்கண சம்பந்தமான வேலைகளும் ஒன்றாகும். வேதத்தில் விஷமிகளின் கையாடல் ஏற்படாமல், வேதத்தில் புரட்டும், திருத்தமும், ஏற்படாமல் அதைக் காப்பதற்காக முஸ்லிம் அறிஞர்களும், கற்றறிந்த பெரியார்களும், அரசு அதிகாரிகளும், கலீஃபாக்களும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்ற அவர்களின் தோழர்களான ஸஹாபிகளும் மற்றவர்களும் ஆதிமுதல் எத்தகைய முன்னெச்சரிக்கையுடன் அதன் வசனங்கள், வார்த்தைகள், எழுத்துக்கள் இத்தனை என்றும் கணித்திருக்கிறார்கள். இத்திருக்குர் ஆனிலுள்ள ஆயத்துகள் 6666 என்றும் 114 அத்தியாயங்களென்றும், அதன் வார்த்தைகள் 77934 என்றும், மொத்தம் எழுத்துக்கள் 10 லட்சத்து 25 ஆயிரம் என்று கணித்திருப்பதுடன், இன்னின்ன எழுத்து இத்தனை என்றும் கணித்திருக்கின்றனர். இந்த 114 அத்தியாயங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்வதற்கு முன்னர் வெளியானவை எத்தனை அதற்குப் பின்னர் வெளியானவை இத்தனை என்று கணித்து ஆங்காங்கு அவற்றைக் குறித்தும் வைத்திருக்கிறார்கள். இத்தகைய முன் எச்சரிக்கையும் முயற்சியும் முன்னுள்ள வேதங்களுக்குத் தக்க காலத்தில் செய்யப் படாததால் இற்றை நாளில் அவைகள் மாசற்ற கலப்பற்ற வேதங்கள் என்று தைரியமாகச் சொல்ல முடியாதனவா யிருக்கின்றன. அன்றியும் அந்தந்த வேதங்களை விசுவாசித்து அவற்றின் கட்டளைப்படி நடப்பதாகக் கூறிக் கொள்ளும் சகோதரர்கள் கூட, தங்கள் வேதங்களில் புரட்டும், திருத்தும் புகுந்து விட்டன என்று ஒப்புக் கொள்ளுகின்றனர். எனவே, இறைவனால் அருளப்பட்ட அக்காலந்தொடுத்து இக்காலம் வரை எங்கும், எத்தகைய பேதமுமில்லாமல் ஓதப்படும் வேதம் இக்குவலயத்தில் குர்ஆன் ஷரீபைத் தவிர வேறெந்த வேதமும் இல்லை. இது இந்த குர்ஆனின் தெய்வீக அற்புத சக்தியில் ஒன்றாகும் என்பதும் மறைந்த விஷயமன்று.

வேதத்தின் தன்மை

வேதம் என்பது மக்களுக்கு நேரான வழியைக் காட்டி

இம்மையிலும் மறுமையிலும் முன்னேற்றமடையச் செய்து உலகுக்குச் சுபிட்சத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இவ்விதமான சக்தி இவ்வேதத்தில் நிரம்ப உண்டு என்பதை முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் ஏனைய மதத்தவரும்கூட ஒப்புக் கொண்டிருக் கின்றனர். உலகச் சரித்திரமும் இதனை ஒப்புக் கொள்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகில் தோன்றிய காலத்தில் இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும், அந்தந்த தேச மக்களும் இருந்த நிலைமையும், அவர்களின் பழக்க வழக்கமும், நடையுடை பாவனையும் உலகச் சரித்திரத்தை உணர்ந்தோருக்கு நன்கு தெரியும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த அறபி நாடு உலகத்திலுள்ள எல்லா தீய செயல்களுக்கும் தலைசிறந்திருந்தது. பஞ்சமாபாதகங்கள் ஆங்குதான் நிலை கொண்டிருந்ததெனலாம். விக்கிரக ஆராதனையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஒவ்வொரு குடும்பத்துக்கும், ஒவ்வொரு காரியமாக ஆராதனை புரிவதற்குத் தனித்தனி விக்கிரகங்களிருந்தன. இப்படிப்பட்டவர்கள் உலகத்துக்கு வழிகாட்டிகளாகவும், ஞானாசிரியர் களாகவும் மாறி ஓர் இறைக் கொள்கையை உலகெங்கும் பரப்புவதற்காக அதன் கொடியைத் தூக்கி நின்றார்கள் என்றால், இவர்களின் மனமாற்றத்துக்கு தெய்வீக சக்தியன்றோ காரணமாய் இருந்தது. அந்தத் தெய்வீக சக்திதான் இந்தத் திருமறையாம் ஃபுர்க்கானுல் மஜீது என்னும் குர்ஆன் ஷரீஃபாகும்.

இந்தத் தன்மைகளை உடையவர்களிடம் ஒருவர் அந்தத் தன்மைகளை அகற்றுவதற்காக முதல் முதலாக முயற்சி செய்யுங் காலத்து எத்தகைய எதிர்ப்புக்கும், போட்டிக்கும், தாக்குதலுக்கும் வயப்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்விபரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாற்றில் திருத்தமாகச் சொல்லப்படுவதால், இவ்விடம் அவற்றை விடுத்துத் திருமறைக்குச் சம்பந்தப்பட்டதை மட்டும் சிறிது கூறுவோம். இத்திருவேத வசனத்தைக் கேட்ட ஆண்களும் பெண்களும், இளையோரும், முதியோரும் தங்கள் பெற்றாரையும், உற்றாரையும்,

கணவனையும், மனைவியையும் விட்டுப் பிரிந்து இஸ்லாத்தைத் தழுவி அதற்காகத் தங்கள் இன்னுயிரையும் அற்பணஞ் செய்யத் துணிந்து விடுவர். உதாரணமாக ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் சகோதரியான பாத்திமாவும், அவரது வாழ்க்கைத் துணைவரான ஜைதும் இஸ்லாத்தைத் தழுவியதை உணர்ந்த ஹளரத் உமரவர்கள், அவர்களைப் புடைத்து, உதிரம் உதித்தோடும்படி செய்தார். ஆயினுமென்ன? உமரே! உம்மால் கூடியவரை அடித்துக்கொள்ளும். எமது மன உறுதியை உம்மால் ஒன்றுஞ் செய்யவியலாது என்று அவ்வம்மையாரிடமிருந்து பதில் பெறவேண்டியதாயிருந்தது. இன்னும், அதே பெரியாரிடமிருந்த அடிமைப் பெண் ஒருவரை அவர் இஸ்லாத்தைத் தழுவிய குற்றத்துக்காக ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தம்மால் இயன்றவரை அடித்துச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மறுபடியும் அடிப்பாராம். அவ்வாறு அடித்தும் தமது ஆதிக்கத்தின் கீழிலுள்ள சகோதரியையும், அடிமைப் பெண்ணையும் இஸ்லாத்தை விட்டு அசைக்கக்கூட முடியவில்லை.

ஆடவர்களில் ஹளரத் பிலால் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை மக்கத்துக் காஃபிர்கள் சுடு மணலில் போட்டு உருட்டுவர். காலில் கயிற்றைக் கட்டித் தெருத் தெருவாக இழுப்பர். சித்திரவதை செய்வார்கள். அவ்வாறிருந்தும், அவரது நாவிலிருந்து வெளிப்படும் அஹது அஹது என்ற சொல்லை அகற்ற அவர்கள் அனைவராலும் முடியவில்லை.

வேறொரு பெரியார் இஸ்லாத்தைத் தழுவிய குற்றத்துக்காக கைவிலங்கு கால் விலங்குகள் போடப்பட்டுச் சிறைப் பிடிக்கப் பட்டார். அவ்வாறு செய்தும் அவரை மறுபடியும் விக்கிரக ஆராதனையுள் கொணர முடியவில்லை. இஸ்லாத்தைத் தழுவிய ஒரு குற்றத்துக்காக எத்தனையோ பெரியார்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களால் தூக்கிலிடப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் போயினர். ஆனாலும், ஒரு முறை இஸ்லாத்தைத் தழுவியபின் அவர்களை அதைவிட்டு அசைக்க அந்த மக்காவாசிகளால் முடியவே இல்லை. இவ்வாறு

முஸ்லிம்களை சித்திரவதை செய்தும் முஸ்லிம்கள் அதற்காக வருந்தாது தங்களுடைய ஓர் இறைவனான அந்த அல்லாஹு சுபுஹானஹுவ தஆலாவை நிம்மதியாக வணங்கும் பொருட்டும் திரு வேதத்தைத் திருப்தியுடன் படிக்கும் பொருட்டும் தங்கள் சொந்த ஊராகிய மக்காவையும், சொத்துக்களையும், சுகங்களையும், மனைவிகளையும், பிள்ளைகளையும் துறந்து அபிசினியாவுக்கும், மதீனாவுக்கும் ஹிஜ்ரத்துச் செய்து சென்று விட்டார்களென்றால் இத்திருவசனங்களின் தெய்வீக சக்தியின் வல்லமைதான் என்ன?

இவ்வாறான சக்தியுள்ள அற்புத வசனத்தை அந்த மக்கத்துக் குறைஷியரும், மற்றையோரும் கட்டுக்கதை என்றும், மந்திரமென்றும் சூனிய மென்றும் பலவாறாக உரைத்ததுடன், அதை ஓதுவதன் சப்தம் காதிலும் விழலாகாதெனச் செவிகளில் பஞ்சை வைத்துக் கொண்டார்கள். ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பைத்தியம் பிடித்துக் கொண்டதென ஒரு மந்திரவாதியிடம் அழைத்துச் சென்று அவருக்கு மந்தரிக்க ஏற்பாடு செய்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் மந்தரித்த பின் அம்மந்திர வாதியிடம் தமது மந்திரமான இத்திருகுர்ஆனின் வசனங்களை ஓதிக் காட்டினார்கள். உடனே, அம்மந்திரவாதி தமது மந்திரத்தை விட்டு விட்டு இஸ்லாத்தைத் தழுவிவிட்டார். இது மட்டுமா? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே கொலை செய்து விடுவதாகச் சபதங்கூறிக் கையில் வாளேந்திச் சென்ற ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அவ்வேத வசனத்தைப் படித்துப் பார்த்து அந்த கணமே இஸ்லாத்தைத் தழுவினார். கவிசொல்வதிலும் காவியம் எழுதுவதிலும் சிறந்து விளங்கிய அக்காலத்து அறபிப் புலவர்கள் தங்கள் காவியங்கள் நிகரற்றவை என்பதை ருஜுப்பிப்பதற்காக மக்காவிலுள்ள கஃபா என்ற இறை ஆலயத்தில் தங்கள் காவியங்களை எழுதித் தொங்கவிட்டு வைத்திருந்தனர். இவ்வாறு தொங்கவிட்ட காவியங்கள் ஏழு. இவற்றிற்கு **ஸப்அ முஅல்லகா** என்று பெயர்.

திருக்குர்ஆன் மக்கமா நகரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூலமாக வெளியானபோது அதைப்பார்த்த தலைசிறந்த

புலவர்கள் தங்களுடைய சிறந்த செய்யுள்கள் இவ்வசனநடைமுன் எம்மாத்திரம் என்று வியப்புற்றனர். மேற்கூறப்பட்ட ஸப்அ முஅல்லகாவை எழுதிய ஒருவரின் சகோதரியும் மிகச் சிறந்த புலவர்களிலொருவருமாக இருந்த ஒரு பெண் தமது சகோதரரின் காவியத்தை கஃபா என்ற அந்த இறை ஆலயத்தில் இனி இருக்கத்தகாது என்று கூறி அதை அப்புறப் படுத்தினா ரென்றால் இத்திருக்குர்ஆனின் வாசக நடையும், சொன்னயமும், பொருட் பொலிவும் எவ்வளவு சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதை வாசகர்கள் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இனி, முற்காலத்திலும் பிற்காலத்திலும் உதித்த அறிவிற் சிறந்த பெரியார்களான விரிவுரையாளர்களும், இமாம்களும் இவ்வேத வசனம் ஒவ்வொன்றுக்கும் எழுபதுக்கும் மேற்பட்ட பொருள்களையும், கருத்துக்களையும் விவரித்துக் கூறலாம் என்று கூறி இருக்கின்றனர். இத்திரு வேதத்திலுள்ள **அல்ஃபாத்திஹா** என்ற ஏழு வசனங்களைக் கொண்ட ஒரு அத்தியாயத்தில் மட்டும் 10 ஆயிரம் சட்டங்களை அல்லாமா பக்ருத்தீன் ராஜீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்னும் பெரியார் ஆராய்ந்து எடுத்திருந்தால் இவ்வேதத்தின் பொருட் பொலிவுள்ள திருக்குர்ஆனை விரிவுரை செய்வதாகக் கூறி அதிலீடுபட்ட மேல் நாட்டினரான இஸ்லாமிய விரோதிகள் பலர் இறுதியாக இதனைப் போற்றவும், இதன் தெய்வீக அற்புதச் சக்தியை வாய்விட்டுக் கூறவும் முன்வந்து விட்டனர். இது சம்பந்தமாக மேல் நாட்டு அறிஞர்களின் புகழுரைகளையும், சிறப்புரைகளையும் இங்கு எடுத்தெழுதினால் விரியுமென்றஞ்சி அதனை விட்டு விட்டோம். இவ்வளவு சீரும், சிறப்பும், நடையழகும், தொடையழகும் பொருந்த இந்நானிலத்தாருக்கு நல்வழிகாட்ட வந்த இவ்வேதம் எழுதப் படிக்காதவரும், உலகில் பிறந்த ஒருவரிடம் சென்று பாடங்கேட்டுக் கொள்ளாதவருமான ஒரு உம்மி நபியிடமிருந்து வெளியாயிற் றென்றால் இதன் அற்புதந்தான் அற்புதமாகும். இத்தகைய வேதத்தை இந்த உம்மி நபி தம் சார்பாகச் சுயமாக இயற்றி இருக்கக் கூடுமென அக்காலத்தவர்களும், இக்காலத்தவர்களும் வேண்டுமென்றே கூறுவதற்குமில்லை. ஏனெனில், இதைப்பற்றி இறைவனே தனது திருவேதத்தில்

மேலும் நம் அடியார் (முஹம்மது – ஸல்– அவர்களின் மீது) நாம் இறக்கி வைத்த (வேதத்)தில் நீங்கள் சந்தேகத்திலிருந்தால் (அவர் சுயமாகக் கூறுகிறார் என்பதில்) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதைப் போன்ற ஓர் சூரத்தையேனும் நீங்கள் கொண்டு வாருங்கள். (இதில்) அல்லாஹ்வைத் தவிர உங்களுடைய உதவியாளர்களையும் (துணைக்கு) அழைத்துக் கொள்ளுங்கள் 2:23

என்று இறைவன் அறைகூவி அழைத்திருக்கிறான். எனவே, அன்று முதல் இன்று வரை எத்தனையோ பேர் பல்லாயிரக்கணக்கான பொருள் செலவு செய்தும் இவ்வேதத்திலுள்ள ஒரு சிறிய அத்தியாயத்தைப் போலுங் கூட இயற்ற முடியாமல் இருந்து வருகின்றனர். எனவே, இவ்வொரு அற்புத சக்தியே இவ்வேதம் தெய்வீக சக்தி பொருந்தியது என்பதை நிரூபிப்பதற்கும், இவ்வேதம் இறைவனால் அருளப்பட்டது என்பதற்கும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவன் தூதர்தான் என்பதற்கும் நித்தியசான்றாக இவ்வுலகில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

மௌலானா, மௌலவி, அல்ஹாஜ், அல்லாமா, முஃப்தீ

N.P. உதுமான் முஹ்யித்தீன் பாக்கவி ஹளரத்

முதல்வர், அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி

வேலூர் அவர்கள் அளித்த

மதிப்புரை

அல்லாஹுதஆலா அருளிய வேதங்களுள் இறுதியானதும் மாற்ற முடியாத உறுதி மிக்கதும் அல்குர்ஆன் வேதமேயாகும். இப்போதும் இனி எப்போதும் இதற்கு நிகர் இல்லை என்பதாலேயே, '' **இதுதான் வேதம்** '' (2:2) என அல்குர்ஆன் அழுத்தமாக எடுத்துரைக்கின்றது. அகிலத்து மாந்தர் அனைவரையும் நேரிய மார்க்கம் நோக்கி விரைந்து செலுத்தும் கலங்கரை விளக்கமாகத் திகழும் மாமறை குர்ஆனுக்கு பல்லாயிரம் விரிவுரைகளும் விளக்கத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை அரபுத் தமிழில் சில விளக்கவுரைகள் முற்காலத்தில் வெளிவந்துள்ளன. இருப்பினும் தமிழ் மொழியில் இறைமறைக்கு விளக்கவுரை இல்லை என்ற நிலையே தமிழகத்தில் நெடுங்காலம் நிலவி வந்தது. அந்த நேரத்தில்தான் ஹளரத் அல்ஹாஜ் **எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)** அவர்கள் சற்றொப்ப 70 ஆண்டுகளுக்கு முன் இறைமறை அல்குர்ஆனுக்கு அழகிய முறையில் ஏழு தொகுப்புகளில் விளக்கவுரை வெளியிடும் சீரிய பணியில் ஈடுபட்டு நிறைவு செய்தார்கள். காலத்தின் தேவை கருதி முடிக்கப்பட்ட இச்சீரிய பணி நன்றியோடு நினைவு கூறத்தக்கதாகும்.

இதுமட்டுமின்றி ஹளரத் **எஸ்.எஸ் முஹம்மது அப்துல் காதிர் பாக்கவி (ரஹ்)** அவர்கள் பயனுள்ள பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். அவர்களே ஒரு முறை கூறியுள்ளபடி அவை அனைத்தும் பன்னூற்றுக் கணக்கானவையாகும். அவை அச்சிடப் படுவதும் மீண்டும் பதிக்கப்படுவதும் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையும்.

ஹளரத் எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் பாக்கவி (ரஹ்) அவர்கள் எழுதிய இந்தத் தஃப்ஸீர் இப்போது கிடைக்காத நிலையில், அன்னாரின் புதல்வர் மவ்லவி **எம்.முஹம்மது ஜஃபர் ஜமாலி** அவர்கள் அதனை மீண்டும் வெளியிட்டு வருகின்றார். இப்பணிக்காக அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இப்பணி தொய்வின்றி நடைபெற்று மற்ற பாகங்களும் தொடர்ந்து வெளிவந்து மக்கள் பயன்பெற எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் துஆச் செய்கிறேன். வஸ்ஸலாம்.

ஒப்பம்,

N.P. உதுமான் முஹ்யித்தீன்

முதல்வர் B.S.A. கல்லூரி,

வேலூர் - 632004

மதிப்புரை

தப்ஸீரில் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர் ஆனில் மஜீத்

பேராசிரியர் கே.எம். காதர் மைதீன் அவர்கள்,
தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (தமிழ்நாடு)
சென்னை

திருக்குர்ஆனுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு செய்த அறிஞர்கள் பலராக இருப்பினும், திருக்குர்ஆனுக்குத் தமிழ்மொழி பெயர்ப்புடன் விளக்கமும், விரிவுரையும் எழுதியுள்ளவர்களில் முதன்மையானவர் **உத்தமபாளையம் எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் ஹஜ்ரத்** அவர்களே ஆவார்.

1937-ஆம் ஆண்டில் துவங்கிய இந்தப் பணியை சற்றொப்ப 25 ஆண்டுகள் தொடர்ந்து செய்து திருக்குர்ஆன் தஃப்ஸீர் - விரிவுரை இருபது பாகங்களாக வெளிவந்தது. இஃதோர் இமாலய சாதனையாகும். தனிமனிதராக இருந்து திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பும், விரிவுரையும் யாத்துத் தந்துள்ள உத்தமபாளையம் ஹஜ்ரத் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நூற்களை எழுதியவர். அவரின் ஞானஊற்று இந்த தஃப்ஸீர் ஓடையாக வெளிப்பட்டிருக்கிறது. இந்த விரிவுரைக்கு அல்லாமா அவர்கள் மேற்கோளாகக் காட்டிய நூற்களின் எண்ணிக்கையே பலநூறாக இருக்கின்றன.

திருக்குர்ஆனுக்கு உலக மொழிகள் பலவற்றிலும் தஃப்ஸீர் வெளிவந்துள்ளது. இன்றும் வந்து கொண்டுதான் இருக்கிறது. தமிழில் இந்த விரிவுரையைப் போன்றதொரு பனுவல் இதுவரை வெளிவர வில்லை.

அல்லாமா அவர்களின் விரிவுரையில் காணும் தனிச்சிறப்பு யாதெனில், ஒவ்வொரு திருவசனத்துக்கும் பொதுவாகவுள்ள

புறப்பொருள் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளதைப்போல அந்த வசனத்தின் உள்ளுறையாக உள்ள அகப்பொருளையும் அகமியத் தையும் விவரித்துச் செல்லுவதாகும். இத அல்லாமாவுக்கே உரிய தனிபாணியாக அமைந்திருக்கிறது.

இந்த தஃப்ஸீர் முழுவதையும் படிக்கும் வாய்ப்பைப் பெறுவோர், திருக்குர்ஆன் முழுவதையும் அறிந்தவராவார். திருநபி முஹம்மது (ஸல்) அவர்களின் முழு வரலாற்றையும் தெரிந்தவராவார். இஸ்லாமிய வரலாறு எவ்வாறெல்லாம் வளர்ந்து தொடர்கிறது என்பதைப் புரிந்தவராவார். இஸ்லாமிய வாழ்க்கைச் சட்டங்களின் நுட்பங்களை உணர்ந்தவராவார். பொதுவாக, இஸ்லாம் பற்றிய முழு ஞானம் பெற்று எதற்கும் எவருக்கும் ஈடுகொடுத்து இஸ்லாமிய தத்துவம் மார்க்கம் சட்டம் போன்றவற்றை விளக்கிச் சொல்லும் ஆற்றலை ஒவ்வொரு முஸ்லிமும் பெறக்கூடியவராவார்.

இன்றைய உலகம் விஞ்ஞான காலத்தில் உள்ளது என்கிறோம். அறிவியலின் ஆரம்பம், தொடக்கம், அதன் தொடர்ச்சி அதனால் ஏற்படும் விளைவுகள் அந்த விளைவுகளால் ஏற்படப்போகும் முடிவுகள், எல்லாவற்றையும் திருக்குர்ஆன் எவ்வாறு விவரித்து இருக்கிறது என்பதை இந்த தஃப்ஸீர் விளக்குகிறது.

மாந்தன்நூல், மண்ணூல், கடல் நூல், காற்று நூல், ஒளி நூல் என்று எல்லா வகையான அறிவியல்களையும் இந்த தஃப்ஸீரில் எடுத்தாளப்பட்டு உள்ளன.

திருக்குர்ஆனின் திருவசனங்களைப் படிக்கும்போதும் அவற்றின் விரிவுரைகளைப் பார்க்கும்போதும் மனிதனுக்கு இறைவன் வழங்கியுள்ள அறிவாற்றல் எத்தகைய அற்புத சக்தி என்பதை நாம் உணரலாம்.

திருக்குர்ஆன் ஜம்ஜம் கிணறு போன்று வற்றாத நீரூற்றாக இருக்கிறது. அதனைப் படித்து உணரலாம். இன்புறலாம். ஆனால் அதை முழுவதுமாக அறிந்து விட்டோம் என்று யாரும் எப்பொழுதும் கூறமுடியாது. திருக்குர்ஆன் எல்லையில்லாத ஞானசமுத்திரம்.

இந்த அருமையான அறிவுப் பெட்டகத்தை மீண்டும் திறந்து காட்டும் முறையில் புதிய பதிப்பாக வெளியிடுவதற்குப் பெருமுயற்சி மேற்கொண்டுள்ள நூலாசிரியரின் புதல்வர் **மௌலவி எஸ்.எஸ். எம். முஹம்மது ஜாபர்** ஜமாலி அறிஞர் உலகின் பாராட்டுக்குரியவர்.

இறைவேதத்தின் நாதம் இவ்வுலகமெங்கும் ஒலிக்கச் செய்வதற்கு உதவிட முன் வந்துள்ள கோலாலம்பூர் பனைக்குளம் ஹாஜி **சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள் அனைவரின் பாராட்டுக்குரியவர்.

இருபது பாகங்களைக் கொண்ட இந்த **தஃப்ஸீருல் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** ஒவ்வொரு அரபி மதரஸாவிலும், மஸ்ஜிதுகளிலும், பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக்கழக நூலகங் களிலும் இடம் பெற வேண்டும். அரபி செவ்விலக்கியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாக கருதி, இந்த நூற்தொகுப்பு எல்லா அரசு நூலகங்களிலும் இடம் பெறுதல் வேண்டும். வசதியுள்ளவர்கள் தத்தமது இல்லங்களில் உள்ள சிறு நூலகத்தில் இந்த தஃப்ஸீரை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

வீட்டிலும் உள்ள ஆண், பெண், பிள்ளைகள் யாவரும் அடிக்கடி எடுத்துப் படிக்கும் அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது வாழ்க்கைக்கு ஒளி கூட்டுவதாகும். திருமணத் தம்பதிகளுக்கு பரிசாக இந்த தஃப்ஸீரை வழங்கலாம். புதிய மனை திறப்பு விழா, கடை திறப்பு விழா, மஸ்ஜிது திறப்பு விழா போன்ற நிகழ்வுகளின் போது , இந்த தஃப்ஸீர் அன்பளிப்பாக வழங்கி குர்ஆன் ஞானத்தைப் பரவச் செய்யலாம்.

இறைமறையைப் பரவச் செய்யும் புனிதப் பணிக்கு இந்த தஃப்ஸீர் சிறந்த வழிகாட்டியாகும். எல்லாரும் எல்லா வகைகளிலும் இந்த தஃப்ஸீரை பரப்புரை செய்வதில் ஈடுபடுவது ஈருலகப் பயனைத்தர வல்லதாகும்.

தஃப்ஸீரில் இருந்து ஓர் உதாரணம்

இன் குல்லு நஃப்ஸின் லம்மா அலைஹா ஹாஃபிழுன்

இது திருக்குர்ஆனின்86-வது அத்தியாயத்தில் உள்ள 4-வது

திருவசனம். இதற்கு அல்லாமா தந்துள்ள மொழிபெயர்ப்பும் விளக்கமும் எத்தகைய ஆழமும் நுட்பமும் நிறைந்தது என்பதற்கு இஃதோர் உதாரணம்.

ஒவ்வோர் ஆன்மாவும் அதன் மீது பாதுகாக்கக்கூடியவர் இல்லாமல் இல்லை. 86:4

மனு ஜின் ஆகிய வர்க்கங்களிலுள்ள நல்லோர் தீயோர் ஆகிய ஒவ்வோருடைய சகல செய்கைகளையயும் அல்லாஹுத்தஆலா கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பத இவ்வாயத்தின் கருத்து.

கீல் – திரு மக்காவில் தீய நடத்தையுள்ள ஒரு பெண் இருந்தாள். தாவூஸ் யமானியை அவருடைய போக்கை விட்டு நான் திருப்பி பாவமான காரியங்களைச் செய்யுமாறு செய்து விடுவேன் என அவள் தனக்குள் தீர்மானித்துக் கொண்டு அவரிடம் வந்தாள். ஹஸரத் தாவூஸ் யமானி ரஹ்மத்துலாஹி அலைஹி அவர்கள் பார்வைக்கு மிக அழகானவர். நகைச்சுவையாகப் பேசுவதிலும் சமர்த்தர். அவள் வந்ததன் நோக்கத்தை அவளது பேச்சிலிருந்து அவர் நுணுக்கமாகத் தெரிந்து கொண்டார். அவளிடத்தில் “நீ சற்று பொறு இன்ன இடத்துக்கு நான் வருகிறேன். அங்கு வந்த பிறகு உன் விருப்பத்திற்கு நான் இணங்குகிறேன்” என்றார். குறிப்பிட்ட இடத்துக்கு இருவரும் சென்றனர். அவ்விடத்தை அடைந்தவுடன் ஹஸரத் தாவூஸ் யமானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அவளிடத்தில் “உனது நோக்கம் இதுவாகவே இருந்தால் இந்த இடத்திலேயே வேலையை முடித்துக்கொள்ளலாம்” என்றார்.

அது மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடமாக இருந்ததால் அவள் “எனது கோரிக்கைக்கு இது ஏற்ற இடமல்ல. மனிதர்கள் காண்பர். தனித்த இடமாக இருக்க வேண்டும்” என்றாள். அதற்கு அவர் “அல்லாஹ் நம்மை எல்லா இடத்திலும் பார்க்கிறான் இல்லையா? பெண்ணே, மனிதர்கள் பார்ப்பதற்கு நீ வெட்கப் படுகின்றாயே”, அல்லாஹுத்தஆலா பார்ப்பதை நீ வெட்கிக்க வில்லையே என்றார். அவருடைய இவ்வார்த்தை அவள் உள்ளத்தில்

உறைத்தது. உடனே தவ்பா செய்து அன்று முதல் தன் தீய நடத்தையை விட்டுவிட்டாள்.

ஹிக்காயத்து:- ஒரு முறை இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் காட்டின் வழியே சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு அடிமையைச் சந்தித்து, 'இதனை எனக்கு விற்றுவிடு' என வேண்டினார். அவ்வடிமை அதற்கு இணங்காமல் "இது எனக்குச் சொந்தமானதல்ல" என பதிலளித்தான். அதற்கு இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா "ஆட்டை ஓநாய் தின்றுவிட்டதென உன் எஜமானிடம் நீ சொல்லிவிடலாம்" என்று யுக்தி கூறினார். அதற்கு அவன் "அவ்வாறாயின் அல்லாஹ் எங்கே?" என்று திரும்பவும் பதிலளித்தான். பின்னர் இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள், அவ்வடிமையின் எஜமானைச் சந்தித்து, அவ்வடிமையை விலைக்கு வாங்கி விடுதலை செய்ததுடன் அதற்கு அப்புறம் இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து வந்தார்கள். விடுதலை செய்யப்பட்ட அவ்வடிமையை அவர் காணும் போதெல்லாம் "அல்லாஹ் எங்கே?" என்று அன்பு ததும்ப அவனை வினவுவார்கள்.

தவிர, இவ்வாயத்தில் கூறப்பட்டுள்ள **'பாதுகாக்கக் கூடியவர்'** என்ற பதத்துக்கு மனிதன் செய்கிற நன்மை தீமையான காரியங்களை பேணிக் காப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள வானவர் என்றும் கருத்து உரைக்கப்படுகிறது.

ரிவாயத்து:- உங்களது அமல்கள் எனக்கு அறிவிக்கப் படுகின்றன. நன்மையாக இருப்பவற்றைக் குறித்து மகிழ்ச்சியடைந்து அவற்றிற்காக அல்லாஹுத்தஆலாவைப் புகழ்கிறேன். தீமையாக இருப்பவற்றைக் குறித்து அல்லாஹுத்தஆலாவிடம் உங்களுக்காக மன்னிப்புக்கேட்கிறேன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- ஒவ்வொரு மூமினுக்கும் நூற்று அறுபது வானவர்கள் நியமிக்கப்படுகின்றனர். தேன் அடையை விட்டு ஈயைத்

தட்டுவது போல அவனை விட்டும் அவர்கள் தட்டுகின்றனர். ஒரு விநாடிப் பொழுதேனும் அவன் விடப்படுவானாயின், ஷைத்தான்கள் அவனை வாறிக்கொண்டு போய்விடுவார்கள்.

மேலும் நஃப்ஸுன் என்ற பதம் அல்லாஹுத்தஆலாவைத் தவிரவுள்ள சகல சடப்பொருள்களுக்கும் பொருந்தும் என்றும், ஜீவவர்க்கங்கள் யாவும் இதில் சேர்ந்ததென்றும், இவற்றைக் காவல் புரிபவன் அல்லாஹுத்தஆலா என்றும் சிலர் கருத்து உரைத்திருக் கின்றனர்.

நன்றி:- மணிச்சுடர் நாளிதழ் (29/08/2010)

மதிப்புரை

மூதறிஞர் அல்லாமா எஸ்.எஸ். பாக்கவி

ஜனாப் சே.மு.மு.முஹம்மது அலி அவர்கள்,
முன்னாள் பேராசிரியர், காயிதே மில்லத் கலைக் கல்லூரி,
சென்னை.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புவர்கள் வெளிநாடுகளில் விலை குறைந்த அரிய பொருள்கள் உள்பட அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிக எடையுள்ள பொருள்களை லக்கேஜிலும் கையிலுமாகச் சுமந்து கொண்டு திரும்புவதென்பது சர்வ சாதரணமாக நாம் காணுகிற இயல்பான காட்சியாகும். பல முறை சிங்கப்பூர் மலேசியா பிலிப்பைன்ஸ் வியட்நாம் மற்றும் அரபு நாடுகளுக்குச் செல்லும் போது ஒரு துணிப்பை, பேனா, நோட்டுப் புத்தகம் சில கிதாபுகள் இவற்றோடு சென்றவர் திரும்புகிற போதும் அதே பொருள்களோடு மட்டும் திரும்பி வருகிறாரென்றால் நிச்சயமாக அவர் ஓர் ஆத்மீக ஞானியாக மட்டுமே இருக்க முடியும். அந்த ஞானி வேறு யாருமல்ல. **மௌலானா மௌலவி எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி** அவர்கள்தாம்.

இனிய தோற்றம், எளிய உடை, ஒரு துணிப்பை, அதனுள்ளே நோட்டுப்புத்தகம், சில கிதாபுகள் என்று எப்போதுமே எங்குமே காட்சிக்கு எளியவராகத் திகழ்ந்த அல்லாமா இலட்சங்களை நோக்காமல் இலட்சியத்தை மட்டுமே நோக்கி உலகப் பற்று எள்முனையளவுமின்றி வாழ்ந்த தியாக வாழ்க்கையின் சொந்தக்காரர்.

பண்பாட்டுக் களஞ்சியமாக, நல்அமல்களின் கொள்கலமாக, ஆழ்ந்த அரபிப் புலமைமிக்க அரிமாவாகத் திகழ்ந்த மௌலானா அவர்கள் தம் வாழ்நாளில் சாதித்த சாதனைகள் என்றென்றும் உலகு உள்ளவரை நிலைத்து நிற்கும். மறுமையில் அல்லாமா அவர்களுக்கு நன்மைகளைச் சேர்த்த வண்ணமாகவே உயர்ந்து இருக்கும். பலர்

கூடிச் சாதிக்கக் கூடிய அல்லது ஒரு பல்கலைக் கழகம் பல ஆண்டுகள் செய்யக் கூடிய பணியைத் தம் வாழ்நாளில் **எஸ்.எஸ். பாக்கவி** என்று பாசத்தோடு எல்லோராலும் அழைக்கப் பெற்ற **உத்தமபாளையம் எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி** சாதித்திருக்கிறாரெனில் எல்லாம் வல்ல இறைவனின் உவப்பில் அவர் திளைத்திருக்கிறாரென்றே நம்மால் உணர முடிகிறது.

இமாம் கஸ்ஸாலி (1928) ஹளரத் உமர் ஃபாரூக் (ரலி) (1929), திருக்குர் ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பான திருமறைத் தமிழுரை (1934) நபிகள் கோன் (1937) மௌலானா முஹம்மது அலீ ஜௌஹர் (1938) இஸ்லாம் மத விளக்கம் (1938) மகா உண்மையாளர் (1939) திருத்தூதர் (1940) ஷஹீதே கர்பலா (1949) தொழுகையின் சீரிய முறை (1950) ஜவாஹிருல் புகாரீ (1950) அல்அன்வார் (1952) அகத்தூய்மை (1952) குத்பா சொத்து (1954) இஸ்லாமியத் திருமணம் (1955) ரமலான் நோன்பு (1957) ஞானவழி (1961) தொழுகை விளக்கம் (1962) ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) (1962) ஹாஜிகளின் தோழன் (1964) கன்ஜுந்தக்காயிக் - (இஸ்லாமியச் சட்ட விளக்க நூல்) (1968) இஸ்லாமியக் கொள்கைகள் (1969) அண்ணல் நபியின் அறநெறி (1972) கவலையகற்றும் கருவூலம் (1976) ஸஹீஹ் முஸ்லிம் (1978) உள்பட 50 நூல்களை இயற்றிய மாபெரும் பெருமை மௌலானா மௌலவி **எஸ். எஸ். பாக்கவி** அவர்களையே சாரும். இஸ்லாம் மத விளக்கமெனும் நூல் 4 பதிப்புகளைக் கொண்டது. தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீஹில் புகாரி மூன்று பாகங்களை உடையது. ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹி (ஸல்) மூன்று பாகங்களை உடையது. கன்ஜுந்தக்காயிக் மூன்று பாகங்களை உடையது. ஸஹீஹ் முஸ்லிம் இரண்டு பாகங்களை உடையது.

01-01-1901 -ல் பிறந்து 04-06-1979 அன்று மறைந்த மௌலானாவின் சாதனைகள் நூல் எழுதுவதில் மட்டும் முடிந்து விடவில்லை. இன்றைய சூழலைப் போலவே 1930களில் இஸ்லாமியக் கொள்கைகளில் பிளவு ஏற்படுத்த முனைந்த காதியானி அஹ்மதியா இயக்கத்தை ஒடுக்குவதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட **ஹிஃபாஜத்துல்**

இஸ்லாம் எனும் பத்திரிக்கைகளில் ஆசிரியராகவும் அல்லாமா **எஸ்.எஸ். பாக்கவி** திகழ்ந்தார். சிங்கப்பூரிலிருந்து வெளியான **மலாயா நண்பன்** துணை ஆசிரியராகவும் **புகாரீ** எனும் மாத இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகவும் அவர் விளங்கினார். திருச்சியிலிருந்து வெளியான **பிரசன்ட மஹா விகடன்** எனும் பத்திரிக்கையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றிய மௌலானா **நேர்வழி** எனும் மாத இதழையும் உத்தமபாளையத்தில் நடத்தி வந்தார். **ஸைபுல் இஸ்லாம்** எனும் பத்திரிக்கையிலும் துணை ஆசிரியராகப் பணியாற்றிவர் அவர். சி.எச். முஹம்மது கோயாவால் நடத்தப்பட்டு வந்த சந்திரிகா மலையாளத் தினசரியின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

ஹிஃப்ஸாஜத்துல் இஸ்லாம் சங்கம், **ஹிஸ்புல்லாஹ்** எனும் சன்மார்க்கச் சபையை நிறுவிய போது அச்சபையில் 70 உலமாக்களைச் சேர்த்துக் கொண்டு பொதக்குடி, அத்திக்கடை, கொடிக்கால்பாளையம் உள்பட பல ஊர்களில் காதியானி இயக்கத்திற்கு எதிராக மாநாடுகள், கூட்டங்கள் நடத்தித் தீவிர பிரச்சாரம் செய்த பெருமை ஹளரத் அவர்களையே சாரும்.

1926 ஆம் ஆண்டு திருச்சியில் தொடங்கப் பெற்ற **இஸ்லாமிய நூற்சங்கத்தின்** மூலம் திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புப்பணி நடைபெற்றது. அப்பணியில் அல்லாமா **ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி** அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் மௌலவி **எஸ்.எஸ். பாக்கவி** என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிங்கப்பூரில் **தென்னிந்திய ஜம் இய்யத்துல் உலமா** எனும் சபையைத் தோற்றுவித்து அதன் கௌரவத் தலைவராகத் தம்வாழ்நாள் முழுவதுமிருந்த சிறப்பும் மௌலானா அவர்களுக்குரியதாகும்.

திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புக்கென கூத்தாநல்லூரில் தொடங்கப் பெற்ற **சாந்திப் பிரகடன சபையில்** மௌலானா அவர்கள் 15-04-1933 -ல் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கி 16 மாதங்களில் அப்பணியை நிறைவு செய்தார். **பயானுல் குர் ஆன் திருமறைத் தமிழுரை** எனும் பெயரில் முதல் பாகம் 500 பக்கங்களில் 1934 ஆம் ஆண்டு வெளியானது.

1926 ஆம் ஆண்டு திருச்சியில் தொடங்கப் பெற்ற **இஸ்லாமிய நூற்பிரசுரச் சங்கத்தின்** மூலம் திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புப்பணி நடைபெற்றது. அப்பணியில் அல்லாமா **ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி** அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் மௌலவி **எஸ்.எஸ். பாக்கவி** என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிங்கப்பூரில் தென்னிந்திய ஜம் இய்யத்துல் உலமா எனும் சபையைத் தோற்றுவித்து அதன் கௌரவத் தலைவராகத் தம்வாழ்நாள் முழுவதுமிருந்த சிறப்பும் மௌலானா அவர்களுக்குரியதாகும்.

மௌலானா மௌலவி **எஸ்.எஸ். பாக்கவி** ஹளரத் அவர்களுடைய மாபெரும் சாதனை 1937 முதல் 1961 முடிய 24 ஆண்டுகள் அவர்கள் ஆய்ந்தும் தோய்ந்தும், தேர்ந்தும் , தெளிந்தும் அயராமலும் தளராமலும், உளையாமலும் சளைக்காமலும் உழைத்ததன் பயனாக 7000 பக்ககங்களில் 7 பாகங்களைக் கொண்டதாக உருவான **தஃப்ஸீருல் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** எனும் திருமறை விரிவுரையாகும். தமிழ்கூறு நல்லுலகில் முதன்முதலாக வெளிவந்த விளக்கமான தெளிவுரை நூல் இதுவேயாகும்.

தஃப்ஸீர் ரூஹுல்பயான் எனும் இறைமறை விரிவுரையை அடிப்படையாகக் கொண்டும் ஏறக்குறைய 200 நூல்களை ஆதாரமாகக் கொண்டும் உருவான இந்த ஆக்கத்தின் 7 பாகங்களும் முறையே 1937, 1940, 1950,1956,1958,1959,1961 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. வெளிவந்த வேகத்திலேயே விற்றுத் தீர்ந்து தமிழ் முஸ்லிம்களின் அறிவுப்பசிக்கு ஆன்றதோர் தீனியாகவும் அவை அமைந்தன.

ஆத்மஞானி ஹளரத் **எஸ்.எஸ். பாக்கவி** அவர்களின் திருமறை விரிவுரையின் முதல்பாகம் வெளிவந்து 72 ஆண்டுகளும் ஏழாம் பாகம் வெளிவந்து 47 ஆண்டுகளும் ஆகிவிட்டன. ஹளரத் அவர்களின் **தப்ஸீருல் ஹமீத்ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** மீண்டும் வெளிவராதா என இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் அவை நம் கரங்களில்

கிடைத்து நமது அறிவின் பெருக்கத்திற்கு உதவாதா என்று தேட்டம் கொண்டிருந்தோர் எண்ணற்றோர். அவர்கள் அனைவரின் வாட்டத்தையும் போக்க வேண்டுமென்ற வேட்கையில் மௌலானா அவர்களின் அருமைப் புதல்வர் **மௌலவி எஸ்.எஸ். எம். முஹம்மது ஜாபர்** ஜமாலி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் புரவலர்களை நாடிப் படையெடுத்துக் கொண்டேயிருந்தார். பல்வேறு ஊர்கள், பல்வேறு நாடுகள் என மௌலவி ஜாபர் ஜமாலி மனம் தளராமல் பறந்து பறந்து தமது தந்தையாரின் அற்புத உருவாக்கத்தை அவனியில் மீண்டும் பதிவு செய்திட முயற்சிகள் பல மேற்கொண்டார். அவர் அடைந்த இன்னல்களையும், பட்ட கஷ்டங்களையுமே தனி நூலாக்கலாம்.

தந்தையாரின் பொக்கிஷத்தைத் தரணியில் மீண்டும் பதிப்பிட முனைந்த தனயரின் அரிய முயற்சியை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். கோலாலம்பூரில் நாணய மாற்று நிறுவனம் நடத்தி வரும் அகில மலேசிய நாணய மாற்றுச் சங்கத்தின் தலைவர் **அல்ஹாஜ் சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள் அரிய புதையலை அகிலத்துக்கு அளிக்க நிதி உதவி முழுவதும் செய்ய முன் வந்துள்ளார். அதன் பயனாக 94 சூராக்களின் விளக்கவுரை தெளிவுரை அடங்கிய வசனத்திற்கு வசனம் மொழி பெயர்ப்பாக 11 நூல்களை இப்போது வெளிவந்துள்ளன. பல லட்ச ரூபாய் செலவில் இதனை வெளியிட்டு நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொண்டுள்ளார் சமுதாயப் புரவலர் **முஹம்மது ஷஜபு அவர்கள்.**

இராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளத்தில் பிறந்த **ஹாஜி சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** இவரது முன்னோர்கள் கட்டிய பனைக்குளம் **ஊராட்சி ஒன்றிய பஹ்ருத்தீன் தொடக்கப்பள்ளியிலும்** பின் அரசினர் உயர்நிலைப்பள்ளியிலும் கல்வி பயின்றவர். ஜுனியர் செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகப் பள்ளி மாணவப் பருவத்திலேயே திகழ்ந்த **ஹாஜி சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள் தமிழகப் பிரதிநிதியாகப் புது தில்லியில் நடந்த செஞ்சிலுவைச் சங்க மாநாட்டிலும் கலந்து கொண்டவர். விளையாட்டுகளில் சிறந்து

விளங்கிய **ஹாஜி சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** 1977-78 ஆண்டுகளில் சீனியர் ஸ்போர்ட்ஸ் சாம்பியனாகவும் ஹாக்கிக் குழுவின் கேப்டனாகவும் விளங்கியவர். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் புகுமுகவகுப்பு படிக்கும்போது மாணவர் தலைவராகவும் சேவை புரிந்தவர். சிங்கப்பூரில் மேனேஜ்மெண்ட் சம்பந்தமாக டிப்ளமோ பயின்றவர்.

தற்போது சிங்கப்பூர் கோலாலம்பூர் மற்றும் ஜகார்த்தாவில் நாணய மாற்று நிறுவனம் நடத்திக் கொண்டிருக்கும் பனைக்குளம் அல்ஹாஜ் **சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள் **ஸிலதுர் ரஹ்ம்** என்ற பெயரில் தொழுகைப் பள்ளி ஒன்றை நடத்தி வருகிறார். தமிழகத்தில் ஆத்துவாம் பாடியில் **இறை இல்லம் (மஸ்ஜிது)** ஒன்றைக் கட்டி வக்ஃபு செய்துள்ளார். தாம் பிறந்த பனைக்குளத்தில் வாரம் நான்கு நாள் மாலையில் கேபிள் மூலமாகத் திருக்குர்ஆன் விரிவுரையும் ஜும்ஆ பேருரையும் நேரடியாக ஒளிபரப்ப ஏற்பாடும் செய்துள்ளார்.

ஏற்றுமதி - இறக்குமதித் துறைகளில் சிறந்து விளங்கும் இவர் இலக்கிய நயத்தோடு சிறப்பாக உரையாற்றும் திறமையான சொற்பொழிவாளருமாவார். சமுதாயச் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அரிய பணிகள் பல ஆற்றி வருபவர் இச்சமுதாயப் புரவலர் பனைக்குளம் **அல்ஹாஜ் சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்களென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவின் ஊற்று, ஆன்மீகத் தென்றல், சூபித்துவப் பூங்கா, சுன்னத்வல் ஜமாஅத்தின் தளபதி, தஃப்ஸீர் கடல், தமிழகத்து கஸ்ஸாலி, சிறந்த உரைநடை ஆசிரியர், தெளிந்த மொழிபெயர்ப் பாசிரியர், தேர்ந்த நூலாசிரியர், ஆன்ற வரலாற்றாசிரியர், முதிர்ந்த மார்க்கக்கல்வி அறிஞர், அருள் நிறைந்த சொற்பொழிவாளர், ஆழ்ந்த பத்திரிக்கையாசிரியர், தன்னையே சமர்ப்பித்துக் கொண்ட இறைச் சேவையாளர், ஏற்றத் தாழ்விலா அன்பாளர், நற்குணங்கள் செறிந்த பண்பாளர், முஃபஸ்ஸிருல் குர்ஆன் அல்லாமா மாஹும் உத்தமபாளையம் **எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்**

பாக்கவி அவர்களின் **தப்ஸீருல் ஹமீத் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** நூலின் 11 பாகங்களை வெளியிட்டுள்ள சமுதாயக் கொடைவள்ளல் அல்ஹாஜ் பனைக்குளம் **சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள் சமுதாயத்தினரின் பாராட்டுதல்களுக்கும் வாழ்த்துதல்களுக்கும் உரியவராவார்.

இன்ஷா அல்லாஹ் எஞ்சியுள்ள பாகங்களை விரைந்து வெளியிடுவதோடு அல்லாமா அவர்களின் ஏனைய நூல்களையும் மீண்டும் பதிப்பிடவும் சமுதாயப் புரவலர் **ஹாஜி சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** ஆவன செய்திட வேண்டுமென்பது பல லட்சம் முஸ்லிம்களின் பெரும் விழைவாகும். இந்த அரிய பணியில் அர்ப்பணித்துச் சேவையாற்றிவரும் புதல்வர் மௌலவி அல்ஹாஜ் **எஸ்.எஸ்.எம். முஹம்மது ஜாபர்** ஜமாலி அவர்களும் சமுதாயத்தின் பாராட்டுதல்களுக்கும் வாழ்த்துகளுக்குமுரியவராவார்.

சமுதாயப் புரவலர் அல்ஹாஜ் பனைக்குளம் **சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்களுக்குத் தமிழ் கூறு இஸ்லாமியச் சமுதாயம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. காரணம் இவர் போன்ற கொடை நாயகர்களால்தான் அல்லாமா அவர்கள் உருவாக்கிய பல்வேறு நூல்கள் உள்பட ஈராயிரத்துக்கும் மேற்பட்ட பேரிலக்கிய, சிற்றிலக்கிய ஆன்மீக மற்றும் ஞான இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் , தஃப்ஸீர்கள் முதலானவை வெளிவந்துள்ளன. காலத்தின் கோலத்தால் அழிந்து விடாத வண்ணம் இவை போன்ற நூல்களை மீண்டும் பதிப்பித்து வெளியிடுவதன் மூலம் உருவாக்கிய ஆசிரியர்கள் மட்டுமல்ல அவற்றைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியர்களும் நிதி உதவி வழங்கி வெளியிடும் கொடை நாயகர்களும் இம்மை வரலாற்றில் நிலைத்து விடுவதோடு மறுமை நற்பேறுகளுக்கும் சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள்.

மௌலானா மௌலவி அல்ஹாஜ் **எஸ்.எஸ். பாக்கவி** ஹஸரத் அவர்களின் மறுமைக்காகத் துஆ செய்யும் அதே நேரத்தில் சமுதாயப் புரவலர் பனைக்குளம் அல்ஹாஜ் **சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷஜபு** அவர்கள், அல்லாமா புதல்வர் மௌலவி எஸ்.எஸ்.எம்.

முஹம்மது ஜாபர் ஜமாலி அவர்கள் மற்றும் இப்புனிதப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டோர் அனைவரது நீண்ட ஆயுளுக்காகவும், நிறைந்த சுகத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பணிகளில் ஈருலகு புகழ் பெற்று விளங்குவதற்காகவும் இரு கரமேந்தி துஆ செய்கிறோம்.

சிறந்த எழுத்தாளர்

அல்லாமா **உத்தமபாளையம் எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் பாகவி** அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதற்குக் கூத்தாநல்லூர் ஆதம் டிரஸ்ட் வெளியிட்ட **அன்வாறுல் குர்ஆன்** நூலுக்கு அல்லாமா 17-12-1972 அன்று அளித்த முன்னுரை ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. அம் முன்னுரையில் இதோ ஒரு சிறு துளி.

"நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் திருக்குர்ஆன் அருளப்பட்ட ஆரம்ப காலத்தில் அரபு நாட்டு மக்கள் எப்படி இருந்தார்கள்? அப்புறம் திருக்குர்ஆனின் போதனையின் பயனாக அவர்கள் எப்படி மாறினார்கள் என்பதுதான் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

காலணாவிற்காகக் கழுத்தை நெறிப்பவர்கள் , வாயில்லாப் பிராணியான ஒட்டகம் தவறுதலாக ஒருவரின் தோட்டத்தினுட் சென்று மேய்ந்து விட்டதற்காக நூற்றுக்கணக்கான வருடங்களாகப் போரிடுபவர்கள், பலவந்தப் புணர்ச்சி செய்து விட்டு அதனைப் பெரும் சாதனை எனப் பாராட்டிக் காவியங்கள் மூலம் நாடெங்கும் பரவச் செய்து பாடி மகிழ்பவர்கள் இன்ன பிற துர்ச்செயலுக்கும், தற்பெருமைக்கும் உறைவிடமாக இருந்த அரபியர்கள் திருக்குர்ஆன் அளித்த பயிற்சியின் பலனாகப் பொறுமைக்கும், சகிப்புத்தன்மைக்கும் , தியாகத்திற்கும், உபகாரத்திற்கும் முன்மாதிரியாக இருந்து இன்றும் உலக மக்களுக்கு வழிகாட்டுகின்றனர்."

நன்றி:- **இனிய திசைகள்** நவம்பர் 2009

மதிப்புரை

தஃப்ஸீர் வெளியீட்டு விழா

அல்ஹாஜ் எஸ்.எம். கனி ஜிஸ்தி அவர்கள்,

ஆசிரியர், முஸ்லிம் குரல் மாத இதழ்,

தலைவர், ஃபக்கீர் லெப்பை மஸ்ஜிது,

கிருஷ்ணாம் பேட்டை

சென்னை

தமிழ்நாட்டில் முதன் முதலாக திருக்குர்ஆன் விரிவுரையை 1937 முதல் 1961 வரை சுமார் 7000 பக்கங்களில் எழுதிய சாதனையாளர் உத்தமபாளையம் மௌலானா அல்ஹாஜ் அல்லாமா **எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)** அவர்கள்

இவர்கள் பெரும் முயற்சி செய்து சுன்னத் வல் ஜமாஅத் கொள்கை அடிப்படையில் உள்ள பல அரபி ஃபார்ஸி உருது நூல்களின் வழி வந்து எழுதினார்கள். சுமார் ஏழு பாகங் கொண்ட இம் மாபெரிய நூற்களை சென்னை **ஹாஜி எம்.எ. ஷாஹுல் ஹமீது** சன்ஸ் வெளியிட்டு வந்தது. அந்தக் காலங்களில் கம்பூட்டர் ஆப்செட் பிரிண்ட் வசதிகள் இல்லை. சலவைக்கல்லில் எழுதி லித்தோ கிராப் முறையில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

அதற்குப்பின்பு பல ஆண்டுகளாக மறுபதிப்புகள் பிரசுரிக்கப்படவில்லை. இந்தப் பெருங்குறையை மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள அகில மலேசிய நாணய மாற்றுச் சங்கத்தின் தலைவர். இராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளத்தைச் சார்ந்த **ஹாஜி சீ.மு.நா.மு.மு.யூ. முஹம்மது ஷுஐபு** அவர்கள் தமது சொந்தச் செலவில் 10- வது பாகம் முதல் 20-வது பாகம் முடிய மிக அழகிய முறையில் நமது முற்றம் (மாத இதழ்) சைஸில் அதாவது டெம்மி அளவில் அச்சிட்டு முடித்துள்ளார்கள்.

இவ்வரிய சிறப்புக்குரிய **தஃப்ஸீரில் ஹமீதிஃபீ தஃப்ஸீரில் குர் ஆனில் மஜீது** வெளியீட்டு விழா 18-10-2009 ஞாயிறு அன்று ஹோட்டல் பிரசிடெண்டில் தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் கவிக்கோ **அல்ஹாஜ் அப்துல் ரஹ்மான்** தலைமையில் நடந்தது.

ஹாபிழ் மவ்லவி **அப்துல் மஜீது** கிராஅத் ஓதினார். மௌலவி **எம். ஹபீபுல்லாஹ்** ஜமாலி அறிமுக உரையாற்றினார். பனைக்குளம் அல்ஹாஜ் **முஹம்மது ஷுஐபு** வரவேற்றார்.

முன்னாள் **நீதிபதி அப்துல்ஹாதி**, ஹாஜி. **எஸ் முஹம்மது ரஃபி** , ஹாஜி. **எஸ். முஹம்மது ஷஹாபுத்தீன்** இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் பொதுச்செயலாளர் ஹாஜி. **எஸ்.எம். ஹிதாயத்துல்லா** ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் முன்னாள் முதல்வர் மௌலவி **பி.எஸ்.பி. ஜைனுல் ஆபிதீன் ஹஜ்ரத்** முதல் பிரதியை வெளியிட்டார்கள். ஹோட்டல் பிரசிடெண்ட அதிபர் **ஹாஜி ஏ. அபூபக்கர்** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

மௌலவி **கே.எம்.இல்யாஸ்** ரியாஜி சிறப்புகளையும் சொற்பொழிவு நிகழ்த்தினார். **பி.எஸ்.பி. மௌலானா** தமது சொற் பொழிவில் அல்லாமா **எஸ்.எஸ்.** அவர்களின் சிறப்புகளையும், தஃப்ஸீர்களின் அருமை பெருமைகளையும் , சுன்னத் வல் ஜமாஅத் கொள்கை, சூஃபியாக்களின் சிறப்புக்களை எடுத்தியம்பினார்.

கொடைவள்ளல் ***சீ.மு.நா.மு.மு.யூ. முஹம்மது ஷுஐபு*** அவர்களுக்கு பனைக்குளம் ஜமாஅத்தார்கள் பலர் பொன்னாடை போர்த்தி கவுரவித்தார்கள். அதே போல் ஷுஐபு ஹாஜியார், பனைக்குளம் ஜமாஅத் தலைவர்கள், எஸ்.எஸ். பாக்கவியின் புதல்வர் **எஸ்.எம். ஹபீப் முஹம்மது** அவர்கள் **சீ.மு.நா.மு.மு.யூ. முஹம்மது ஷுஐப்** அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும் மௌலானாவின் பேரர் **எம். முஹம்மது அப்துல் காதிர் பி.எ.**, அவர்கள் **சீ.மு.நா.மு.மு.யூ. முஹம்மது ஷுஐப்** அவர்களுக்கு ஏலக்காய் மாலை அணிவித்தும் தங்களின் குடும்பத்தினரின் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

விழா இறுதியில் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய **கவிக்கோ** அவர்கள் அனைவரது நெஞ்சத்தையும் கவரும் வண்ணம் உரையாற்றி ஹஜ்ரத் அவர்களின் பல நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சென்னை நகரில் உள்ள பிரபல நிறுவனங்களின் அதிபர்களும், பல ஜமாஅத் தலைவர்களும் விழா மேடையில் நூற்களை வாங்கினார்கள். விழாவில் முன்னாள் உயர்நீதிமன்ற **நீதிபதி அப்துல் ஹாதி** அவர்கள், **ஜஸ்டிஸ் அக்பர் அலி , நீதிபதி அபூதாஹிர்** உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

மௌலானாவின் புதல்வர் **எஸ்.எஸ்.எம் முஹம்மது ஜாபர்** ஜமாலி நன்றியுடன் விழா நிறைவு பெற்றது.

அல்லாமா எஸ்.எஸ்.எம் ஆலிம் அவர்களுடன் நமது இனிய தொடர்புகள்.

1964 களில் சென்னை கிருஷ்ணாம் பேட்டை ஃபக்கீர் லெப்பை மஸ்ஜிதிற்கு அல்லாமா **எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் ஹஜ்ரத்** அவர்கள் பல நாட்கள் வந்து தங்கினார்கள். இப்பகுதியில்தான் அவர்களது மைத்துனர் பன்னூலாசிரியர் மௌலானா மௌலவி **பி.எஸ்.கே. முஹம்மது இப்ராஹிம்** பாக்கவி ஹஜ்ரத் அவர்கள் அடிக்கடி வந்து முகாமிடுவார்கள். எனவே அவர்களுக்கு எங்களது முஹல்லாவில் நிறைய சீடர்கள் உண்டு.

அந்தச் சீடர்கள் **எஸ்.எஸ்.ஹஜ்ரத்** அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து பணிவிடை செய்வார்கள். வீட்டுக்குவீடு விருந்துக்கு அழைத்துச் செல்வார்கள். அவர்களை தலைமேல் வைத்துக் கொண்டாடும் நேசர்களில் அடியேனும் ஒருவன். மிகச் சாதாரணமாக எளிய நடை உடையுடன் பள்ளிவாசலின் ஜன்னலில் சாய்ந்து கொண்டு வலது காலை குத்தவைத்து ஒரு பலகையை மேஜை போன்று சாய்த்து சதா எழுதிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் எங்களது முஹல்லாவில் தங்கியிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எனது ஆசான் **வி.கே. புன்யாமின் நூரி** அவர்கள் பல

தெருக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார். தெரு முனையில் ஒரு டேபிள், தரையில் பாய்களை விரித்து ஒரு மின்சார பல்பு எளிய இரவு 10 மணிக்குத் தொடங்கும் கூட்டம் இரவு 1 மணிவரை நடக்கும். கூட்ட ஏற்பாடுகள் ஜனங்களைத் திரட்டும் பணியை அடியேன் பொறுப் பேற்றுக் கொள்வது வழக்கம்.

மீரட்டில் வாழ்ந்த **மவ்லானா அப்துல் அலீம் சித்தீகி** என்னும் பெரியாருடன் அவர்களுக்கு இருந்த நெருங்கிய தொடர்புகளை அடிக்கடி எங்களிடம் சொல்லிக்காட்டுவார்கள். சென்னையில் பல சீமான்களின் நட்பு இருந்தாலும் அவர்களது பங்களாவில் தங்காமல் பள்ளிவாசலில் தங்குவதே சிறப்பு என்று கருதுவார்கள்.

1974 களில் **முஸ்லிம்குரல்** மாத இதழை நாம் தொடங்கி விட்டோம் பத்திரிக்கைப் பணியாக நாம செல்லாத மாவட்டங்களே இல்லை. 1978களில் மதுரை மாவட்ட மேற்குப்பகுதிகளில் பயணமானோம். அப்போது எம்முடன் தேவதானப்பட்டி **கமாலுதீன் ஆலிம்**, வருவார்கள். **உ**த்தமபாளையம் சென்றவுடன் அல்லாமா ஹஜ்ரத்தைக் காண வேண்டுமே என்ற ஆவலுடன் அவர்களைப் பற்றி விசாரித்தேன்.

"அல்லாமா அவர்கள் இந்த ஊரில் உள்ள **நைனார் முஹம்மது பள்ளிவாசலில்** இருப்பார்கள். வாருங்கள் அவர்களைச் சென்று பார்க்கலாம்! ஆனால் ஹஜ்ரத் அவர்கள் தங்களது சுய நினைவு இழந்து மஜ்துபுடைய ஹாலத்தில் இருப்பார்கள்" என்றார்கள். எப்படியும் அவர்களைச் சந்தித்து துஆவைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஆர்வ மிகுதியினால் அவர்களைக் காணச் சென்றேன்.

அந்தப் பள்ளியின் இரண்டாவது ஸஹனில் குத்துக்கால் வைத்து அமர்ந்து இருந்தார்கள். ஸலாத்தைச் சொல்லி அவர்கள் முன்பு அமர்ந்தோம். "யாரப்பா நீ?" என்றார்கள். "நான் தெரியாதா ஹஜ்ரத். நான்தான் **முஸ்லிம் குரல் ஆசிரியர்**" என்றேன். "அட நீயாப்பா மோட்டா - சாட்டமாக எழுதுவாயோ நீ தானா" என்றார்கள்

"ஆமாம் ஹஜ்ரத் உங்களைப் பற்றியும் எழுதுவேன்" என்று கிண்டாலகச் சொன்னேன். "அட என்னைப் பற்றியுமா எழுதுவாய்?" என்று அருகில் இருந்த தமது அசாக்கோலை எடுத்து என்னை அடிக்க ஓங்கினார்கள்.

நான் நமது தொப்பியை கழற்றிக் கொண்டு குனிந்து கொண்டு "நல்லா போடுங்க ஹஜ்ரத்" என்றேன் ஹஜ்ரத் அவர்கள் மஜ்தூபான நிலையில் என்ன நினைத்தார்களோ உன்னை அடிக்க மனசில்லை! நீ சமுதாயத்திற்கு நல்ல எழுத்துப் பணி செய்கிறாய் நல்லா இரு! அல்லாஹ் போதுமானவன் என்று எமது தலையையும் தோள் களையும் தங்களது புனிதக்கரங்களால் தடவிக் கொடுத்தார்கள்.

அத்தகைய நல்லடியார்களின் துஆவை பெற்றதன் பாக்கியம்தான் பல உலமாக்களுக்கு பணிவிடை செய்ய வாய்ப்பு கிடைத்தாது (அல்ஹம்துலில்லாஹ்)

அதற்குப்பின்பு அவர்களது புதல்வர் **ஜாபர் ஜமாலி** சென்னையில் பலமுறை வந்து சந்தித்திருக்கிறார்

அம்மாபெரும் தஃப்ஸீர் விரிவுரையாளர் அவர்களுடன் பழகிப் பணிபுரிந்ததன் காரணமாகத்தான் **முஸ்லிம் குரல்** இதழை நாம் முப்பதாண்டு காலம் நடத்த முடிந்தது

வாழ்ந்து மறைந்த அல்லாமா அவர்களின் அரிய பொக்கிஷங்கள் அனைத்தும் இப்போது மறுபதிப்பு வெளியாகுவதற்கு நூல் வெளியீட்டு விழாவில் **கவிக்கோ** அவர்களின் சொற்பொழிவே ஓர் அச்சாரமாக அமைந்து விட்டது.

நன்றி:- நமது முற்றம் (மாத இதழ்) டிசம்பர் 2009

கம்பம் கல்வத்து நாயகம் தைக்காவில் அடங்கப் பெற்றிருக்கும் கல்வத்து நாயகம் (ரலி) அவர்களின் கலீ.்.பா ஞான மாமேதை தேவரீர் ஷெய்குனா அம்பா முகம்மது ஸயீது ஜல்வத்து நாயகம் (ரலி) அவர்களின் பேரனும் மாணவரும்,தேவரீர் ஷெய்குனா அம்பா நாயகம் (ரலி) அவர்களின் மகனுமான மௌலவி **முஹம்மது அப்துல் க.்.பூர்** ஸயீதீ-அவர்கள் மனமுவந்தளித்த

மதிப்புரை

'த.்.ப்ஸீர்' என்பது இறைவனின் வேதமான குர்ஆன் ஷரீ.்.புக்கு விளக்கம் கூறுவதாகும். படைப்பினங்களில் சேராத இறைவனின் கலாம்- என்னும் குர்ஆன் ஷரீ.்.ப், விளக்கம் என்னும் படைப்புகளில் அறிவுக்கு எட்டும் அளவு சொல்வது மிகவும் கடினமான பணியாகும். இதில் வெற்றி காண்பது குதிரைக் கொம்புதான். குர்ஆனுக்கு விளக்கம் கூறும் விஷயத்திலேயே இவ்வளவு பெரிய சிரமம், சொல்லொண்ணா கஷ்டம் இருக்கிறது என்றால், குர்ஆனின் புனித வசனங்களுக்கு வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்புச் செய்வது சிரமங்களின் சிகரத்தைத் தொடும் வேலையாகும். இஸ்லாமிய உலகில் குர்ஆனை தாய் மொழியில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டவர்கள் சிலரே. அவர்களுள் ஒருவர் எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவரும் எங்கள் பகுதி மக்களால் **'பெரியமூனா'** ஹளரத் என்று பாசமுடன் அழைக்கப்பட்டவருமான மாமேதை, மௌலவி,**எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி** (ரஹ்) அவர்கள்தான்.

மேலும், இஸ்லாமியக் கல்வியில் பல்வேறு துறை(.்.பன்)கள் உள்ளன. அவற்றில் கடினமான பணி த.்.ப்ஸீர் துறையே. அதிலும் கடினமான பணி குர்ஆனின் வசனங்களுக்கு மொழி பெயர்ப்புச் செய்வதாகும். இதில் ஏதேனும் சின்னஞ்சிறிய தவறு ஏற்படின் வேதத்தின் சாயலையே மாற்றிவிடும் அபாயம் ஏற்பட்டு, மொழிபெயர்ப்பாளர், அதைப்படிப்பவர்கள் அனைவரையும், குர்ஆன் ஷரீ.்.ப்வேத மறுப்பாளர்களின் பட்டியலில் சேர்த்து விடும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இவ்வளவு பெரிய பொறுப்புள்ள, கவனம் செலுத்த வேண்டிய மார்க்கக் கல்வியின் பல

துறைகளிலிலும் கற்றுத் தேறிய பெரும் பெரும் உலமாக்கள் பலர், இயலாது என பின் வாங்கி விட்ட நிகழ்ச்சிகள் இஸ்லாமிய சரித்திரத்தில் ஏராளம்!ஏராளம்! இவ்வளவு பெரிய பணியை சிரமேற்கொண்டு ஒருவர், தூய தமிழில் இலகுவான நடையில் மொழி பெயர்க்கும் மொழி பெயர்ப்பாளர் உண்டு என்றால் அவர் உண்மையில் இறைநேசரே ஆவார். இந்த இறைநேசர் எங்கள் உள்ளங்களில் நீங்காது இடம்பெற்றுள்ள மௌலவி **எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி** (ரஹ்) அவர்களேயாவார்.

த.்.ப்ஸீர்கள் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ளன.- சரித்திரம், இலக்கணம், இலக்கியம், .்.பிக்ஹுசட்டம், ஹதீஸ்களின் விளக்கவுரைகள், கொள்கைகள், கிராஅத், வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், விஞ்ஞானம், பொதுஆய்வுகள் என்பன போன்ற தனித்தனித் துறைகளில் ஆயிரக்கணக்கான த.்.ப்ஸீர்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் முழுமையான பயனைத் தரும் த.்.ப்ஸீர்கள் உள்ளன. அவைகள் எப்படி அமையப் பெறவேண்டுமென்ற நியதிகளும் வகுக்கப்பட்டுள்ளன.

அந்நியதிகளில் சில: சரித்திரம், நபிவழி, கொள்கைகள், இமாம்களின் தீர்ப்புகள், இத்தீர்ப்புகளை உள்ளடக்கி அடியொற்றி அமையப் பெற்ற ஞானப்பாட்டை, வலிமார்களின் வரலாறுகள் போன்றவற்றை விளக்கி எழுதப்பட்ட த.்.ப்ஸீகளாகும். இவ்வாறான த.்.ப்ஸீகளே இஸ்லாமை அதன் உண்மை வடிவத்தை, அதன் கண்ணியமான தன்மையை, தூய்மையான விசுவாசத்தின் தெளிவு நிலையை, நன்னம்பிக்கையின் நல்ல பல தன்மைகளை எடுத்துக் காட்டி, முஸ்லிம்களை வழி நடத்தும் உண்மையான வேத விரிவுரையாக அமையும். இவ்வாறான விரிவுரைகளில் முதன்மை வகிப்பது "த.்.ப்ஸீர் ரூஹுல்பயான்"- என்ற இஸ்லாமியக் கொள்கை விளக்க ஞானக் கருவூலமாகும்.

இவ்வளவு உன்னதமான த.்.ப்ஸீரை தமது மொழி பெயர்ப்புக்கு கருவாக எடுத்துக் கொண்டது மௌலானா அவர்களின் ஆழ்ந்த அறிவை, இஸ்லாத்தின் தூய பற்றை, ஈமானின் தெளிந்த நிலையை நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே இவ்வளவு

இலகுவான தமிழ் நடையில் ஹஜ்ரத் அவர்கள் எழுதியுள்ளார்கள் என்பது அன்னார் அவர்களின் தமிழ்ப் புலமையை விளக்குகின்றது.

மௌலானா அவர்களின் தமிழ் நடைக்கு நான் கண்ட ஒரு உயிர்த் துடிப்பான நிகழ்ச்சி: உத்தமபாளையம், எனது சொந்த ஊரான கம்பத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் விவசாய மணம் கமழும் அழகிய சிற்றூர். எனது தாயார் (அம்பா நாயகம்-றலி-அவர்களின் மனைவி) பிறந்து. வளர்ந்த ஊர். ஹஜ்ரத் அவர்களும் இவ்வூர் என்பதாலும் அவர்கள் ஆலிம் என்பதாலும், ஆலிம்கள் நிறைந்த எங்கள் குடும்பத்தில் உரிமை, உறவு, பாசத்துடன் கூடிய நெருங்கிய பழக்கம் உண்டு. அடிக்கடி ஹஜ்ரத் அவர்கள் கம்பம் வருவதால் எனக்கும் நல்ல பழக்கம், நெருக்கம்.

1970-களில் ஒருநாள்... லுஹர் நேரம்... மௌலவி **எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)** அவர்கள் கம்பம் கல்வத்து நாயகம் தைக்காவிற்கு எனது ஷைகும் உஸ்தாதும் பாட்டனாரும் தேவரீர் ஷெய்குனா அம்பா முஹம்மது ஸயீது ஜல்வத்தீ (ரலி) அவர்களைக் காண வந்திருந்தார்கள். கையிலே சிறிய துணிப்பை. அதில் ஸஹீஹ் முஸ்லிம் அரபி கிதாப்-மொழிபெயர்க்கப்பட்ட சில சிறிய நோட்டுகள், ஹஜ்ரத் அவர்கள் என்னிடம் வித்ருத் தொழுகையைப் பற்றி வரும் ஹதீஸ்களை படித்து, அதற்கான தமிழ் மொழிபெயர்ப்பையும் கூறி, அதை எழுதும்படி சொல்லிவிட்டு, "இதை எழுதுங்கள், நான் பெரிய அம்பாவிடம் பேசிவிட்டு வருகிறேன்" என்று சொல்லிச் சென்று விட்டார்கள்.

நான் ஹஜ்ரத் அவர்கள் கொடுத்த பணியை சுமார் நான்கு பக்கங்களில் தமிழில் எழுதி, ஹஜ்ரத் அவர்களிடம் கொடுத்தேன். அப்பொழுது ஷெய்குனா ஜல்வத் நாயகம் (ரலி) என்ன விஷயம் எனக் கேட்க விஷயத்தைச் சொன்னேன்.உடனே ஷெய்குனா அவர்கள்: "ஹதீஸ்களின் பொருளை படித்துக் காட்டு" என என்னைப் பணித்தார்கள். நான் ஹஜ்ரத் அவர்களின் மொழிபெயர்ப்பைப் படித்து முடித்தவுடன் அரபி மொழியில் கடல் போல் ஞானமுள்ள ஞானவானான ஷெய்குனா ஜல்வத்து நாயகம் (ரலி): "என்ன மௌலானா அரபியை தமிழில் மொழிபெயர்க்க

உங்களுக்கு தமிழ்மொழி தட்டானுக்கு நகை செய்ய தங்கம் இசைவு கொடுத்தது போல், உங்கள் நோக்கப் படியெல்லாம் இசைவு தருகிறது" எனப் பாராட்டினார்கள். மௌலானாவின் மொழிபெயர்ப்புக்கு முத்தான சான்றிதழை சத்தாகத் தந்து, தங்களின் மனந்திறந்த இசைவைத் தந்து மகிழ்ந்தார்கள். சுப்ஹானல்லாஹ்'.

ஒரு எழுத்தாளன், தான் எடுத்துக் கொண்ட கருவுக்கு உருவம் தர. தன் எண்ண ஓட்டத்தின் தெளிவான சாயலை சரியான முறையில் உரிய அமைப்பில் தருபவன்தான் சிறந்த எழுத்தாளன் ஆவான். இதில் சிறிது தடம் மாறினாலும் தன் முயற்சியில் தோல்வியுறுவான் என்பதை நன்கு புரிந்து கொண்ட மௌலானா அவர்கள், நாம் த.்ப்ஸீர் ரூஹுல் பயான் என்ற வேத விரிவுரையை அப்படியே தமிழில் மொழி பெயர்க்கின்றோம் என்பதை மட்டுமே கருவாகக் கொண்டு, தமது சொந்த எண்ணத்திற்கு எந்த இடத்திலும் சிறிதும் இடம் தராது, உள்ளச் சுத்தியுடன் த.்ப்ஸீரை-மொழிபெயர்த்துள்ளார்கள். அதாவது அரபு மொழியில் எழுதப்பட்டதின் தமிழ் வடிவை மட்டும் முழுமையாகத் தந்துள்ளார்கள். இதற்கு தமிழ் கூறும் முஸ்லிம்கள், மௌலானா அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர் என்பதையும் நம்மவர்கள் மறந்து விடலாகாது.

பனைக்குளம் ஹாஜி எம்.முஹம்மது **ஷஃஜப்** அவர்கள் இப்புனிதமிகு வேத விளக்கவுரைக்கு மிண்டும் ஒரு புத்துயிர் அளித்து தமிழ் கூறும் உலகில் விட்டிருப்பது மிகச் சிறந்த சேவையாகும். அன்னாரின் பணி சிறக்க வல்ல நாயன் உதவி புரிவானாக. ஆமீன்.

ஒப்பம்,
A.முஹம்மது அப்துல் கபூர் ஸயீதீ
கம்பம்.

மௌலானா, மௌலவி, அல்ஹாஜ்
எஸ். எஸ். கலந்தர் மஸ்தான் ரஹ்மானி, முதல்வர்,
மஹ்லரத்துல் காதிரிய்யா அரபுக் கல்லூரி, காயல்பட்டிணம்
அவர்கள் அளித்த,

மதிப்புரை.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் நஹ்மதுஹு வ நுஸல்லி அலா ரசூலிஹில் கரீம் ஆமீன், வ அலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம் அஜ்மயீன்.

அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அரிய வரலாற்றை நுனிப்புல் மேயாமல் துய்தல் உவத்தில்இன்றி நுணுகி ஆய்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிற ஒரு உண்மை, வள்ளல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அற்புதம் அவர்களின் வரலாறும் அற்புதம் என்பதாகும்.

வரலாற்றின் இருண்ட காலத்தில் அவர்கள் பிறந்து வாழ்ந்திருந்தாலும் அவர்களின் வரலாறு மிகத்தெளிவானது.

சின்னஞ்சிறு செய்திகளிலிருந்து பென்னம் பெரிய நிகழ்வு வரை அவர்களுடைய வாழ்வின் வாழ்வோடு தொடர்புடையவற்றின் ஒவ்வொன்றும் சரியான சான்றுகளுடன் தொகுக்கப்பட்டுள்ளன. அதுபோன்று, அவர்களுக்கு முன்னரும் பின்னரும் யாருடைய வரலாறும் தொகுக்கப்பட்டதில்லை.

தெளிவான வரலாற்றின் நாயகர் என்ற வகையிலும் தன்னுடைய பணியைத் தொடங்கி இருபத்தி மூன்று ஆண்டுகளில் நிகரில்லாத சோதனைகளுக்கிடையே **கண்ணீர் சிந்தலைக்கும் கஷ்டங்களுக்கும்** மத்தியில் தொய்வே இல்லாத தொடர்துன்பங்களைத் தாங்கிச் சகித்து, இவ்வகிலத்தில் யாரும் சாதித்திராத சாதனைகள், சீர்செய்த சமுதாயத்திருப்பங்கள் உண்டாக்கிய சமூக மாற்றங்கள் சன்மார்க்கப் புரட்சி வறண்ட மனத்தினரையும் இருண்ட இதயத்தினரையும் வளமான நலமான தெளிவான வழிக்குக் கொணர்ந்து ஒரு முன்மாதிரி சமுதாயமாகச் சமைத்து, இவ்வுலகின் முன் நிறுத்தி "என் வழியைப் பின்பற்றி

வாழுங்கள். நேர்வழி சித்திக்கும்" என்று உலக மனித இனத்துக்கு அறிவுறுத்தி அறிவித்த ஒரே அரசியல் தலைவர், சமயத் தலைவர், அரசியல் தலைவர், ஆன்மீகத் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு யார் இருந்தார்கள். யார் இருக்கிறார்கள்?

அற்புதத் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏற்காமல் எதிர்த்தவர்கள் அவசியம் என்ற நிலையை ஏற்படுத்தி, தானும் அவசியம் என்று கருதிய போது "மு.ஃஜிஸா" என்னும் அற்புதங்கள் பலவற்றை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

எனினும், "தனது தலையாய அற்புதமும் நிலையான அற்புதமும் நிலைகுலையாத குர்ஆன்தான்" என வாதித்தார்கள் வள்ளல் நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

"உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாதித்தது போல் உண்மையும் அதுதான்" என்று கருத்துரைக்கிறார் வரலாற்று ஆய்வாளரும் கிருத்துவ மதபோதகருமான 'ரெவரெண்ட் பாஸ் வொர்த் ஸ்மித்' அவர்கள்.

காலத்தால் அழியாத ஞாலத்தின் கோலத்தால் சிதையாத, சிதைக்க வேண்டும் அழிக்க வேண்டும் என்று எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் அழித்துச் சிதைத்து, சிலிர்ந்து நிற்கிற செழுமையும் முழுமையும் மிக்க அல் குர்ஆன் அற்புதம் தான் என்பதில் அதை வழிகாட்டும் மறை என ஈமான் கொண்டு நம்பாத பாஸ்வொர்த் ஸ்மித் போன்றவர்களுக்கும் கூட ஐயமில்லையே!

உலகில் வந்த வேதங்களும் ஆகமங்களும் கால ஓட்டத்தில் சிதைக்கப்பட்டு சீர் கெடுக்கப்பட்டு, அந்த வேதங்கள் எதை வலியுறுத்த வந்தனவோ அதற்கு முரணானவைகளை வலியுறுத்தும் நூல்களாக மாற்றப்பட்டது போல் குர்ஆனையும் மாற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் அந்த வகையினருக்கு இன்னும் உண்டு!

அருள் மறை குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை அதை அருளிய அல்லாஹ்வே எடுத்துக் கொண்டதால் ஒரு "சிறு புள்ளி"யும் கூட மாற்ற முடியாத பெரும் புள்ளியாக உலகில் நீடித்து நிலைத்து நிற்கிறது அத்திருவேதம்.

அருள் மறை குர்ஆன் என்னென்ன வகையிலெல்லாம் அற்புதம் என்பது பற்றிய ஆய்வு மிக விரிவாகவே நடந்துள்ளது.

அரபுமொழியில் அதுவரை அறியப்பட்ட மிக உயர்ந்ததாகக் கருதப்பட்ட மொழிநடையிலிருந்து வேறுபட்ட அபூர்வமான புதியதொரு மொழிநடை.

மிகச் சிறந்ததாக ஏற்கப்பட்ட அரபு இலக்கியங்களின் வாக்கிய அமைப்பிலிருந்து மாறுபட்ட அதிசயிக்கத்தக்க வாக்கிய அமைப்பு.

முழுமையாகவும் மிக நுணுக்கமாகவும் சட்டங்களையும் விதிகளையும் சொல்லும் முறை.

அதுவரை யாருக்கும் தெரிந்திராத மறைவான விஷயங்களைப் பற்றிய தகவல்களைத் தனக்கேயுரிய தனிப்பாணியில் அறிவித்த அருமை.

இருபத்து மூன்று வருடங்களாக தேவைக்கேற்ப அருளப்பட்டபோதும் எந்த இடத்திலும் முரண்பாடே இல்லாத தனிச்சிறப்பு.

கூறிய தகவல்கள் எச்சரிக்கைகள் வாக்குகள் அனைத்தும் பிழைஇன்றி இருந்த முறை நடந்த விதம்.

மனித சமுதாயத்தின் இரு உலக வாழ்வும் சிறக்கத் தேவையான இவ்வுலக வாழ்வுக்கான வழிகாட்டுதல்கள், சட்ட விளக்கங்கள், ஆணைகள், அறிவுரைகள். நுணுக்கமான உதாரணங்கள், வரலாற்று நிகழ்வுகள். அவற்றைக் கூறும் முறையே அழகானது.

ஏற்றவர்களையும் எதிர்த்தவர்களையும் ஈர்த்த விதம், ஏற்படுத்திய திருத்தம், உண்டாக்கிய மாற்றம்.

இவை தவிர, கடந்த பதினைந்து நூற்றாண்டுகளாக இக்கால கட்டங்களில் உலகில் நடந்துள்ள அரசியல் திருப்பங்கள், அதில் நடந்துள்ள அதிரடி மாற்றங்கள், அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முதிர்ச்சி, சமூகங்களுக்கிடையேயான பிரச்சனைகள், மோதல்கள், இயற்கைச் சீற்றங்கள், அவற்றால் விளைந்த பாதிப்புகள், நாகரீகத்தின் பெயரால் நடந்துள்ள வளர்ச்சி மற்றும் மாற்றங்கள், போன்ற பல்வேறு நிலைகளுக்கும் ஈடுகொடுத்து 1400 ஆண்டுகளுக்கும் மேலாக நிமிர்ந்து நிலைத்து நிற்கிற அதன் தனித்துவம் அற்புதத்துக்கான காரணிகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது மகாபெரியது.

"நான் இறைவனின் திருவாக்கு. நான் கவிதையும் இல்லை. கற்பனையும் இல்லை. நான் இறைவாக்கு என்பதில் சந்தேகமுள்ளவர்கள் என்னின் மாதிரி ஒன்றை அல்லது என்னிலுள்ள அத்தியாயங்களின் மாதிரி பத்து அத்தியாயங்களை அல்லது ஒரு சிறிய அத்தியாயம் மாதிரி ஒன்றைக் கொண்டு வரமுடியுமா?" என்ற கருத்தில் குர்ஆன் விடுத்த அறைகூவல் 15 நூற்றாண்டுகளாக அப்படியேதானே இருக்கிறது. தொடர்ந்து,

"யாரும் என் அறைகூவலை ஏற்று முன் வர மாட்டார்கள்." வரமுடியாது" என்ற கருத்தில் குர்ஆனின் அறிவிப்பும் அருள் மறையில் அப்படியேதான் இருக்கிறது.

பதினைந்து நூற்றாண்டுகளாக இந்த அறை கூவலை ஏற்க யாரும் முன்வரவில்லை என்பதும் வாய்மை மறையின் மெய்மைக்கும் அற்புதத்திற்கும் மிகப் பெரிய சான்றல்லவா?

இத்தகு சிறப்புகள் மிக்க நிகரற்ற மறையாம் குர்ஆனை நிகரற்ற நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளிய அல்லாஹ், "எல்லாவற்றிற்கும் விளக்கம் குர்ஆனில் இருக்கிறது" என்ற கருத்தை ஒரு திருவசனத்தின் மூலம் அறிவித்தான். மேலும்,

"இத்திருவேதத்தை நீங்கள் தான் விளக்க வேண்டும்" என்ற கருத்தையும் இன்னொரு வசனத்தின் வழியே அல்லாஹ் அறிவித்தான்.

எனவே, அருள் மறை குர்ஆனை முதலில் தன் இதயத்தில் ஏந்தித் தாங்கிய எழிலார் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் அத்திருமறையை முதலில் விளங்கியவர்கள் முழுமையாகவும் விளக்கியவர்கள்.

சதுர் மறை குர்ஆன் தன்னுள் கொண்டுள்ள அனைத்துச் சட்டங்களையும் திட்டங்களையும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் போதனைகளையும் நுணுக்கங்களையும் முறையாகவும் நிறைவாகவும் விளங்க முழுத்தகுதி படைத்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் விளங்கியதிலிருந்து தேவையறிந்தும் தேவைக்கேற்பவும் ஸஹாபிகளுக்கு விளக்கினார்கள்.

எனவே, தான் அரபியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்ததுடன் அம்மொழியறிவைச் செரிவாகப் பெற்றிருந்த ஸஹாபிகளும் குர்ஆன் வசனங்களுக்குரிய விளக்கமறிய நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நாடி நின்றார்கள். தேடி வந்தார்கள்.

திருக்குர்ஆன் வாழ்வின் வழிகாட்டி! ஷரீஅத் சட்டங்களின், திட்டங்களின், கொள்கைக் கோட்பாடுகளின் ஜீவன்! எல்லாவற்றிற்கும் மேலாக அது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருவாக்கு! அதை அறிவதும் புரிவதும் அதன் உட்பொருள் தெளிவதும் சாதாரணமானதல்ல! அதை விளங்குவதும் விளக்குவதும் எல்லோருக்கும் எளிதானதல்ல. அதற்கென அடிப்படைத் தகுதிகள் வேண்டும் திறமைகளும் வேண்டும். அதை அருளியவனின் அருளும் வேண்டும்.

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நேரடி விளக்கம் பெற்ற அரபி ஸஹாபாப் பெருமக்கள் எல்லோரும் நானும் அரபி, குர்ஆனும் அரபி. எனக்கும் குர்ஆனில் எல்லாம் தெரியும் என்று கூறிய தில்லை. அத்தகைய தகுதி எங்களுக்கும் உண்டு, என எல்லா ஸஹாபிகளும் வாதம் செய்ததில்லை. அதே நேரம், அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இதய ஆசியும் இனிய நல்வாக்கும் பெற்ற இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா

அன்ஹுமா அவர்கள் "எனது ஒட்டகத்தைக் கட்டும் கயிறு காணாமல் போய்விட்டாலும் அதைக் குர்ஆன் மூலம் கண்டு பிடித்து விடுவேன்" என்ற கருத்தில் அறிவித்ததும் உண்டு! எனவேதான்,

குர்ஆனுக்கு விளக்கம் உரைக்க "த.்.ப்ஸீர்" என்றொரு தனித்துறை இஸ்லாமிய சன்மார்கத்தில் ஏற்படுத்தப்பட்டது.

"த.்.ப்ஸீர்" என்றால் என்ன?

மு.்.பஸ்ஸிர் என்று யாருக்குச் சொல்வது?

என்பதற்கெல்லாம் முழுவடிவம் கொடுக்கப்பட்டது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பல்லாயிரக் கணக்கில் ஸஹாபிகள் இருந்தாலும் அவர்களெல்லாம் மு.்.பஸ்ஸிர் என்று குறிக்கப்படவில்லை. ஆயிரமாயிரம் அந்த ஸஹாபிகளில் மு.்.ப்ஸ்ஸிர் குர்ஆனுக்கு விளக்கம் சொல்லத் தகுதியடைந்தவர்கள் என்று அறியப்பட்ட பிரபலமானவர்கள் பத்து ஸஹாபிகள் மாத்திரமே!

1, ஸய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

2, ஸய்யிதுனா உமர் இப்னுல் கத்தாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

3, ஸய்யிதுனா உதுமான் இப்னு அ.்.ப்பான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

4, ஸய்யிதுனா அலி இப்னு அபீதாலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

5, ஸய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

6, ஸய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

7, ஸய்யிதுனா உபை இப்னு க.ஃப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

8, ஸய்யிதுனா ஜைத் இப்னு .ஃதாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

9, ஸய்யிதுனா அபூமூஸல் அஷ்அரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

10,ஸய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இதில் "குல.ஃபாவுர் ராஷிதீன்களான முதல் நான்கு பேரில் ஸய்யிதுனாஅலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வழியே வந்துள்ள த.ஃப்ஸீர் அறிவிப்புகள் தான் அதிகம்.

இந்த 10 ஸஹாபாப் பெருமக்களில் வயதில் மிகவும் குறைந்தவர் ஸய்யிதுனாஅப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் தான். எனினும் "த.ஃப்ஸீர் ரிவாயத்துகளில் அவர்கள் தான் மிக அதிகம். அது மாத்திரமல்ல, பெரிய முதன்மை ஸஹாபாக்களுக்குக் கூட இல்லாத "ரயீஸுல் மு.ஃபஸ்ஸிரீன்" தலைமை மு.ஃபஸ்ஸிர் என்ற சிறப்புப் பெயர் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களுக்கே கூறப்படுகிறது.

அருள் மறை குர்ஆனில் தங்களுக்குத் தேவையான விளக்கங்களை அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அணுகிப் பெற்ற ஸஹாபிகள், அதன் பின்னர் தங்களுக்குத் தேவைப்பட்ட விளக்கங்களுக்கு மு.ஃபஸ்ஸிர்களாக பிரபலமான மேற்கண்ட 10 ஸஹாபிகளைத்தான் அணுகினார்கள்.

நானும் அரபி! என் தாய் மொழியும் அரபி! குர்ஆனின் மொழியும் அரபி! என்னாலும் சுயமே குர்ஆனை விளங்கவும் பிறருக்கு விளக்கவும் தெரியும்! முடியும்! நானும் மு.ஃபஸ்ஸிர்தான் என்ற கர்வமோ தான் தோன்றித் தனமான எண்ணமோ எந்த ஸஹாபிக்கும் இருந்ததில்லை.

மக்காவிலும் மதீனாவிலும் வாழ்ந்திருந்த ஸஹாபிகள் இஸ்லாமியப் பணிகளுக்காக இப்புனித நகரங்களைத் துறந்து பல்வேறு பகுதிகளுக்கும் நாடுகளுக்கும் குடிபெயர்ந்த போது அந்தந்த நாடுகளிலெல்லாம் ஸஹாபிகளின் தொடர்பால் "தாபியீன்கள்" பல லட்சங்களைத் தொட்டுநின்றார்கள். எனினும், எல்லாத் தாபியீன்களும் "மு.ஃபஸ்ஸிர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளவும் இல்லை. கூறப்படும் இல்லை. ஸஹாபிகளில் 10 பேர் மட்டுமே "மு.ஃபஸ்ஸிர்" என்று பிரபலமாக இருந்தது போல் தாபியீன்களில் "மு.ஃபஸ்ஸிர்" களின் எண்ணிக்கை அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஸஹாபிகளை விட அதிகம்.

தாபியீன்களில் மு.ஃபஸ்ஸிர்களாக அறியப்பட்டு பிரபலமாக இருந்தவர்கள் மூன்றாகப் பகுக்கப்பட்டனர்.

1. மக்காவைச் சார்ந்த மு.ஃபஸ்ஸிர்கள்

2. மதீனாவைச் சார்ந்த மு.ஃபஸ்ஸிர்கள்

3. இராக்கைச் சார்ந்த மு.ஃபஸ்ஸிர்கள்

1. தாபியீன்களில் மக்கா மு.ஃபஸ்ஸிர்களின் குருவாக விளங்கியவர்கள் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள்.

"மு.ஃபஸ்ஸிர்களின் தலைவர்" ரயீஸுல் மு.ஃபஸ்ஸிரீன் எனச் சிறப்புப் பெயர் பெற்ற இந்த ஸஹாபிப் பெருமகனார் மூலம் த.ஃப்ஸீர் ஞானம் பெற்ற மக்கத்து "தாபியீன் மு.ஃபஸ்ஸிர்கள் எண்ணிக்கை அதிகமே என்றாலும் அவர்களில் பிரபலமானவர்கள் ஐந்து பேர் மாத்திரமே!

1. இமாம் முஜாஹித் இப்னு ஜப்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

2. இமாம் அதா.ஃஇப்னு அபீ ரபாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

3. இமாம் இக்ரிமா மௌலா இப்னி அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹும்

4. இமாம் தாவூஸ் இப்னு கைலான் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

5. இமாம் ஸயீத் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

2. மதீனா தாபியீன் மு.ஃபஸ்ஸிர்களும் சற்று அதிகம். என்றாலும் அவர்களில் தலையாயவர்களாக அறியப்பட்டவர்கள் மூன்று பேர்தான்.

1. இமாம் முஹம்மத் இப்னு த.ஃப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

2. இமாம் அபுல் ஆலியா அர்ரயாஹி ரலியல்லாஹு அன்ஹு

3. இமாம் ஜைத் இப்னு அஸ்லம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

3. இராக் தாபியீன் மு.ஃபஸ்ஸிர்களும் நிறைய உண்டு. எனினும் கீழ்க் கண்டவர்கள் அவர்களில் முக்கியமானவர்கள்.

1. இமாம் ஹஸன் அல்பஸரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

2. இமாம் மஸ்ரூக் இப்னு அப்துர் ரஹ்மான் (அல்அஜ்த.ஃ.) ரலியல்லாஹு தஆலா அன்ஹு

3. இமாம் கதாதா இப்னு திஆமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

4. இமாம் அதா.ஃ. இப்னு அபி முஸ்லிம் அல் குராஸானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

5. இமாம் முர்ரா அல் ஹமதானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இஸ்லாமிய ஷரீஅத்தின் முதல் மூலாதாரமாக இறை மறை குர்ஆன் விளங்குவது போல், இஸ்லாமியக் கலை ஞானங்களின் தலைமை இடத்தைத் "த.ஃப்ஸீர்" பெற்றுத் திகழுகிறது.

த.ஃப்ஸீர் மூன்று வகைப்படும்.

1. த.ஃப்ஸீர் பிர் ரிவாயா

2. த.ஃப்ஸீர் பித்திராயா

3. த.ஃப்ஸீர் பில் இஷாரா

குர்ஆனுக்கு குர்ஆனிலேயே வந்துள்ள விளக்கம், குர்ஆனுக்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறிய விளக்கங்கள், குர்ஆனுக்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வழியே பெற்ற ஸஹாபிகள் கூறிய விளக்கங்கள் ஆகிய இம் மூன்றும் முதல் பிரிவான "த.ஃப்ஸீர் பிர்ரிவாயா"ச் சாரும்.

ஸஹாபாப் பெருமக்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு "வஹி" இறங்கும் நிலையை நேரில் அறிந்தவர்கள், இறைவசனங்கள் இறங்கியதற்கான காரணகாரியங்களை (ஸபபுன்னுஜுல்) நேரில் தெரிந்தவர்கள். வேதத் திருநபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நேரில் பாடம் பயின்றவர்கள். அவர்களின் பாசறையில் பக்குவம் பெற்று பரிசுத்த இதயம் பெற்றவர்கள். மன மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். இக்காரணங்களால் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்துக்களில் குர்ஆனை விளங்கவும் விளக்கவுமான முதன்மைத்தகுதி ஸஹாபிகளுக்கு உண்டு! எனவே தான் "த.ஃப்ஸீர் பிர்ரிவாயா"ப்பிரிவில் ஸஹாபிகள் மூலம் வந்த த.ஃப்ஸீர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

"த.ஃப்ஸீர் பிர்ரிவாயா" என்ற இந்த முதல் பிரிவுதான் த.ஃப்ஸீர்களில் தலையாயது. உயர்ந்தது, சிறந்தது.

இரண்டாவது "த.ஃப்ஸீர் பிர் ரிவாயா" இதற்கு "த.ஃப்ஸீர் பிர் ர.ஃயி" என்னும் ஒரு பெயர் உண்டு!

இங்கே "ர.ஃயி" என்பதற்கு "இஜ்த்திஹாத்" என்று பொருள் கொள்ளப்பட வேண்டும். மனதில் தோன்றும் கருத்து என்று பொருள் கொள்ளப்படக்கூடாது.

தன் மனதில் தோன்றும் தான்தோன்றித்தனமான எண்ணத்தின் அடிப்படையில் யாரேனும் குர்ஆனுக்கு விளக்கம் கூறினால் அவன் கொடும்பாவி என்றும் நரகவாதி என்றும் இமாம் குர்துபி ரலியல்லாஹு அன்ஹு போன்ற பிரபல மு.'.பஸ்ஸிர்கள் கூறுகிறார்கள்.

அவ்வாறு அவர்கள் கூறுவதற்கு, "எவர் தனது மனோ இச்சையின் படி குர்ஆனுக்கு விளக்கமளிப்பாரோ அவர் நரகவாதி" என்ற கருத்தில் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ் ஒன்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் வழியே "திர்மதி"யில் பதிவு பெற்றுள்ளது. எனவே,

"த.'.ப்ஸீர் பித் திராயா" என்னும் இவ்விரண்டாம் பிரிவை

1. ஏற்கத் தக்கது என்றும்

2. ஏற்கக் கூடாது என்றும் இரண்டாகப் பிரிப்பார்கள் நமது பெருமக்கள்.

ஷரீஅத்தின் நோக்கத்திற்கும் குறிக்கோளுக்கும் விதிகளுக்கும் உடன்பாடான முறையிலும்

வழிகேடானவற்றிற்கும் ஷரீஅத்தின் நோக்கத்திற்கும் விதிகளுக்கும் முரணானவற்றிற்கு எதிரானதாகவும்,

அரபி மொழி வழிமுறைகளுக்கும் இலக்கண இலக்கிய விதிகளுக்கும் உட்பட்டதாகவும் இருந்தால் அது ஏற்கத்தக்கது. இல்லையானால் ஏற்கத்தக்கது. இல்லையானால் ஏற்கப்படக்கூடாதது.

குர்ஆனின் வசனங்களுக்கு வெளிப்படையாக விளங்கும் பொருள் விளக்கம் அன்றி, அதே வசனத்துக்கு ஷரீஅத்துக்கு உடன்பாடான வேறு ஒரு நுணுக்கமான பொருள் விளக்கம் கூறுவதற்கு "த.'.ப்ஸீர் பில் இஷாரா" என்று பெயர்.

"ம.'.ரி.'.பா" என்னும் ஆன்மீக ஞானமும் "இல்முல்லதுன்னீ" என்னும் இறையருள் நிறைஞானமும் அகமியத் தேர்ச்சியும்

ஆன்மீகப் பக்குவமும் முதிர்ச்சியும் உள்ளவர்களே இப்படியொரு பொருள் விளக்கத்தை அளிக்க முடியும்.

ஸய்யிதுனாஉமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தனது கிலா.'.பத் காலத்தில் ஒரு சமயம் தான் கூட்டிய கூட்டமொன்றில் முக்கிய பெரிய ஸஹாபிகள் சிலருடன் இளவயது ஸஹாபியான இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களையும் அழைத்திருந்தார்கள். இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் தனித்தகுதியைத் தெளிவுபடுத்தவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

வருகை தந்திருந்த மூத்த ஸஹாபிகளிடம் குர்ஆனின் 30 வது பாகத்தில் இடம் பெற்றுள்ள "இதாஜாஅ நஸ்ருல்லாஹ்".... என்று தொடங்கும் ஒரு சிறிய சூராவை ஓதிக்காட்டி த.'.ப்ஸீர் விளக்கம் கேட்டார்கள் ஸய்யிதுனாஉமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

மூத்த ஸஹாபிகளில் சிலர் தங்கள் விளக்கங்களைச் சொன்னார்கள். மற்றும் சிலர் மௌனம் காத்தார்கள்.

இறுதியில் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களிடம் விளக்கம் கேட்க, "நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் "அஜல்" சமீபித்து விட்டது. அவர்கள் விரைவில் "வ.'.பாத்"தாக விருக்கும் கருத்தை இச்சிறிய சூரா விளக்குவதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா பதில் கூறினார்கள்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் இக்கருத்துரையை சரி கண்டதுடன் தனக்கும் இதே விளக்கம் தோன்றியதாக உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதுடன், மூத்த ஸஹாபிகளின் கூட்டத்திற்கு இளைய ஸஹாபியான இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களை முன்னர் நடந்த கூட்டங்களுக்கு அழைத்ததற்கும் இப்போது அழைத்ததற்கும் காரணம் அவர்களிடம் அமைந்துள்ள இச்சிறப்புத் தகுதிதான் என்றும் விளக்கினார்கள்.

ஒருவர் "மு.'.பஸ்ஸிர்" என்ற தகுதியைப் பெற வேண்டுமானால்,

1. அரபி மொழியில் துறையின் அனைத்து அம்சங்களிலும் - "நஹ்வு, "ஸர்.'.ப்" - "இஷ்த்திகாக்" - அவர் ஆழ்ந்த புலமை பெற்றிருக்க வேண்டும்.

2. அரபி மொழியின் இலக்கிய இயல்களில் - "மஆனி," "பயான்," "பதீ.'." - நுணுமாண் நுழைபுலம் பெற்றிருக்க வேண்டும்.

3. ஷரீஅத்தின் சட்ட இயல் துறைகளின் எல்லாவற்றிலும் ".'.பிக்ஹ்", "உசூல் .'.பிக்ஹ்", மற்றும் "காஸ்", "ஆம்," "மு.'. பஸ்ஸல்" போன்றவற்றிலும் சிறப்பு நுண்ணறிவு பெற்றிருக்க வேண்டும்.

4. குர்ஆன் வசனங்கள் இறங்கிய காரண காரியங்கள் - "அஸ்பாபுன்னாஜுல்" - பற்றிய பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும்.

5. அருள்மறை வசனங்களில் முதலில் அருளப்பட்டுப் பின்னர் மாற்றம் செய்யப்பட்டவற்றில் - "நாஸிக்," "மன்ஸூக்" - முந்தியது பிந்தியது பற்றிய தெளிவான சீரான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

6. இறை மறை வசனங்களை ஓதுவது குறித்த - "கிராஅத்" - துறையிலும் அதீத ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

7. மேற் குறித்த எல்லாத்துறைகளிலும் வல்ல தகுதியை அவர் பெற்றிருந்தாலும் இத்துறைக்கு உரியவராக அவரை ஆக்குகிற "இறையருள்" ("மவ்ஹிபா") அவருக்கு இருக்க வேண்டும்.

முதலில் குறித்த எல்லாத் தகுதிகளும் இருந்து இறுதியில் சொன்ன "மவ்ஹிபா" - என்னும் இறையருள் இல்லையானால் விநாசகாலே விபரீத புத்தியாகி "த.'.ப்ஸீர்" என்ற பெயரால் தறுதலைத் தனமான, தான் தோன்றித்தனமான கருத்துக்கள் தான் வெளிப்படும்.

இதனால்தான் இஸ்லாமிய கலை ஞானத்துறைகள் அனைத்திலும் தேர்ந்த தெளிவான நிபுணத்துவம் நிறைந்த பேரறிஞர் பெருமக்கள் பலர் த.'.ப்ஸீர் துறையில் தடம் பதிக்கத் தயங்கினார்கள். சிலர் மாத்திரமே நெடிய சிந்தனைக்கும் ஆழ்ந்த

யோசனைக்கும் 'இஸ்திகாராவுக்கும்' பிறகு த.'.ப்ஸீர்களைத் செய்தளித்தனர்.

அத்தகைய த.'.ப்ஸீர்களில் 'ரூஹுல் பயான்' என்ற பிரபலமான த.'.ப்ஸீருக்கு சிறப்பிடம் உண்டு. ஆத்மார்த்த செய்திகள், 'அகீதா' கொள்கை ரீதியான விஷயங்கள், ஹதீஸ்களின் ஆதாரங்கள், மகான்களான பெருமக்களின் மேற்கோள்கள், "த.'.ப்ஸீர் பில் இஷாரா" பற்றிய குறிப்புகள், வரலாற்றுத் தகவல்கள் என விரிவாகவும் சிறப்பாகவும் அருமையாகவும் அமைந்த, ஏற்றுக் கொள்ளப்பட்ட இஸ்லாமிய அறிஞர் பெருமக்களால் அங்கீகரிக்கப்பட்ட உலகறிந்தத.'.ப்ஸீர் களில் ஒன்று 'ரூஹுல்பயான்'.

இந்தத் த.'.ப்ஸீரை ஆதாரமாகக் கொண்டு உத்தமபாளையம் பன்னூல் ஆசிரியர் மௌலவி அல்ஹாஜ் எஸ். எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி ரஹிமஹுல்லாஹ் ஹளரத் பெருந்தகை அவர்கள், "த.'.ப்ஸீருல் ஹமீத் .'.பீ த.'.ப்ஸீரில் குர்ஆனில் மஜீத்" என்ற பெயரில் எழுதி 1937 முதல் 1961 வரை 24 ஆண்டுகளில் ஏழு பாகங்களாக வெளியிடப்பட்ட முதல் தமிழ் த.'.ப்ஸீர், தமிழ் முஸ்லிம்களின் அறிவுப் பசிக்கு நல்ல உணவாக அமைந்தது.

இஸ்லாமிய சன்மார்க்க நுணுக்கம் பற்றியும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றியும் நன்மக்களான மகான்கள் பலர் பற்றியும் பல நல்ல நூல்களை நற்றமிழில் வழங்கிய சங்கைமிகும் ஹளரத் எஸ். எஸ். எம். பாக்கவி பெருந்தகை அவர்கள், "தஜ்ரீதுல் புகாரி" என்ற பெயரில் புகாரி ஷரீ.'.பின் தமிழாக்கத்தையும் வழங்கியுள்ளார்கள்.

மௌலானா முஹம்மதலி ஜவ்ஹர் (ரஹிமஹில்லாஹ்) அவர்களின் நூற்றாண்டுவிழா இந்தியாவில் கொண்டாடப்பட்ட போது, ஜவ்ஹர் மௌலானா அவர்களின் நினைவாக தமிழகமெங்கும் பொதுக்கூட்டங்களை தமிழ் முஸ்லிம் அமைப்புகள் நடத்தின.

அப்போது, ஜவ்ஹர் மௌலானா அவர்கள் பற்றியும் அவர்களின் சாதனை, தியாகம், புலமை, இந்திய சுதந்திரத்திற்கு

அவர்கள் ஆற்றிய இணையற்ற சேவை, அதற்காக அவர்கள் செய்த தியாகம், வெள்ளை ஏகாதிபத்தியர்களால் அவர்கள் பட்ட கஷ்டங்கள், சந்தித்த வழக்குகள், அந்த வழக்குகளில் மௌலானா ஜவ்ஹர் அவர்கள் ஆற்றிய வாதங்கள் பற்றிப் பேச பலருக்கும் கைகொடுத்தது மௌலானா முஹம்மதலி ஜவ்ஹர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பற்றி மரியாதைக்குரிய பெரியார் **எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் பாக்கவி ஹளரத் (ரஹ்)** அவர்கள் எழுதிய நூல் தான். ஆயிரம் பக்கங்களில் 'மௌலானா ஜவ்ஹர்' அவர்கள் பற்றி மிக விரிவான மிக அருமையான நூலை ஹளரத் பெருந்தகை எழுதியிருந்தார்கள். அந்த ஒரு நூலை பல தடவை நான் முழுமையாகப் படித்திருக்கிறேன்.

ஆலிம்கள் நல்ல தமிழில் எழுதுவதும் பேசுவதும் அரிதாக இருந்த காலத்தில் மரியாதைக்குரிய ஹளரத் பெருந்தகையவர்கள் நிறைய நூல்களை எழுதி சாதனை படைத்துள்ளார்கள்.

அவர்களை நன்கு அறிவேன். அவர்களுடன் பழகும் வயதில்லை - ஆயினும் கொஞ்சம் பழகியிருக்கிறேன்.

முதிர்ந்த மார்க்க அறிஞராக விளங்கிய நிலையிலும் எளிய தோற்றத்தில் நடமாடியவர்கள், வயது வேறுபாடின்றி எல்லோரிடத்திலும் சாதாரணமாகப் பழகுகிற உரையாடுகிற பண்பாளர். முதியவயதில் நலம் குன்றி, உத்தமபாளையம் தனது இல்லத்தில் அவர்கள் படுக்கையில் இருந்தபோது அவர்களை கடைசியாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

"த∴ப்ஸீருல் ஹமீத் ∴பீ த∴ப்ஸீரில் குர்ஆனில் மஜுத்" என்னும் இந்தத் தமிழ் த∴ப்ஸீரின் பல பாகங்கள் 1966 க்குப்பின் மறுபதிப்பின்றி மிகப் பெரிய ஏக்கத்தை தமிழ் முஸ்லிம்களுக்கிடையே ஏற்படுத்தியிருந்த நிலையில்,

அந்தத் த∴ப்ஸீரில் கருத்துச் சிதைவும் பொருட்சிதைவும் ஏற்படாத விதத்தில் தற்காலத்தமிழ் வழக்கிற்கேற்ப தமிழ் நடையில் சிறிது மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்து, அதை வெளியிட சங்கைமிகும் எஸ்.எஸ்.எம். பாக்கவி ஹளரத் அவர்களின்

மகன் மேற்கொண்டுள்ள புதிய முயற்சியில் பனைக்குளம் ஹாஜி **எம்.முஹம்மது ஷுஐப்** அவர்களின் ஆதரவோடு புதியவடிவம் பெற்ற அந்தத் த∴ப்ஸீர் இப்போது வெளிவருவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

இம்மாபெரும் நற்பணிக்கு தமிழ் முஸ்லிம் சமுதாயம் உரிய ஆதரவும் தக்க ஊக்கமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் த∴ப்ஸீர் முழுவதும் அடுத்தடுத்து அழகிய வடிவமைப்பில் வெளிவந்து நிறைவுபெற இறையருள் துணை நிற்குமாக! ஆமீன்!!

இவ்வரிய ஆக்கத்தை நமக்களித்த அருமைக்குரிய பெரியார் எஸ்.எஸ்.எம். பாக்கவி ஹளரத் அவர்களின் பணிகளை அல்லாஹ் கபூல் செய்து, உரிய நற்கூலியை அவர்களுக்கு வழங்கி, அவர்களின் கப்ரை சுவனப்பூங்காவாக்கி, அவர்களையும் இவ்வரிய பணியில் அவர்களுக்கு உதவிய அனைவரையும் "ஸாலிஹீன்" திருக்கூட்டத்தில் சேர்ந்து, சுவனப் பேற்றினையும் வழங்கி அல்லாஹ் அருள்வானாக! ஆமீன்!

ஹக்கி ஸய்யதினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், வ பி ஹக்கி தலாமிஹுல் கதீம். ஆமீன்.

ஸல்லல்லாஹு அலா ஸய்யிதினா முஹம்மதின்
ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸஹ்பிஹி,
வஸல்லம்.

ஒப்பம்

மக்கத்துல் முகர்ரமா — மௌலவி,அல்ஹாஜ்
30.11.07 — எஸ்.எஸ்.கலந்தர் மஸ்தான் ரஹ்மானி
காயல்பட்டிணம்

மேற்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்ட கிரந்தங்கள்

திருக்குர்ஆன் விரிவுரைகள்.

1. தஃப்ஸீர் ரூஹுல் பயான்.
2. தஃப்ஸீர் ஜலாலைன்.
3. தஃப்ஸீர் ஸாவீ
4. தஃப்ஸீர் தஃலபீ
5. தஃப்ஸீர் அபுல்காஸிம்
6. தஃப்ஸீர் முஹீத்
7. தஃப்ஸீர் ஃபாத்திஹா
8. தஃப்ஸீர் லுபாபுத் தன்ஜீல்
9. தஃப்ஸீர் முளீஹுல் குர்ஆன்
10. தஃப்ஸீர் காஷிஃபி
11. தஃப்ஸீர் ஜாஹிதி
12. தஃப்ஸீருத் தைஸீர்
13. தஃப்ஸீர் ஃபத்ஹுர் ரஹ்மான்
14. தஃப்ஸீர் ஐனுல் மஆனீ
15. தஃப்ஸீர் அபுல் லைஃதீ
16. தஃப்ஸீர் காஹிதபி
17. தஃப்ஸீர் மதாரிக்
18. தஃப்ஸீர் கபீர்
19. தஃப்ஸீர் குர்த்துபீ
20. தஃப்ஸீர் ஜவாஹிர்
21. தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீமில் மஜீத்
22. தஃப்ஸீர் கவாஷ்
23. தஃப்ஸீர் புர்ஹானுல் கு/ஆன்
24. தஃப்ஸீர் மவாஹிபுல் குர்ஆன்
25. தஃப்ஸீர் ஃகராயிபுத் தஃப்ஸீர்
26. தஃப்ஸீர் குர்ஆன்
27. தஃப்ஸீர் தப்ரீ
28. தஃப்ஸீர் இப்னு அதிய்யா
29. தஃப்ஸீர் ஃபார்ஸீ

30. தஃப்ஸீர் பகவீ
31. தஃப்ஸீர் பஹ்ருல் உலூம்
32. தஃப்ஸீர் தவ்ரீ
33. தஃப்ஸீருல் உயூன்
34. தஃப்ஸீர் ஹத்தாதி
35. தஃப்ஸீர் தீபி
36. தஃப்ஸீர் துர்ரே மன்தூர்
37. தஃப்ஸீர் ஹவூஷிய் ஷெய்கு

ஹதீஸ் கிரந்தங்கள்

38. ஸஹீஹுல் புகாரீ
39. ஸஹீஹு முஸ்லிம்
40. அபூதாவூத்
41. திர்மிதி
42. இப்னு மாஜா
43. நஸயீ
44. முஅத்தா இமாம் மாலிக்
45. அஹ்மத்
46. ஷரஹுத் தர்ஃகீப்
47. முஹாாளரத்துஸ் ஸுயூத்தி
48. ஷரஹ் ஜவ்ஸீ
49. ஷரஹுஷ் ஷரீஃப் வில்மவாகிப்
50. ஷரஹுல் மஷாரிக்
51. நவாதிருல் உசூல்
52. முஃஜமுத் தப்ரானீ
53. ஃபிர்தவ்ஸ்
54. ஹில்யத்துல் அவ்லியா
55. திப்யான்
56. தாரமீ
57. இஃகாருல் அஃப்பார் ஃபீ முஷ்கிலில் அக்பார்
58. முஃப்ரதாத்து
59. நஃபாயிசுல் மஜாலிஸ்

60. தஃரீபு
61. வாக்கிஆத்தே முஹம்மதிய்யா
62. மஸாபீஹ்
63. ஷரஹுல் யமானீ
64. மவாஹிபுல்லதுன்னியா
65. ஜாமிஉல் உசூல்
66. அத்தஹ்தீபு
67. கிதாபுத் தர்கீப்
68. முஸன்னஃப் இப்னு அபீஷைபா
69. மிஷ்காத்துல் அன்வார்
70. அர்பாஈனல் இத்ரீஸிய்யா
71. தலாயில் இமாம் பைஹக்கீ (ரஹ்)
72. மின்ஹாஜுல் ஹுலைமி
73. அஸ்ஸவாஇக்
74. அஸ்இலத்துல் முஹ்கமா
75. அத்துத்தூரர்
76. ஷரஹுன் னுக்பா
77. ஷரஹுல் அக்காயித்
78. அத்தஃரீப் வல்இஃலாம்

இஸ்லாமியச் சட்ட விளக்க நூற்கள் (ஃபிக்ஹு)

79. துரருல் குரர்
80. முல்தஹத்
81. ஹிதாயா
82. நிஸாஃபுல் இஹ்திஸாப்
83. ஃபதாவா ளஹீரிய்யா
84. ஐனுல் ஹயாத்
85. அல்வஸீத்
86. ஃபத்ஹுல் கரீபில் மஜீத்
87. அன்வாருல் மஷாரிக்
88. ஃபதாவா ஸுயூத்தி
89. ஃபதாவா ஸீனிய்யி

90. ஃபதாவா காரியில் ஹிதாயா
91. குலாஸத்துல் ஃபதாவா
92. ஹவாஷி ஸஅதினில் முஃப்தீ
93. ஜாமிவுஸ் ஸாபிர்
94. காஜீ கான்
95. தாத்தார் கானிய்யா
96. அக்பத்துல் ஃபரீத்
97. நஹ்ர்

வரலாறு

98. முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்)
99. கஸஸுல் அன்பியா
100. கஸஸுல் அவ்லியா
101. அவாயிலுஸ் ஸுயூத்தி
102. தாரீக் ஹலபீ
103. தக்மிலா
104. தாரீக் தப்ரீ
105. ஆஹ்காமுல் மர்ஜான்
106. அன்ஸாஹுல் உயூன்
107. கிதாபுல் ஹவாத்திப்
108. ஃபஸ்லுல் கிதாப்
109. கஸாயிஸுஸ் ஸுக்ரா
110. ரவ்லத்துல் கத்தீப்
111. ஷரஹு மனாஜிலிஸ் ஸாஇரீன்
112. மனாஸிக்
113. ஸவாத்
114. பஹ்ருல் கலாம்
115. மஆலிம்
116. ஷரஹுல் அஸ்த்

அகராதி

117. ஷரஹுத் தஆர்ருப்
118. துர்ரத்துல் பாகிரா

119. ரவ்லத்துல் உலமா
120. லஹ்ருல் உலூம்
121. யனாபீஃ
122. தத்கிரத்துல் குர்துபி
123. ஷிர்ஆ
124. ரவ்ஜல் பாயிக்
125. முஹ்ளராத்
126. முஹாளராத்
127. மஃபாத்தீஹ
128. அல்புஸ்தான்
129. அல்தையிஃப்
130. ஸிஹாஹு
131. அல்அஷ்பாஹ்
132. கிதாபுத் தஃரீப்
133. கிதாபுல் மஸாதிர்
134. காமூஸ்
135. தஹ்தீபுல் மஸாதிர்
136. ஜவ்ஹரி

தஸவ்வுஃப்

137. இஹ்யாஉ உலூமுத்தீன்
138. ஃபுதூஹாதுல் மக்கிய்யா
139. தாவீஹுல் குலூப்
140. கூத்துல் குலூப்
141. அல்இர்ஷாத்
142. ஹதாயிக்
143. அனீசுல் வஹ்தத் வ ஜலீசுல் கல்வத்
144. அராவிசுல் பக்லீ
145. ஹிக்கம்
146. தல்கீஹுல் அத்ஹான்
147. பஹ்ருல் ஹக்காயிக்
148. கஷ்ஃபுல் அஸ்ரார்

149. ரபீஉல் அப்ரார்
150. பஹ்ருல் உலூம்
151. தாவீலாத்து ன்னஜ்மிய்யா
152. தாவீலாத்துல் காஹானீ
153. தர்ஜுமத்துல் ஃபுதூஹாத்
154. மன்பஉல் ஆதாப்
155. காலிஸத்துல் ஹக்காயிக்
156. ஹயாத்துல் ஹயவான்
157. ஹவாஷீ
158. ஷம்சுல் மஆரிஃப்
159. கரீதத்துல் அஜாயிப்
160. ஷரஹுல் ஃபுசூல்
161. அராயிசுல் பயான்
162. அர்ரவ்லத்துல் அனீஃபா
163. ஜஹ்ரத்துர் ரியாழ்
164. கரீதத்துல் அஜாயிப்
165. லுபாப்
166. ஹவாஷ் இப்னுஷ் ஷெய்கு
167. அஸ்இலத்துல் ஹிகம்
168. அல்முன்கிது மினல்லளால்
169. ஷரஹுத் தரீக்கத்
170. தாவீலாத்துல் காஷிஃபி
171. ரைஹானுல் குளூப்
172. கஷ்ஃபுல் உலூமில் ஆகிரா
173. ரவ்லுர் ரயாஹீன்
174. கிதாபுல் ஜவாஹிர்
175. மிஃராஜுஸ் ஸாலிகீன்
176. மின்ஹாஜுல் ஆபிதீன்
177. தஸ்லீமுல் முத்தஅல்லிம்

உட்பட மேலும் சில கிரந்தங்கள்

	ஸூரா	ஆயத்து	பக்கம்
மரணித்து விட்டால் அவரது சகல நற்காரியங்களும் பயனின்றி அழிந்து விடுகின்றன	2	217	485
சன்மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை	2	256	554
கல்விமான் அநேக நன்மைகளை அளிக்கப் பட்டுள்ளான்	2	269	577
தொழுது ஜக்காத்துக் கொடுத்த ஸாலிஹான மூமினுக்கு மறுமையில் பயமில்லை	2	277	589
கடன்பட்டவரை நிர்ப்பந்திக்காதீர்கள்	2	280	591
கடன் கொடுப்போர் தங்களுக்கு ஆதாரம் தேடிக் கொள்ள வேண்டிய முறை	2	282	594
அடகு வாங்குதல்	2	283	596

இடம் பெற்றுள்ள ஸூராக்கள்

ஒன்றாவது ஸூரத்து.

ஸூரத்துல் ஃபாத்திஹா

இது மக்காவிலும் மதீனாவிலும் இறங்கியது.

ஏழு ஆயத்துகள் கொண்டது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(இம்மையில் யாவருக்கும்) கருணை புரிபவனும் (மறுமையில் தன் நல்லடியார்களுக்கு மட்டும்) அருள் பாலிப்பவனுமான அல்லாஹ(த்தஆலா) வுடைய (திருப்)பெயரால் (இதை ஓத ஆரம்பஞ் செய்கின்றேன்.)

அல்லாஹ் என்பது ''தன்னிலைக்குத் தானே ஆதாரமாய் சர்வ சிருஷ்டிகளுக்கும் மூலமாய் இறைவனுடைய குணங்கள் அனைத்தையும் தன்னில் அமைத்துக் கொண்டதாய் நித்திய அகண்ட பரிபூரணமாக விளங்கும் உண்மைக்குப் பொருளாகிய இறைவனுக்கு ஏற்பட்ட பெயராகும். இது இடுகுறிப் பெயர் போல் வழங்கப்பட்டு வருகிறது. இறைவனுக்குரிய மற்ற பெயர்களெல்லாம் காரணப் பெயர்களாகும். **அல்லாஹ்** என்பதே மற்ற எல்லாப் பெயர்களையும் விடச் சிறந்தது. ஆதலால் இதனை **இஸ்முல் அஃலம்** என்று சொல்லுவார்கள். (பிஸ்மில்லாஹி) என்று இறைவன் சொன்னால், **பீ கான மா கான வபீ எகூனு மாஎகூனு** (அதாவது உண்டாயிருப்பவையெல்லாம் (இறைவனாகிய) என்னால்தான் உண்டாயின. இனி உண்டாகப் போவது அனைத்தும் என்னைக் கொண்டே உண்டாகும்) என்பது கருத்தாகும்.

அர்ரஹ்மான் "எல்லா உயிரினங்களுக்கும் அருள்பாலிப்பவனாகிய இறைவன் இவ்வுலகில் உள்ள நல்லவர், கெட்டவர் அனைவருக்கும் பாரபட்சமில்லாமல் பொதுவாக உயிரினங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுத்து வளர்ப்பதிலும், அவர்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் அதை விட்டு அவர்களைக் காப்பாற்றி கிருபை செய்பவன்" என்பது பொருளாகும்.

அர்ரஹீம் "மறுமையில் அல்லாஹுத் தஆலாவை நம்பிக்கை கொண்ட மூமின்களுக்கு மட்டும் பாவங்களை மன்னித்து சுவர்க்கத்தில் புகச் செய்வதாலும், அவனுடைய சந்திப்பைக் கொடுப்பதாலும் விசேஷமாக அருள் பாலிப்பவனாக இருக்கிறான்" என்பது பொருளாகும்.

ரிவாயத்து:- "அல்லாஹுத் தஆலாவுக்கு ஆயிரம் ரஹ்மத்துகள் உண்டு. அவற்றிலிருந்து ஒரே ஒரு ரஹ்மத்தை மட்டும்தான் அவன் உலகிலுள்ள சர்வ சிருஷ்டிகளுக்கும் அளித்து அருளினான். மற்றுமுள்ள 999 ரஹ்மத்துக்களை மறுமையில் அளிப்பதற்காக தன்னிடமே தயாரித்து வைத்திருக்கின்றான். இவற்றை அல்லாஹுத் தஆலா மறுமையில் தனது நல்லடியார்களுக்கு மட்டும் கொடுத்தருள்வான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்னும் வாக்கியம் திருக்குர்ஆனுக்கு திறவு கோலாகவும், லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும் பலகையில் அல்லாஹுத்தஆலாவுடைய எழுதுகோல் எழுதியவற்றில் முதல் வாக்கியமாகவும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட முதல் வசனமுமாகும். எனவே ஒவ்வொரு காரியத்தையும் பிஸ்மிலைக் கொண்டே ஆரம்பஞ் செய்வது நன்மையும் சிறப்புமாகும்.

ஃபாயிதா:- "ஒரே இரட்சகனாகிய இறைவனுக்கு மூன்று ஆயிரம் பெயர்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து ஓராயிரம் பெயர்களை மலக்குகளுக்கு அறிவித்தான். மற்றுமோர் ஆயிரம்

பெயர்களை நபிமார்களுக்கு அறிவித்தான். மற்றுமுள்ள பெயர்களில் முன்னூறு பெயர்களை "தவ்ராத்" வேதத்திலும் மற்றுமுள்ள முன்னூறு பெயர்களை "ஸபூர்" வேதத்திலும் மற்றும் முன்னூறு பெயர்களை "இன்ஜீல்" வேதத்திலும் மற்றும் தொண்ணூற்றொன்பது பெயர்களை "திருக்குர்ஆனிலும்" கூறியுள்ளான். பாக்கியுள்ள ஒரே ஒரு பெயரை தான் மட்டும் தெரிந்துள்ளான். இம்மூன்றாயிரம் பெயர்களின் பொருளையும் அல்லாஹ் ரஹ்மான் ரஹீம் என்ற இந்த பெயர்களில் அமைத்து வைத்துள்ளான். எனவே, யாரேனும் இதையறிந்து பிஸ்மி.... ஓதினால் அவன் அந்த மூன்று ஆயிரம் பெயர்களை ஓதி இறைவனை திக்ருச் செய்ததின் பயனை அடைவான்" என்று மார்க்க நிபுணர்களான இமாம்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்ஹதீஸ்:- "மிஃராஜின் இரவில் சுவர்க்கம் அனைத்தும் எனக்குக் காண்பிக்கப்பட்டன. சுவர்க்கத்தில் நான்கு நதிகள் ஓடுவதைக் கண்டேன். அவற்றில் ஒன்று தண்ணீர் நதி, இரண்டாவது பால் நதி, மூன்றாவது மது நதி, நான்காவது தேன் நதியாகும். இந்த நான்கு நதிகளும் எவ்விடத்திலிருந்து புறப்பட்டு எங்கு போய்ச் சேருகின்றன" வென்று ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கவர் "நபியே! இவை ஹவ்லுல் கவ்தருக்கு போய்ச் சேருகின்றன. ஆனால், இவை எங்கிருந்து புறப்பட்டு வருகிறது என்பது எனக்குத் தெரியாது. ஆகையால் தாங்கள் இறைவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார். எனவே, நான் இறைவனிடம் அதைப் பற்றிக் கேட்டேன். அப்போது ஒரு மலக்கு என்னிடம் வந்து ஸலாம் சொல்லி, என்னைக் கண்ணை மூடி திறக்கும்படி சொன்னார். அவ்வாறே நான் கண்ணை மூடி திறந்து பார்த்தேன். அந்த நொடியே நான் ஓர் மரத்தின் அடியில் இருப்பதை உணர்ந்தேன். அவ்விடத்தில் முத்தினால் அமைந்த குப்பா ஒன்று இருப்பதைக் கண்டேன். அந்த குப்பாவின் வாயலுக்கு தங்கத்தினால் கதவு போடப்பட்டிருந்தது. அந்த வளை மண்டபத்தின் மீது, இவ்வுலகிலுள்ள மனிதர்கள், ஜின்கள் மற்றும் படைப்பினங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து வைத்தாலும் அவைகளெல்லாம் ஒரு பெரும் மலை உச்சியில் இருக்கும் ஒரு சிறு பறவையின் அளவுதான் இருக்கும். அப்படிப்பட்ட பிரம்மாண்டமான

குப்பாவுக்குள்ளிருந்துதான் மேலே கூறப்பட்ட நான்கு நதிகளும் புறப்பட்டு வருவதைக் கண்டேன். இதை மட்டும் நான் பார்த்து விட்டு அந்த இடத்தை விட்டு அகல நாடினேன். அந்த மலக்கு என்னை நோக்கி "நபியே! இந்த குப்பாவுக்குள் தாங்கள் ஏன் நுழையவில்லை" என்று வினவினார். அதற்கு நான் "இந்த குப்பாவின் கதவு பூட்டப்பட்டிருக்கிறதே. அதன் சாவி என்னிடத்தில் இல்லையே" என்று பதில் சொன்னேன்.உடனே அந்த மலக்கு "நபியே பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம் என்ற சொல்தான் அதன் சாவி" என்று கூறினார். எனவே, அந்தக் கதவருகே சென்று பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று சொன்னேன். அந்தக் கதவு திறந்தது. உடனே நான் அந்த குப்பாவுக்குள் சென்றேன். அங்கு நான்கு தூண்கள் இருந்தன. அந்நான்கு தூண்களிலும் **பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்** என்று எழுதப்பட்டிருந்தது.

மேலே கூறிய நான்கு நதிகளில் தண்ணீர் நதி பிஸ்மில்லாஹ் என்பதிலுள்ள மீமிலிருந்தும் பால் நதி அல்லாஹ் என்பதிலுள்ள ஹாவிலிருந்தும் மது நதி அர்ரஹ்மான் என்பதிலுள்ள மீமிலிருந்தும், தேன் நதி அர்ரஹீம் என்பதிலுள்ள மீமிலிருந்தும் வந்து கொண்டு இருந்தது. அந்த நான்கு நதிகளின் பிறப்பிடம் **பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்** என்ற வாக்கியம்தான் என்பதை நான் புரிந்து கொண்டேன். பின்பு இறைவன் என்னை நோக்கி "யாரேனும் ஒருவன் பிஸ்மியை இதய சுத்தியுடன் ஓதினால், அவனுக்கு நான்கு நதிகளிலிருந்தும் வேண்டிய மட்டும் புகட்டுவேன் என்று இறைவன் கூறினான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பு:- திருக்குர்ஆனின் ஆரம்பத்தில் பிஸ்மிலுக்கு முன் **அவூதுபில்லாஹிமினஷ்ஷைத்தானிர்ரஜீம்** எழுதப்படவில்லை. எனவே, இந்தத் தஃப்ஸீரிலும் அதை எழுதவில்லை. இதன் பொருள் "எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்பதாகும். மேலும் அல்லாஹ்வை விட்டும் கவனத்தைத் திருப்பக் கூடிய அனைத்தையும் விட்டும் உள்ளத்தைத்

தூய்மையாக்குதல் என்பது இதன் கருத்தாகும். தவிர இந்த அவூது திருக்குர்ஆனில் உள்ளதல்ல. ஆயினும் திருக்குர்ஆன் ஓத ஆரம்பிக்கும் போது இதைச் சொல்லிக் கொள்வது சுன்னத்தாகும். இப்னு அதா ரஹ்மத்துல்லாஹி அலைஹி வாஜிபு என்று சொல்லி யிருக்கிறார்கள்.

திருக்குர்ஆனிலுள்ள 114 ஸூரத்துகளில் 113 ஸூரத்துகளின் ஆரம்பத்திலும் '**பஸ்மலா**' எழுதப்பட்டிருக்கிறது. இந்த 'பஸ்மலா' ஒவ்வொன்றும் அந்தந்த ஸூரத்துகளில் சேர்ந்திருக்கிறதா என்ற விஷயத்தில் இமாம்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்த 'பஸ்மலா' ஸூரத்துல் ஃபாத்திஹாவிலுள்ள ஒரு ஆயத்தாகவும் 'பஸ்மலா' எழுதப்பட்டுள்ள 113 ஸூரத்துகளிலும் இது ஒரு ஆயத்தாக கணிக்கப்பட வேண்டும் என்றும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா, அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஸஈதுப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இப்னுல் முபாரக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியோர் கூறியிருக்கிறார்கள்.

"இந்த பஸ்மலா ஸூரத்துல் ஃபாத்திஹாவிலுள்ள ஏழு ஆயத்துகளில் ஒன்றாக இல்லை" என்று இமாம் மாலிக், இமாம் அவ்ஜாயீ, இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் ஆகியோர் கூறியிருக்கிறார்கள். மேலும், அபூதாவூத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பஸ்மலா ஸூரத்துல் ஃபாத்திஹாவில் இல்லாதது போலவே 112 ஸூரத்துகளிலும் தனி ஆயத்தாக இல்லை. ஆயினும் ஸூரத்துந் நம்லிலுள்ள ஒரு ஆயத்தாகும் என்றும் ஒவ்வொரு ஸூரத்தின் ஆரம்பத்திலும் இது எழுதப்பட்டிருப்பது ஸூரத்துகளை பிரித்துக் காட்டுவதற்காகவும், "பரக்கத்து"க்காகவும்தான் என்று கூறியிருக்கிறார்கள்.

ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ①

1. எல்லாப் புகழும் அகிலங்கள் அனைத்தின் இரட்சகனாகிய அல்லாஹு (தஆலா) வுக்கே உரியது.

ஆதிகாலம் முதல் இதுவரை எத்தனை விதமான புகழ்கள் உண்டாயிருக்கின்றனவோ அவைகளும், இனிமேல் எக்காலமும் உண்டாகக் கூடிய புகழ் அனைத்தும் உலகம் அனைத்தின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும் என்பது இதன் கருத்தாகும்.

புகழ் நான்கு வகைப்படும். 1. இறைவன் தன்னைத் தானே புகழ்வது 2. அவன் தன்னுடைய நபிமார்களையும் வலிமார்களையும் புகழ்வது 3. அடியார்கள் இறைவனைப் புகழ்வது 4. அடியார்கள் சிலரை சிலர் புகழ்வது. இந்நான்கு வகைப் புகழ்களும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும்.

رَبِّ الْعٰلَمِيْنَ உலகம் அனைத்தையும் படைத்து அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அடக்கி ஆள்பவன் என்பது இதன் கருத்தாகும்.

ரிவாயத்து:- "இறைவனுக்கு முன்னூற்றி அறுபது உலகங்கள் இருக்கின்றனவென்றும், அவற்றில் முன்னூறு உலகத்தினர் ஆடை அணியாதவர்களாகவும், காலுக்கு செருப்பு அணியாதவர்களாகவும், தம்மைப் படைத்து இரட்சிக்கின்ற இறைவனை அறியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்றும் அவர்கள் அனைவரும் நரகத்தின் கூளங்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"அல்லாஹுத்தஆலாவுக்கு பதினொன்றாயிரம் உலகங்கள் உண்டு. அவற்றில் ஒன்று இந்த உலகம்" என வஹபிப்னி முனப்பஹ் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்று அல்லாமா அபுஸ்ஸஊது அவர்கள் தங்கள் தஃப்ஸீரில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢

2. (அவன்) பேரருளாளன் பேரன்புடையோன்.

இவ்வுலகில் எல்லா உயிரினங்களுக்கும் நிஃமத்துகளை அளித்து உதவி செய்பவன் என்பது **அர்ரஹ்மான்** என்பதின் கருத்தாகும்.

மனிதர்கள் செய்த நன்மை, தீமை முதலியவற்றை மறுமையில் விசாரித்து, நன்மை செய்த தன் நல்லடியார்களான மூமின்களுக்கு மட்டும் நல்லருள் புரிந்து, சுவர்க்கத்தை அளிப்பவன் என்பது **அர்ரஹீம்** என்பதன் கருத்தாகும். எனவேதான், இறைவன் "இம்மைக்கு ரஹ்மானாகவும், மறுமைக்கு ரஹீமாகவும் இருக்கிறான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣

3. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி.

இவ்வுலக வாழ்வு முடிந்து மறுமையில் மீண்டும் எழுப்பப்பட்டு அவரவர் நன்மை தீமைகள் விசாரிக்கப்பட்டு கூலி அளிக்கப்படும் நாளில் இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லாததால் நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்தில் மாலிகி என்றும் ஓதப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஓதுவதில் ஒரு எழுத்து அதிகமாகிறது. திருக்குர்ஆனில் ஒரு எழுத்துக்கு பத்து நன்மைகள் என்றபடி இதில் பத்து நன்மைகள் அதிகமாவதைக் கருதி இவ்வாறு ஓதுவது சிறந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- "நான் திருக்குர்ஆன் ஓதும்போது மாலிகி என்று ஓதுவது வழக்கம். இந்நிலையில் ஒரு பெரியார் என்னை நோக்கி "மலிகி என்று ஓதினால் அர்த்தத்தில் **மாலிகி** என்ற சொல்லைவிட மிகவும் அர்த்த புஷ்டியுள்ளதாகும்" என்று கூறினார். எனவே நான் பழைய வழக்கத்தை விட்டு விட்டு அன்று முதல் "மலிகி" என்று ஓதி வந்தேன். இந்நிலையில் என் கனவில் மகான் ஒருவர் தோன்றி "நீர் உமக்குரிய நன்மைகளிலிருந்து பத்து நன்மைகளை ஏன் குறைத்துக் கொண்டீர்? திருக்குர்ஆனை ஒருவர் மனனம் செய்தால் அவருக்கு ஒரு எழுத்துக்கு பத்து நன்மைகள் எழுதப்பட்டு, பத்து தீமைகள் அழிக்கப்படுகின்றன வென்றும், பத்து பதவிகள் உயர்த்தப்படுகின்றன வென்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதை நீர்

கேள்விப்பட்டதில்லையா'' என்று சொன்னார்கள். உடனே நான் விழித்து விட்டேன். அதன் பிறகும் புதிய வழக்கப்படி **மலிகி** என்றே ஓதி வந்தேன். மற்றொரு சமயம் அதே மகான் என் கனவில் தோன்றி ''ஏன் அந்த வழக்கத்தை விடாமல் இருக்கின்றீர்'' திருக்குர்ஆனை கண்ணியமாக ஓதுங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதை நீர் கேள்விப்பட்டதில்லையா'' என்று சொன்னார். அப்பால் இமாம் 'குத்ரப்' அவர்களிடத்தில் கேட்டேன். மலிகி என்று ஓதுவதே அர்த்தத்தில் சிறந்தது என்று கூறினார்கள் என்று இப்னு ஷஜாஃ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அல்ஹதீஸ்:- ''கியாமத்து நாளில் அரசர்கள் இழுத்துக் கொண்டு வரப்பட்டு, நரகத்தின் மீது உள்ள பாலத்தின் மீது எறியப்படுவார்கள். இவர்கள் இவ்வுலக வாழ்வில் புரிந்த செயல்கள் இறைவனுக்குத் திருப்தியானதாக இருப்பின், அவர்கள் அந்தப் பாலத்தில் இடரி விழுந்து விடாமல், விரைவில் கடந்து செல்வார்கள். அவ்வாறின்றி அவர்களது நடவடிக்கைகள் இறைவனுக்குத் திருப்தியற்றனவாக இருப்பின் பாலத்தின் மீது நடக்கும் போதே இடரி நரகத்தில் விழுந்து ஐநூறு வருடத்து தூர ஆழத்திற்குள் மூழ்கி விடுவார்கள்''.

''அரசர்கள் நீதமுடன் ஆட்சி செய்தால் அவர்களால் நாடு செழிக்குமென்றும், பரக்கத்து உண்டாகும் என்றும் அவ்வாறின்றி அரசர்கள் அநீதமாய் ஆட்சி செய்தால் அவர்களால் உலகுக்குப் பஞ்சமம் கஷ்டமும் உண்டாகி பரக்கத் எடுபட்டு விடும்'' என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்.

ஹிக்காயத்து:- நவ்ஷேர்வான் என்ற ஒரு அரசர் ஒரு நாள் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடச் சென்றிருந்தார். காட்டில் தன் பரிவாரங்களைப் பிரிந்து வழி தவறி விட்டார். அப்போது அவருக்கு தாகம் உண்டாயிற்று. அங்கு குடிக்க தண்ணீர் இல்லை. அக்காட்டில் ஒரு சோலை இருந்தது. அச்சோலையை ஒரு ஊழியன் பராமரித்துக் கொண்டிருந்தான். புகழ் பெற்ற அரசர் நவ்ஷேர்வான் அந்த ஊழியனிடஞ் சென்று, ''ஒரு மாதுளம் பழம் கொடு'' என்று கேட்டார்.

அவ்வூழியன் ஒரு மரத்திலிருந்து மாதுளம் பழம் ஒன்றைப் பறித்து அரசருக்கு கொடுத்தான். அரசர் அப்பழத்தைச் சாப்பிட்டார். அப்பழம் ருசியாக மதுரமாக இருந்தது. எனவே அரசரின் மனம் மாறி அந்த பழத் தோட்டத்தையே அவனிடமிருந்து அபகரித்துக் கொள்ள வேண்டுமென்ற தீய எண்ணம் கொண்டார். மீண்டும் அவ்வூழியனிடம் ''இன்னொரு பழங்கொடு'' என்று கேட்டார். அவ்வூழியன் முன்பு பறித்த மரத்திலிருந்தே மற்றுமோர் மாதுளம் பழத்தைப் பறித்து அரசருக்கு கொடுத்தான். அரசர் இந்தப் பழத்தைச் சாப்பிட்டார். இப்பழம் ருசியில்லாமல் இருந்தது. அரசர் ஆச்சரியப்பட்டு ''இந்தப் பழம் ஏன் இப்படி இருக்கிறது'' என்று வினவினார். அதற்கு அத்தோட்டக்காரன் ''அரசர் அநீதி இழைப்பதற்கு எண்ணியிருப்பார். அதனால் ருசி போய் விட்டது'' என்று சொன்னாள். உடனே அரசர் தன் கெட்ட எண்ணத்தை மாற்றிக் கொண்டார். மீண்டும் அவ்வூழியனிடம் மற்றொரு பழம் வாங்கிச் சாப்பிட்டார். இந்தப் பழம் முதலில் சாப்பிட்ட பழத்தை விட ருசியாக இருந்தது. அரசர் ஆச்சரியப்பட்டு ''இப்பழம் ஏன் இவ்வளவு ருசியாக இருக்கிறது'' என்று கேட்டார். அதற்கு அவ்வூழியன் ''எங்கள் அரசர் அநியாயஞ் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டிருப்பார்'' என்று பதில் கூறினான். அன்று முதல் அநியாயஞ் செய்வதை விட்டு விட்டு நீதமுடன் ஆட்சி செய்தார். எனவேதான் இன்று வரை அந்த அரசரின் பெயர் புகழ் பெற்று விளங்குகிறது.

ரப்பில் ஆலமீன் என்பதும், **அர்ரஹ்மானிர்ரஹீம்** என்பதும் **மாலிகி யவ்மித்தீன்** என்பதும் **அல்ஹம்துலில்லாஹ்** என்பதில் உள்ள **அல்லாஹ்** என்பதற்கு அடைமொழியாக கூறப்பட்டிருக்கிறது. எனவே **ரப்பில் ஆலமீன்** என்பதற்கு இவ்வுலகம் அனைத்தையும் பரிபாலிப்பவன். **அர்ரஹ்மான்** என்பதற்கு எல்லா உயிரினங்களுக்கும் அருள் பாலிப்பவன், **அர்ரஹீம்** என்பதற்கு தன் அடியார்களை காப்பவன், உய்விப்பவன் **மாலிகி யவ்மித்தீன்** நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதியான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும் என்பது கருத்தாகும்.

இதுவரை இறைவனைப் படர்க்கையாகப் புகழப்பட்டது. இதன் கீழ் **இய்யாக** என்று முன்னிலையாகக் கூறப்பட்டிருக்கிறது. பேச்சு

அலங்காரங்களில் இதுவும் ஒன்றாகும். புகழ்வதற்கு படர்க்கையாகப் பேசுவதும், வணக்கம், விண்ணப்பம் பிரார்த்தனைகள் முதலியவற்றில் முன்னிலையாக்கிப் பேசுவதும் பேச்சு முறையில் சிறந்ததாகும்.

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝٤

4. (இறைவா) உன்னையே வணங்குகிறோம். இன்னும் (உன்னை வணங்க) உன்னிடமே உதவி தேடுகின்றோம்.

சகல வணக்கத்துக்கும் பாத்தியதை வாய்ந்தவன் இறைவன் ஒருவனே. ஆதலால், அவனை நோக்கி "இறைவா! உன்னைத்தான் வணங்குகிறோம். உன்னைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்கு உரியவன் இல்லை" என்று உறுதி கூறுவதே இதன் தாத்பரியமாகும்.

ரிவாயத்து:- ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, **இய்யாக நஃபுது** உன்னையே ஆதரவு வைக்கிறோம் என்று கூறுவீராக என்று சொல்லி இருப்பதாக ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் தொழுகையில் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுகிறவர் தனிமையாக இருப்பின் "உன்னைத்தான் வணங்குகிறேன்" என்று ஒருமையாகச் சொல்லாமல், "உன்னைத்தான் வணங்குகிறோம்" என்று பன்மையாகச் சொல்லப்பட்டிருப்பதின் தாத்பரியம் என்ன? தொழுது கொண்டிருப்பவர் ஒவ்வொருவரும் தன்னையும் தன்னுடன் இருக்கும் மலக்குகளையும் மற்றும் ஜமாஅத்துத் தொழுகைக்கு வந்தவர்களையும் சேர்த்துக் கொண்டு பிரார்த்தனை புரிவதாகும். மேலும், தன்னுடைய வணக்கத்துடன் மற்ற எல்லா மூமின்களான நல்லடியார்களுடைய வணக்கத்தையும் சேர்த்துக் கொண்டு இறைவனிடத்தில் விசுவாசம் தெரிவித்துக் கொள்வதுமாகும்.

"உன்னையே வணங்கி இம்மை மறுமைக் காரியங்களிலும் எங்களுக்கு சீர்திருத்தம் உண்டாகுவதற்காக உன்னிடமே உதவி தேடுகின்றோம்" என்பதே **வஇய்யாக நஸ்தஈன்** "உன்னிடமே உதவி தேடுகின்றோம்" என்பதின் தாத்பரியமாகும்.

ஒரு அடியான் அல்லாஹ் அல்லாத வேறு யாரையும் வணங்காதிருப்பதும் வேறு யாரிடமும் தன் தேவையைக் கேளாதிருப்பதுமே இவ்விரு வாக்கியங்களின் அர்த்தமாகும்.

ரிவாயத்து:- இமாம் சுஃப்யானுத் தவ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மக்ரிபுத் தொழுகையை இமாமாக நின்று நிறைவேற்றி வைத்தார்கள். அப்போது தொழுகையில் **இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்** என்று ஓதியவுடனேயே மெய்மறந்து கீழே விழுந்து விட்டார்கள். மூர்ச்சை தெளிந்த பிறகு விழுந்த காரணத்தைப் பற்றி கேட்கப்பட்டது. அதற்கு 'உன்னிடத்தில்தான் உதவி தேடு கின்றோம்'. என்று சொல்கிறோம் "அவ்வாறெனில் அரசர்களிடமும் மருத்துவர்களிடமும் எதற்காக நீர் போகின்றீர்" என்று இறைவன் கேட்பதைப் பயந்து விழுந்து விட்டேன் என்று கூறினார்கள்.

ரிவாயத்து:- கொடிய நம்ரூது அரசன், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கால் கரங்களை கட்டிப் பிணைத்து பெரிய நெருப்புக் குண்டத்தில் தள்ளி எரிக்கத் தொடங்கிய போது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து இப்ராஹீம் "நபியே! என்னிடத்தில் இப்போது ஏதாவது தேவையுண்டா" என்று வினவினார். அதற்கு இப்ராஹீம் நபி "உம்மிடத்தில் எனக்கு எந்த தேவையுமில்லை. ஆனால், அல்லாஹ்விடத்தில்தான் எனக்குத் தேவை உண்டு" என்று சொன்னார்கள். உடனே ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவ்வாறெனில் "அவனிடம் கேளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அவன் எனது நிலையை அறிந்திருப்பதே எனக்குப் போதும்" என்று விடையளித்தார்கள். ஆகவே "உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று இறைவனை சொந்தப்படுத்திக் கூறியிருப்பதில் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝

5. (இறைவா) எங்களுக்கு நேரான வழியைக் காட்டியருள்வாயாக.

'சன்மார்க்கமாகிய தீனுல் இஸ்லாத்தில் நாங்கள் ஸ்திரமாக இருந்து வர அருள் புரிவாயாக என்பது இதன் கருத்தாகும்.

இவ்வாக்கியம் இறைவனிடம் நாம் எப்படி பிரார்த்திக்க வேண்டும் என்ற ஒழுங்கு முறையைக் கற்றுக் கொடுக்கிறது. அல்லாஹ் நேர்வழியைக் காட்டினால்தான் நாம் செய்யும் அமல்கள் நன்மையானதாக முடியும். மனிதன் தன் அறிவின் மூலம் நேர்வழி எது என்பதை அறிந்து கொள்ள முடியாது.

الصِّرَاطَ الْمُسْتَقِيمَ **ஸிராத்தல் முஸ்தக்கீம்** என்றால் செம்மையான வழி என்பது அர்த்தம். செம்மையான வழி என்பது தீனுல் இஸ்லாம் என்றும், திருக்குர்ஆன் என்றும், சுன்னத்து வல்ஜமாஅத் என்றும் சொல்லப்படுகிறது.

அல்ஹதீஸ்:- "ஆதியில் இறைவன் மனிதர்கள் அனைவரையும் சிருஷ்டித்து வைத்து தன்னுடைய ஜோதியை அள்ளி அச்சிருஷ்டிகளின் மீது சிருஷ்டித்தான். அந்த ஜோதியின் துணுக்குகள் யார் யார் மீது விழுந்ததோ அவர்கள் அனைவரும் நேர்வழி பெற்றவர்கள். யார் மீது அவன் ஜோதி விழவில்லையோ அவர்கள் வழி கெட்டவர்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۝

6. எவருக்கு நீ அருள் புரிந்தாயோ அவருடைய வழியில் (நடத்துவாயாக).

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝

7. உன் கோபத்துக்கு ஆளானவர்களின் வழியுமல்ல; இன்னும் வழி தவறியவர்களின் வழியுமல்ல.

நபிமார்கள், ஸித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோரை அல்லாஹ்வின் அருள்பெற்றவர்கள் என்பது குறிக்கும். யூதர்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோரை அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானவர்கள் என்பது குறிக்கும்.

சூரத்துல் ஃபாத்திஹாவின் இறுதியில் காணப்படும் ஆமீன் என்னும் சொல் திருக்குர்ஆனில் உள்ளது அல்ல. ஆனால், சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு இதனை ஓதுவது சுன்னத்தாகும்.

அல்ஹதீஸ்:- "நான் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதி முடித்ததும் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ஆமீன்" (இறைவா இந்த பிரார்த்தனையை ஏற்று அருள் புரிவாயாக) என்று சொல்லும்படி எனக்குக் கற்றுக் கொடுத்ததோடு, இது கடிதம் எழுதி முடித்ததும் அதன் மேல் முத்திரை வைப்பது போலாகும் என்றும் சொன்னார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ரிவாயத்து:- "ஆமீன் என்பது இறைவனது முத்திரையாகும். முத்திரையிடப்பட்ட கடிதத்தை வேறு எவரும் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் அக்கடிதத்தில் வேறு யாரும் கூடுதல் குறைத்தல் செய்யக்கூடாது என்பதற்காகவும் இவ்வாறு செய்து விடுவது போல் "ஆமீன்" என்பது இறைவனிடம் புரிந்த பிரார்த்தனைக்கு எந்த ஒரு தீங்கும் வராமல் காக்கும்" என்று ஹளரத் அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"**ஆமீன்** என்ற சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு மலக்கு சிருஷ்டிக்கப்பட்டு, அந்த மலக்கு ஆமீன் என்று சொல்லிய அடியானுக்காக இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டுக்

கொண்டே இருப்பார்'' என்று வஹ்பு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"சூரத்துல் ஃபாத்திஹா தவ்ராத் வேதத்தில் இருந்திருந்தால் யூதர்கள் வழி தவறியிருக்க மாட்டார்கள் என்றும், இன்ஜீல் வேதத்தில் இருந்திருந்தால் கிறிஸ்தவர்கள் வழி தவறியிருக்க மாட்டார்கள் என்றும், ஜபூர் வேதத்தில் இருந்திருந்தால் ஹளரத் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களது உம்மத்தினரில் சிலர் உருவம் மாற்றப்பட்டிருக்க மாட்டார்கள்'' என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"சூரத்துல் ஃபாத்திஹாவை ஒருமுறை ஓதினால் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதிய நன்மையையும் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஸதக்கா செய்தது போன்ற நன்மையையும் அவருக்கு இறைவன் அளிப்பான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"சிலர் மீது அல்லாஹ் கோபமடைந்து வேதனையை அவர்கள் மீது இறக்குவான். அப்போது அவர்களிலுள்ள குழந்தைகள் **அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்** என்று ஓதுவார்கள். அதைக் கேட்டவுடன் இறைவன், அவர்கள் மீது இறக்கி வைத்த வேதனையை (அதாபை) விட்டு விமோசனம் பெறுவார்கள்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சூரத்துல் ஃபாத்திஹாவின் சிறப்புகளைப் பற்றி ஏராளமாக உள்ளன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதன் சிறப்பைப் பற்றியும் அவசியத்தைப் பற்றியும் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார்கள்.

ஒன்றாவது சூரத்து முற்றிற்று.

இரண்டாவது சூரத்து

சூரத்துல் பக்கரா

இது மதீனாவில் இறங்கியது.

இருநூற்றி எண்பத்தி ஆறு ஆயத்துகள் கொண்டது.

இந்த சூரத்துக்கு **'அல்பக்கரா'** என்று பெயர். இந்த சூரத்தில் 67வது ஆயத்து முதல் 73 வது ஆயத்து வரை ஒரு மாட்டை அறுக்கும்படி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய காலத்திலிருந்த யூதர்களுக்குக் கட்டளையிடப்பட்ட விபரம் கூறப்பட்டி ருக்கிறது. இந்த சூரத்தில் இவ்விஷயம் கூறப்பட்டிருப்பதால் இந்த சூரத்துக்கு **அல்பக்கரா** என்று பெயர் வந்ததாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். ஆனால், அல்பக்கரத் என்ற இப்பதம் ஆண், பெண் என்ற வித்தியாசமில்லாமல் பசு மாட்டுக்கும், காளை மாட்டுக்கும் சொல்லப்படுவதால் சில விரிவுரையாளர்கள் பசு என்றும் வேறு சிலர் (ரிஷபம்) காளை என்றும் அர்த்தம் செய்திருக் கின்றனர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(இம்மையில் யாவருக்கும்) கருணை புரிகிறவனும் (மறுமையில் தன் நல்லடியார்களுக்கு மட்டும்) அருள்பாலிப் பவனுமான அல்லாஹ்வின் (திருப்) பெயரால் (இதனை ஓத ஆரம்பஞ் செய்கின்றேன்).

الٓمٓ ①

1. அலிஃப் - லாம் - மீம் இதிலுள்ள மறை பொருளை இறைவன்தான் நன்கு அறிந்தவன்.

திருக்குர்ஆனிலுள்ள சூரத்துகளின் ஆரம்பத்தில் அரபி நெடுங்கணக்கிலுள்ள சில அட்சரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த அட்சரங்களைத் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்த்தோ ஓதுவதில்லை. அவற்றின் பெயர்களையே கூற வேண்டும். இந்த எழுத்துக்களுக்கு ஹுரூஃபுல் முகத்தஆத் (தனித்தனியாக ஓத வேண்டிய அட்சரங்கள்) என்று பெயர். இவ்வாறான எழுத்துக்கள் ஒன்று முதல் ஐந்து வரை இவ்வேதத்தில் 28சூரத்துகளில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த எழுத்துக்களுக்கு என்ன அர்த்தம் என்பது யாருக்கும் தெரியாது. அல்லாஹ்வும் அவனது ரசூலும்தான் அவற்றின் அர்த்தத்தையும் சரியான கருத்தையும் அறிவர். ஆயினும் மார்க்கக் கல்வியில் சிறந்த அறிஞர்கள் இந்த எழுத்துக்களுக்கு 'நான், அல்லாஹ், அதிகம் அறிந்தவன்' என்று தாத்பரியங் கூறி இருக்கின்றனர். இதைத் தவிர வேறு பல கருத்துக்களையுங் கூறியிருக் கிறார்கள். ஆயினும் இவைகள் இந்த எழுத்துக்களின் மொழி பெயர்ப்பாகாது. இவர்களின் சொந்த அபிப்பிராயமாகும்.

ஒரு சமயம் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **காஃப் ஹா யா அய்ன் ஸ்வாத்** என்பது போன்ற அட்சரங்களைக் கொண்டு வந்து அதிலுள்ள ஒவ்வோர் அட்சரத்தையும் சொல்லும் போதெல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'நான் இதிலுள்ள அர்த்தத்தை விளங்கிக் கொண்டேன் விளங்கிக் கொண்டேன்' என்றே சொல்லி வந்தார்கள் என்றும் இதைக் கண்டு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் எனக்கு விளங்காததைத் தாங்கள் எவ்விதம் அறிந்து கொண்டீர்கள்? என்று மிக ஆச்சரியமடைந்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வேதத்திலும் ரகசியமுண்டு. திருக்குர்ஆனில் அல்லாஹ்வுக்கு உண்டான ரகசியம் சூரத்துகளின் துவக்கத்திலுள்ள அட்சரங்கள் என்று நான்கு கலீஃபாக்களும் கூறியிருக்கின்றனர்.

இமாம் ஷாஃபி அவர்களிடத்தில் இவ்வட்சரங்களின் அர்த்தங்களைப் பற்றிக் கேட்ட போது 'இது அல்லாஹ்வுடைய ரகசியம். இதைக் கேட்காதீர்கள்' என்று சொல்லி யிருக்கிறார்கள். ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் 'உலமாக்கள் இதை அறிந்து கொள்ள இயலாமல் போய் விட்டார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அட்சரங்களைப் பற்றி பேசியவர்கள் அனைவரும் வெறுங் கணிப்பையே பேசினார்கள் என்றும், ஆனால் அல்லாஹு தஆலா யாருக்கு அந்த ரகசியத்தை அறிவித்துக் கொடுத்தானோ அவரைத் தவிர வேறு யாரும் அதை அறிய மாட்டார்கள் என்றும் ஆரிஃபீன்களில் சிலர் கூறியிருக்கிறார்கள்.

திருக்குர்ஆன் விரிவுரையாளர்களில் வேறு சிலர் அட்சரங்களைப் பற்றியுள்ள அர்த்தம் தெரிந்தது என்றும் சிலர் சூரத்துகளின் பெயர்கள் என்றும், சிலர் அல்லாஹ்வின் திருப்பெயர்கள் என்றும், மற்றும் சிலர் திருக்குர்ஆனின் பெயர்கள் அல்லது அப்பெயர்களைப் பற்றி அறிவிக்கக் கூடிய அட்சரங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது சம்மந்தமான விபரங்கள் தஃப்ஸீர்களில் நிறைந்து காணப்படுகிறது.

அல்லாஹ்வின் திருப்பெயர்களைப் பற்றி அறிவிக்கும் அட்சரங்கள் என்பது அலிஃப் லாம் மீம் என்னும் பதத்திலுள்ள அலிஃப் அல்லாஹ் என்னும் பெயர் சொல்லைக் குறிப்பிடக் கூடிய அட்சரமென்றும் லாம் என்பது லத்தீஃப் என்னும் பெயர் சொல்லைக் குறிப்பிடக் கூடிய அட்சரமென்றும், மீம் என்பது மஜீத் என்னும் பெயர் சொல்லைக் குறிப்பிடக்கூடிய அட்சரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் இம்மூன்று பதங்களும் சேர்ந்து அனல்லாஹுல் லத்தீஃபுல் மஜீத் அதாவது நான் தலைமைவாய்ந்த சூட்சமமுமனோ வாக்குக்குக்கு எட்டாப் பொருளான அல்லாஹ் என்ற தாத்பரியமாகும்.

மேலும் அலிஃப் லாம் மீம் என்ற சொல்லுக்கு அனல்லாஹு அஃலமு அதாவது "நான் அல்லாஹ் அறிந்தவனாயிருக்கிறேன்" என்றும் பொருள் சொல்லப் பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- அல்லாஹுத் தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கி வைத்த தவ்ராத் வேதத்தில் ஆயிரம் ஸூரத்துகள் இருந்தது. ஒவ்வொரு ஸூரத்திலும் ஆயிரம் ஆயத்துகள் இருந்தது. அச்சமயம் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வை நோக்கி "இறைவா! இவ்வளவு பெரிய வேதத்தை முறைப்படி ஓதவும், அதை மனனஞ் செய்யவும் யாரால் முடியும்?" என்று ஆச்சரியமுற்றுக் கேட்டார்கள். அதற்கு இறைவன் அந்நபியை நோக்கி, "மூஸாவே! இதைவிட மகத்தான வேதத்தை இறக்கப்போகிறேன்" என்று சொன்னான். அதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "என் இரட்சகனே! அப்பெரிய வேதத்தை யார் மீது இறக்கி வைப்பாய்? தெரிவிப்பாயாக" என்று மீண்டும் வினவினார்கள். எனவே, இறைவன் "எல்லா நபிமார்களுக்கும் முத்திரையானவரும், இறுதியானவருமான என் தூதர் மீது இறக்குவேன்" என்று மறு மொழி பகர்ந்தான். இதைச் செவியுற்ற ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "இறைவா! அந்நபியின் உம்மத்தினர் மிகக் குறைந்த வாழ்நாள் உடையவர்களாயிற்றே, அவ்வேதத்தை எங்ஙனம் முறைப்படி ஓதுவார்கள்" என்று மீண்டும் வினவினார். அதற்கு இறைவன் "மூஸாவே! நான் அவர்களுக்கு அவ்வேதத்தை மிகவும் இலேசாக்கி அருள்வேன். அந்த உம்மத்திலுள்ள சிறுவர்கள் கூட அதனை மிக எளிதாய் ஓதுவார்கள்" என்று கூறினான். மீண்டும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "எவ்வாறு இலேசாக்கி அருள்வாய்" என்று வினவினார்கள். அதற்கு இறைவன் "மூஸாவே! நான் இதுவரை நூற்றிமூன்று வேதங்களை இறக்கியிருக்கிறேன். அவற்றில் ஐம்பது ஷீது நபி அலைஹிஸ்ஸலாம் மீதும், முப்பது இத்ரீஸ் நபி அலைஹிஸ்ஸலாம் மீதும், இருபது இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் மீதும், தவ்ராத் வேதம் உம் மீதும் இன்ஜீல் வேதம் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் மீதும் ஜபூர் வேதம் தாவூது நபி அலைஹிஸ்ஸலாம் மீதும் இறக்கி வைத்துள்ளேன். மேலும் சிருஷ்டிகளையெல்லாம் இந்த நூற்றி மூன்று வேதங்களில் கூறியிருக்கிறேன். இந்த நூற்றி மூன்று வேதங்களில் உள்ள

அர்த்தங்கள் அனைத்தையும் எனது தூதராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கி வைக்கப்படும் குர்ஆன் என்னும் வேதத்தில் கூறுவேன். இந்த குர்ஆன் வேதத்தை நூற்றிப் பதினான்கு ஸூரத்துகளில் அமைப்பேன். இந்த ஸூரத்துகளையெல்லாம் முப்பது பாகங்களில் அமைப்பேன். இவற்றை ஏழு ஸப்உ (ஏழிலொன்று)களில் அமைத்து, இந்த ஏழு ஸப்உகளுடைய தாத்பரியங்களை ஸூரத்துல் ஃபாத்திஹாவிலுள்ள ஏழு ஆயத்துகளில் அமைப்பேன். இந்த ஏழு ஆயத்துகளின் உட்பொருள்களையும் ஏழு அட்சரங்களில் அமைப்பேன். அவை பிஸ்மில்லாஹ் என்னும் மொழியிலுள்ள ஏழு அட்சரங்களாகும். இதன் உட்பொருள் பொக்கிஷம் அனைத்தையும் அலிஃப் லாம் மீம் என்ற சொல்லின் அலிஃபில் அமைத்து, அதைக் கொண்டே ஸூரத்துல் பக்கராவை அலிஃப் லாம் மீம் என்ற அரிய மொழியைக் கொண்டு ஆரம்பிப்பேன்" என்று கூறினான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அறிவித்தது போலவே, பிற்காலத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பரிசுத்த வேதமான திருக்குர்ஆனை இறைவன் இறக்கியருளினான். அதைக் கண்டு பொறாமை கொண்ட யூதர்கள் "எங்கள் மூஸா நபிக்கு நற்செய்தி அறிவித்த வேதம் இதுவல்ல" வென்று மறுத்து நிராகரிக்கலானார்கள். இங்ஙனம் யூதர்கள் நிராகரித்ததை மறுத்து இறைவன் பின்வருமாறு கூறியிருக்கிறான்.

ذَٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ ۛ فِيهِ ۛ هُدًى لِّلْمُتَّقِينَ ۝٢

2. இதுவே வேத(கிரந்த)ம். இதிற் சந்தேகமே இல்லை. பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழி காட்டியாகும்.

இந்த ஆயத்திற்கு மேற்குறிப்பிட்ட ரிவாயத்தின் முடிவைப் பொருத்தி "அலிஃப் லாம் மீம் என்ற குர்ஆன் வேதம் மூஸா நபிக்கு

இறைவன் முன்னறிக்கை செய்த அதே வேதமாகும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை".

'அலிஃப் லாம் மீம் என்பது திருக்குர்ஆனின் பெயர்களில் ஒன்று என்று சொல்லப்பட்டிருப்பதால் அலிஃப் லாம் மீம் என்பது குர்ஆன் வேதம்' என்று அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த விதத்திலும் சந்தேகங் கொள்வதற்கு இடமில்லை என்பதால் **லாரைப ஃபீஹி** இதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று கருத்து கூறப்பட்டிருக்கிறது. இதில் கூறப்படும் வசனங்கள் யாவும் சரியானதுதான் என்பதிலும் இது அல்லாஹ்விடமிருந்து இறங்கியதுதான் என்பதிலும் இதைப்போல் சிறிய சூரத்தையோ அல்லது ஒரு ஆயத்தையோ கொண்டு வர எவராலும் இயலாது என்பதிலும் எந்தவொரு சந்தேகமும் இல்லை. இத்துடன் இதற்கு முன் இறக்கியருளப்பட்ட வேதங்களும் இதை உண்மைப்படுத்துகின்றன.

முத்தக்கீ என்ற பதம் **விகாயா** அல்லது **தக்வா** என்ற தாதுவிலிருந்து எடுக்கப்பட்டது. தக்வா என்பதின் பொருள் காக்குதல் அல்லது பாதுகாத்தல் என்பதாகும். எனவே, முத்தக்கீ என்பதற்கு 'பாதுகாவல் பெற்றவர்' என்பது பொருள். மறுமையில் தீங்கு தரக்கூடியவைகளை விட்டும் தனக்குப் பாதுகாவலையாக்கிக் கொண்டவர் என்பது ஷரஇன்படி அர்த்தமாகும்.

தக்வா என்பதற்கு மூன்று பதவிகள் உண்டு. 1வது குஃப்ரை விட்டும் நீங்குவதால் பாதுகாவல் பெறுதல். 2வது ஏவல் விலக்கல்களுக்கு வழிப்பட்டு பாவங்களை விட்டு விடுவதால் பாதுகாவல் பெறுதல். இதுவே ஷரீஅத்தில் தக்வா என்று வழங்கப்படுகிறது. 3வது உள்ளத்தை இறைவனை விட்டும் கவனத்தை திசை திருப்பக்கூடிய காரியங்களை விட்டு விடுவதால் பாதுகாவல் பெறல். இதுவே தக்வாவுடைய பதவிகளில் உன்னதமாகும். இதற்கு மிக விரிவான விபரங்கள் உண்டு. இப்பதவியை உடையவர்கள் பல அந்தஸ்துகளைப் பெற்ற நபிமார்களாவர்.

இந்த ஆயத்தில் கூறப்பட்ட 'முத்தக்கீன்' என்பதை இம்மூன்று பதவியின் படிக்கும் விரிவுரை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே,

இவ்வேதம் மேற்கூறப்பட்ட முத்தக்கீன்களான மூன்று பதவியினருக்கும் நேர்வழி காட்டியாகும்.

இம்மூன்று வித தக்வாவைக் குறித்தும் அல்லாஹ் தனது திருமறையில் கூறியுள்ளான். **அவர்களுக்கு பயபக்தி என்னும் வார்த்தையை உறுதியாக்கி வைத்தான்** ஸூரத்துல் ஃபத்தஹ் 26 **நிச்சயமாக கிராமப்புறத்தினர் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வை) அஞ்சி நடந்திருந்தால், அவர்கள் மீது வானம், பூமியிலுள்ள பாக்கியங்(களின் வாசல்) களை நாம் திறந்து விட்டிருப்போம்.** ஸூரத்துல் அஃராஃப் 96 **அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சிக் கொள்ளுங்கள்.** ஸூரத்து ஆலஇம்ரான். 102.

ஆகவே, மனிதர்களில் பலர் இதைக் கொண்டு நேர்வழி பெறாவிட்டாலும் இது நேர்வழி காட்டிதான் என்பதற்கு எந்த பாதகமும் வராது. குருடன் சூரியனைப் பார்க்க முடியாவிட்டாலும் சூரியன் சூரியனே. கஸ்தூரியின் நறுமணத்தை சளிப் பிடித்தவன் பெறாவிட்டாலும் கஸ்தூரி கஸ்தூரியே. திருக்குர்ஆன் வழிகாட்டியாக இருக்க அதை நிராகரிக்கும் காஃபிருக்கு கைசேதமே! **இந்தக் குர்ஆன் காஃபிர்களுக்கு கைசேதம்** ஸூரத்து அல்ஹாக்கஹ் 50 என்று இறைவன் கூறியிருக்கிறான்.

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ

وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۙ ٣

3. (பயபக்தியாளர்களான) அவர்கள் மறைவானவற்றை விசுவாசிப்பார்கள். இன்னும் தொழுகையை (சரிவர அந்தந்த நேரத்தில் ஃபர்ளு, ஷர்த்து முதலியவற்றைப் பேணி)க் கடைப் பிடிப்பார்கள். இன்னும் அவர்களுக்கு நான் அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவழிப்பார்கள்.

மறுமையில் தீங்கு விளைவிக்கக்கூடிய தவறான கொள்கைகள், தீய குணங்கள், தீய செய்கைகள் முதலியவற்றை

விட்டும் இம்மையில் தன்னைக் காத்துக் கொண்டவர்தான் பயபக்தியாளர் (முத்தக்கீன்) களாவர். மறைவானவற்றை ஈமான் கொள்வதால் தவறான கொள்கைகளும், தொழுகையை கடைப்பிடிப்பதால் தீய செயல்களும், தாமஞ் செய்வதால் தீய குணங்களும் நீங்கிவிடுவதால் பயபக்தியாளர்கள் மறைவானவற்றை ஈமான் கொள்வார்கள் என்றும் தொழுகையை கடைப்பிடிப்பார்கள் என்றும், நான் அளித்ததிலிருந்து செலவு செய்வார்கள் என்றும் அடைமொழியாக கூறப்பட்டிருக்கிறது.

ஈமான் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய அனைத்தையும் விசுவாசிப்பதாகும். அவை சிருஷ்டிக் கர்த்தாவான இறைவன், மலக்குகள், இறுதிநாள், சுவர்க்கம், நரகம், களா கத்ர் முதலியவைகளாகும்.

وَالَّذِينَ يُؤْمِنُونَ بِمَا أُنزِلَ إِلَيْكَ وَمَا أُنزِلَ
مِن قَبْلِكَ وَبِالْآخِرَةِ هُمْ يُوقِنُونَ ④

4. இன்னும் (நபியே) அவர்கள் உமக்கு அருளப்பட்ட இ(வ்வேதத்)தையும், மேலும் உமக்கு முன் (னிருந்த நபிமார்களுக்கு) அருளப்பட்டதையும் விசுவாசிப்பார்கள். இன்னும் மறுமையைப் பற்றியும் உறுதி கொள்வார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோன்றுவதற்கு முன் தோன்றிய நபிமார்கள், ரசூல்மார்களுக்கு இறக்கியருளப்பட்ட சுஹுஃபுகள், தவ்ராத், ஜபூர், இன்ஜீல் ஆகியவற்றையும் ஈமான் கொள்ள வேண்டும் என்பதுதான் உமக்கு முன்(னிருந்த நபிமார்களுக்கு) அருளப்பட்டதையும் விசுவாசிப்பார்கள் என்பதன் கருத்தாகும்.

أُولَٰئِكَ عَلَىٰ هُدًى مِّن رَّبِّهِمْ ۖ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ ⑤

5. இவர்கள் தங்கள் றப்பிடமிருந்து உண்டான நேரான வழியில் இருக்கிறார்கள். இன்னும் இவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள்.

நரகத்தை விட்டும் நிரந்தரமாக விடுபட்டு சுவர்க்கத்தை அடைந்தவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள் என்பதன் கருத்தாகும்.

இதற்கு முன் கூறப்பட்ட ஆயத்துகளில் உள்ள தன்மைகளை உடையவர்களே நேர்வழி பெற்றவர்கள். இதற்கு முன் இறக்கப்பட்ட வேதங்களையும் இவ்வேதத்தையும் ஏற்றுக் கொண்டவர்களே நேர்வழி பெற்றவர்கள். இவ்வேதத்தை நிராகரிப்பவர்கள் இதற்கு முன் இறக்கப்பட்ட வேதத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் நேர்வழி பெற்றவர்களாக மாட்டார்கள். ஏனெனில், இவ்வேதம் இதற்கு முன் இறக்கப்பட்ட வேதங்களில் உள்ளதையும் பொதிந்து கொண்டிருக்கிறது.

வெற்றி பெற்றவர்களின் தன்மையைப் பற்றிக் கூறிய பின்னர் விசுவாசம் கொண்டவர்களுக்கு எல்லா வகையிலும் மாறுபட்ட கூட்டத்தினர்களான காஃபிர், முனாஃபிக் ஆகியோரைப் பற்றி அடுத்துள்ள வசனம் அறிவிக்கிறது.

إِنَّ الَّذِينَ كَفَرُوا سَوَاءٌ عَلَيْهِمْ أَأَنذَرْتَهُمْ أَمْ لَمْ
تُنذِرْهُمْ لَا يُؤْمِنُونَ ⑥

6. நிச்சயமாக எவர்கள் நிராகரிப்பவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு நீர் எச்சரிக்கை செய்வதும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யாதிருப்பதும் சரியே. அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்.

நிராகரிப்பவர்கள் என்று இங்கு நாம் குறிப்பிட்டிருக்கும் தமிழ்ப் பதம் காஃபிர் என்ற பதத்தின் பொருளாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தை மறுப்பதற்கும்,

வேதத்தை மறுப்பதற்கும், ஓர் இறைக் கொள்கையை நிராகரிப்பதற்கும் காஃபிர் என்று சொல்லப்படும். அதாவது இஸ்லாத்தை விட்டும் புறம்பாகி விட்டார் என்பது கருத்தாகும்.

வேதம் அருளப்பட்டதும், நபிமார்கள் உலகுக்கு வந்ததும் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காகவேயாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அதே திருப்பணியைச் செய்யவே வந்தார்கள். அவ்வாறிருக்க காஃபிர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யாதிருப்பதும் ஒன்றுதான். அவர்கள் விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள் என்று இறைவன் அறிவித்து விட்டதால் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று ஏன் கட்டளையிட வேண்டும்? அப்படிச் செய்வதால் என்ன பயன்? என்ற சந்தேகம் ஏற்படலாம். ஒருவர் செய்யும் நற்போதனையைச் செவிமடுத்துக் கேட்பவருக்குத்தான் அது பயன்தரும். ஆகவே, காஃபிர்களாக இருந்தாலும், அவர்கள் பிறருடைய உபதேசத்தைச் செவிமடுத்துக் கேட்க வேண்டும். அப்படிச் செவிமடுக்காதவர்களுக்கு உபதேசம் செய்வது பயனற்றதாகிவிடும். ஆகவே, இந்த இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காஃபிர்கள் உபதேசத்தைச் செவிமடுத்துக் கேட்காதவர்கள் என்று கருத்து கொள்ள வேண்டும். இதனையே இதற்கு அடுத்த வசனத்தில் இறைவன் சுட்டிக் காட்டி இருக்கிறான் ஆதலின், அத்தகைய சந்தேகமும் உண்டாக இடமில்லை என்பது தெளிவு. இந்த ஆயத்து அபூஜஹ்ல் அபூலஹபு, வலீதுப்னுல் முஙய்யரா போன்றவர்கள் விஷயமாய் இறங்கிற்று.

خَتَمَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ وَعَلٰى سَمْعِهِمْ ۚ وَعَلٰٓى اَبْصَارِهِمْ
غِشَاوَةٌ وَّلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿٧﴾

7. அவர்களுடைய இருதயங்களின் மீதும், அவர்களுடைய செவிகளின் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். மேலும் அவர்களின் பார்வைகளின் மீது முத்திரையிடப் பட்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்கு கொடிய வேதனை உண்டு.

முத்திரையிடுதல் என்பதற்கு குஃப்ர் முதலிய தீய நடத்தைகளை ஏற்றுக் கொள்வதற்கும் நற்செயல்களை வெறுப் பதற்கும் உள்ள சுபாவமாகும்.

காஃபிர்களுடைய இருதயங்களின் மீது முத்திரை யிடப்பட்டு விட்டதால், அவர்களுடைய இருதயங்கள் உண்மையான விஷயத்தை ஏற்றுக் கொள்ளாது. அவ்வாறே அவர்களது செவிகளின் மீது முத்திரை யிடப்பட்டு விட்டதால், அவர்கள் உண்மையான விஷயங்களைக் கேட்பதால் பயனடையவும் மாட்டார்கள். இன்னும் அவர்களுடைய பார்வையின் மீதும் முத்திரையிடப்பட்டு விட்டதால் இறைவன் உண்டு என்பதற்குரிய அத்தாட்சிகளைக் கண்டு கொள்ளவும் மாட்டார்கள். இப்படிப்பட்ட வன்னெஞ்சமும் செவிட்டுத் தன்மையும் குருட்டுத் தன்மையும் உள்ள காஃபிர்களுக்கு கடுமையான நரக வேதனையே கதியாகும்.

அல்லாஹுத்தஆலாவே அக்காஃபிர்கள் ஈமான் கொள்ள முடியாதவாறு அவர்களுடைய சிந்தைகளிலும், செவிகளிலும், முத்திரையிட்டிருக்க, அவர்கள் ஈமான் கொள்ளாததற்காக அவர்களுக்கு கடினமான வேதனையைக் கொடுப்பது நீதியாகுமா? என்ற கேள்வி பிறக்கிறது.

அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் சத்தியத்தை ஏற்கும் அறிவையும் சுபாவத்தையும் வைத்தே படைத்திருக்கிறான். ஆனால், மனிதன் நாளடைவில் தனது மனோ இச்சைக்கும் சுயநலத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் உட்பட்டு சத்தியத்திற்கு முரண்பட ஆரம்பிக்கிறான். அம்முரண்பாடு நாளடைவில் பெருகி முடிவில் அற்றுப்போய் விடுகிறது. இத்தன்மை ஏற்படும்போது ஏற்படும் போதுதான் மனிதன் சத்தியத்தை ஏற்கும் சுபாவத்தை இழந்து விடுகிறான்.

இந்த சூரத்தின் முதல் நான்கு ஆயத்துகளில் ஈமான் கொண்டவர்களைப் பற்றியும், அதன் பின் இரண்டு ஆயத்துகளில் காஃபிர்களைப் பற்றியும் கூறிவிட்டு இதற்கடுத்த 13 ஆயத்துகளில் முனாஃபிக்குகளைப் பற்றி கூறுகிறான்.

وَمِنَ النَّاسِ مَنْ يَّقُوْلُ اٰمَنَّا بِاللّٰهِ وَبِالْيَوْمِ

الْاٰخِرِ وَمَا هُمْ بِمُؤْمِنِيْنَ ۝

8. இன்னும் அல்லாஹ்வையும் இறுதி (த்தீர்ப்பு) நாளையும் விசுவாசங் கொண்டுள்ளோம் என்று (வாயினால் மட்டும்) கூறுபவர்களும் மனிதரில் சிலர் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் (உண்மையில்) விசுவாசங் கொண்டவர்கள் அல்லர்.

இவ்வசனம் முனாஃபிக்குகளாயிருந்த அப்துல்லாஹிப்னு உபய்யி போன்றவர்களைப் பற்றி இறங்கியதாகும். இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டும் ஸஹாபாக்களை விட்டும் தப்பித்துக் கொள்வதற்காக அவர்களைக் கண்டால் 'நாங்களும் இறைவனையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டிருக்கிறோம்' என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நயவஞ்சகமாக நடந்து வந்தார்கள்.

يُخٰدِعُوْنَ اللّٰهَ وَالَّذِيْنَ اٰمَنُوْا ۚ وَمَا يَخْدَعُوْنَ اِلَّآ اَنْفُسَهُمْ

وَمَا يَشْعُرُوْنَ ۝

9. அவர்கள் அல்லாஹ்வையும் விசுவாசங் கொண்டவர்களையும் ஏமாற்றுகின்றனர். ஆனால், அவர்கள் தங்களையேயன்றி (வேறு எவரையும்) அவர்கள் ஏமாற்றவில்லை. மேலும் அவர்கள் (தாங்கள்தாம் ஏமாற்றப்படுகின்றனர் என்பதை) உணர மாட்டார்கள்.

அல்லாஹுத்தஆலாவையும் முஃமின்களையும் ஏமாற்றுவதன் கேடு இம்மையில் முனாஃபிக்குகளிடமே திரும்புகிறது. முஃமின்களை முனாஃபிக்குகள் ஏமாற்றிய விஷயத்தை அல்லாஹு தஆலா முஃமின்களுக்கு அறிவித்து விடுகிறான். தவிரவும் முனாஃபிக்குகளிடமே அதைத் திருப்பி விடுவதுடன் முஃமின்களுக்கு

இதை வெளிப்படுத்தி, முனாஃபிக்குகளை இழிவு படுத்துகிறான். இதுதான் முனாஃபிக்குகள் தமக்குத் தாமே ஏமாற்றுவதன் கருத்தாகும்.

இவ்வுலகில் முனாஃபிக்குகள் இழிவை அடைவதுடன் மறுமையிலும் அவர்களுக்கும் இழிவையும் மிகப் பெரிய வேதனையையும் இறைவன் அளிப்பான்.

ரிவாயத்து:- கியாமத்து நாளில் முனாஃபிக்குகள் நரகத்தில் எறியப்பட்டு அதில் நீண்ட காலம் வேதனையை அனுபவிப்பார்கள். அதன்பின் தங்களை மன்னித்துக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சி அழுவார்கள். அப்போது அவர்களை நோக்கி, "இதோ வாயல் திறக்கப்படுகிறது. நீங்கள் வெளியேறுங்கள்" என்று சொல்லப்படும். உடனே முனாஃபிக்குகள் ஆவலோடு திறந்த வாயல் பக்கம் வருவார்கள். வாசற்படியருகே அவர்கள் வந்ததும் மீண்டும் அவர்கள் உள்ளே தள்ளி அடைக்கப்பட்டு விக்கிரஹங்களையும், ஷைத்தான்களையும் வேதனை செய்யப்படும் பெட்டிகளிலும் கிணறுகளிலும் போடப்பட்டு வேதனை செய்யப்படுவார்கள்.

அல்ஹதீஸ்:- கியாமத்து நாளில் சிலர் சுவர்க்கத்திற்குச் செல்லும்படி அனுமதியளிக்கப்படுவார்கள். அவர்கள் சுவர்க்கத்திற்கு அருகே சுவர்க்கத்தின் நறுமணத்தை நுகர்ந்து, சுவர்க்கவாதிகளுக்கு அளிக்கப்படும் அரும்பெரும் பாக்கியங்களையும் பார்த்த பின் "அவர்களை சுவர்க்கத்திற்குள் நுழைய விடாமல் கதவை அடைத்து விடுங்கள், இவர்கள் சுவர்க்கத்திற்குச் செல்ல தகுதியற்றவர்கள்" என்று ஒரு சப்தம் உண்டாகும். உடனே அவர்கள் வெளியே தள்ளப்பட்டு முன்னோர் பின்னோர் யாரும் அடைந்திராத நஷ்டத்துடன் திரும்பி "இறைவா உன்னுடைய நல்லடியார்களுக்கு தயார் செய்து வைத்திருக்கும் சுவர்க்கத்தை எங்களுக்கு காட்டுவதற்கு முன்பே எங்களை நரகத்திற்கு அனுப்பியிருக்கக் கூடாதா" என்று கூறுவார்கள். அதற்கு இறைவன் முனாஃபிக்குகளை நோக்கி "இப்படித்தான் உங்களை ஏமாற்ற வேண்டுமென்று நான் நாடியிருந்தேன். ஏனெனில், உலகில் என் கட்டளையை மீறினீர்கள். உள்ளத்தில் வஞ்சகத்தை மறைத்துக் கொண்டு வெளியில் நல்லவர்களைப் போல்

நடித்துக் கொண்டிருந்தீர்கள். என்னை நீங்கள் அஞ்சவில்லை. மனிதர்களையே நீங்கள் அஞ்சினீர்கள். மனிதர்கள் மதிக்க வேண்டுமென்பதற்காகத்தான் பாவத்தைச் செய்ய வில்லையே தவிர என்னுடைய கட்டளையை ஏற்று பாவத்தைச் செய்யவில்லை. எனவேதான் இன்று உங்களை மகத்தான நற்பாக்கியங்களை விட்டுத் துரத்தி, நீங்கள் செய்த தீய செயல்களுக்கு தண்டனை அளிக்கிறேன்'' என்று கூறுவான்.

فِي قُلُوبِهِم مَّرَضٌ فَزَادَهُمُ اللَّهُ مَرَضًا ۖ وَلَهُمْ عَذَابٌ
أَلِيمٌ بِمَا كَانُوا يَكْذِبُونَ ۝

10. அவர்களுடைய உள்ளங்களில் (நயவஞ்சகம் என்னும்) ஒரு நோய் உள்ளது. அல்லாஹ் அவர்களுக்கு அந்த நோயை அதிகப்படுத்தி விட்டான்; அவர்கள் பொய்ப்பித்ததின் காரணமாக அவர்களுக்கு நோவினை தரும் வேதனை உண்டு.

அவர்களுடைய உள்ளங்களில் சந்தேகம் என்ற கொடிய நோய் பற்றிக் கொண்டதன் காரணமாக வஞ்சகம், பொறாமை முதலியவை மிகைத்து விட்டது. இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் ஸஹாபாக்களையும் காணும் போது சந்தேகங் கொண்டு வெறுப்படைகின்றனர். முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு வழிகோலுகின்றனர். ஆனால், அல்லாஹ் இஸ்லாமின் உயர்வை நாளுக்கு நாள் அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறான். இதனைச் சகிக்க முடியாமல் மென்மேலும் பொறாமை கொண்டு தங்களது நோயை அதிகரித்துக் கொள்கின்றனர். இதுதான் அவர்களுக்கு அந்நோயை அல்லாஹ் அதிகப்படுத்தி விட்டான் என்பதின் கருத்தாகும்.

وَإِذَا قِيلَ لَهُمْ لَا تُفْسِدُوا فِي الْأَرْضِ قَالُوا إِنَّمَا
نَحْنُ مُصْلِحُونَ ۝

11. தவிரவும் அவர்களுக்கு ''நீங்கள் பூமியில் விஷமஞ் செய்யாதீர்கள்'' என்று கூறப்பட்டால், ''நாங்கள் சீர்திருத்தம் செய்கின்றவர்களே (அன்றி விஷமிகளல்லர்)'' என்று கூறுகின்றனர்.

தங்கள் உள்ளங்களில் நோய் இருந்ததால் தாங்கள் செய்யும் விஷமத்தை சீர்திருத்தம் என்றே எண்ணியிருந்தார்கள். முனாஃபிக்குகளிடம் இவ்வுலகில் இஸ்லாமை நிராகரித்துக் கொண்டும் ஈமான் கொள்பவர்களை தடுத்துக் கொண்டும் இருக்காதீர்கள் என்று சொன்னால் 'நாங்கள் விஷமஞ் செய்வதை விட்டும் பரிசுத்தமானவர்கள், நாங்கள் நற்செயல்களைச் செய்து கொண்டு சீர்திருத்தம் செய்கிறோம். ஆனால், எங்களை விஷமஞ் செய்பவர்கள் என்று நீங்கள் சொல்வது நியாயமல்ல' என்று கூறினார்கள். அவ்வாறு அவர்கள் சொன்னதை மறுத்து அடுத்த ஆயத்தில் இறைவன் கூறுகிறான்.

أَلَا إِنَّهُمْ هُمُ الْمُفْسِدُونَ وَلَٰكِن لَّا يَشْعُرُونَ ۝

12. அறிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக அவர்கள்தான் விஷமிகள், ஆயினும் (தாங்கள் விஷமிகள் என்பதை) அவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.

وَإِذَا قِيلَ لَهُمْ آمِنُوا كَمَا آمَنَ النَّاسُ قَالُوا
أَنُؤْمِنُ كَمَا آمَنَ السُّفَهَاءُ ۗ أَلَا إِنَّهُمْ هُمُ
السُّفَهَاءُ لَا يَعْلَمُونَ ۝

13. இன்னும் (ஏனைய) ''மனிதர்கள் ஈமான் கொண்டதைப் போல் நீங்களும் ஈமான் கொள்ளுங்கள்'' என்று அவர்களுக்குக் கூறப்பட்டால் ''அறிவிலிகள் ஈமான் கொண்டது போல் நாங்கள் ஈமான் கொள்வோமா'' என்று கூறுகின்றனர். அறிந்துகொள்! நிச்சயமாக

அவர்கள்தாம் அறிவிலிகள்; ஆனால், (தாங்கள் அறிவிலிகள் என்பதை) அவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள்.

இதற்கு முன் உள்ள ஆயத்தில் "குழப்பஞ் செய்யாதீர்கள்" என்றும் இந்த ஆயத்தில் "ஈமான் கொள்ளுங்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "ஈமானுடைய பரிபூரணம் இவ்விரண்டு காரியங்களும் ஒன்று சேர்ந்தால்தான் கைகூடும்" என்பதை உணர்த்துகிறது.

முனாஃபிக்குகள் இஸ்லாம் மார்க்கம் பயனற்றதென்றும், அப்பயனற்றதைப் பின்பற்றியவர்கள் அறிவிலிகள் என்றும் கருதி இருந்தனர். எனவேதான் மூஃமின்களை அறிவிலிகள் என்று முனாஃபிக்குகள் கூறினர். உண்மை மார்க்கம் இன்னது என்று சரியான ஆதாரங்களின் மூலம் கண்டு பிடிக்காமல் புறக்கணிப்பதுடன் அந்த ஆதாரங்களின் மூலம் உண்மை மார்க்கத்தைத் தழுவிய முஃமின்களை அறிவிலிகள் என்று முனாஃபிக்குகள் சொன்னதாலும் மறுமையை விட இம்மையை பெரிதாக கருதியதாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பகைத்துக் கொண்டவன் அல்லாஹுத் தஆலாவையும் பகைத்துக் கொண்டவன் என்பதாலும் முனாஃபிக்குகளை 'அறிவிலிகள்' என்று இறைவன் கூறியுள்ளான்.

وَإِذَا لَقُوا الَّذِينَ آمَنُوا قَالُوا آمَنَّا وَإِذَا خَلَوْا إِلَىٰ
شَيَاطِينِهِمْ قَالُوا إِنَّا مَعَكُمْ إِنَّمَا نَحْنُ مُسْتَهْزِئُونَ ○

14. தவிரவும், அவர்கள் விசுவாசங் கொண்டவர்களைச் சந்தித்தால் "நாங்களும் (உங்களைப் போல்) ஈமான் கொண்டிருக்கிறோம்" என்று கூறுகின்றனர்; ஆனால், அவர்கள் தங்களுடைய (தலைவர்களான) ஷைத்தான்களுடன் அவர்கள் தனித்திருக்கும் போது "நிச்சயமாக நாங்கள் உங்களுடனிருக்கிறோம்; (ஈமான் கொண்டவர்களை) நாங்கள் பரிகாசம் செய்கின்றோம்" என்று கூறுகின்றனர்.

ஒருநாள் அப்துல்லாஹிப்னு உபய்யி என்ற முனாஃபிக்கும் அவனுடைய தோழர்களும் ஓரிடத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஹளரத் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு. ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு. ஹளரத் அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு முதலான ஸஹாபாக்கள் எதிரில் வந்தனர். அதைக் கண்ட அப்துல்லாஹிப்னு உபய்யி தன் தோழர்களை நோக்கி "இதோ வருகிற அறிவிலிகளுடன் நான் தந்திரமாகப் பேசி நம்மீது அவர்களுக்கு இருக்கும் சந்தேகத்தை நீக்கிக் கொள்கிறேன்" என்று சொன்னான். ஸஹாபாக்கள் அருகில் வந்தவுடன் நல்லவனைப் போல் நடித்து, ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கையைப் பிடித்து "ஸித்தீக்குக்கு வாழ்த்துக்கள். தாங்கள்தான் தமீம் வம்சத்துத் தலைவர், தாங்களே இஸ்லாமுக்கு தலைவர்; (ஷெய்கு) ஹிஜ்ரத்தின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு துணையாக இருந்தீர்கள்; மேலும் தாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகஞ் செய்தீர்கள்" என்று புகழ்ந்தான். பின்னர் ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது கையைப் பிடித்து, "அதிய்யு வம்சத்துத் தலைவருக்கு வாழ்த்துக்கள்; தாங்கள் ஃபாரூக் என்னும் பட்டம் பெற்றவர்கள். இஸ்லாத்தின் மீது பற்றுடையவராய் இருக்கிறீர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக உடல், பொருள்களை தியாகஞ் செய்தீர்கள்" என்று புகழ்ந்தான். பின்னர் ஹளரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது கையைப் பிடித்துக் கொண்டு "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையின் புதல்வருக்கு வாழ்த்துக்கள்; தாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மருமகனும். ஹாஷிம் வம்சத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அடுத்தபடியான தலைவருமாவீர்கள்" என்று புகழ்ந்தான். உடனே ஹளரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "அப்துல்லாஹ்வே! இறைவனை அஞ்சிக் கொள்; உள்ளொன்று வைத்து புறம்மொன்று

பேசாதே; சிருஷ்டிகளிலேயே மிகக் கெட்டவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்'' என்று கூறினார்கள். இதைக் கேட்ட அப்துல்லாஹிப்னு உபய்யி ''அபுல் ஹஸனே! என் மீது ஆத்திரப்பட வேண்டாம். இறைவன் மீது சத்தியமாக நீங்கள் ஈமான் கொண்டிருப்பதைப் போன்றே நாங்களும் ஈமான் கொண்டு இருக்கிறோம்'' என்று கூறிவிட்டு ஸஹாபாக்களை விட்டுப் பிரிந்து கொஞ்ச தூரம் சென்றதும் தன் தோழர்களை நோக்கி ''பார்த்தீர்களா! அவர்களை நான் எப்படி நான் ஏமாற்றி விட்டேன்; எப்போதாவது நீங்களும் அவர்களைச் சந்தித்தால் நான் நடந்து கொண்டது போல் நீங்களும் நடந்து கொள்ளுங்கள்'' என்று சொன்னான். உடனே முனாஃபிக்குகள் இவனைப் புகழ்ந்து ''நீர் வாழும் காலமெல்லாம் நாங்கள் நன்மையடைவோம்'' என்று சொன்னார்கள்.

ஸஹாபாக்கள் இவ்விஷயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தெரிவித்த போது இந்த ஆயத்து இறங்கிற்று.

ஒவ்வொரு கெட்ட தன்மைக்கும் 'ஷைத்தான்' என்று சொல்லலாம். பொறாமை, கோபம், இவற்றிற்கும் 'ஷைத்தான்' என்று சொல்லப்படுகிறது. கெட்ட காரியங்களைச் செய்யுமாறு இரகசியமாகத் தூண்டுபவருக்கும் 'ஷைத்தான்' என்று சொல்லப்படுகிறது. இப்லீசுக்கும் 'ஷைத்தான்' என்று சொல்லப்படுகிறது. அக்கிரமம் செய்பவர் ஒவ்வொருவருக்கும் 'ஷைத்தான்' என்று எழுதப்பட்டிருப் பதாகவும் சொல்லப்படுகிறது இதன்படி மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள அக்கிரமக்காரர்களும் 'ஷைத்தான்' என்று அழைக்கப்படலாம். ஆயினும் இவ்விடத்தில் ஷைத்தான் என்று கூறப்படுவது இஸ்லாமுக்கு விரோதிகளாக உள்ளவர்களின் தலைவர்களையும் அவர்களின் நண்பர்களையும் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கருத்துக் கொண்டிருக்கின்றனர்.

اللَّهُ يَسْتَهْزِئُ بِهِمْ وَيَمُدُّهُمْ فِي طُغْيَانِهِمْ يَعْمَهُونَ ۝

15. அல்லாஹ் அவர்களைப் பரிகசித்து, இன்னும் அவர்களை

அவர்களின் வழிகேட்டிலேயே தடுமாற்றம் அடைகிறவர்களாக விட்டு வைத்திருக்கிறான்.

முனாஃபிக்குகளை இறைவன் பரிகாசம் செய்வான் என்பது, மனிதர்கள் செய்யும் பரிகாசம் போன்றதல்ல. முனாஃபிக்குகள் புரிந்த பரிகாசத்திற்குப் பிரதிபலனாக கொடிய தண்டனையை இறைவன் அளிப்பான் என்பதே இறைவனின் பரிகாசம் என்பதாகும். அதாவது இம்மையில் அவர்கள் மறைத்து வைத்திருந்த ரகசியங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தெரிவித்து அவமானப்படுத்துவதும், முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திய ஷரீஅத் சட்டங்களை அவர்களுக்கும் ஏற்படுத்தி அச்சட்டத்தின்படி அவர்கள் நடக்காமலிருந்தாலும் உடனே தண்டனை அளிக்காமல் மென்மேலும் வழிகேட்டிலேயே அவர்களை இருக்க விட்டு விடுவதாகும். மேலும் மறுமையில் அவர்கள் பரிகாசம் செய்யப்படுவது ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களுடைய ரிவாயத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

மறுமையில் முனாஃபிக்குகள் நரகத்தில் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அச்சமயம் அவர்களுக்காக சுவர்க்கத்தில் வாயல் திறக்கப்படும். அளவற்ற மகிழ்ச்சியுடன் சுவர்க்கத்துக்குள் நுழைய வருவார்கள். அச்சமயம் சுவர்க்கத்தில் இருப்பவர்கள் இவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். முனாஃபிக்குகள் சுவர்க்கத்தின் வாயலருகே விரைந்து வந்ததும் சுவர்க்கத்தின் வாயல் அடைக்கப்படும். முஃமின்கள் இவர்களைப் பார்த்து சிரிப்பார்கள். இவ்வாறு பலமுறை நிகழும். இம்மையில் முஃமின்களைப் பார்த்து இவர்கள் சிரித்ததற்கு இது பகரமாகும்.

மற்றொரு ரிவாயத்தில் ''ஸிராத்துல் முஸ்தக்கீம் பாலத்தைக் கடந்து செல்லும் போது முஃமின்களுக்கு ஒரு ஒளியை கொடுக்கப்படும். அதில் முனாஃபிக்குகளும் சேர்ந்து கொள்ள விரும்புவார்கள். அந்த ஒளியைக் காணமுடியாமல் இவர்களுக்கு திரையிடப்படும். அதனால் ஏமாற்றமடைந்து நிற்பார்கள்''.

أُولَٰئِكَ الَّذِينَ اشْتَرَوُا الضَّلَالَةَ بِالْهُدَىٰ فَمَا رَبِحَت
تِّجَارَتُهُمْ وَمَا كَانُوا مُهْتَدِينَ ﴿١٦﴾

16. அவர்கள் தாம் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். ஆதலால், அவர்களுடைய (இவ்) வர்த்தகம் இலாபந் தரவில்லை. மேலும், அவர்கள் நேர்வழி பெற்றவர்களாகவுமில்லை.

நேர்வழி என்பது ஈமான் கொள்வதாகும். வழிகேடு என்பது ஈமான் கொள்ளாமலும் உண்மையையும் நியாயத்தையும் விட்டுத் திரும்புவதாகும்.

ஈமான் கொள்வதற்கு வேண்டிய சூழ்நிலைகள் அவர்களிடம் இருந்தும் அந்த சூழ்நிலையை பயன்படுத்தி நேர்வழி பெறாமல் வழிகேட்டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். எனவேதான் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வியாபாரம் செய்வதன் நோக்கமே இலாபம் அடைவதுதான். இவர்கள் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டை வாங்கிக் கொண்ட தால்தான் فَمَا رَبِحَت تِّجَارَتُهُمْ அவர்களுடைய (இவ்) வர்த்தகம் இலாபந்தரவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

கொள்முதலையும் இலாபத்தையும் பாதுகாப்பதுதான் வியாபாரம் செய்யும் முறையாகும். ஆனால் இவர்களோ நேர்வழி பெறுவதற்குரிய பக்குவத்தை இழந்து விட்டதால்தான் وَمَا كَانُوا مُهْتَدِينَ அவர்கள் நேர்வழி பெற்றவர்களாகவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

مَثَلُهُمْ كَمَثَلِ الَّذِي اسْتَوْقَدَ نَارًا فَلَمَّا أَضَاءَتْ مَا حَوْلَهُ
ذَهَبَ اللَّهُ بِنُورِهِمْ وَتَرَكَهُمْ فِي ظُلُمَاتٍ لَّا يُبْصِرُونَ ﴿١٧﴾

17. இவர்களின் நிலைமையாவது:- (அபாயகரமான இருளில் வழி தெரிந்து செல்லும் பொருட்டு) ஒருவன் நெருப்பை மூட்டி, அது அவனைச் சுற்றிலும் வெளிச்சத்தைத் தந்த போது, அல்லாஹ் (அந்நெருப்பை அவியச் செய்து) அவர்களின் வெளிச்சத்தைப் போக்கி, அவர்கள் பார்க்க முடியாத இருளில் அவர்களை விட்டதைப் போலதாகும்.

இந்த ஆயத்தில் முனாஃபிக்குகளின் தன்மையை உதாரணமாகக் கூறுகிறான். அதாவது அவர்களின் ஒருவன் நெருப்பை மூட்டுகிறான். அந்நெருப்பு ஜ்வாலை விட்டு எரிந்தவுடன், தாங்கள் செல்ல வேண்டிய வழியைப் பார்த்துக் கொள்கின்றனர். பின்னர் இந்த நெருப்பு நமக்குத் தேவையில்லை என்று அலட்சியம் செய்து விடுகின்றனர். ஆதலால் அந்நெருப்பு அணைந்து விடுகிறது. அவர்கள் இருளில் வழி தெரியாமல் மீண்டும் நின்று தயங்குகின்றனர். இந்த இடத்தில் நெருப்புக் கொளுத்துதல் என்பது இஸ்லாத்தின் வட்டத்துக்குள் நுழைவதாகும். அவர்கள் இஸ்லாமாகி விட்டதால் ஏனைய முஸ்லிம்களுக்குள்ள உரிமைகள் தமக்கு கிடைத்து விட்டன என எண்ணி இஸ்லாமிய ஏவல் விலக்கல்களை அலட்சியம் செய்து விட்டனர். எனவே இவர்கள் ஈமான் கொண்டதை அல்லாஹ் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் முஸ்லிமாகவோ காஃபிராக இருந்து கொள்ள முடியாமல் இரண்டுக்கும் மத்தியில் தத்தளிக்கின்றனர்.

صُمٌّ بُكْمٌ عُمْيٌ فَهُمْ لَا يَرْجِعُونَ ﴿١٨﴾

18. (மேலும் இவர்கள் அல்லாஹ்வை அஞ்சி நேர்வழியைக் கடைப்பிடிப்பதில்) செவிடர்களாகவும் ஊமையர்களாகவும், குருடர்களாகவும் இருக்கின்றனர். ஆதலால் இவர்கள் (இந்நிலையிலிருந்து) மீளமாட்டார்கள்.

முனாஃபிக்குகள் திருக்குர்ஆனை அங்கீகரித்துக் கேளாததால் செவிடர்கள் என்றும், உண்மையைப் பேசாததால் ஊமையர்கள் என்றும், உண்மைக்கு அடையாளமான அத்தாட்சிகளைப் பார்க்காததால் குருடர்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றனர்.

أَوْ كَصَيِّبٍ مِّنَ السَّمَاءِ فِيهِ ظُلُمَٰتٌ وَرَعْدٌ وَبَرْقٌ
يَجْعَلُونَ أَصَٰبِعَهُمْ فِىٓ ءَاذَانِهِم مِّنَ الصَّوَٰعِقِ حَذَرَ
الْمَوْتِ ۚ وَاللَّهُ مُحِيطٌۢ بِالْكَٰفِرِينَ

19. அல்லது (இவர்களின் நிலை) இருள்களும் இடியும், மின்னலுங் கூடிய மழையில் (அகப்பட்டுக் கொண்டவர்கள்) இடி முழக்கத்தினால் மரணத்திற்குப் பயந்து தங்களுடைய விரல்களைத் தங்களின் காது(த் துவாரங்)களில் வைத்துக் கொண்டதைப் போலாகும். மேலும், நிராகரிப்பாளர்களை அல்லாஹ் சூழ்ந்து கொண்டிருக்கிறான்.

கடும் இருள், மின்னல், இடி ஆகியவற்றுடன் கூடிய பெருமழையில் அகப்பட்டு தத்தளிப்பது போன்று இம்முனாஃபிக்கு களும் தங்களின் முனாஃபிக்கு தன்மையைப் பற்றியும் அதற்காக அவர்கள் அச்சுறுத்தப்பட்டு கண்டிக்கப்படுவது பற்றியும், அவர்களின் தவறான நடவடிக்கைகளைப் பற்றி திருக்குர்ஆன் ஆயத்துகள் அருளப்படுகின்றன. இதனால் மனமொடிந்து கஷ்டத்தில் தட்டழிந்தனர்.

பெருமழையில் அகப்பட்டுத் தத்தளிப்பவர்கள், இடிச் சப்தத்தைக் கேட்டு தங்கள் காதுகளில் விரலை புகச் செய்வது போல் முனாஃபிக்குகளும் தங்களைப் பற்றி இறங்கும் ஆயத்துகளைச் செவியுறுவதாலும், ஸஹாபாக்களின் துணிகரமான நடவடிக்கை களைக் கண்டு தங்களின் முனாஃபிக் தன்மையைக் கைவிட நேர்ந்திடுமா என அஞ்சி திருக்குர்ஆனைச் செவிமடுக்காமல் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டனர்.

இந்த உதாரணத்தில் மழையை திருக்குர்ஆனுக்கும் மழையின் மூலம் பூமி செழித்துப் புத்துயிர் பெறுவதைப் போன்று திருக்குர்ஆனின் மூலம் இதயங்கள் செழித்து புத்துயிர் பெறுவதையும் திருக்குர்ஆனில் கண்டிக்கப்பட்டுள்ள இறை நிராகரிப்பு, ஷிர்க்கு, முனாஃபிக் ஆகியவற்றைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

وَاللَّهُ مُحِيطٌۢ بِالْكَٰفِرِينَ **மேலும் நிராகரிப்பாளர்களை அல்லாஹ் சூழ்ந்து கொண்டிருக்கிறான்** என்ற வாக்கியம் மேற்கூறப்பட்ட உதாரணத்திற்கும் இதற்கு அடுத்து வரக்கூடிய ஆயத்திற்கும் இடையிட்ட வாக்கியமாகும். இத்திருக்குர்ஆனின் ஆயத்துகள் தங்கள் காதில் விழாதவாறு தங்கள் காதுகளை அடைத்துக் கொண்ட போதிலும், அவ்விதம் அச்சுறுத்தப்படும் வேதனையை விட்டும் அவர்கள் ஒருபோதும் தப்பிவிட முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

இதற்கடுத்து வரும் ஆயத்தில் மேற்கூறப்பட்ட உவமானத்தைச் சேர்ந்த விஷயம் கூறப்படுகிறது.

يَكَادُ الْبَرْقُ يَخْطَفُ أَبْصَٰرَهُمْ ۖ كُلَّمَآ أَضَآءَ لَهُم
مَّشَوْا۟ فِيهِ وَإِذَآ أَظْلَمَ عَلَيْهِمْ قَامُوا۟ ۚ وَلَوْ شَآءَ
اللَّهُ لَذَهَبَ بِسَمْعِهِمْ وَأَبْصَٰرِهِمْ ۚ إِنَّ اللَّهَ عَلَىٰ
كُلِّ شَىْءٍ قَدِيرٌ

20. அம்மின்னல் அவர்களின் பார்வைப் பறிக்க நெருங்குகின்றது. அவர்களுக்கு வெளிச்சம் தரும் போதெல்லாம் அதில் அவர்கள் (மரணத்தை விட்டு தப்பித்துக் கொள்ளலாமென எண்ணி) நடக்கின்றனர். அப்பால், அவர்கள் மீது இருள் மூடிக் கொண்டால் நின்று விடுகின்றனர். ஆனால், அல்லாஹ் நாடினால் அவர்களின் பார்வைகளையும் செவிப்புலனையும் போக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன்.

திருக்குர்ஆனின் அத்தாட்சிகள் முனாஃபிக்குகளின் சிந்தைகளை அதிரும்படி செய்தது. ஆயினும் திருக்குர்ஆனில் அவர்களுக்குப் பிரியமான விஷயங்கள் வந்தால் அதனை அங்கீகரித்து அதன்படி நடப்பார்கள். அவர்களுக்கு வெறுப்பான விஷயங்கள் வந்தால் அதனை அங்கீகரிக்க மாட்டார்கள். அதாவது அவர்களின் உயிர்களையும் பொருட்களையும் பாதுகாத்தல்,

போர்க்களத்தில் வெற்றி பெற்று கிடைத்துள்ள பொருட்களை பங்கிடும் போது அப்பொருட்களை அடைதல் போன்றவற்றை ஏற்றுக் கொள்வார்கள். தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஜிஹாது போன்ற மனதிற்குப் பிடிக்காத விஷயங்கள் வந்தால் ஏற்றுச் செயல்படுத்த மாட்டார்கள்.

இந்த ஆயத்தில் "அம்மின்னல் அவர்களின் பார்வைகளைப் பறிக்க நெருங்குகிறது" என்பது திருக்குர்ஆனின் அத்தாட்சிகளை அம்முனாஃபிக்குகளின் சிந்தைகளை அதிரும்படி செய்தது என்பதையும், "அவர்களுக்கு வெளிச்சம் தரும்போதெல்லாம் அதில் அவர்கள் நடந்து கொள்கின்றனர்" என்பது திருக்குர்ஆனில் அவர்களுக்கு பிரியமான விஷயங்கள் கூறப்பட்டால் அதன்படி நடப்பார்கள் என்பதையும், "அவர்கள் மீது இருள் மூடிக் கொண்டால் நின்று விடுகின்றனர்" என்பது திருக்குர்ஆனில் அவர்களுக்கு வெறுப்பான விஷயங்கள் வந்தால் அதனை அங்கீகரிக்க மாட்டார்கள் என்பதையும் ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

முனாஃபிக்குகளின் அகப்பார்வை, செவி ஆகியவை கெட்டு விட்டதால் திருக்குர்ஆனை செவிமடுத்துக் கேட்பதுமில்லை; பார்ப்பதுமில்லை. இவர்களின் அகப்பார்வையும் செவிப்புலனும் கெட்டு விட்டதைப் போல் அவர்களின் வெளிப் பார்வையையும் செவியையும் அல்லாஹ் நாடினால் போக்கி விடமுடியும் என்பதையும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து (ரஃதி) இடி என்பது என்னவென வினவினார்கள். அதற்கவர்கள் "மேகத்திற்காக நியமிக்கப்பட்ட மலக்கு தன்னிடம் இருக்கும் நெருப்புச் சாட்டையால் அல்லாஹ் நாடிய இடங்களுக்கு அம்மேகத்தை ஒட்டுகிறார்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது இடிச் சப்தம் கேட்டது. யூதர்கள் "இதோ கேட்கும் சப்தம் என்ன?" வென வினவினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "குறிப்பிட்ட இடத்திற்கு மேகம் போய்ச் சேரும்வரை விரட்டும் சப்தம்" என்றார்கள். அதற்கு யூதர்கள் "உண்மையுரைத்தீர்கள்" என்று

கூறினார்கள் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களின் ரிவாயத்தில் கூறப்பட்டுள்ளது.

அல்ஹதீஸ்:- இடிச் சப்தம் கேட்கும் போது சுப்ஹானல்லதீ யுஸப்பிஹுர்ரஃத பிஹம்திஹி வல்மலாயிகத்து மின் கீஃபத்திஹி வஹுவ அலா குல்லி ஷெய்இன் கதீர் என்று ஓதினால் அவன் மீது இடி விழாது என்றும் கூறியிருக்கிறார்கள். மேலும் அல்லாஹும்ம லாதக்துல்னா பிகலபிக வலா துஹ்லிகுனா பிஅதாபிக வஆஃபினா கப்ல தாலிக என்று ஓதுவார்கள் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முத்தக்கீன்களைப் பற்றியும், முனாஃபிக்குகளைப் பற்றியும் காஃபிர்களைப் பற்றியும் இம்மூன்று வகையினரிலும் முத்தக்கீன் களைத் தவிர மற்ற இரு பிரிவினரும் வேதனையை அனுபவிக்க வேண்டியவர்களே என்றும் கூறியுள்ளான்.

மனிதர்களில் உள்ள மூன்று வகையினரின் தன்மையையும், அவர்கள் அடையும் பலனையும் இறைவன் கூறிவிட்டு அனைவரும் என்னையே வணங்க வேண்டும் என்று இதற்கடுத்த ஆயத்துகளில் கட்டளையிட்டிருக்கிறான். இதற்கடுத்த ஆயத்துகளில் தன்னை ஏன் வணங்க வேண்டும்? என்பதற்குரிய காரணத்தை இறைவன் கூறுகிறான்.

يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱعۡبُدُواْ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُمۡ وَٱلَّذِينَ
مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ﴿٢١﴾

21. மனிதர்களே! நீங்கள் (தீமையிலிருந்து) தப்பித்துக் கொள்ளும் பொருட்டு உங்களையும், உங்களுக்கு முன் இருந்தவர்களையும் சிருஷ்டித்த உங்களுடைய 'றப்'பை வணங்குங்கள்.

இந்த ஆயத்தில் இறைவனே இல்லை என்று கூறுபவர்களுக்கு மறுப்பாக இறைவன் என்பவன் உங்களையும் உங்களுக்கு முன்

இருந்தவர்களையும் இவ்வுலகையும், இவ்வுலகிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்து அந்தந்தக் காலத்தில் அவை யாவற்றுக்கும் வேண்டிய வற்றைச் செய்து போஷித்து அதனைப் பரிபக்குவ நிலையை அடையச் செய்பவன்தான் அல்லாஹ் என்றும், அவனைத்தான் வணங்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளான்.

يَاَيُّهَا النَّاسُ 'மனிதர்களே' என்று கூறப்படும் இடங்களில் மக்காவைச் சேர்ந்தவர்களை அழைத்துக் கூறியதென்றும், 'ஈமான் கொண்டவர்களே' என்று கூறப்படும் இடங்களில் மதீனாவாசிகளை அழைத்துக் கூறியதென்றும் ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

اعْبُدُوْا رَبَّكُمُ **'உங்களுடைய றப்பையே வணங்க வேண்டும்'** என்ற கட்டாயத்தை யாவருக்கும் வற்புறுத்திக் கூறுகிறது. இபாதத் (வணக்கம்) என்ற பதம் அனைத்தும் அவன் ஏகன் என்ற அர்த்தம் உடையதாகும் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்த ஆயத்தில் **'உங்களுடைய றப்பை வணங்குங்கள்'** என்று முஃமின், காஃபிர், முனாஃபிக் ஆகிய அனைவரையும் அழைத்துக் கூறியுள்ளான். அதாவது காஃபிர்களை நோக்கி 'இறைவனுக்கு இணை வைக்காதீர்கள்' என்றும், முனாஃபிக்குகளை நோக்கி 'உள்ளும் புறமும் ஒன்றுபோல் இதய சுத்தியுடன் வணங்குங்கள்' என்றும் மூமின்களில் பாவிகளை நோக்கி 'இறைவனுக்கு மாறு செய்யாதீர்கள்'. என்றும் இறைவனையே வணங்கும் மூமின்களை நோக்கி, 'உங்களுடைய வணக்கத்திலே ஸ்திரமாயிருங்கள்' என்றும் அறிவிக்கப் பட்டிருப்பதாக விரிவுரை செய்யப்படுகிறது.

மூமின்களுடைய வணக்கம் இபாதத், உபூதிய்யத், உபூதத் என மூன்று வகைப்படும்.

1. **இபாதத்:-** ஏவல் விலக்கல்களுக்கு கட்டுப்படல்.

2. **உபூதிய்யத்:-** ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்படுவதுடன் களா கத்ரை (விதியை) ஏற்றுக் கொண்டு பதறாமல் பொறுமையுடன் இருத்தல் .

3. **உபூதத்:-** எச்செயலையும் தன் செயலாய்க் காணாமல் எல்லாமே அல்லாஹ்வின் நாட்டம் என எண்ணுவது.

الَّذِىْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا وَّالسَّمَآءَ بِنَآءً ۖ وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ الثَّمَرٰتِ رِزْقًا لَّكُمْ ۚ فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۲۲﴾

22. அவன் உங்களுக்குப் பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் ஆக்கி, மேகத்திலிருந்து மழையைப் பொழியச் செய்து அதனால் உங்களுக்கு உணவாகக் கனி வர்க்கங்களை வெளியாக்கினான்; ஆகவே, (இவற்றை) நீங்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு இணை வைக்காதீர்கள்.

جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا **'பூமியை விரிப்பாக ஆக்கினான்'** என்பதற்கு அதிக தடிப்பமாயிராமலும் அதிக மெல்லினமாயிராமலும் விரிப்பு போல், வசிப்பதற்கு வசதியாக ஆக்கினான் என்பது கருத்தாகும்.

الثَّمَرٰتِ **தமராத்** என்பது கனி வர்க்கங்கள் என பொருள்படும். ஆயினும் பூமியிலிருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் இதர உபகரணங்கள் யாவற்றுக்கும் சொல்லப்படும்.

اَنْدَادًا **'இணைகள்'** என்பதற்கு இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட நட்சத்திரங்கள் நெருப்பு, விக்கிரஹங்கள் போன்றவற்றை இறைவனுக்கு இணையாக்காதீர்கள் என்பது கருத்தாகும்.

فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا **'அல்லாஹ்வுக்கு இணை வைக்காதீர்கள்'** என்று மூமின்களையும் நோக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிறர் நம்மைப் புகழ வேண்டும் மதிக்க வேண்டும் என்பதற்காக

அல்லாமல் அல்லாஹ்வையே இதய சுத்தியுடன் (இக்லாசுடன்) வணங்க வேண்டும் என்பதை அறிவிக்கிறது. மேலும் நாம் (இக்லாசுடன்) இதய சுத்தியுடன் அமல் செய்து விட்டோம் என்று கருதாமல் இருப்பது இக்லாசை விட படித்தரம் கூடியதாகும்.

அல்ஹதீசுல் குத்ஸி:- "இக்லாஸ் என்பது எனது இரகசியங்களில் ஒன்று. அதை நான் நாடியவர்களின் சிந்தையில்தான் அமைப்பேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இவ்விரு ஆயத்துகளின் மூலம் அல்லாஹ்வையே வணங்க வேண்டும், அவனுக்கு இணை வைக்கக்கூடாது என்றும் கூறிவிட்டு அதற்குரிய காரணத்தையும் இறைவன் கூறியுள்ளான்.

இந்த ஆயத்துகளில் அவன் ஏகன் என்பதைக் கூறிவிட்டு அதை அறியும் வழியையும் கூறியபின் அவனுடைய ரசூலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்பட்டிருப் பட்டிருக்கிறார்கள் என்றும் அத்திருக்குர்ஆன் அல்லாஹு தஆலாவிடம் இருந்துதான் இறங்கியது என்றும் இதற்கடுத்த ஆயத்தில் விபரித்துள்ளான்.

وَإِن كُنتُمْ فِي رَيْبٍ مِّمَّا نَزَّلْنَا عَلَىٰ عَبْدِنَا فَأْتُوا بِسُورَةٍ مِّن مِّثْلِهِ وَادْعُوا شُهَدَاءَكُم مِّن دُونِ اللَّهِ إِن كُنتُمْ صَادِقِينَ ۝

23. மேலும் நமது அடியாருக்கு (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு) நாம் அருளிய (வேதத்)தைப் பற்றி நீங்கள் சந்தேகங் கொண்டிருந்தால் இ(வ்வேதத்தில் உள்ள)தைப் போல் ஓர் அத்தியாயத்தை (இயற்றிக் கொண்டு வாருங்கள்; மேலும் நீங்கள் உண்மையாளர்களாயிருந்தால் அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களையும் அழைத்துக் கொள்ளுங்கள்.

عَبْدِنَا **'நமது அடியார்'** என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிக்கும். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனிடத்தில் உயரிய அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பதைக் குறிக்கும்.

சூரத்து என்பது பல ஆயத்துகள் கொண்ட ஓர் அத்தியாயத்திற்குச் சொல்லப்படும். திருக்குர்ஆனில் 6666 ஆயத்துகள் கொண்ட நூற்றிப் பதினான்கு சூரத்துகள் இருக்கின்றன. சூரத்துகளில் மிகப் பெரியது சூரத்துல் பக்கராவாகும். மிகச் சிறிய சூரா சூரத்துல் கவ்தராகும். மிகப் பெரிய ஆயத்து சூரத்துல் பக்கராவில் இடம் பெற்ற 282 வது ஆயத்தாகும். மிகச் சிறிய ஆயத்து சூரத்துர் ரஹ்மானில் இடம் பெற்ற 64 வது ஆயத்து அல்லது சூரத்துல் ஃபஜ்ரிலுள்ள முதல் ஆயத்து அல்லது சூரத்துல் லுஹாவிலுள்ள முதல் ஆயத்துமாகும். சூரத்துகளுக்குரிய பெயர்களைச் சூட்டியதும், திருக்குர்ஆனில் இருப்பது போல் சூரத்துகளையும் ஆயத்துகளையும் ஒழுங்குபடுத்தியதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களேயாகும்.

ரிவாயத்து:- ஒரு சூரத்து முடிந்ததும் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் "இந்த சூரத்தை இன்ன சூரத்திற்கு முன்னும் இன்ன சூரத்திற்கு பின்னும் ஆக்குங்கள்?" என்று சொல்வார்கள். மேலும் திருக்குர்ஆன் இன்றிருப்பது போலவே லவ்ஹுல் மஹ்ஃபூலிலும் இருக்கிறது. ஸஹாபாக்களின் முயற்சியெல்லாம் திருக்குர்ஆனை ஒரே இடத்தில் சேர்ப்பதில்தான் இருந்தது.

ஷுஹதாஉ என்பதன் பொருள் கூட இருப்பவர், சாட்சி சொல்பவர், உதவி செய்பவர், தலைமை வகிப்பவர் என்பதாகும்.

فَأْتُوا بِسُورَةٍ مِّن مِّثْلِهِ **'இதைப் போல் ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள்'** மறைவான விஷயங்களைப் பற்றி அறிவித்தல், உள்ளத்தை ஈர்த்தல், சொல் நயம், இலக்கண இலக்கியம் போன்றவற்றில் இதற்கு நிகரான ஓர் அத்தியாயத்தை கொண்டு வாருங்கள் பார்ப்போம் என்று அறைகூவல் விடுக்கின்றது.

அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையான திருத்தூதர் என்பதற்கு ஆதாரமாக அவர்களுக்கு பல முஃஜிஸாத்துக்களை (அற்புதங்களைக்) கொடுத்து அருளினான். அவற்றுல் மிகப் பிரதானமானது திருக்குர்ஆனாகும். இதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வரவும் அக்காலத்தில் குறைஷிக் காஃபிர்கள் 'இது இறைவன் அருளியது அல்ல' என்றும் முஹம்மது தானே இதை தொகுத்து வெளியிடுகிறார் என்றும் சந்தேகித்து நிராகரிக்கலானார்கள். அக்காலத்தில் உள்ளவர்கள் நாவன்மை மிக்கவர்கள். மிகப் பெரிய சபைகளிலும் சிறிதும் யோசிக்காமல் தங்கு தடையின்றி சொல் நயம் ததும்பும் விதமாக கவிதை இயற்றி படிப்பது வழக்கம். தங்கள் பேச்சுக்கு நிகரில்லை என்ற இறுமாப்பும் இருந்தது. அவர்களில் கல்வி வாசனையே இல்லாதவருங்கூட பிறர் பிரமிக்கும் விதமாக பேசும் ஆற்றலைப் பிறவியிலேயே பெற்றிருந்தார்கள்.

இந்நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட திருக்குர்ஆன் சொல்நயம், அழகிய அமைப்பு, ஆழ்ந்த கருத்துக்கள், எளிதில் விளங்கும் விதமான எளிய நடை ஆகியவற்றுடன் இறங்கியது. அதற்கு நிகராக எவருங் கொண்டு வர முடியாது. தவிர, முன்னோர்களின் வரலாறும் அதில் இடம் பெற்றிருந்தது.

ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கோ எழுதப் படிக்கத் தெரியாது. யாரிடமும் கல்வி கற்கவில்லை. இதற்கு முன் இறக்கப்பட்ட வேதங்களை அறிந்தவர் களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. பிறந்தநாள் முதல் குறைஷிகளுடனேயே வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில்தான் முஹம்மது தானே இட்டுக் கட்டிக் கூறுகிறார் என்று கூறினார்கள். எனவே, இந்த ஆயத்தின் மூலம் 'நீங்கள் கூறுவது உண்மையானால் இது போல் ஒரு சூரத்தைக் கொண்டு வாருங்கள்' என்று அறைகூவல் விடுக்கப்பட்டது. உடனே அவர்களில் சிலர் கல்வியில்லாப் பாமர மக்களை ஏமாற்ற சிலவற்றை கோர்வை செய்து "இதோ குர்ஆனுக்கு

நிகராக கொண்டு வந்து விட்டோம்" என்று கூறினர். அப்போது அவர்களிலுள்ள கல்விமான்களில் சிலர் அதை இகழ்ந்து இது குர்ஆனுக்கு நிகராக இல்லை என்று நிராகரித்து விட்டனர். இவ்வாறு திருக்குர்ஆனுக்கு நிகராக எவரும் கொண்டு வர இயலவில்லை. இதனால் அவமானப்பட்டு ஆத்திரமுற்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பொய்யர் என்றும் சூனியக் காரர் என்றும் தூற்றினார்கள். அவர்களிற் சிலர் திருக்குர்ஆனின் வசனத்தைச் செவியுற்று பிரமித்ததுடன் முஹம்மது பொய் செல்பவருமல்ல, புலவருமல்ல, குறி சொல்பவருமல்ல, சூனியக் காரருமல்ல என்று கூறியதுடன் இவ்வாசகம் அவர்களின் சொல்லுக்கு ஒப்பாகவும் இல்லை. மனிதரால் இவ்விதஞ் சொல்ல முடியாது என்று கூறி புகழ்ந்தனர்.

ரிவாயத்து:- வலீதுப்னு முங்யரா என்பவர் குறைஷிகளுள் நாவன்மை மிக்கவர்களிலும் நாவன்மை மிக்கவர். ஒரு சமயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நீர் கொண்டு வந்த வேதத்தில் கொஞ்சம் ஓதிக்காட்டு" என்றார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சூரத்துன்னஹ்ல் 90வது ஆயத்தை ஓதிக் காண்பித்தார்கள். அதைக் கேட்டு ஆச்சரியமுற்று "மீண்டும் அதை ஓது" என்றார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீண்டும் ஓதினார்கள். உடனே அதன் சிறப்பை அறிந்து "அல்லாஹ்வின் மீது ஆணையாக இப்பேச்சுக்கு எவ்வளவு மதுரம் இருக்கிறது. இதன் உச்சி கனிகளைச் சொரிகின்றது. இதன் அடியோ வளம் ததும்புகின்றது. இது மனிதன் சொல்லக் கூடியதல்ல. எந்த வாக்கும் இதற்கு நிகரல்ல" என்று புகழ்ந்து விட்டு தன் கூட்டத்தார் பனூ மக்ஜூம்களிடத்தில் "அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மது ஓதிக் காட்டிய வாக்கு மனிதனின் வாக்கல்ல என்றெல்லாம் புகழ்ந்து விட்டு இன்று உங்களில் என்னை விடக் கவிதையை அறிந்தவருமில்லை. பேச்சுத் திறமையில் மேலிட்டவருமில்லை. ஆனால் முஹம்மது சொல்லும் வாக்கோ அந்த இனத்தைச் சேர்ந்ததல்ல. மற்ற எல்லாப் பேச்சுக்களையும் முறித்து எறிந்து கூளமாக்குகின்றது!" என்று கூறிவிட்டு தன் வீட்டிற்குச் சென்று விட்டார்.

இதைக் கேட்ட குறைஷிகள் மனமொடிந்து வலீது சாய்ந்து விட்டார். 'இனி குறைஷிகள் அனைவரும் சாய்ந்திடுவார்கள்' என்று கவலைப்பட்டார்கள். அதற்கு அபூஜஹ்ல் "நீங்கள் கவலைப்பட வேண்டாம், அதற்கு நான் போதுமானவன்" என்று சொல்லிவிட்டு வலீது வரும் வழியில் கவலையுற்றவன் போல் உட்கார்ந்து விட்டான். அது கண்ட வலீது அபூஜஹ்லை நோக்கி "ஏன் இவ்விதம் இருக்கிறீர்" என்று வினவினார். அதற்கு அபூஜஹ்ல் "நான் எப்படி கவலையற்றிருக்க முடியும்? நீர் முஹம்மதுடைய உதவியை நாடி அவரைப் புகழ்ந்தீர் என்று எண்ணி உமக்காக வரி வசூலிக்கிறார்கள்?" என்று ரோஷமூட்டினான். அது கேட்ட வலீது கோபமுற்றவராக "குறைஷிகளில் நானே செல்வந்தன் என்பதை நீங்கள் அறிவீர்கள்; முஹம்மதும் அவரது தோழர்களும் வயிறார உண்ணுவதற்கும் வசதியற்றவர்கள்" என்று சொல்லிக் கொண்டு அபூஜஹ்லுடன் பனூ மக்ஜூம்களின் சபைக்கு வந்தார். மேலும் அவர்களை நோக்கி "முஹம்மதைப் பொய்யர் என்று எண்ணுகிறீர்களா? அவர் உங்களிடம் பொய்யுரைக்கக் கண்டீர்களா? அவரைப் பைத்தியக்காரர் என்று எண்ணுகிறீர்களா? அவரைக் குறிகாரர் என்று கருதுகிறீர்களா?" என்று வினவினார். இவற்றிற்கெல்லாம் இல்லையென்றே பதிலளித்து விட்டு அப்படியாயின் அவருடைய வாக்கை என்னவென்று சொல்வது எனக் கேட்டனர். அதற்கவர் "இது குறிகாரர்களிடமிருந்து கற்றுக் கொல்லப்படும் ஒரு சூனியமேயன்றி வேறில்லை" என்று கூறினார். இவ்விஷயம் சூரத்துல் முத்தத்திர் 24வது ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மற்றொரு ரிவாயத்தில் கிராமப்புறத்து அரபி ஒருவர் "**நீர் கட்டளையிடப்பட்டதைத் தெளிவாக அறிவித்து விடுவீராக**" 15.94 என்று ஓதக் கேட்டதும் அவர் சுஜூதில் வீழ்ந்து விட்டார். நீர் ஏன் சுஜூது செய்தீர் எனக் கேட்டதற்கு "இவ்வாக்கின் சொற்சுவையும் சொற்சாதுரியமும் என்னை பிரமிக்கச் செய்தது. அதனால் சுஜூது செய்தேன்" என்றார்.

ஹிக்காயத்து:- ஒரு சமயம் ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் ஒரு நாட்டின் தளபதியொருவர் வந்து, கலிமா ஓதி இஸ்லாமைத் தழுவினார். அவர் அரபி மொழியை நன்கு

அறிந்தவர். அவரிடம் ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "நீங்கள் இஸ்லாமாக நேரிட்ட காரணம் என்னவென்று" வினவினார். அதற்கவர், "நாங்கள் போர்க்களத்தில் சிறைப்பிடித்த முஸ்லிம்களில் ஒருவர் உங்கள் வேதத்திலிருந்து ஓர் ஆயத்தை ஓதக் கேட்டேன். அதை நன்கு உணர்ந்து பார்த்ததில் மர்யமுடைய குமாரர் ஈஸாவின் மீது இறக்கப்பட்ட வேதத்திலுள்ள இம்மை மறுமை நிலைமைகளையெல்லாம் ஒருங்கே அமைந்திருக்கக் கண்டேன். அதுதான் நான் இஸ்லாமைத் தழுவுவதற்கு காரணமாயிற்று" இந்த ஆயத்து சூரத்துன்னூர் 52வது ஆயத்தில் இடம் பெற்றுள்ளது.

திருக்குர்ஆனுக்கு நிகராக ஒரு சூரத்தைக் கூட இயற்ற முடியாது என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டு நீங்கள் அனைவரும் ஈமான் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான். அக்கட்டளைக்கு மாறாக ஈமான் கொள்ளாவிடில் அவர்களுக்காக சித்தஞ் செய்யப்பட்டுள்ள நரகத்தைப் பற்றி இதற்கடுத்த ஆயத்தில் கூறியுள்ளான்.

فَإِن لَّمْ تَفْعَلُوا وَلَن تَفْعَلُوا فَاتَّقُوا النَّارَ الَّتِي وَقُودُهَا
النَّاسُ وَالْحِجَارَةُ ۖ أُعِدَّتْ لِلْكَافِرِينَ ۝

24. நீங்கள் (அவ்வாறு) செய்யாவிடில் – நீங்கள் (ஒரு போதும் அவ்வாறு) செய்ய முடியாது. (நரக) நெருப்பைப் பயந்து கொள்ளுங்கள், (நிராகரிப்பாளர்களுக்கு) அது எத்தகையதென்றால் அதனுடைய எரிபொருளாக மனிதர்களும், கற்களும் இருப்பர். அது நிராகரிப்பாளர்களுக்கு சித்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

فَإِن لَّمْ تَفْعَلُوا **நீங்கள் செய்யாவிடில்** என்பது 'நீங்கள் அதுபோல் ஒரு சூரத்தைக் கொண்டு வரவில்லையானால்' என்ற பேச்சைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்ததாகும். அவர்களாற் செய்ய முடியாதென்பது நிச்சயமாயிருக்க 'நீங்கள் செய்யவில்லையானால்' என்று சந்தேக உருபு கொண்டு சொன்னது ஏனெனில் அதிலவர்கள் கவனஞ் செலுத்தும் முன் தங்களாற் செய்ய

முடியுமென்று அவர்கள் எண்ணியிருந்ததாலும், அல்லது அவர்களைப் பரிகசித்துச் சொன்னதாகும்.

وَلَنْ تَفْعَلُوا **'நீங்கள் (ஒருபோதும் அவ்வாறு) செய்ய முடியாது'** என்றது பேச்சு முற்றுமுன் வந்த இடைப்பேச்சாகும். இதன் கருத்து. உங்களால் ஒரு போதும் கொண்டு வர முடியாதென்பதாகும். இது அக்காலத்தவர் களுக்கு மட்டுமின்றி மற்ற எல்லாக் காலத்தவர்களுக்கு மாகும் என்பது இதில் தெரியவருகிறது. எனவே, மறைவான விஷயத்தைப் பற்றி அறிவிப்பு இதில் உண்டாயிருக்கிறது. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த குர்ஆன் அல்லாஹ் இடத்திலிருந்து வந்ததே என்று ஐயமற அறிந்திருந்ததனால்தான், குர்ஆனுக்கு நிகர் கொண்டு வர முடியாது என்று வரையறுத்துக் கூறினார்கள் என்பதும் தங்கள் காரியத்தில் தங்களுக்கே சந்தேகம் இருந்தால் ஒருக்கால் அதற்கு நிகர் கொண்டு வரப்பட்டு அதனால் தங்கள் வாதம் பொய்யாய் விடுமே எனப் பயந்து இவ்விதம் அளவு கடந்து சபதங் கூறி யழைத்திருக்க மாட்டார்கள் என்பதும் இங்கு உணரத்தக்கது. **"நெருப்பைப் பயந்து கொள்ளுங்கள்"** என்றதில் உங்களால் குர்ஆனுக்கு நிகர் கொண்டுவர முடியாமற் போய் விட்டால் அதை நிராகரிக்கும் பிடிவாதத்தை விட்டுவிட்டு அதைக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும் என்று அறிவித்தலும் நீங்கள் ஈமான் கொள்ளாமல் முரண்டு பிடித்தால் கொடிய நரக வேதனைக்கு ஆளாவீர்களென்ற அச்ச மூட்டலும் உண்டாயிருக்கின்றன.

فَاتَّقُوا النَّارَ என்பதற்கு (அல்லாஹ்வைக் கொண்டும் குர்ஆன் மனிதவாக்கல்ல என்பது கொண்டும் ஈமான் கொள்வது கொண்டு) நெருப்பை விட்டும் பாதுகாப்பு பெறுங்கள் என்றும் பொருள் கூறலாம்.

وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ **அதன் எரி பொருளாக மனிதர்களும் கற்களும் இருப்பர்** என்றதில் மனிதர்கள் என்றது காஃபிர்களையும் பாவிகளையும் குறிக்கும். இந்நெருப்பு உலகில் உள்ள நெருப்பைப்போல் விறகு போன்றவற்றைக் கொண்டு எரியாமல், மனிதர்களைக் கொண்டும் கற்களைக் கொண்டும் எரிகிறதாகச் சொல்லப்படுவதால் இது மிகவும் கொடூரமான நெருப்பென்று தெரியவருகிறது. இதுபற்றி ஹதீஸில் கூறப்பட்டிருப்ப

தாவது 'நரக நெருப்பு, அதன் மூலம் பயன் பெறுவதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு எழுபது தடவை தண்ணீரால் கழுவப்பட்டு இவ்வுலகத்தில் இறக்கப்பட்டிருக்கின்றது'.

மனிதர்களுடன் கற்களையும் எரிபொருளாக ஆக்கப்பட்டது ஏனெனில் இவ்வுலகில் இவர்களே அக்கற்களைச் சிலைகளாகச் செய்து அவற்றை அல்லாஹ்வுக்கு இணைகளாக ஆக்கி வணங்கி வந்ததாலும், அச்சிலைகள் அவர்களுக்குப் பிரயோஜனஞ் செய்யும் என்றும் அவற்றின் உதவியால் அவர்களுக்கு நேரிடுந் துன்பங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாமென்றும் அவர்கள் நம்பியிருந்ததாலும், இக்குற்றங்களை அவர்கள் செய்ததற்குக் காரணமாயிருந்த விக்கிரகங்களை எரிப்பது கொண்டும் அவர்கள் வேதனை செய்யப்படுவார்கள். மேலும் விக்கிரகங்களின் மூலம் அவர்கள் எதிர்பார்த்திருந்த உதவிகளுக்கு முற்றிலும் மாற்றமாக அவற்றையும் நரகத்தில் எரிக்கப்படுவதைக் கண்ணுறுவதால் அவர்களுக்குக் கைசேதமுண்டாகி அதனாலும் அதிக வேதனையை அனுபவிப்பார்கள்.

أُعِدَّتْ لِلْكَافِرِينَ **அது நிராகரிப்பாளர்களுக்கு சித்தப்படுத்தப் பட்டிருக்கிறது** என்று இறந்த காலவினை முற்றாகக் கூறப்பட்டிருப்பதால், நரகம் சிருஷ்டிக்கப்பட்டு விட்டது என்பதற்கு இது ஆதாரமாகும். ஆனால், முஃதஸிலாக்கள் என்னும் வகுப்பார்கள் நரகம் சிருஷ்டிக்கப் படவில்லை யென்றும் கியாமத்து நாளில்தான் அது சிருஷ்டிக்கப்படும் என்றும் சொல்வது தவறு என்று கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது.

சுவர்க்கம் உயர்ந்த ஏழாவது வானத்திலும் நரகம் பூமியிலும் உண்டாயிருக்கிறது என்று ஸஹீஹான ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின் வருமாறு கூறியிருக்கிறார்கள். என்னிடம் "ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் **வஇன்ன ஜஹன்னம லமவ்இதுஹும் அஜ்மஈன்** 15:43 எனும் ஆயத்தைக் கொண்டு வந்தபோது 'ஜிப்ரீலே! எனக்கு நரகத்தைப் பற்றியும் அதன் கொடூரங்களைப் பற்றியும் விவரித்துச்

சொல்லுங்கள்' என்றேன். அதற்கவர்கள் 'முஹம்மதே' அல்லாஹு தஆலா நரகத்தைப் படைத்து ஆயிரம் வருடம் எரித்தான். அது வெண்ணிறமாய் விட்டது. இன்னும் ஆயிரம் வருடம் எரித்தான். அது கன்னங்கறேரென்று இருளடைந்த கறுப்பாயிற்று. அதன் எரிபொருளோ மனிதர்களும் கற்களுமாவர். அதன் ஆழமோ அளவிடற் கரிய தூரம். அதன் வேதனையோ மிகவும் கொடூரம். நரகின் பானமோ ஊனம், அவர்களின் அங்கியோ கீலெண்ணையாலானது. அதன் ஜுவாலையோ அணையாதது. அதன் கங்கோ நூராதது. உங்களை ஹக்கை (சத்தியத்தை)க் கொண்டு (சத்தியத்தைக் கொண்டு) நபியாக அனுப்பியவன் மீது ஆணையாக, ஜஹன்னத்திலிருந்து ஒரு முழச் சங்கிலி இவ்வுலகிலுள்ள ஓர் பிரமாண்டமான மலையின் மீது வைக்கப்பட்டால் அது ஏழாம் பூமியை எட்டும் வரை அப்படியே உருகிப்போய் விடும். இன்னும் உங்களை ஹக்கை (சத்தியத்தை)க் கொண்டு நபியாக அனுப்பியவன் மீது ஆணையாக! நரகவாதிகளின் ஆடையிலிருந்து ஓர் ஆடையை வானத்திற்கும் பூமிக்குமிடையே தொங்கவிடப்பட்டால் அதன் கடுமையான உஷ்ணத்தால் இவ்வுலகிலுள்ளோர் மாண்டு போவார்கள். இன்னும் முஹம்மதே! உங்களை ஹக்கைக் (சத்தியத்தைக்) கொண்டு நபியாக அனுப்பியவன் மீது ஆணையாக! ஒருவன் சூரியன் மறையுமிடத்தில் வேதனை செய்யப்பட்டால் சூரியன் உதயமாகும் இடத்திலுள்ளவர்கள் அவ்வேதனையின் கொடூரத்தாற் கரிந்து போய் விடுவார்கள். முஹம்மதே! அதற்கு ஏழு வாயல்களுண்டு" என்று கூறினார்கள்.

இந்த 24ம் ஆயத்தின் கூடிய சாராம்ச மென்னவெனில் "நீங்கள் குர்ஆனுக்கு நிகர் கொண்டுவரப் பிரயாசைப்பட்டுப் பார்த்தும் உங்களால் முடியாமற் போனபோது, இது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையான நபி என்பதற்கு ஆதாரமாகிய அற்புதம் என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே இதை உண்மையாக்கி ஈமான் கொள்ள வேண்டியது உங்கள் மீது கடமையாயிருப்பதால் அதைக் கொண்டு ஈமான் கொள்ளுங்கள். அதைப் பொய்ப்பிக்கும் நிராகரிப்பாளர்களுக்கு ஆயத்தப்படுத்தப் பட்டிருக்கிற கொடிய நரக வேதனையைப் பயந்து கொள்ளுங்கள்" என்பதாகும்.

இவ்வேதத்தை நிராகரிக்கும் நிராகரிப்பாளர்களுக்கு நரக வேதனையைக் கொண்டு அச்சமுறுத்திய பின்னர், இதன் கீழ் ஆயத்தில் அதை உண்மையாக்கி ஈமான் கொண்டு நல்செயல் செய்பவர்களுக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறப் படுகின்றது.

وَبَشِّرِ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أَنَّ لَهُمْ جَنَّاتٍ
تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ ۖ كُلَّمَا رُزِقُوا مِنْهَا مِنْ
ثَمَرَةٍ رِزْقًا ۙ قَالُوا هَٰذَا الَّذِي رُزِقْنَا مِنْ قَبْلُ ۖ وَأُتُوا
بِهِ مُتَشَابِهًا ۖ وَلَهُمْ فِيهَا أَزْوَاجٌ مُطَهَّرَةٌ ۖ وَهُمْ فِيهَا
خَالِدُونَ ۝

25. ஆனால் எவர்கள் "விசுவாசங் கொண்டு நற்செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கு நிச்சயமாக (மறுமையில்) சோலைகள் இருக்கின்றன" என்று நற்செய்தி சொல்வீராக. அவற்றிற்குக் கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து ஏதேனும் ஒரு கனி அவர்களுக்கு கொடுக்கப்படும் போதெல்லாம் "முன்னர் நமக்குக் கொடுக்கப்பட்டதும் இதுதானே" என்று கூறுவார்கள். எனவே (பார்வைக்கு) ஒரே விதமாக (ச் சுவையில் வெவ்வாறா) னவைகளாகவே அவர்கள் கொடுக்கப்படுவார்கள். தவிரவும், அவர்களுக்கு பரிசுத்தமான மனைவிகளும் இருக்கின்றனர். இன்னும் அவர்கள் அவற்றில் எந்நாளும் தங்கி விடுவார்கள்.

இந்த ஆயத்தில் சுவனச் சோலைகளுக்கு நான்கு விசேஷங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கிடையில் وَأُتُوا بِهِ مُتَشَابِهًا (ஒன்றை யொன்றொத்ததாகவே அவர்களிடம் அதைக் கொண்டு வரப்பட்டிருந்தது) என்ற வசனம் இரண்டாவது விசேஷத்தை விளக்க வந்த (ஜும்லா முஃதரிலா) இடைப் பேச்சாகும்.

(புஷ்ஷிர்) நற்செய்தி சொல்வீராக என்பதற்கு சுபச் செய்தி கூறுக அதாவது சந்தோஷ முண்டாகும் விஷயத்தைக் கூறுவீராக என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோக்கி ஏவியதாகவுஞ் சொல்லலாம். அல்லது முஸ்லிம் ஒவ்வொருவரையும் முன்னோக்கி ஏவியதாகவுஞ் சொல்லலாம். “இருளில் மஸ்ஜிதை நோக்கி நடப்பவர்கட்கு, கியாமத்து நாளில் பூரணமான ஒளியுண்டு என்று நற்செய்தி சொல்வீராக” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியதை உதாரணமாகக் கொள்ளலாம். இங்கு ‘நற்செய்தி சொல்லுக’ என்ற ஏவல் ஒருவரை மட்டும் முன்னோக்கிச் சொன்னதல்ல. ஒவ்வொருவரும் இது கொண்டு ஏவப்பட்டிருக்கின்றனர். அது போல் இந்த ஆயத்திலுள்ள **பஷ்ஷிர்** என்பதற்கும் கருத்துச் சொல்வது மிகச் சிறந்தது. ஏனெனில் இங்கு சொல்லப்படும் சுபச் செய்தி கண்ணியம் வாய்ந்ததாக இருப்பதால் ஒவ்வொருவரும் அது கொண்டு நற்செய்தி சொல்வதற்கு மிகவும் பாத்தியமானதாயிருக்கிறது. இன்னும் (புஷ்ஷிற)வென்றும் இங்கு ஓதப்பட்டிருக்கிறது. இதன் பொருள் ‘நற்செய்தி கூறப்பட்டது’ என்பதாகும்.

(ஆமனூ) என்பது **அம்ன்** எனுந் தாதுவிலிருந்து எடுக்கப்பட்ட ஈமான் என்னும் பதமடியாகப் பிறந்து. **அஃப்அலூ** எனும் (சொல் நிறையில்) வந்த இறந்த காலவினைச் சொல்லாகும். அம்ன் என்பதின் பொருள் அச்சமறுதல், ஈமான் என்பதின் பொருள் அச்சந் தீர்க்குதல். ஆனால் இது ‘உண்மையாக்கி வைத்தல்’ விசுவாசங் கொள்ளுதல் எனும் அர்த்தங்களில் புழங்கப்படுகின்றது. ஏனெனில் ஒருவன் ஒருவனை உண்மையாக்கி வைத்தாலும் விசுவாசங் கொண்டாலும் அவனை அச்சந்தீர்த்தவனாகவே ஆகுகின்றான்.

ஹதீஸ்:- யாருடைய தீங்கை விட்டும் அண்டை வீட்டுக்காரன் அச்சந் தீர்ந்திருக்கிறானே அவனே ஈமான் உள்ளவன் என்று ஈமான் உள்ளவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஈமானுடையவன் அச்சந்தீர்ந்தவனாகுகிறான். இன்னும் அல்லாஹ்வுக்கு அச்சந்தீர்த்தவன் என்றும் திருநாமம் வந்திருப்பது

அடியார்களை அவன் அநியாயஞ் செய்வதை விட்டும் அச்சந்தீரச் செய்திருப்பதாலாகும். உண்மையான மூமின் இத்திரு நாமத்திற்கு சுத்தமயப் படிகம் போல் பிரசன்ன ஸ்தானமாக ஆகுகின்றான். அப்போது அவனது உடல் எங்கும் சென்றேறி அவனைக் கண்ட எல்லா பொருள்களையும் அச்சந்தீர்க்கின்றது. ஈமான் விபரங்களைப் பற்றி விபரிக்குமிடத்தில் ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீனிப்னி அறபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இது சம்மந்தமாய் அனேக ரகசியங்களைக் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, இங்கு الَّذِيْنَ اٰمَنُوْا என்பதின் பொருள் ‘உண்மை யாக்கி வைத்தவர்கள்’ அல்லது ‘விசுவாசங் கொண்டவர்கள்’ என்பதாகும். وَعَمِلُوا الصّٰلِحٰتِ எனும் வசனத்திலுள்ள **ஸாலிஹாத்** என்பது **ஸாலிஹத்** என்பதின் பன்மை. இது ‘இணக்கமான’ என்று பொருள் தரும் உரிச் சொல்லாயிருந்தது. பின்பு இதை (நமது மார்க்கம்) அழகான நற்கிரியைகள் எனப் பொருள் தரும் பெயர் சொல்லாக வழங்கி வருதல் புழக்கத்தில் மிகைத்து விட்டது. ஆகவே ஃபர்லு, வாஜிபு, நஃப்லு, சுன்னத்து, முஸ்தஹப்பு, முதலிய சகலவித ஸாலிஹான அமல்களும் இதிலடங்கும்.

‘ஈமான் கொண்டு நற்செயல்களைச் செய்து வந்தவர்களுக்கு’ என்ற பேச்சில் ஈமானுக்கு ஸாலிஹான அமல்களை (நற்கருமங்களை) வேறாகக் கூறியிருப்பதால் ஈமான் என்றதில் ஸாலிஹான அமல்கள் நுழையவில்லை யென்பதற்கு இதில் ஆதாரமிருக்கிறது. ஈமானுக்குப் பொருள் ‘உண்மையாக்கி வைத்தல்’ என்று மேலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் முஃதஸிலாக்கள் ஈமானுக்குப் பொருளுரைப்பதில் ஹக்கைக் கொண்டு நிண்ணயங் கொள்ளுதலும், அது கொண்டு நாவினால் உறுதி கூறலும், அதன்படி அமல் செய்தலும் ஆக இம்மூன்றுங் கூடியதே ஈமான் என்று சொல்லுகிறார்கள். இது தவறென மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஸாலிஹான அமல்களின்றியே ஈமான் சித்தித்து விடும். ஆனால் ஈமானின்றியே ஸாலிஹான அமல்கள் சித்திக்க மாட்டா. ஏனெனில் ஸாலிஹான அமல்கள் நிறைவேறுவதற்கு ஈமான் இன்றியமையாததாகும்.

ஈமானும் ஸாலிஹான அமல்களும் (ஆக இவ்விரண்டும் சேர்ந்தே) சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி பெறுவதற்கு தகுதியாகிறது என்பது மேலேயுள்ள ஆயத்தின் மூலம் தெரியவருகிறது. ஏனெனில் ஈமான் அஸ்திவாரம் போன்று ஸாலிஹான அமல்கள் அதன் மேலுள்ள கட்டடம் போன்றும் இருக்கின்றன. கட்டடமில்லா அஸ்திவாரத்தில் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஆகவே அமல் இல்லாமல் சுவர்க்கத்தைத் தேடல் மடையர்களின் நிலைமை. இது பற்றி குர்ஆனில் ஈமானையும் ஸாலிஹான அமலையும் பெரும்பாலும் சேர்த்தே சொல்லப்படுவதன்றி தனிமையாய்ச் சொல்லப்படுவது மிகக் குறைவு.

'ஈமான் கொண்டு ஸாலிஹான அமல் செய்து வந்தவர்கட்கு (மறுமையில்) சோலைகள் இருக்கின்றன' என்று நற்செய்தி சொல்லும்படி வந்திருப்பதில் ஈமான் கொண்டு ஸாலிஹான அமல் செய்து வந்தவர்களுக்கு சுவர்க்கத்தை அடையும் பாக்கியம் இப்பொழுதே உண்டாகி விட்டதாக அறிக்கை செய்திருப்பதால் சுவர்க்கமும் இப்பொழுதே உண்டா யிருக்கிறதென்ற தீர்மானத்தைப் பெறுகின்றது. மேலும் குர்ஆனில் மற்றோர் ஆயத்திலும் சுவர்க்கத்தைப் பற்றி **(சுவர்க்கத்தை) முத்தக்கீன்களுக்கு ஆயத்தப்படுத்தப்பட்டு விட்டது** (சூரத்து ஆலஇம்ரான் 132) என்று சொல்லி யிருப்பது இதற்கு ஆதாரமாகின்றது. ஆகவே, நரகத்தைப் போல் சுவர்க்கமும் இப்பொழுதே படைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவு.

ஜன்னாத் என்பது **ஜன்னத்** என்பதின் பன்மை. ஜன்னத் என்பதின் பதப்பொருள் மறைத்தல் என்பதாகும். மரக்கிளைகள் ஒன்றோடொன்று அடர்ந்து நிழலிட்டு ஒரேயடியாய் மறைத்துக் கொண்டிருப்பதால் மரங்களுக்கும், அப்பால் அம்மரங்களையுடைய தோட்டத்திற்கும் ஜன்னத் எனும் பெயர் வழங்கப்படுகிறது. அப்பால் சுவர்க்கமானது அநேக தோட்டங்களை உடையதாக இருப்பதால் சுவர்க்கத்திற்கும் ஜன்னத் என்று பெயர் வழங்கலாயிற்று. இன்னும், மறுமையில் தயார் செய்யப்பட்டிருக்கப்பட்டிருக்கும் சுவர்க்கங்களனைத்தும் இவ்வுலகில் உள்ளவர்களுக்கு மறைக்கப்பட்டிருப்பது

பற்றியும் சுவர்க்கத்திற்கு ஜன்னத் என்று பெயர் வழங்கப்படுகிறதென்றுஞ் சொல்லப்படுகின்றது.

ஹதீஸ்:- அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருப்பதாவது:- "ஸாலிஹான எனது அடியார்களுக்கு எந்தக் கண்ணும் பார்த்திராத எந்தக் காதும் கேட்டிராத எந்த மனிதனுடைய சிந்தையிலும் ஏற்பட்டிராத பாக்கியத்தை நான் தயாரித்திருக்கிறேன்" சூரத்துஸ்ஸஜ்தா 17 என்று அல்லாஹு தஆலா கூறியிருக்கிறான்.

நீங்கள் நாடினால் அல்லாஹு தஆலா குர்ஆனிற் சொல்லி யிருப்பதை ஓதுங்கள் **அவர்கள் செய்து வந்த நல்செயல்களுக்குக் கூலியாக அவர்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்களின் குளிர்ச்சியை எந்த ஆத்மாவும் அறிந்து கொள்ளாது** (சூரத்துஸ்ஸஜ்தா 17).

ஹதீஸ்:- "சுவர்க்கத்தில் ஒரு சாட்டை கிடக்குமிடம் இவ்வுலகைப் பார்க்கிலும் அதிலுள்ளவைகளைப் பார்க்கிலும் மேன்மை யானது".

ஸாலிஹான அமல் செய்பவர்கள் பலவிதப் பதவியை யுடையவர் களாயிருப்பதால் ஒவ்வொரு பதவியை உடையவருக்கும் அவரவர்கள் பதவிக்குத் தக்கதாகப் பல வகையான தோப்புக்கள் கொடுக்கப் படுவதால். ஜன்னாத் என்று இங்கு பன்மையாகக் கூறப்பட்டது. இன்னும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் சொற்படி சுவர்க்கங்கள் ஏழாகும். அவை, 1. ஜன்னதுல் ஃபிர்தௌஸ், 2. ஜன்னத் அதன், 3. ஜன்னத்து நஈம், 4. தாருல் குல்து, 5. ஜன்னத்துல் மஉவா, 6. தாருஸ்ஸலாம், 7. ஜன்னத் இல்லிய்யீன் என்பவைகளாகும். இன்னும் சுவர்க்கங்கள் அடியில் வருமாறு எட்டு என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. 1. தாருல் ஜலால், இது ஒளிமயமானது. 2. தாருல் கறாற், இது பவளத்தாலானது. 3. தாருஸ்ஸலாம், இது செம்மாணிக்கத்தாலானது. 4. ஜன்னத் அதன் இது பச்சை மரகதத் தாலானது. 5. ஜன்னத்துல் மஉவா, இது சிவந்த தங்கமயமானது. 6. தாருல் குல்த், இது வெள்ளிமயமானது. 7. ஜன்னத்துல் ஃபிர்தௌஸ், இது முத்துமயமானது. 8. ஜன்னதுன்னஈம், இது வைடூரியத்தாலானது.

ஹதீஸ்:- "ஒரு மூமின் சுவர்க்கம் புகுந்தால் எழுபதினாயிரம் தோப்புக்களைக் காண்பான். ஒவ்வோர் தோப்பிலும் எழுபதினாயிரம் மரங்களிருக்கும். ஒவ்வோர் மரத்திலும் எழுபதினாயிரம் இலைகள் இருக்கும். ஒவ்வோர் இலையின் மீதும். **லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்** என்று எழுதப்பட்டிருக்கும். ஒவ்வோர் ஓலையின் எழுத்தும் கிழக்கிலிருந்து மேற்கு வரையும் இருக்கும். **அவற்றின் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும்.** என்பதற்கு அவற்றில் உண்டான மரங்களின் அருகிலும் மாடி வீடுகளின் அருகிலும் நதிகள் ஓடிக் கொண்டி ருக்கும். இவ்வுலக நதிகளைப் போல் கிடங்குகளில் ஓடாமல், கரைகளால் தடுக்கப் படாமலும் இரு மருங்கிலும் வழிந்திடாமலும் இறைவனுடைய ஆற்றலால் பூமியின் மேல்மட்டத்திலேயே ஓடிக் கொண்டிருக்கும்.

"சுவர்க்க நதிகள் கிடங்குகளின்றியே ஓடிக் கொண்டிருக்கும். சுவர்க்கங்களில் நிறம் மாறாத பரிசுத்த தண்ணீர் நதிகள், ருசிமாறாப்பால் நதிகள், இன்பந் தரும் மது நதிகள், தெளிவுற்ற தேன் நதிகள் ஆக நான்கு வகை நதிகள் உண்டாயிருக்கின்றன. சுவர்க்க வாசிகள் தண்ணீர் நதியிலிருந்து குடித்தால் ஒருபோதும் மரணமாகாத ஜீவியத்தைப் பெற்றுக் கொள்வார்கள். பால் நதியிலிருந்து குடித்தால் ஒருபோதும் மெலிவுறாத உடல் செழுமையுண்டாகும். தேன் நதியிலிருந்து குடித்தால் ஒரு போதும் நோய் அணுகாமல் ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்வார்கள். மது நதியிலிருந்து குடித்தால் துக்கமற்ற ஆனந்தத்தை யடைவார்கள் என்று ஹளரத் மஸ்ரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக் கிறார்கள்.

தோப்புகள் எவ்வளவு வனப்பு அலங்கார விசித்திரம் வாய்ந்திருந்த போதிலும் அவற்றினூடே நதிகள் ஓடாவிடில் மனதிற்கு உற்சாகத்தைக் கொடாமல் உயிரில்லாச் சித்திரங்கள் போலிருக்கும். ஆகையால் நதிகள் அதன் கீழ்

ஓடிக் கொண்டிருக்கும் சுவர்க்கத் தோப்புக்களென்று வர்ணிக்கப் பட்டிருக்கின்றது.

ரிவாயத்து:- சுவர்க்கத் தோப்புகளில் உள்ள ஈச்ச மரங்களில் அடிதொடுத்து நுனிவரை அடுக்கடுக்காய் கனிகள் தொங்கிக் கொண்டிருக்கும். அவற்றின் கனி ஜாடிப் பிரமாணமிருக்கும். ஒரு கனி அதன் குலையிலிருந்து பறிக்கப் படும் போதெல்லாம் அவ்விடத்தில் மற்றோர் கனியுண்டாகிவிடும். ஒரு குலை பன்னிரண்டு முழம் இருக்கும். படைப்பினங்கள் அனைத்தும் ஒரு குலையிலிருந்து தின்றாலும் அது அவர்கள் அனைவருக்கும் வயிறு நிரம்பச் செய்துவிடும் என்று ஹளரத் மஸ்ரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

ஹதீஸ்:- சுவர்க்கவாசிகள் தின்பார்கள், குடிப்பார்கள், மல ஜலங் கழிக்க மாட்டார்கள். அவர்களுக்கு மூக்குச்சளி, காறல், கக்கல் கிடையாது. ஹம்தும் தஸ்பீஹும் (நாயனைப் புகழ்தலும் துதித்தலும்) அவர்கள் நாவுகளில் தானாகவே நடந்து கொண்டிருக்கும். அவர்கள் மற்ற இன்பங்கள் நுகர்வதை விட்டும் அவை தடுக்க மாட்டா. அவர்கள் உட்கொள்ளும் உணவுக் கழிவுகளெல்லாம் ஏப்பமாகக் கழிந்து விடும். அவர்கள் வியர்வை கஸ்தூரி வாடை கமழும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக **முஸ்லிம்** என்னும் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

كُلَّمَا رُزِقُوا مِنْهَا مِنْ ثَمَرَةٍ رِزْقًا ، قَالُوا هٰذَا الَّذِىْ رُزِقْنَا مِنْ قَبْلُ

"சுவர்க்கத்தில் ஏதேனும் ஒரு கனி கொடுக்கப்படும் போதெல்லாம் முன்னர் நமக்குக் கொடுக்கப்பட்டதும் இதுதானே" என்று கூறுவார்கள் என்பதற்கு சுவர்க்கத்தில் கனிகள் ஒன்றைப்போல் மற்றொன்று இருப்பதாலும், அவை நிறத்தில் ஒன்றுபோல் இருந்த போதிலும் ருசியில் வித்தியாசமான வைகளாயிருக்கும். அவ்விதம் நிற ஒற்றுமையுடன் ருசியில் வித்தியாசமாயிருப்பது வழக்கத்தில் நூதனம். ஆகையால் அவர்கள் அவ்விதஞ் சொல்வது சுவர்க்கத்தின் உணவைப்பற்றிவியந்து புகழ்ந்ததாகும்.

ரிவாயத்து:- "சுவர்க்கத்தில் உள்ளவர்களுள் ஒருவரிடத்தில் ஓர் தட்டு கொண்டு வரப்படும், அதிலிருந்து தின்பார். பின்பு வேறோர்

தட்டு கொண்டு வரப்படும். அதுவும் முன் கொடுக்கப்பட்ட உணவாயிருக்கக் காணவும், இது தானே நமக்கு முன்னற் கொடுக்கப்பட்டதே அது எனச் சொல்வார். அப்போது அதைக் கொண்டு வந்த மலக்கு அவரை நோக்கி 'இதைத்தின்னும், இது நிறம் ஒன்று; ருசி வேறு' என்பார் என்று ஹஸனுல் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

ஹதீஸ்:- "முஹம்மதுடைய ஆன்மா எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக சுவர்க்கத்தில் உள்ளவர்களில் ஒரு மனிதர் ஒரு பழத்தைத் தின்பதற்காக எடுப்பார். அது அவர் வாயிற் சேருமுன் அது இருந்த விடத்தில் அதுபோல் ஒரு பழத்தை அல்லாஹு தஆலா பகரமாக்கிவிடுவான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த ரிவாயத்தின்படி இப்பழத்தை அவர்கள் முன்னிருந்த மாதிரியாகவே அவ்விடத்தில் இருக்கக் கண்டபோது 'இதுதானே நாம் முன்னற் கொடுக்கப் பட்டோமே அது' என்பார்கள் என்றுங் கருத்து வைக்கப்படுகிறது. இத்திரு வசனத்திற்கு இன்னுமொரு கருத்தாவது 'இதுதானே முன்னால் உலகில் நாம் கொடுக்கப்பட்டோமே அது' எனச் சொல்வார்கள். இதன்படி, சுவர்க்கக் கனிகள் உலகின் கனிகள் போன்று இருக்கும். அவ்விதம் ஆக்கப்பட்டது ஏனெனில் மணமானது இயற்கையாக, தான் மருகியிருந்த பொருளின் பக்கம் சாய்வதாகவும் அறியாத பொருளை விட்டும் வெருள்வதாகவும் இருப்பதாலும், நிறத்தில் ஒன்றாயிருக்க ருசியில் மிகச் சிறந்திருப்பது சுவர்க்கக் கனியின் சிறப்பை மிகத் தெளிவாக்குவதாலும் அவ்விதம் ஆக்கப்பட்டது. சுவர்க்கவாசிகள் அவ்விதஞ் சொல்வதின் சாராம்சமாவது:- உருவத்திலும் நிறத்திலும் ஒற்றுமையாயிருப்பதுடன் ருசியில் இவ்விரண்டிற் கிடையில் மிகத் தாரதம்மியத்தைக் கண்டு 'இதுதானே உலகில் நமக்குக் கொடுக்கப் பட்டிருந்தது. எங்கிருந்து இதற்கு இவ்வளவு ருசியும் மணம் உண்டாகி விட்டது?' என்று ஆச்சரியப்பட்டு இப்பேச்சினால் தங்களின் மகிழ்ச்சியை வெளியாக்கு வார்கள்.

இன்னும் இத்திரு வசனத்திற்கு ஆரிஃபீன்கள் என்னும் மெஞ்ஞானிகள் சொல்லும் கருத்து அடியில் வருமாறு:-

"மோட்சகதி(முத்திநிலை)யின் பரிபூரணமானது, அல்லாஹு தஆலாவின் தாத்தென்னும் உள்ளத்தையும், ஸிஃபாத்தென்னும் குணங்களையும், அஃப்ஆல் என்னும் சிருஷ்டிகளையும் அறியும் ஞானங்களின் மூலமாகவே உண்டாகின்றது. ஆகவே, அந்த ஞானங்களை அடைவதற்கு மனிதனுடைய ஆத்மா ஆலமுல் குத்ஸ் எனும் தூய உலகத்திற்கு எதிர்ப்பட்ட கண்ணாடிபோல் ஆகவேண்டியது அவசியமாகும். அப்படி ஆனதும் மேற்கூறிய ஞானங்கள் உலகிலேயே அவனுக்கு உண்டாகிவிடும். ஆயினும் உலகில் அவற்றால் பூரணமான இன்பம் சித்திக்க மாட்டாது. ஏனெனில் உறவுகள், அவ்வின்பங்களை பூரணமாக வெளியிட முடியாமல் தடைகளா யிருந்தன. மரணத்தின் பின் அந்தத் தடைகள் நீங்கிப்போகவே பரிபூரண இன்பம் உண்டாகி விடுகின்றது. சுவர்க்கத்தில் அவ்வின்பத்தைப் பூரணமடையப் பெற்றதும், இது தானே நான் உலகிலிருக்கையில் எனக்குச் சித்தித்திருந்ததே அது என உள்ளம் பூரித்துச் சொல்வான். எனவே, சுவர்க்கத்தில் உண்டாயிருந்த ஆத்ம பூரணங்கள் உலகிலேயே சித்தித்திருந்தனவென்றும், ஆனால் அங்கு பூரணக் களிப்பைக் கொடுக்கவில்லை யென்றும், சுவர்க்கத்திலேயே பூரண ஆனந்தக் களிப்பைக் கொடுத்தது என்றும் இச்சொல் சைக்கினை காட்டுகின்றது".

وَأُتُوا بِهِ مُتَشَابِهًا (பார்வைக்கு) ஒரே விதமானவை **களாகவே அவர்கள் கொடுக்கப்படுவார்கள்** என்பதற்கு சுவர்க்க வாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு ஒன்றையொன்று ஒத்திருந்ததாக வாதாடிக் கொண்டதை அல்லாஹு தஆலா கூறிய பின்னர் அவர்கள் அவ்விதம் வாதாடியதை உண்மையாக்கி இவ்வசனத்தை இங்கு கூறியிருக்கிறான்.

وَلَهُمْ فِيهَا أَزْوَاجٌ مُطَهَّرَةٌ **இன்னும் அவர்களுக்கு அவற்றில் பரிசுத்தமான துணைவர்களும் உண்டு** என்பதற்கு துப்பரவாக்கப்பட்ட துணைவர்கள் என்பது ஆண் பெண் இரு பாலருக்கும் பொதுவானது. துப்புரவு என்பது உடலிலும் குணத்திலும், செய்கையிலுமாகும். ஆகவே அல்லாஹு தஆலா அத்துணை வர்களை மலம், ஜலம் காரல், கக்கல், மாதவிடாய்

முதலிய சகல அருவருப்புகளை விட்டும், தீயகுணம், தீயசெயல்களை விட்டும் பரிசுத்தப்படுத்தியிருக்கிறான்.

ரிவாயத்து:- "சுவர்க்கத்திலுள்ள ஹூருல் ஈனென்னும் அரம்பையர்கள் கால்விரல் தொடுத்து முழந்தாள் வரை குங்குமத்தாலும், முழந்தாள் தொடுத்து மார்பு வரை கமழும் கஸ்தூரியாலும், மார்பு தொடுத்துக் கழுத்து வரை பொன்னம்பராலும், கழுத்துத் தொடுத்துத் தலையுள்பட கற்பூரத்தாலும் படைக்கப் பட்டிருக்கின்றனர். அவர்கள் முன்னோக்கி வந்தால் முகம் சூரியன் போல் ஒளிரும்" என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ரிவாயத்து:- சுவர்க்கத்து ஆண்களும் பெண்களும் முப்பத்திமூன்று வயதுடையவர்களாகவும், அழகான வாலிபர்களாகவும் அறுபது முழம் உயரமுடையவர்களாகவும் கருத்த கண்களை உடையவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் மீது எழுபது ஆடைகள் இருக்கும். ஒவ்வொரு ஆடையும் ஒவ்வொரு நேரத்தில் எழுபது நிறங் கொடுக்கும். அவர்களுக்கு எச்சில், காறல் முதலானவைகள் கிடையா. உலகிலுள்ளவர்கள் நாளுக்கு நாள் வயது முதிர்ந்து முதுமையால் தளர்ந்து கொண்டே போவது போல், சுவர்க்கத்தில் உள்ளவர்கள் நாளுக்கு நாள் அழகு சௌந்தரியத்தால் அதிகரித்துக் கொண்டே போவார்கள். அவர்களின் வாலிபம் ஒரு போதும் அழியாது. அவர்களின் உடைகளும் இற்றுப்போகா. இன்னும் அவர்கள் அவற்றில் நீடூழி வாழ்பவர்கள் என்பதற்கு அவர்கள் இறந்து போகாமல் சுவர்க்கத்தை விட்டு வெளிப்படாதவர்களாகவும் அங்கேயே இருப்பார்கள். வெளிரங்கமான இன்பங்களில் முக்கியமானவைகள் வீட்டையும், உணவையும், பெண் போகத்தையும் பொறுத்திருப்பதால் அம்மூன்றையும், ஒருங்கு சேர்த்து இந்த ஆயத்தில் நதிகளோடிக் கொண்டிருக்கும் படியான சுவனத் தோப்புகள் அவர்களுக்கு உண்டென்றும், அவர்கள் கனி வர்க்கங்களைக் கொடுக்கப்படுவார்கள் என்றும், அவர்களுக்குப் பரிசுத்தமாக்கப்பட்ட துணைவர்கள் உண்டென்றும் அல்லாஹு தஆலா கூறியிருக்கிறான். இம்மூவகை

இன்பங்களும் ஏககாலத்தில் சித்தித்திருந்த போதிலும் இவைகள் எப்போதாவது நீங்கிவிடக் கூடுமோ வென்ற பயமேற்படும் பட்சத்தில் அவ்வின்பங்கள் பூர்த்தியாகாது. ஆகையால், அப்பயமும் நீங்கி இன்பம் பூர்த்தியாகும் பொருட்டு 'அவர்கள் அவற்றில் நீடூழி வாழ்வார்கள்' என்றுங் கூறியிருக்கிறான் என்று இக்ரிமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார்.

إِنَّ اللّٰهَ لَا يَسْتَحْيٖٓ اَنْ يَّضْرِبَ مَثَلًا مَّا بَعُوْضَةً
فَمَا فَوْقَهَا ۗ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا فَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَقُّ
مِنْ رَّبِّهِمْ ۚ وَاَمَّا الَّذِيْنَ كَفَرُوْا فَيَقُوْلُوْنَ مَاذَآ اَرَادَ
اللّٰهُ بِهٰذَا مَثَلًا ۘ يُضِلُّ بِهٖ كَثِيْرًا ۙ وَّيَهْدِيْ بِهٖ
كَثِيْرًا ۗ وَمَا يُضِلُّ بِهٖٓ اِلَّا الْفٰسِقِيْنَ ﴿٢٦﴾

26. கொசு அல்லது அதற்கும் மேலான (அற்பமான) ஒன்றை உவமை சொல்வதில் நிச்சயமாக அல்லாஹ் வெட்கப்படமாட்டான்; எனவே, எவர்கள் விசுவாசங் கொண்டிருக்கின்றனரோ அவர்கள் (அற்ப ஜந்துவை உவமையாகக் கூறுவதன் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து) நிச்சயமாக இது தங்கள் றப்பிடத்திலிருந்து வந்த உண்மையென நம்புவார்கள். ஆனால், எவர்கள் நிராகரிப்பவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் (இதன் உண்மையை உணராது) "இந்த (அற்ப) உவமையைக் கொண்டு அல்லாஹ் எதை நாடுகிறான்" என்று கூறுவார்கள் இ(வர்கள் இழிவாக எண்ணி நிராகரிப்ப)தனால் அவன் அநேகரைப் பகிரங்கமாக வழிகெடும்படி செய்கின்றான். இன்னும் அநேகரை இதனால் நேர்வழி பெறும்படி செய்கின்றான். ஆனால், இதைக் கொண்டு பாவிகளைத் தவிர (வேறு எவரையும்) வழிகெடும்படி செய்ய மாட்டான்.

இதற்கு முன் கூறப்பட்ட ஆயத்துகளில் இந்தக் குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து இறங்கியதல்ல. முஹம்மது தாமே இட்டுக்

கட்டியது' என்று கூறியதற்காக அல்லாஹுத்தஆலா இந்தக் குர்ஆனைப் போன்று ஒரு ஆயத்தைக் கூட எவரும் இயற்ற முடியாது என்று கூறி 'இது அல்லாஹ்விடமிருந்தே இறங்கியது' என்று நிரூபித்தான். பின்னர் அதை ஏற்று ஈமான் கொண்டவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்றும், நிராகரிக்கும் காஃபிர்களுக்கு நரகம்தான் என்பதுடன் அதில் எந்நாளும் இருப்பார்கள் என்றும் கூறிய பின்னர் காஃபிர்கள் இந்தக் குர்ஆனைப் பற்றி மற்றொரு விதத்தில் குறை கூறியதை மறுத்து இந்த ஆயத்தில் இவ்வாறு கூறியுள்ளான். அதாவது திருக்குர்ஆனில் வேறு சில ஆயத்துகளில் ஈ, சிலந்திப் பூச்சி போன்ற இழிந்தவற்றைக் கொண்டு உவமானஞ் சொல்லி வருவதால் அவ்விதம் இழிந்தவற்றைக் கொண்டு உவமானஞ் சொல்லுதல் அல்லாஹ்வுடைய பெருந்தகுதிக்குப் பொருந்தாதென்று வைத்து இது 'அல்லாஹ்விடமிருந்து இறங்கியதல்ல, முஹம்மது தானே இட்டுக்கட்டியது' என்று சந்தேகித்து 'முஹம்மதுடைய இறைவன் இவ்விதம் இழிந்தவற்றைக் கொண்டு உவமானஞ் சொல்ல வெட்கப்பட மாட்டானா' வென்று ஏளனஞ் செய்தார்கள். அதை மறுத்து இந்த ஆயத்து இறங்கிற்று.

ஈயைக் கொண்டும், சிலந்திப் பூச்சியைக் கொண்டும், விக்கிரஹத்தையும், விக்கிரஹ வணக்கத்தையும் இழிவு படுத்தி உவமானங் கூறியது பற்றி யூதர்கள், 'அல்லாஹுதஆலா அற்பமான வற்றைக் கொண்டு உவமானங் கூறியுள்ளான். இந்த அற்பமான வற்றிற்கு ஏற்பட்ட அவ்வளவு தகுதியென்ன என்று கூறியதற்கு இந்த ஆயத்து இறங்கிற்று' என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட ஆயத்துகளின் மொழி பெயர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஸூரத்துல் ஹஜ் 73வது ஆயத்தில் **"மனிதர்களே! ஓர் உதாரணம் கூறப்படுகின்றது. அதனை நீங்கள் (செவிமடுத்துக்) கேளுங்கள். (அது) அல்லாஹ்வையன்றி எவர்கள் (தெய்வமாக) நீங்கள் அழைக்கின்றீர்களோ அவை ஓர் ஈயைக் கூட சிருஷ்டிக்க முடியாது. அதற்காக அவை (அனைத்தும்) ஒன்று கூடினாலும் சரி. ஓர் ஈ அவற்றிடம் ஏதேனும் ஒரு பொருளை பிடுங்கிக் கொண்டாலும், அதனை அதனிடமிருந்து விடுவிக்கவும் முடியாது. (அவற்றிடம் உதவி தேடுகிறவனும், தேடப்படுபவனும் பலவீனமடைந்தவர்களே"** என்றும் ஸூரத்துல் அன்கபூத் 41 வது ஆயத்தில் **"அல்லாஹ்வையன்றி (வேறு தெய்வங்களை) பாதுகாவலர்களாக ஆக்கிக் கொண்டவர்களுக்கு உதாரணம் ஒரு சிலந்திப் பூச்சியைப் போன்றதாகும். (தனக்காக) ஒரு வீட்டை அமைத்துக் கொண்டது. நிச்சயமாக வீடுகளில் மிகப் பலவீனமானது சிலந்தியின் வீடாகும். (இதனை) அவர்கள் அறிந்திருந்தால் (உண்மையை உணர்ந்து) கொண்டிருப்பார்கள்"** என்று உதாரணம் கூறியுள்ளான்.

மற்றொரு ரிவாயத்தின்படி இதற்கு முன் உள்ள ஆயத்துகளில் நெருப்பு, இருள், இடி, மின்னல் முதலியவற்றைக் கொண்டு உவமானஞ் சொல்லி வந்தது பற்றி முனாஃபிக்குகள் குற்றங் கூறியதை மறுத்து இந்த ஆயத்து இறங்கியது என்றும், மற்றொரு ரிவாயத்தின்படி முஷ்ரிக்குகள் அது பற்றிக் குற்றங் கூறியதை மறுத்து இந்த ஆயத்து இறங்கியது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள், முனாஃபிக்குகள், முஷ்ரிக்குகள் ஆகிய மூன்று பிரிவினருமே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புண்படுத்துவதில் ஒற்றுமையாக இருந்தார்கள் என்று தெரிய வருகிறது.

إِنَّ اللّٰهَ لَا يَسْتَحْيٖ **நிச்சயமாக அல்லாஹ் வெட்கப்படமாட்டான்** என்பதிலுள்ள **எஸ்தஹ்யீ** என்பது **ஹயாஉ** (வெட்கம்) என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்தது. இது **ஹயாத்** என்னும் தாதுவிலிருந்தும் எடுக்கப் படலாம். இதன் பொருள் உயிர்த்தல் அல்லது ஜீவித்தல். ஹயாவிலிருந்து அஹ்யா, இஸ்தஹ்யா என்னும் வினைச் சொல்லிலிருந்து எடுக்கும் பொழுது ஜீவித்தான் அல்லது ஜீவபங்கமடைந்தான் (இழிவடைந்தான்) என்ற அர்த்தங்களில் ஒன்றைப் பெறுகின்றன. இங்கு ஜீவபங்கமடைந்தான் (இழிவடைந்தான்) என்ற அர்த்தமே கொள்ளத் தக்கது. ஆகவே **இஸ்தஹ்யா** என்பதற்கு ஜீவபங்கமடைந்தான் (இழிவடைந்தான்) என்னும் பொருள் கொள்வதற்குப் பதிலாக **வெட்கமடைந்தான்** என்று பொருள்

கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம் வெட்கம் என்பது இழிவுக்குப் பயந்து அந்த செய்கைகளை விட்டு மனமொடிதல் எனப்படும். அவ்விதம் மனமொடிவதால் ஒரு விதத்தில் ஜீவியத்திற்குப் பங்கம் உண்டாக்குவதாயிருப்பதால் **இஸ்தஹ்யா** என்பதற்கு **வெட்கப்பட்டான்** என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இரக்கம், கோபம், வெட்கம் இவை போன்ற குணங்கள் மனித சுபாவத்திற்குரியது. இறைவனது தன்மைக்கு பொருந்தாதவை. இக்குணங்களை அல்லாஹ்வுடன் சேர்த்துச் சொல்லும் போது அவற்றிற்கு வெளிப்படையான (நேரடியான) அர்த்தங் கொள்ளாமல், அக்குணங்களால் உண்டாகும் முடிவையே பொருளாகக் கொள்ள வேண்டும். உதாரணமாக இரக்கப்படுதல் என்பதற்கு மனம் மென்மையாகுதலாகும். இதன் முடிவு யார் மீது மனம் மென்மையாயிற்றோ அவருக்கு உதவி செய்வதாகும். கோபப்படுதல் என்பது இருதயத்தின் இரத்தம் கொதித்து துன்புறுத்த விரும்புதல். இதன் முடிவு யார் மீது கோபம் உண்டாயிற்றோ அவரை துன்புறுத்துவதாகும். வெட்கப்படுதல் என்பது இழிவுக்குப் பயந்து அதனைச் செய்யாமல் விட்டு விடுவதாகும். ஆகவே, இங்கு 'அல்லாஹ் வெட்கப்படமாட்டான்' என்பதற்கு, 'வெட்கப்படுபவன் அதைச் செய்யாது விட்டு விடுவது போல் எந்த உவமானத்தையும் சொல்வதை விட்டுவிட மாட்டான்;. அதாவது எந்த உவமானத்தையும் சொல்லாதிருக்க மாட்டான்' என்பதாகும்.

மேலும் அல்லாஹ்வுடைய விஷயத்தில் **ஹயாஉ** (வெட்கம்) என்னும் வருணனை ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளது. நரைத்துப் போன முஸ்லிமை வேதனை செய்ய அல்லாஹ் வெட்கப்படுகிறான் என்றும் அல்லாஹ் வெட்கமுடையவன், மிகவும் தயாளன், ஓர் அடியான் இரு கரம் ஏந்தி துஆ கேட்டால் அந்த இரு கரங்களையும் வெறுமையாய் தட்டிவிட அவன் வெட்கப்பட்டு அவ்விரண்டிற்கும் நலவை கொடுக்கிறான். இது போன்ற இடங்களிலும் ஹயாஉ (வெட்கம்) என்பதற்கு மேற்கூறப்பட்ட அர்த்தமே கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு பொருளுக்கு எதைக் கொண்டு ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறதோ அதற்கு **மித்லு** என்று சொல்லப்படும். இது வேர்ச்

சொல்லிலிருந்து **தமாதீல்** பிறந்தது. **தமாதீல்** என்பதற்கு சித்திரங்கள் என்று பொருள். பழமொழிக்கும் வருணிப்புக்கும் மித்லு என்ற பதத்தை உபயோகிக்கப்படும். மிதுலுடைய அர்த்தத்தில் உவமைச் சொல்லாகவும் வரும், முதலாவதாகச் சொன்னதே இங்கு நாடப் பட்டிருக்கிறது.

ஏதேனும் ஒரு விஷயத்தை விபரிக்கும் போது அதற்குப் பொருத்தமாக மற்றொன்றை ஒப்பிட்டுச் சொல்வது இயல்பு. முற்காலத்திலிருந்து தங்கள் பேச்சுக்களிலும், நூல்களிலும் உவமானங் கூறி விளக்கும் முறையை அரபியர்களும் அரபியர் அல்லாதவர்களும் கையாண்டு வந்திருக்கின்றனர். நுட்பமான விஷயங்களை எளிதில் விளக்குவதற்கு உவமானஞ் சொல்லப் படுகிறது. இதற்கு முன் உள்ள வேதங்களிலும் பெரும்பாலும் உவமானங் கூறப்பட்டிருக்கிறது.

உவமானங் கூறும்போது அந்த உவமானம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு பொருத்தமானதாக இருத்தல் அவசியமாகும். உவமானஞ் சொல்பவன் எவ்வளவு தகுதியுள்ளவனாக இருந்த போதிலும் அவன் சொல்லும் உவமானமும் அவனுக்குத் தகுதியானதாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

ஆகவே அல்லாஹு தஆலா இழிந்தவற்றிற்கு இழிந்தவற்றைக் கொண்டு உவமானங் கூறியது மிகப் பொருத்தமானதேயாகும். அவ்வாறின்றி இழிந்தவற்றிற்கு கண்ணியமானவைகளைக் கொண்டு உவமானஞ் சொல்லுதல் கொஞ்சமும் பொருத்தமாகாது. எனவே திருக்குர்ஆனில் இழிந்தவற்றைக் கொண்டு உவமானங் கூறியிருப்பதால் இது அல்லாஹ்வுடைய வசனத்திற்கு பொருந்தாது எனக் காஃபிர்கள் கூறுவது அறியாமையாகும்.

பஊலத் என்பது **பஊல்** எனும் பதத்திலிருந்து எடுக்கப்பட்டது. இதன் பொருள் கொஞ்சம் அல்லது அற்பம் எனப்படும். ஆகவே அற்பப் பொருளாகிய கொசுவிற்கு **பஊலத்** என்று பெயர் வைக்கப் பட்டிருக்கிறது. அதாவது கொசுவினங்களில் மிக நுண்ணியமானதற்கு பஊலத் என்று சொல்லப்படும். இது அசைவதாலன்றி கூர்மையான

விசித்திரமானவைகளில் ஒன்று இந்த ஜந்து. சின்னஞ் சிறியதாயிருப்பதுடன் உருவத்தில் மிகப் பெரிய பிராணியாகிய யானையினுடைய ரூபத்தில் அதனினும் அதிக அங்கங்களையுடைய தாயிருக்கிறது. யானைக்கு நான்கு கால்களும் ஒரு வாலும் ஒரு தும்பிக்கையுமே யுண்டு. இக்கொசுவிற்கோ அவ்வங்கங்களோடு இரு கால்களும் நான்கு இறகுகளும் அதிக மிருக்கின்றன. யானையில் துதிக்கையில் அதன் திரேகத்தினுள் செல்லாத அடைபட்ட துவாரம் அமைந்திருக்கிறது. கொசுவின் தும்பியில் அதன் திரேகத்துள் செல்லக்கூடிய துவாரம் அமைந்திருக்கிறது. இது மிகவும் கூரானது. இதன் முனையில் நஞ்சு அமைக்கப் பெற்றிருக்கிறது. இதன் உதவியாலேயே எருமை, யானை, ஒட்டகம் முதலியவற்றினுடைய கனத்ததொலிகளினுள்ளிலும் இத்துதிக்கையைச் செலுத்திச் சில சமயங்களில் அவற்றைச் சாகடித்தும் விடுகிறது. இது மனிதனுடைய இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கையில் அதை விரட்டுவதற்காக உசும்பும் கையின் மெல்லினமான அசைவையும் தூரத்திலிருந்தே தெரிந்து இரத்த முறிஞ்சலை அப்படியே நிறுத்திவிட்டுப் பறந்தோடி தப்பித்துக் கொண்டு அக்கை யொடுங்கியதும் மீண்டும் வந்து இரத்தம் உறிஞ்சுகிறது. இன்னும் இக்கொசுவின் ஆச்சரியங்களைப் பற்றி மிக விரிவாய்க் கூறப்படுகிறது.

بَعُوضَةً فَمَا فَوْقَهَا. கொசுவையோ அதற்கு மேலுள்ளதையோ என்பதில் கொசுவிற்கு மேலுள்ளது என்பதற்கு இருவிதக் கருத்துகள் கூறப்படுகின்றன. கொசுவிற்கு மேலுள்ளதெனின் உருவத்தில் அதைவிடப் பெரிய ஈ, சிலந்தி, கழுதை, நாய் போன்றதைக் குறிக்கும். ஏனெனில் இவ்வஸ்துகள் அடங்கலைக் கொண்டும் உவமானங் கூறுவதைக் காஃபிர்கள் நிராகரித்ததால் அதை மறுத்து வந்தது பற்றி இவ்வாறு கருத்துக் கூறப்பட்டிருக்கிறது. மற்றொரு கருத்தென்னவெனில் கொசுவிற்கு மேலுள்ளதெனின் அந்தஸ்தில் அதைவிட மேம்பட்டது. அதாவது அதன் சிற்றளவில் அதைவிட மேம்பட்டது. அது கொசுவின் இறகு போன்றதைக் குறிக்கும். ஏனெனில், ஆகச் சிறியது வஸ்துக்களைக் கொண்டு உவமானங் கூற அல்லாஹ் வெட்கப்பட மாட்டான் என்பதை விளக்க வந்தது பற்றி இவ்விதங் கருத்துக் கூறப்பட்டிருக்கிறது.

தவிர திருக்குர்ஆனில் அல்லாஹு தஆலா கொசுவை உவமையாகக் கூறியதற்குக் காரணம் என்னவென்பதை ஹளரத் நபீ உப்னு அனஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்னும் பெரியார் இவ்விதமாகக் கூறி இருக்கிறார். அது வருமாறு.

"பஊலத்" என்னும் கொசு பசித்திருக்கும் வரை உயிருடன் இருக்கும். வயிறு நிரம்ப அது உணவு அருந்திவிட்டால் உடனே செத்துப்போகும். இதுபோல மனிதன் வறுமையாக இருக்கும் வரை அல்லாஹு தஆலாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றைக் கூடியவரை நிறைவேற்றுகிறான். ஆனால், அவனுக்கு செல்வம் வந்து தேவையற்றவனாக ஆகிவிட்டால் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் ஆகிவிடுகின்றான். எனவே, மனிதனுடைய நிலைமையும் கொசுவுடைய நிலைமையும் ஒன்றுபோல் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி இறைவன் நமக்கு இந்த உதாரணத்தைக் கூறி இருக்கிறான்" என்று கூறி இருக்கிறார்கள்.

ஹிக்காயத்து:- ஒரு நாள் மாமூன் ரஷீது பாதுஷா குத்பா ஓதிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு ஈ அவரது கண்ணில் வந்து உட்கார்ந்தது. அதனை அவர் விரட்டினார். அது பறந்து போய் மறுபடியும் வந்து உட்கார்ந்தது. அப்பொழுதும் அவர் அதனை விரட்டினார். இவ்விதமாகப் பலமுறை அவர் விரட்டியும் அந்த ஈயின் தொந்தரவை விட்டு மீட்சி பெறமுடியவில்லை. ஆகவே, அவர் குத்பா ஓதுவதை அவசரமாக ஓதி முடித்து விட்டு தொழுகையை நடத்தினார். தொழுது முடிந்தவுடன் **அபூஹுதைல்** என்பவரைத் தமது அவைக்கு வரவழைத்து "அல்லாஹு தஆலா ஈயை ஏன் படைத்தான்?" என்பதாக வினவினார். அதற்கு அந்த இமாம் "கொடுங்கோலர்களைச் சிறுமைப் படுத்துவதற்காக அல்லாஹு தஆலா ஈயைப் படைத்திருக்கிறான்" என்று பதில் கூறினார். அபூஹுதைல் கூறிய இந்த மறு மொழி பாதுஷாவுடைய நிலைமைக்குத் தக்கதாக இருந்ததால், பாதுஷாவுக்குச் சந்தோஷம் வந்து தாங்கள் "மெய் சொன்னீர்கள்" என்று கூறி அவருக்கு அநேகம் பொருட்களை பரிசாகக் கொடுத்தார்.

ஹைறலுப்னு ஸஉதுடைய ரிவாயத்து:- இவ்வுலகம் அல்லாஹ்விடத்தில் கொசுவின் ஒரு இறகுக்காவது சமமாயிருக்கும் பட்சத்தில் அதிலிருந்து ஒரு குடிப்பைக் கூட நிராகரிப்பாளருக்குப் புகட்ட மாட்டான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியிருக்கிறார்கள். இவ்வுலகம் இறைவனிடத்தில் அவ்வளவு இழிந்ததாய் இருப்பதனால்தான் அறிவீனர்களுக்கும் நிராகரிப்பாளர் களுக்கும் அதைப் பெரும் பாலும் ஆட்சியாக்கிக் கொடுத்திருக்கிறான். நபிமார்களுக்கும் ஒலிமார்களுக்கும் அதைக் கொடுக்காமல் காத்துக் கொண்டான். அறிவுடையோருக்கு இவ்வுலகிலிருந்து கொண்டு மறுமைக்கு வேண்டியதை தயாரிப்பதையுமேயன்றி வேறொன்றையும் அல்லாஹு தஆலா பொருந்தவில்லை என்று பெரியார்கள் கூறியுள்ளார்கள்.

மேலும், இந்த உதாரணத்தில் அல்லாஹு தஆலாவின் ஏகத்துவத்தை அறிவிக்கும்படியான அநேகம் நூதனமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று இமாம் அபூ மன்ஸூர் ரஹ்மத் துல்லாஹி அலைஹி கூறியிருக்கிறார்கள். பெரிய உருவங்களான யானை, மாடு போன்ற மிருகங்களை மனிதர்கள் முயற்சி செய்தால், அவற்றைப் போல் உருவங்களை உண்டாக்கி விடமுடியும். ஆனால் கொசு போன்ற அற்பமான பிராணிகளுக்கு இதர பிராணிகளுக்குள்ள சகல அங்கங்களையும் ஏற்படுத்தி அவற்றின் உருவத்தை உண்டாக்க மனிதர் எவராலும் முடியாது. மனிதர்கள் அனைவரும் ஒன்று கூடி முயன்றாலும் முடியாது. ஆகவே, அல்லாஹு தஆலா யானை போன்ற பெரிய உருவமுள்ள பிராணிகளுக்கு கண், காது, கால், வால், வாய் போன்ற உருவங்களை அவற்றிற்குத் தக்கவாறு அமைத்துச் சிருஷ்டித்திருப்பது போல் மிகவும் அற்பமான, கண்ணுக்குப் பார்க்க முடியாத கொசு போன்ற பிராணிகளிலும் இந்த அங்கங்கள் அனைத்தையும் அதற்கு அதிகமாகவும் அமைத்துச் சிருஷ்டித் திருக்கிறான். இது அவனது சர்வ வல்லமையைக் காட்டுகிறது.

கொசு

ரத்தத்தை உறிஞ்சப் பற்கள் தேவையில்லை. ஆனால், கொசுவின் கண்களுக்குக் கீழே நுட்பமான இன்ஜெக்ஷன் போன்ற ஊசி வைத்திருக்கிறது. மொத்தம் ஆறு ஊசிகள். எல்லாம் ஒன்றாக இணைந்து சிங்கிள் ஊசியாக தோலுக்குள் இறங்கி ரத்தத்தை உறிஞ்சுகிறது. ரத்தம் உறைந்து போகாமலிருக்க ஒரு கெமிக்கலை துப்புகிறது. எச்சில் ரத்தத்துடன் கலக்கிறது. உடன் சொறிய வேண்டும். 2700 கொசு வகைகள் உண்டு. கொசு தலைகீழாகக் கூடப் பறக்கும். மழை பெய்யும் போது நனையாமல் இடுக்குகள் வழியாகக் கூட கொசுவால் பறக்க முடியும் என்று பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கிறார். பெண் கொசுக்கள் ட்ராகுலாக்கள். ஆண் கொசுக்கள் சாது. புல், தழை, பூக்களில் தேன் இவையெல்லாம் தான் உணவு. பெண் கொசுவுக்கு முட்டைகளைப் பொறிக்க ரத்தம் அதிகம் தேவை. அநேகமாக உடலுறவு கொண்டு விட்டு நேராக ரத்தத்துக்காக வரும். இரண்டு போர்வை ஒரு கம்பளி போர்த்தியிருந்தால் கூட பெங்களூர் கொசு ஊசியைச் செலுத்தி கடிக்கும். மற்ற இடங்களில் எப்படியோ? கொசுவுக்கு இருட்டில் பார்வை தேவையில்லை. அதற்கு ரத்த வாசனையும் சூடும் தெரியும். சூடு என்பது ஒருவிதமான வெளிச்சம் தானே. இன்ஃப்ராரெட் அலைவரிசை.

சிலந்திப் பூச்சி

சிலந்திப் பூச்சி ஒரு ஆச்சரியமான பிறவியாகும். எந்த சீதோஷ்ண நிலையிலும் காணப்படும் சிலந்திகள் வானிலும் நீரிலும் தரையிலும் வாழ்கின்றன. சுமார் மூன்று இன்ச்சிலிருந்து கண்ணுக்கே தெரியாத அளவு சின்ன சிலந்திப் பூச்சிகளும் உள்ளன. ஒரு வருடங்கூட தண்ணீர் இல்லாமல் வாழும். தாரண்டுலா என்னும் சிலந்தி பதினைந்து வருடம் வரை வாழும். மற்றவை பெரும்பாலும் ஒருவருடம்தான் வாழும். சிலந்திப் பூச்சிக்கு எட்டுக்கால், எட்டுக்கண், இறக்கை கிடையாது. உடல் இரண்டு பாகம்தான். சிலந்தி பின்னும் வலை ஒரு ஆச்சரியம். அந்த நூலை அதன் அடிவயிற்றுப் பகுதியில் இருக்கும் சுரப்பிகளிலிருந்து மிக நுட்பமான துவாரங்கள் மூலம் வெளியே அனுப்புகிறது. வெளியே வரும் போது திரவ வடிவத்தில் இருக்கும். நூல் காற்றுப்பட்டதும் இறுகி விடுகிறது. சிலந்தி நூலில் பல வகை உண்டு. ஒட்டிக் கொள்ளும் நூல் - இது இரைகளைப் பிடிப்பதற்கென்றே ஸ்பெஷல். சிலந்தி வலைக்குக் குறுக்கே அமைக்கப்படும் நூல் கொஞ்சம் வலுவாக இருக்க வேண்டும். இதற்காக அமைக்கப்படும் நூல் ஒட்டாத வகை. இதோடு, முட்டையிடும் போது அதை பாதுகாக்கச் சுருட்டப்படும் நூல் பஞ்சு மெத்தை போல் இருக்கும். வலுவாக நார் நாராக இருக்கும்.

வலைகளிலும் நிறைய டிசைன் வைத்திருக்கிறது. வட்ட வடிவ வலை. இரை பிடிக்க மட்டும்தான் பின்னுகிறது. முதலில் சுமாராக ஒரு நீண்ட சதுரம் அமைத்துக்

கொண்டு இதுதான் அஸ்திவாரம். அப்புறம் குறுக்குக் கோடுகள் அதன்பின் மூன்று அல்லது நான்கு சுற்றுக் கோடுகள் டிஸைன். கடைசியில் குறுக்குக் கோடுகள் போடும்போதுதான் பிசின் சேர்த்துப்போடும். சில வலைகள் தட்டையாக இருக்கும் அல்லது டோம் போல, அல்லது புனல் போல இருக்கும், சில சிலந்திகள் பாட்டில் போல ஓட்டை போட்டு மூடியை மறைத்து வைத்திருக்கும். மற்றொரு வகை பூமியில் துளை போட்டு, அதன் சுவர்களில் சில்க் லைனிங் கொடுக்கப்படும், நீரில் வாழும் சிலந்திகள் மணி வடிவத்தில் நீர்ப்பரப்புக்குக் கீழே ஒரு ரூம் கட்டி முட்டையிட்டுக் கொள்கிறது. அதில் காற்றை நிரப்பி முட்டையை வைக்கிறது. எல்லாச் சிலந்திகளும் வலை பின்னுவதில்லை.

(மௌலானாவின் புதல்வர்)

ஞானவான்கள் இதிலிருந்து அநேகம் அகப் பொருள்களைக் கூறுகிறார்கள்.

மேலும், இதில் மனிதனுடைய நிலைமையும் (இஷாரத்தன்) சமிக்ஞையாகக் கூறப்பட்டிருக்கிறது. அல்லாஹு தஆலா ஆதமைத் தனது உருவத்தில் அதாவது லட்சணத்தில் சிருஷ்டித்திருக்கிறான் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கொசுவுடைய நிலைமைக்குத் தக்கவாறு அதன் அங்கங்களை இறைவன் அமைத்ததுபோல மனிதனுடைய நிலைமைக்குத் தக்கவாறு தன்னுடைய ஜமால் ஜமாலான ஸிஃபாத்துகளென்னும் லட்சணங்களை அவனின் நமூனாவாக அமைத்திருக்கின்றான். இந்த நமூனாவை மனிதன் தனது அகக்கண்ணாடியின் மூலம் உணர்ந்து அல்லாஹு தஆலாவின் தன்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது இறைவனின் நோக்கமாக இருந்து வருகிறது. இதனைக் குறித்துத்தான் "தன்னை அறிந்தவன் இறைவன் அறிவான்" என்பதாகப் பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். இம்மாதிரியான பெரும் பேறு இறைவனது சிருஷ்டிகளில் வேறு எதற்கும் இல்லை. இதனால்தான் மனிதன் சிருஷ்டிகளில் மிக விசேஷமானவனாக யிருக்கிறான். மனிதன் சிருஷ்டிகளில் மிக விசேஷமானவனாக இருக்கிறான் என்பதற்கு மேலும் பல காரணங்கள் உள்ளன.

மனிதன் தான் அல்லாத மற்றைய மக்லூக்காத்துகள் (படைப்புகள்) அனைத்துக்கும் பகரமாக இருக்கிறான். ஆனால், மகூனாத்துகள் (சிருஷ்டிகள்) அடங்கலும் மனிதனுக்குப் பகரமாக இருக்க முடியாது. ஏனெனில், அல்லாஹு தஆலா ஆலம் அடங்கலிலுமுள்ள ரூஹானியாத்து (ஆத்ம சம்மந்தமானவைகள்) ஜிஸ்மானியாத்து (ஸ்தூலம் சம்மந்தமானவை), ஸமாவிய்யாத்து (வானத்திற்குச் சம்மந்தமானவை), அர்லிய்யாத்து (பூமிக்குச் சம்மந்தமானவை), துன்யவிய்யாத்து (இம்மைக்குச் சம்மந்த மானவை) உக்ரவிய்யாத்து (மறுமைக்குச் சம்பந்தமானவை) ஜமாதிய்யாத் (தாதுப் பொருளுக்குச் சம்மந்தமானவை), நபாத்திய்யாத்து (தாவரவர்க்கங் களுக்குச் சம்மந்தமானவை), ஹைவானிய்யாத்து (ஜீவவர்க்கங் களுக்குச் சம்மந்தமானவை), மலக்கூத்திய்யாத்து ஆகிய எல்லா உலகங்களையும் மனிதனில் ஒன்று சேர்த்திருக்கிறான். ஆகவே, அவன் அந்தரங்கத்தில் (ஹக்கீக்கத்தில்) ஒவ்வொன்றிற்கும் கலீஃபாவாக இருக்கிறான். இன்னும் அவனை ஒரு சங்கையைக் கொண்டு சொந்தப்படுத்தி இருக்கிறான். அதாவது (இன்னும் அவனில் என்னுடைய ரூஹிலிருந்து ஊதினேன்) என்று கூறி இருக்கிறான். இந்தச் சங்கையை அல்லாஹு தஆலா இந்த ஆலத்தாரில் மனிதனைத் தவிர வேறு ஒருவருக்கும் கொடுக்க வில்லை. இந்தக் கருத்தைத்தான் (இன்னும் நிச்சயமாக நாம் ஆதமுடைய மக்களைச் சங்கையாக்கி வைத்திருக்கிறோம்) என்ற ஆயத்தில் சமிக்ஞை செய்திருக்கிறான்.

فَأَمَّا الَّذِينَ آمَنُوا فَيَعْلَمُونَ أَنَّهُ الْحَقُّ مِن رَّبِّهِمْ ஃபஅம்மல்லதீன ஆமனூ ஃபஎஃல மூன அன்னஹுல் ஹக்கு மிர்ரப்பிஹிம் என்பதில் **அம்மா** வென்பது ஒரு பேச்சைத் திட்டப்படுத்திப் பேசவும் மூடலான பேச்சை விபரப்படுத்திப் பேசவும் வாக்கியத்தின் ஆரம்பத்தில் வரும் ஓர் இடைச் சொல்லாகும். ஹக்கு என்றால் மறுக்கக் கூடா உண்மை என்பதாகும். இதில் அழியாப் பொருள்களும் நேர்மையான செயல்களும் உண்மையான சொற்களும் அடங்கும். இங்கு கருத்தென்ன வெனில், வீணாகாத, மாற்ற முடியாத அநேக ஞான கருத்துக்களையுடைய உண்மையான உவமானச் சொல் என்பதாகும்.

فَأَمَّا الَّذِينَ آمَنُوا فَيَعْلَمُونَ أَنَّهُ الْحَقُّ مِن رَّبِّهِمْ 'ஈமான் கொண்டவர்கள் அது அவர்களின் இறைவனிடத்தில் உள்ள உண்மையே யென்று சந்தேகமின்றி அறிவார்கள்' என்பதற்கு அல்லாஹு தஆலா, விக்கிரகங்களை தூஷணமாய்க் காட்டுவதற்காகக் கொசு, சிலந்திப் பூச்சியைக் கொண்டு உவமானஞ் சொன்னது யுக்திக் கொத்த விஷயமாயிருப்பதாலும், ஒரு பொருளின் இழிவை விளக்குவதற்கு கண்ணியமானவற்றைக் கொண்டு உவமானங் கூறல் யுக்திக்குப் பொருந்தாத விஷயமாயிருப்பதாலும், ஈமான் கொண்டவர்கள் யுக்திக்கு முரன்பாடில்லாமல் வேதத்தை ஒப்புக் கொண்டு நடப்பவர்கள். ஆகையால், இந்த உவமானம் மிகப் பொருத்த மாயிருப்பது பற்றி இது அவர்களின் இறைவனிடத்திலிருந்து வந்த உண்மையான உவமானம் என்று அறிவார்களென்று கூறியிருக் கிறான். இவ்விதங் கூறியதில் இறைவன் மூமின்களுடைய அறிவைச் சரிகண்டு அவர்களைப் புகழ்ந்திருக்கிறானென்பது கருத்தாகும்.

وَأَمَّا الَّذِينَ كَفَرُوا فَيَقُولُونَ مَاذَا أَرَادَ اللَّهُ بِهَٰذَا مَثَلًا என்பதில் நிராகரிப்பாளர்கள் என்பதற்கு. யூதர்களும் முஷ்ரிக்குகளும் என்பதாக **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** சொல்லப் பட்டிருக்கிறது. **ஹாதா** என்ற சொல் எதைச் சுட்டிக் காட்டுகிறதோ அதைக் கேவலப்படுத்தும் முறையில் இங்கு உபயோகிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அற்பமானதை உதாரணங் கூறுவது கொண்டு அல்லாஹு தஆலா எதை நாடி இருக்கிறான் என்று கூறுவார்கள் என்பதாகவும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே நிராகரிப்பாளர்களின் அறிவு சரியான முறையிலில்லை என்பதை இறைவன் இங்கு விளக்கி இருக்கிறான்.

يُضِلُّ بِهِ كَثِيرًا **"இதைக் கொண்டு நிராகரிப்பாளர்களில் பெரும்பாலான வர்களை வழிகெடுப்பான்"** என்பதற்கு. இந்த உதாரணத்தைக் கொண்டு நிராகரிப்பாளர்களில் பெரும்பாலானவர் களை, அவர்கள் அதைப் பொய்ப்பித்ததாலும் அவர்களை மோசடி செய்கிறான் என்பதாகும். மோசடி என்பது உதவிக் கெதிரிடை. இம்மோசடி நிராகரிப்பாளர்களின் கெட்ட அபிப்பிராயத்தாலிடையிட்ட காரியமாகும்.

வழி கெடுத்தலென்பது, அடியானில் வழி தவறுதல் என்னும் செயலைப் படைத்தலாம். இதுபோலவே **ஹிதாயத்** வழிகாட்டலென்பது அடியானில் நேர்வழி பெறுதல் என்னும் செயலைப் படைத்தலாம். சுன்னத்து ஜமாஅத்தாரிடத்தில் இதுவே ஹக்கீகத்தான (உள்ளதான) அர்த்தம். இதன்படி வழி கெடுத்தல் எனும் செயலை இறைவன் பக்கம் சேர்த்தால் வழி கெட்டுப் போனதற்காக நிராகரிப்பாளர்களை இகழ்வதும் தண்டிப்பதும் கூடாது என்றேற்படும். இதுபற்றி முஃதசிலாக்கள் இதுபோன்ற இடங்களில் வேறு பல அர்த்தங்கள் கூறி அனேக போக்குகள் கூறுகின்றனர். அவர்களின் மதுஹப் சரியன்று. வழி கெடுத்தல் என்னும் செயலை நாயன் பக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், சகல செயல்களையும் அவனே சிருஷ்டிக்கிறவன். ஆனால் வழி தவறினது பற்றி நிராகரிப்பாளர்களை இகழ்ந்து தண்டிப்பது ஏனெனில், அவர்கள் செய்த விஷமத்தனமும் பாவங்களும் அதற்குக் காரணமாகும். அவர்கள் மாறு செய்த காரணத்தினால் அல்லாஹ் முத்திரையிட்டான் என்பது போன்ற ஆயத்துக்கள் இதற்குச் சான்றாகும். இதுபற்றி முன் 7வது ஆயத்தின் விரிவுரையில் விரிவாகக் கூறியிருப்பது காண்க.

இதுபோன்ற விஷயங்களில் இஸ்லாமியக் கொள்கை மூன்று வகையாகப் பிரிந்திருக்கிறது. 1. கதரிய்யா இவர்கள் முஃதசிலாக்கள். இவர்கள் அல்லாஹு தஆலா அடியானில் படைத்திருக்கும் சக்தியைக் கொண்டு அடியான் தனது இஷ்டத்திற்கு சகல செயல்களையும் தானே படைத்திருக்கிறான் என்று சொல்கிறார்கள். 2. ஜபரிய்யா. இவர்கள் அடியானுக்கு யாதொரு செயலும் கஸ்பு என்ற தொடர்புமில்லை; அவன் காற்றில் அகப்பட்ட இறகுபோல் சுயேச்சையற்றவனாக (தனித்து இயங்க முடியாதவனாக) இருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். 3. சுன்னத்து ஜமாஅத்து. இவர்கள் அடியானுக்குத் தனது இஷ்டத்திற்குரிய செயல்களில் கஸ்பெனும் ஓர் தொடர்பு மாத்திரம் இருக்கிறது. அச்செயல்களை இறைவன்தான் படைக்கிறான். ஆயினும் அடியானுக்கு அதில் தொடர்பிருப்பதால் இவன் சுயேச்சை யற்றவனல்ல. ஆகையினாலேயே இவன் மீது தக்லீபு எனும் விதிவிலக்கு ஏற்பட்டு விட்டது என்று சொல்கின்றனர். ஆகவே ஜபரிய்யாக்கள் எல்லையைக்

கடந்து விட்டனர். கதரிய்யாக்கள் எல்லையை எட்டாமல் திறங்குறைந்து விட்டனர். இவர்களுக்கிடையில சுன்னத்து ஜமாஅத்தாரின் மதுஹபே நடு நிலைமை வாய்ந்ததும் நீதமானதுமாகும். காரியங்களில் நடுத்தரமே சிறந்தது.

இதுபற்றி அநேக ஆட்சேப சமாதானங்கள் இஸ்லாமியக் கொள்கைகள் பற்றிய நூற்களில் விரிவாய்க் காணலாம். இவர்களுக் கிடையில் உண்மை ஸூஃபிய்யாக்கள் என்னும் ஞானவான்களிடம் இருக்கிறது. இவர்கள் சுன்னத்து ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் இவர்களின் வாக்கியங்கள் பெரும்பாலும் ஜபரிய்யாக் கொள்கையின்பால் சார்ந்திருப்பது போல் தோற்றினும் அது ஜபரிய்யாக் கொள்கையல்ல. அவர்கள் அடியான் வெளியில் சுயாதீனமுள்ளவனாகவும் உள்ளில் சுயேச்சையற்றவனாகவும் இருக்கிறான் என்று சொல்கிறார்கள். இதுபற்றி குத்பு நாயகம் இப்ராஹீம் தஸ்ஸூகி அவர்கள் ஒருவன் கல்களவில் ஹகீகத் என்னுங் கண் கொண்டு பார்த்தால் அவர்களுக்குப் போக்கு விடுவான். ஷரீஅத் என்னுங் கண்கொண்டு பார்த்தால் அவர்களைக் கோபப்படுவான் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

ஃபாஸிக் என்ற வார்த்தைக்கு எல்லையை விட்டு வெளிப்படுவது என்பதுதான் சரியான பொருள். ஆயினும் இஸ்லாமிய ஷரீஅத்தில் பெரும் பாவத்தைச் செய்து அல்லாஹ்வின் கட்டளையை விட்டு வெளியேறுபவர்களுக்கு ஃபாஸிக் என்று சொல்லப்படுகிறது. இவ்விதமான ஃபாஸிக்குகள் மூன்று வகைப்படுவர். 1. எந்தெந்தக் காரியங்களை விசுவாசங் கொள்ளுதல் கடமையாக இருக்கிறதோ அவற்றை நிராகரிப்பவர், 2. பெரும் பாவங்களைச் செய்வர், 3. சிறு பாவங்களைச் செய்வதில் பிடிவாதமாக இருப்பவர். இம்மூன்று வகையினரும் ஃபாஸிக்குகளாவர். இவ்விடத்தில் யூதர்களைக் குறித்து இப்பதம் உபயோகிக்கப்பட்டிருப்பதால் அவர்களிடம் இம்மூன்று தன்மைகளும் இருந்தது எனத் தெரிகிறது. மேலும் ஃபாஸிக் என்ற பதத்திற்கு இவ்விடத்தில் பாவிகள் என்று அர்த்தஞ் செய்யப் பட்டிருக்கிறது.

الَّذِينَ يَنْقُضُونَ عَهْدَ اللَّهِ مِنْ بَعْدِ مِيثَاقِهِ
وَيَقْطَعُونَ مَا أَمَرَ اللَّهُ بِهِ أَنْ يُوصَلَ وَيُفْسِدُونَ
فِي الْأَرْضِ أُولَٰئِكَ هُمُ الْخَاسِرُونَ ۝

27. (பாவிகளாகிய) அவர்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கையை - அதனை உறுதிப்படுத்திய பின்னும் - முறித்து விடுகின்றனர்; இன்னும் எதனை இணைக்க வேண்டுமென்று அல்லாஹ் ஏவியிருக்கின்றானோ அதனைத் துண்டித்து விடுகின்றனர். இன்னும் இவர்கள் பூமியில் விஷமஞ் செய்கின்றனர். இவர்கள்தாம் நஷ்டவாளர்கள்.

அல்லாஹுத் தஆலாவிடம் கொடுத்த உடன்படிக்கையை முறித்தவர்கள் யூதர்கள், முனாஃபிக்குகள், காஃபிர்களாவர், மேலும் அல்லாஹ் தனது சிருஷ்டிகளிடத்தில் வாங்கிய வாக்குறுதிகள் மூன்று வகைப்படும்.

1. மீதாக்குடைய நாளில் ஆதமுடைய மக்கள் அனைவரும் அல்லாஹுத் தஆலாவை தங்களது றப்பு என்று ஏற்றுக் கொண்ட வாக்குறுதி.

2. மார்க்கத்தை நிலை நிறுத்தி வைப்போம். அதில் மாற்றம் செய்ய மாட்டோம், என்று நபிமார்கள் அல்லாஹுத் தஆலாவிடம் செய்து கொடுத்த வாக்குறுதி.

3. உண்மையை மறைக்காமல் மக்களுக்கு அறிவிப்போம், என்று உலமாக்கள் செய்து கொடுத்த வாக்குறுதி. இம்மூன்றுவகை வாக்குறுதியைப் பற்றி அல்லாஹுத் தஆலா தனது திருமறையில் கூறியுள்ளான்.

"உங்களுடைய றப்பு ஆதமுடைய மக்களிலிருந்து அவர்களுடைய சந்ததியினரை வெளிப்படுத்தி அவர்களைத் தங்களுக்குத் தாங்களே சாட்சியாக்கி உங்களுக்கு நான் றப்பல்லவா?"

(என்று கேட்டான். அதற்கு அவர்கள்) உண்மைதான் (இதற்கு) நாங்கள் சாட்சி பகருகிறோம் என்றனர்; "நிச்சயமாக நாங்கள் இதை மறந்திருந்தோம்" என்று நீங்கள் கியாமத்து நாளில் சொல்லாமல் இருப்பதற்காக 7.172

(எல்லா) நபிமார்களிடமும் (குறிப்பாக) உம்மிடமும் இன்னும் நூஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடமும் அவர்களின் உறுதிமொழியை நாம் வாங்கிய நேரத்தில்- அவர்களிடமிருந்து வலுவான உறுதிமொழியை நாம் வாங்கினோம். 33.07

இன்னும், நிச்சயமாக "நீங்கள் அதை மனிதர்களுக்கு அறிவிக்க வேண்டும். இன்னும் அதை நீங்கள் மறைக்கக் கூடாது" என்று வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களிடம், அல்லாஹ் வாக்குறுதி வாங்கிய நேரத்தை (எண்ணிப் பாரும்) என்றும், அதைத் தங்கள் முதுக்குப் பின் எறிந்து விட்டு அதற்குப் பதிலாக அற்பக் கிரையத்தை வாங்கிக் கொண்டனர். ஆகவே, அவர்கள் வாங்கியது கெட்டதாகி விட்டது. 3.186

அல்லாஹுத்தஆலாவிற்கு திருப்தி அளிக்கக் கூடிய காரியங்களான உறவினர்களை ஆதரித்தல், மூமின்கள் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ளுதல், நபிமார்கள் அனைவரையும் ஈமான் கொள்வதுடன் நபிமார்களில் ஒருவரை விட மற்றொருவர் உயர்வானவர் என்று பாகுபாடு செய்யாமல் இருத்தல், அல்லாஹ் இறக்கி வைத்த எல்லா வேதங்களையும் ஏற்றுக் கொள்ளுதல், ஃபர்லான தொழுகைகளை இமாம் ஜமாஅத்துடன் தொழுதல், நன்மையான இதர காரியங்களைச் செய்தல், தீமையான காரியங்களைச் செய்யாதிருத்தல் போன்றவற்றைச் செய்வது இந்த ஆயத்துகளின் கருத்தாகும்.

ஹதீஸ்:- ஜனங்களுக்கு அறிவு வெளியாக்கப்பட்டு, அதன்படி நடப்பதை அவர்கள் விடுத்து, வெளியில் நேசம் பாராட்டி, மனத்திற்குள் விரோதம் கொண்டு, உறவினர்களுடன் உறவு கொண்டாடாமல் அவர்களை விட்டு விலகி விடுவார்களாயின் அப்படிப்பட்டவர்களை

அல்லாஹு தஆலா (லஃனத்துச் செய்து) சபித்து அவர்களைச் செவிடாக்கி அவர்களது கண்களைக் குருடாக்குவான் என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "கியாமத்து நாளில் மூவர் அல்லாஹு தஆலாவின் அர்ஷில் நிழலில் இருப்பார்கள் 1. சிறு குழந்தைகளை விட்டு விட்டு இறந்து போன கணவனின் மனைவி. இவளைத் திருமணம் செய்து கொள்வதற்காகப்) பெண் கேட்டு வந்தபோது தனது அனாதைக் குழந்தைகளை அல்லாஹு தஆலா தேவையற்றவர்களாக ஆக்கும்வரை அவர்களைப் போஷித்துக் கொண்டிருப்பேன் என்று கூறி திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டவள். 2. செல்வந்தர்கள் உணவுகளைச் செவ்வையாய் சமைத்து அந்த உணவை அருந்துவதற்காக அனாதைகளையும் ஏழைகளையும் அழைத்து விருந்தளிப்பவர்கள். 3. தனது உறவினர்களுடன் அன்பாக நடந்து அவர்களுடன் சேர்ந்திருப்பவர். இவருக்கு இறைவன் செல்வத்தை அதிகமாக்குவதுடன் வயதையும் அதிகப் படுத்திக் கொடுப்பான் (பார்க்க 13:39). இவர் தனது றப்புடைய அர்ஷின் நிழலின் கீழ் இருப்பார் என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. மேலே எடுத்து எழுதப்பட்டிருக்கிற இரண்டு ஹதீஸ்களிலும் உறவினர்களை ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கு கியாமத்து நாளில் கிடைக்கக் கூடிய பெரிய பதவியையும், அப்படிச் செய்யாமலிருப்பவர்களுக்குக் கிடைக்கக் கூடிய தீங்கையும் பற்றிக் கூறி இருப்பதைக் கவனிக்கவும்.

أُولَٰئِكَ هُمُ الْخَاسِرُونَ **இவர்கள்தாம் நஷ்டவாளர்கள்** என்பது மறுமையில் நன்மையை அடைவதற்குப் பதிலாக வேதனை அடைபவர்கள் என்பதாகும்.

ரிவாயத்து:- சுவர்க்கத்தில் மூமின் காஃபிர் ஆகிய எல்லா மனிதர்களுக்கும் ஒரு இடம் இருக்கிறது. அங்கு அவர்களுக்கு குடும்பத்தினரும், ஊழியர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். உலகில் அல்லாஹுத் தஆலாவை விசுவாசித்து அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தவர்களுக்கு அவற்றை அல்லாஹு தஆலா அளிக்கிறான். அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் மாறு செய்த நிராகரிப்பாளர்களுக்கு அவற்றை அளிப்பதில்லை. ஆதலால்,

அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள் மறுமையில் நஷ்டமடைந்தவர்கள் என்று ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ وَكُنتُمْ أَمْوَاتًا فَأَحْيَاكُمْ ثُمَّ يُمِيتُكُمْ
ثُمَّ يُحْيِيكُمْ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ ۝

28. அல்லாஹ்வை நீங்கள் எப்படி நிராகரிக்கின்றீர்கள்? நீங்களோ உயிரற்றவர்களாக இருந்தீர்கள்; அப்பால், அவன் உங்களை உயிர் பெற்றவர்களாக ஆக்கினான்; பின்பு, உங்களை மரணிக்கச் செய்வான். பின்னும் உங்களை உயிர்ப்பிப்பான். மீண்டும் அவனளவிலேயே (நீங்கள்) கொண்டு வரப்படுவீர்கள்.

இந்த ஆயத்தில் அல்லாஹு தஆலா மனிதனுடைய நிலைமையை விளக்கிக் கூறுகிறான். மனிதர்கள் ஆதியில் இந்திரியத் துளியிலிருந்து சிருஷ்டிக்கப்படுகின்றனர். இந்திரியத்துளியாக இருக்கும்போது அவர்களுக்கு உயிர் இருப்பதில்லை. அப்பால் தாயின் கர்ப்பத்தில் வந்து சில மாதங்கள் சென்ற பிறகுதான் உயிர் கொடுக்கப்படுகிறார்கள். இவ்வுலகில் அவரவருக்குள்ள வாழ்நாளின் தவணை வரை உயிருடனிருந்து அப்பால் மரணமடைகின்றனர். மரணமடைந்த பின் அடக்கம் செய்யப்பட்டால் கேள்வி கணக்குக் கேட்பதற்காக உயிர் கொடுக்கப்படுகிறார்கள். அதற்கப்பால் கியாமத்து நாளில் மஹுஷருடைய மைதானத்திற்குச் செல்லவேண்டிய தேற்படுகிறது. அப்பொழுது எல்லா ஜனங்களும் அங்கு மீட்டப் படுகின்றனர். அங்கு அவரவருடைய நன்மை தீமைக்குத் தக்கவாறு கூலி கொடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவு காரியங்களையும் செய்விப்பவன் அல்லாஹு தஆலா ஒருவன்தான் என்பதற்கு மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் தக்க சான்றுகள் இருக்கின்றன. அப்படி இருக்க அல்லாஹு தஆலா ஒருவன் என்பதை எங்ஙனம் ஜனங்கள் மறுக்க முடியும்? ஒருபோதும் அவனது ஏகத்துவத்தை மறுக்க முடியாது என்பதாக இறைவன் இந்த ஆயத்தின் மூலமாக நமக்கு அறிவித்திருக்கிறான்.

كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ **அல்லாஹ்வை எப்படி நிராகரிக்கிறீர்கள்?** என்று வினவி இருப்பது, அவனுக்குத் தெரியாத ஒரு விஷயத்தை அறிந்து கொள்வதற்காக வல்ல. அவனுக்குச் சகலமும் தெரியும். ஆதலால், இந்த இடத்தில் அவன் கேள்வி கேட்டிருப்பது நிராகரிப்பாளர் களின் நிராகரிப்பை ஆட்சேபிப்பதும், அவர்கள் நிராகரிப்பது ஆச்சரியப் படத்தக்கது என்பதுமேயாகும். இதுபோன்ற வினாக்கள் திருக்குர் ஆனில் வேறுபல இடங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களிலும் இவ்வினாக்களுக்கு இது போன்ற கருத்துக்கள்தான் இருக்கின்றன.

هُوَ الَّذِي خَلَقَ لَكُم مَّا فِي الْأَرْضِ جَمِيعًا ثُمَّ اسْتَوَىٰ إِلَى
السَّمَاءِ فَسَوَّاهُنَّ سَبْعَ سَمَاوَاتٍ ۚ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ۝

29. பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காக அவன் (தான்) படைத்தான்; பின்பு, வானத்தைச் (சிருஷ்டிக்க)க் கருதி அவற்றை ஏழு வானங்களாக அமைத்தான்; மேலும், அவன் எல்லாவற்றையும் அறிந்தவனாகவுமிருக்கின்றான்.

அல்லாஹு தஆலா முந்தின ஆயத்தில் மனிதர்களை உற்பத்தியாக்கி மரணிக்கச் செய்து பின் உயிர்ப்பிக்கும் விபரத்தைக் கூறி, இந்த ஆயத்தில், அவர்கள் இவ்வுலகில் வசிப்பதற்கு அவசியமானவற்றை சிருஷ்டித்ததாகக் கூறி இவ்விதம் அவன் செய்தருளிய நன்றியைக் கவனியாமல் அவர்கள் மாறு செய்வது பற்றி இழிவாகக் கூறியிருக்கிறான்.

அல்லாஹு தஆலா பூமியிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்த பிறகு வானத்தைச் சிருஷ்டித்தான் என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது. **வல்அர்ழ பஅத தாலிக தஹாஹா இன்னும் பூமியை அதற்கு (வானத்திற்கு) பின்னால் விரித்தான்** சூரத்துன்னாஜிஆத் 30 என்பதாக வேறு ஒரு இடத்தில் இறைவன் கூறி இருக்கிறான். இந்த இரண்டு ஆயத்துகளும் ஒன்றுக் கொன்று

முரண்பட்டவைகளாக இருக்கின்றன என்று சிலர் நினைக்கக் கூடும். உண்மையில் இவ்விரு ஆயத்துகளும் முரண்பட்டவைகளல்ல. அல்லாஹு தஆலா பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்த பின் அவற்றைத் தற்போதுள்ள வடிவத்தில் பரப்பி வைப்பதற்கு முன்னர் வானத்தைச் சிருஷ்டித்தான் என்றும், வானத்தைச் சிருஷ்டித்த பிறகு பூமியை இப்பொழுதுள்ள வடிவத்தில் பரப்பினான் என்றும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். இவ்விதமான விளக்கம் கொண்டால் இந்த ஆயத்துகளிரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பாடாக இல்லை என்பது தெளிவு.

ரிவாயத்து:- "வானங்கள் ஏழாக இருக்கின்றன. அவற்றில் முந்தின வானத்திற்கு வக்கீஃ என்று பெயர். இது பச்சை மரகதத்தால் சிருஷ்டிக்கப்பட்டது. இரண்டாவது வானத்திற்கு அர்பலூன் என்று பெயர். இது சுத்தக் கட்டி வெள்ளியினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது வானத்திற்கு கைதூம் என்று பெயர். இது சிவந்த மாணிக்கத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது வானத்திற்கு மாஊன் என்று பெயர். இது வெண் முத்தினால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. ஐந்தாம் வானத்திற்கு தப்காஉ என்று பெயர். இது சிவந்த தங்கத்தினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது வானத்திற்கு வஃப்னாஉ என்று பெயர். இது மஞ்சள் மாணிக்கத்தால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. ஏழாவது வானத்திற்கு அருபாஉ என்று பெயர். இது இலங்கும் படியான ஒளியினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது" என்று ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

அறிந்துகொள்:- இந்த ஆயத்தின் உயிருக்குரிய பல பதவிகளைப் பற்றி சைக்கினையா யிருக்கிறது. முதலாவது ஆலமுல்மலகூத்தில் அற்லிய்யா வல்குவன் னஃப்ஸானிய்யா. இரண்டாவது ஆலமுன் நஃப்ஸி. மூன்றாவது ஆலமுல் கைப், நான்காவது ஆலமுல் அக்ல், ஐந்தாவது ஆலமுஸ்ஸிர்ரி, ஆறாவது ஆலமுர் ரூஹி, ஏழாவது ஆலமுல்கஃபாஇ. இவற்றைக் குறித்துத்தான் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் "நான் பூமியினுடைய

வழிகளின் மூலமாக வானத்தின் வழிகளை நன்கு அறிந்திருக்கிறேன். ஆதலின், அவற்றைக் குறித்து என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறி இருக்கிறார்கள். வானத்தின் வழிகளென்பது துறவு, பயபக்தி, பொறுப்பை ஒப்படைத்தல், திருப்தி இவை போன்ற மனிதரின் நிலைமைகளும் அந்தஸ்துகளுமேயாகும்.

وَاِذْ قَالَ رَبُّكَ لِلْمَلٰٓئِكَةِ اِنِّىْ جَاعِلٌ فِى الْاَرْضِ خَلِيْفَةً ؕ
قَالُوْٓا اَتَجْعَلُ فِيْهَا مَنْ يُّفْسِدُ فِيْهَا وَيَسْفِكُ الدِّمَآءَ ۚ
وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ؕ قَالَ اِنِّىْٓ اَعْلَمُ مَا لَا
تَعْلَمُوْنَ ﴿٣٠﴾

30. மேலும், "நிச்சயமாக பூமியில் ஒரு பிரதிநிதியைச் சிருஷ்டிக்கிறவனாயிருக்கின்றேன்" என உம்முடைய (றப்பு) வானவர்களுக்கு அறிவித்த சமயத்தில், "நாங்கள் உன்னுடைய பரிசுத்தத்தன்மையைக் கூறி உன்னுடைய புகழைக் கொண்டு உன்னைத் துதி செய்து கொண்டிருக்கையில் கேடு செய்து அதில் இரத்தம் சிந்துபவரை அதில் சிருஷ்டிக்கிறாயோ?" என்று (வானவர்கள்) கூறினார்கள். (அதற்கு அல்லாஹ்) "நிச்சயமாக நீங்கள் அறியாதவற்றை நான் நன்கு அறிந்தவன்" என்று கூறினான்.

மலக்குகள் நமது கண்ணுக்குத் தோன்றாத நுட்பமான உருவமுள்ளவர்கள். பற்பலவிதமான உருவங் கொள்ளச் சக்தியுள்ளவர்கள். ரசூல்மார்கள் அவ்விதம் மலக்குகளைப் பார்த்திருக்கிறார்கள்.

ரிவாயத்து:- மலக்குகள் மிகுதமாயிருப்பதைப் பற்றி ரிவாயத்துச் செய்யப் பட்டிருப்பதாவது:- ஆதமுடைய மக்கள், ஜின் வர்க்கத்தில் பத்திலொன்றாகு இருக்கின்றனர். மனிதரும் ஜின்களும் சேர்ந்து பூமியிலுள்ள பிராணிகளில் பத்திலொரு பாகத்தினராக இருக்கிறார்கள். இம்மூன்று வகைகளும் பறவையினங்களில்

பத்திலொன்றாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து கடலிலுள்ள ஜீவஜந்துக்களில் பத்திலொன்றாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து முதல் வானத்திலுள்ள மலக்குகளுக்குப் பத்திலொன்றாக இருக்கின்றன. மேற்கூறியவர்களெல்லாம் இரண்டாவது வானத்திலுள்ள மலக்குகளுக்குப் பத்திலொரு பாகத்தினராவார்கள். இப்படியே ஏழாம் வானம் வரை கீழுள்ளவர்கள் மேலுள்ளவர்களுக்குப் பத்திலொன்றாக இருக்கின்றனர். இவை எல்லாம் சேர்ந்து குர்ஸியிலுள்ள மலக்குகளுக்கு முன் மிகவும் கொஞ்சமானவர்களாக இருக்கிறார்கள். இவர்களெல்லோரும் சேர்ந்து அர்ஷுடைய ஆறு லட்சம் திரைகளில் ஒவ்வொரு திரைகளிலுள்ள மலக்குகளில் பத்திலொன்றாயிருக்கின்றனர். ஒவ்வோர் திரையின் அகல நீள உயரங்கள் வானம் பூமி இவற்றிற்கிடையில் உண்டானவைகள் ஆக இவற்றை அந்தத் திரையோடு ஒப்பிட்டால் அற்பமான எந்த ஓரளவும் இவற்றிற்கில்லை. இவ்விதமான பெருந்திரைகள் ஒவ்வொன்றிலும் ஓர் சாணளவுகூட காலி விடாமல் மலக்குகள் சுப்பூஹ் குத்தூஸ் என்ற பேரிசைச்சலுடன் சுஜூது செய்தவர்களாகவும், ருக்கூஉ செய்தவர்களாகவும், நிலையில் நின்றவர்களாகவும் இருக்கின்றனர். மேற்கூறியவர்கள் அனைவரும் அர்ஷைச் சுமப்பவர்களான மலக்குகளின் முன் கடலிலுள்ள ஒரு துளி தண்ணீருக்கு ஒப்பாகவே இருக்கிறார்கள். பிறகு, லௌஹிலுள்ள மலக்குகள் இவர்கள்தான் இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பரிவாரங்கள். இன்னும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் படைகளாக இருக்கிற மலக்குகளையும், அவர்களின் வகுப்புக்களையும், அவர்களின் வாழ்நாளின் காலங்களையும் வணக்க முறைகளையும் இம்மட்டென்று அவர்களைப் படைத்த இறைவனன்றி வேறு எவரும் அறியார்கள். இதனைக் குறித்து அல்லாஹு தஆலா தனது திருமறையில் **உமது றப்பின் படைகளை அவனைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள்** சூரத்துல் முத்தத்திர் 31 என்று கூறி இருக்கிறான்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜுக்குப் போன போது ஒரு இடத்தில் மலக்குகள் ஒருவருக்குப்பின் ஒருவராகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து "இவர்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள்?" என்று ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வினவினார்கள். அதற்கு, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "நான் அறிய மாட்டேன். நான் சிருஷ்டிக்கப்பட்டது முதல் இவர்கள் இப்படிப் போய்க் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால் இவர்களில் எவரையும் நான் இதற்கு முன் பார்த்ததில்லை" என்று கூறினார்கள். பிறகு, அவ்விருவரும் அந்த மலக்குகளில் ஒருவரைப் பார்த்து "உம்மை எப்பொழுது சிருஷ்டிக்கப் பட்டது" என்று வினவினார்கள். அதற்கு அவர் "எனக்குத் தெரியாது. ஆனால், அல்லாஹு தஆலா 4000 வருடத்திற்கு ஒருமுறை ஒரு நட்சத்திரத்தைச் சிருஷ்டிக்கிறான். நான் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து இது வரை 4 லட்சம் நட்சத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்று கூறினார். இவ்விதம் அளவிலா மாபெரிய அரசாங்கத்தையுடைய இறைவனைத் தூய்மையாக்குகிறேன். அவனது பெருந்தகுதிக்கே ஆச்சரியம்! அவனது ஆட்சி அதிகாரத்தின் விசாலத்திற்கே ஆச்சரியம்!

இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட மலக்குகள் இன்ன வகுப்பார் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஸஹாபாக்களிலும் தாபிஈன்களிலும் பெரும்பாலர் "எல்லா மலக்குகளும்தான்" என்கிறார்கள். ஏனெனில், அப்பதம் பொதுவாயிருப்பதாலும் அதைச் சொந்தப்படுத்தும் ஆதாரமில்லாதிருப்பதாலுமாகும். இன்னும் 'பூமியிலுள்ள மலக்குகள்தான்' என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், இந்த ஆயத்தின் பேச்சு பூமியில் பிரதிநிதியை யாக்குவதைப் பற்றியாயிருப்பதால்தான். இன்னும் 'இப்லீசும் ஜின்களோடு போரிடுவதற்கு அவனுடன் அனுப்பப்பட்ட மலக்குகளும்' என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விபரமாவது.

ரிவாயத்து:- அல்லாஹு தஆலா வானத்தையும், பூமியையும், மலக்குகளையும், ஜின்களையும் படைத்து மலக்குகளை வானத்திலும் ஜின்களைப் பூமியிலும் வசிக்கும்படி செய்தான். இது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சிருஷ்டிப்பதற்கு 60 ஆயிரம் வருடங்களுக்கு முன் நிகழ்ந்தது. பிறகு ஜின்கள் பூமியில் பலுகிப்

பெருகி பூமியில் நிறம்பினர். இவ்வாறு நீண்ட காலம் 7000 ஆயிரம் வருடம் இருந்த பின் இவர்களுக்குள் பொறாமையும், அழிச்சாட்டியமும் உண்டாகி ஒருவருக்கொருவர் கொலைகளைச் செய்து கலகஞ் செய்து கொண்டனர். அப்பொழுது அல்லாஹு தஆலா வானத்திலுள்ள மலக்குகளை அனுப்பினான். இம்மலக்குகளுக்கு இப்லீஸைத் தலைமையாக்கினான். அக்காலத்தில் இப்லீஸுக்கு **அஜாஜீல்** என்ற பெயர் இருந்தது. இவர்கள் பூமியில் இறங்கி ஜின்களைத் தோற்கடித்து கடல்களின் மத்தியிலுள்ள தீவுகளுக்கும், மலைகளுக்கும் அவர்களை விரட்டிவிட்டு பூமியில் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹு தஆலா இப்லீசுக்கு பூமியின் அரசுரிமையையும், முன்னர் வானத்தின் ஆட்சியையும் சுவர்க்கத்தின் பொக்கிஷத்தையும் கொடுத்திருந்தான். தவிரவும் இப்லீசுக்கு பச்சை மரகதத்தால் இரண்டு இறக்கைகள் இருந்தன. ஆகவே, அவன் நினைத்த போது பூமியிலும் நினைத்தபோது வானத்திலும் நினைத்தபோது சுவர்க்கத்திலுமிருந்து அல்லாஹு தஆலாவை வணங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு அகம்பாவம் உண்டாயிற்று. அல்லாஹு தஆலா எனக்குக் கொடுத்திருக்கிற இந்த அதிகாரம் மலக்குகளைப் பார்க்கினும் நான் சிறந்தவனாக இருப்பதானால்தான் என்று அவன் தனக்குள் எண்ணிக் கொண்டான். அப்பொழுதுதான் அல்லாஹுதஆலா அவனையும் அவனுக்குக் கீழிலுள்ள மலக்குகளையும் நோக்கி "நான் பூமியில் ஒரு கலீஃபாவை ஏற்படுத்தப் போகிறேன்" என்று மேற்கண்டவாறு கூறினான்.

ஆரிஃபின்களிற் சிலர் சொல்வது மேற்கண்டவாறு அல்லாஹு தஆலாவிடம் தர்க்கம் செய்தவர்கள் எல்லா மலக்குகளுமல்ல. பூமியில் இருந்த மலக்குகள்தான் தர்க்கம் செய்தவர்கள். அஹ்ல ஜபரூத்து களாகவும், அஹ்லே மலக்கூத்தே ஸமாவிய்யாவாகவுமுள்ள மலக்குகள் அல்லாஹு தஆலாவிடம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சிருஷ்டிப்பதைப் பற்றித் தர்க்கம் செய்யவில்லை. இவர்கள் பூரண மனிதனுக்குள்ள சிறப்பையும், அந்தஸ்தையும் அறிந்திருந்தனர்.

ஹாரூத் மாரூத் என்ற பெயருள்ள மலக்குகளும் கூட அல்லாஹு தஆலாவிடம் தர்க்கம் செய்த மலக்குகளைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இதனால்தான் அல்லாஹு தஆலா அவ்விருவராலும் கலகமும், ரத்தம் சிந்துதலும் உண்டாகும்படி செய்து அவர்களைச் சோதித்திருக்கிறான் என்று **ஃபுத்தூஹாத் மக்கிய்யா** என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும், இவ்வுலகில் சன்மார்க்கத்திற்கு விரோதமாக யுத்தம் செய்த காஃபிர்களுடன் போரிட்ட முஸ்லிம் முஜாஹிதுகளுக்கு அல்லாஹு தஆலா உதவி புரியும்படி அனுப்பிய மலக்குகளும் ஆதிகாலத்தில் அல்லாஹு தஆலாவிடம் தர்க்கம் செய்த மலக்குகளைச் சேர்ந்தவர்களே யாவார்கள். ஆதலால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உனது சகோதரனை நிந்திப்பதை நீ விட்டு விடு. அப்படி நிந்தித்தால் நிந்திக்கப்பட்டவரை அல்லாஹு தஆலா மன்னித்து, உன்னைச் சோதனைக்கு உட்படுத்தி விடுவான்" என்று கூறி இருக்கிறார்கள். மனிதர்கள் ஒருவரோடொருவர் வெட்டிக் கொண்டு ரத்தம் சிந்துவார்கள் என்று மனிதரை மலக்குகள் கீழாக மதித்ததால் அந்த மலக்குகளில் இருந்தே சிலர் மார்க்க விஷயத்திற்காகச் செய்த போரில் கலந்து கொண்டவர்களை வெட்டிக் கொன்று ரத்தம் சிந்தும்படி அல்லாஹுத் தஆலா அவர்களைச் சோதித்து விட்டான்.

கலீஃபா பிரதிநிதி என்பது இந்த இடத்தில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறிக்கிறது. ஒருவருடைய ஸ்தானத்தில் அவருக்குப் பகரமாக வருபவருக்கு கலீஃபா எனப்படும். ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "பூமியில் அல்லாஹ் வுடைய கட்டளைகளை அமுல்படுத்துவதற்கு அவனது பிரதிநிதியாய் இருக்கிறார்கள்" என்பதற்காக கலீஃபா என்று சொல்லப்பட்டது. அதுபோலவே மற்ற நபிமார்களும் பிரதிநிதியாயிருக் கின்றனர். அல்லது அவர்கள் சந்ததிகளில் சிலர் சிலருக்குப் பகரமாய் வந்து கொண்டிருக் கிறார்கள். அல்லது "பூமியில் அவர்களுக்கு முன்னால் வசித்து வந்த ஜின்களுக்கு இவர்களும் இவர்கள் சந்ததிகளும் பகரமாயிருக் கிறார்கள்".

அறிந்துகொள்:- பொக்கிஷங்கள் முத்திரை யிடப்படுவதன் மூலம் பாதுகாக்கப் படுவதுபோல் இந்த உலகத்தை கலீஃபாவின் மூலமாக அல்லாஹு தஆலா பாதுகாத்து வருகிறான். அவர்தான் இந்த உலகத்திற்கு குத்துபாக இருக்கிறார். ஆகவே, உலகில் ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு குத்துபுக்கு மேல் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு கலீஃபா பதவி ஆரம்பமாயிற்று. இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு முடிக்கப் படுகிறது.

ஃபாயிதா:- ''நிச்சயமாக நான் பூமியில் ஒரு கலீஃபாவை ஏற்படுத்தப் போகிறேன்'' என்று மலக்குகளை நோக்கி இறைவன் கூறிய இவ்வாக்கியத்தில் அநேக விஷயங்களை உஷார் பூட்டி இருக்கிறான்.

1. ஜனங்கள் தங்களது காரியங்களில் ஒருவரோடொருவர் கலந்தாலோசனை செய்து கொள்ள வேண்டும் என்பதும், ஜனங்களில் நம்பிக்கையானவரிடம் விஷயத்தைச் சொல்லி அவர்களுடைய கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை அறிவித்தல்.

2. சிருஷ்டிக்கப்படப் போகிறவரின் அந்தஸ்து எப்படிப்பட்ட தென்பதை அறிவித்தல்.

3. சிருஷ்டிக்கப்படப் போகிறவரில் இருக்கிற தீமைகளைப் பார்க்கினும் அவரில் இருக்கிற நன்மைகள் சிறந்தவைகள் என்று வெளியாக்கல்.

4. நன்மைகள் மிகைத்திருக்கும் காரியத்தைச் செய்வதுதான் விவேகம் என்று அறிவித்தல். ஏனெனில், அற்ப சொற்ப தீமையைக் கவனித்து அதிகமான நன்மைகளிருக்கும் காரியத்தைச் செய்யாமல் விட்டு விடுவது பெருந்தீங்கு என்பதை அறிவித்தல்.

5. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கண்ணியத்தை மலக்குகளிடம் வெளியாக்குவதற்காகவும், அவர்களுடைய சந்ததியினராகிய மனிதர்களிடம் வெளியாகும் சில தன்மைகளைப் பார்த்து அவர்களை அந்த மலக்குகள் நிராகரிக்கக்

கூடாது என்பது இறைவனின் நோக்கமாகும். தவிரவும் மௌஜுதாத்துகளில் (சிருஷ்டிக்கப்பட்டவற்றில்) எதுவும் இறைவன் மனிதனுக்குள்ள சிறப்பையும் சங்கையையும் கொடுக்கவில்லை. மௌஜுதாத்துகளில் (சிருஷ்டிக்கப்பட்டவற்றில்) எதுவும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கோ அல்லது அல்லாஹு தஆலாவுக்கோ கலீஃபாவாக இருக்க தகுதி இல்லை. மேலும், மனிதன் அல்லாஹு தஆலாவுக்கு சூரத்திலும் மஅனாவிலும் பகரமாகவும் பிரதிநிதியாகவுமிருக்கிறான்.

ஒரு கட்டிடம் அதனைக் கட்டியவன் ஒருவன் உண்டு என்பதை அறிவிப்பது போல மனிதனுடைய உஜூதானது அதனை உண்டு பண்ணியவன் ஒருவன் உண்டு என்பதை அறிவிக்கிறது என்பதற்கு சூரத்தில் கலீஃபாவாக இருக்கிறான் என்பது கருத்தாகும்.

மேலும், லாஹிரில் (புறத்தில்) இன்ஸானுடைய உஜூது (உள்ளமை), வஹ்தானியத்து (தனித்தவனாக இருத்தல்), தாத்து (ஸ்தூலம்-குணி), ஸிஃபத்து (தன்மை)கள், ஹயாத்து (ஜீவியம்), குத்ரத்து (ஆற்றல்), இராதத்து (நாட்டம்), ஸம்உ (கேள்வி-செவியேற்றல்), பஸர் (பார்வை), கலாம் (பேச்சு), இல்மு (கல்வி-அறிவு) ஆகியவைகள் ஹக்கீகத்தில் (அந்தரங்கத்தில்) முறையே ஹக்குடைய உஜூது, வஹ்தானிய்யத்து, தாத்து, ஸிஃபாத்து, ஹயாத்து, குத்ரத்து, இராதத்து, ஸம்உ, பஸர், கலாம், இல்மு ஆகியவற்றில் பகரமாக இருக்கின்றன. இன்ஸானுடைய ரூஹு என்னும் ஆத்மாவிற்கு இருக்கிற லா மக்கானிய்யத்து (குறிப்பிட்ட இடத்தில் இருத்தல் என்பது இல்லாமை), லா ஜஹ்திய்யத்து (குறிப்பிட்ட திசைக்குள் உட்பட்டிருத்தல் என்பது இல்லாமை) ஆகியவைகள் முறையே ஹக்குயடை லா மக்கானியத்திற்கும், லா ஜஹ்திய்யத்திற்கும் பகரமாக யிருக்கின்றன.

மேலும், அல்லாஹு தஆலாவிற்கு ஆதம் கலீஃபாவாக (பிரதிநிதியாக) இருப்பது போல (மக்லூக்காத்து) சிருஷ்டிப் பொருள்களிலிருந்து எதுவும் கலீஃபாவாக இருக்க முடியாது. மக்லூக்காத்து (சிருஷ்டிப் பொருள்)களில் மேலே சொல்லப்பட்ட தன்மைகளில் சில பொருந்தி இருந்தாலும் இன்ஸானில் ஹக்குடைய

ஸிஃபத்து (தன்மை)கள் ஒன்று சேர்ந்திருப்பது போல் அவற்றில் எதிலும் அவனது ஸிஃபத்துகள் ஒன்றும் சேர்ந்தில்லை. இன்னும் அல்லாஹு தஆலாவினது ஸிஃபாத்துகள் இன்ஸானுடைய கல்பு என்னும் கண்ணாடியில் தஜல்லியாகுவது போல் அவனுடைய ஸிஃபாத்துகளில் இருந்து எந்த ஸிஃபத்தும் அந்த வஸ்துக்களில் எதற்கும் தஜல்லி யாகுவதில்லை.

அறிந்துகொள்:- ஹைவானாத்து (ஜீவ வர்க்கம்) களுக்கு இந்த ஸிஃபாத்து (தன்மை)களில் சில இருந்த போதிலும் அவற்றிற்குத் தங்களை உண்டாக்கியவனைப் பற்றிய அறிவு கிடையாது. தங்களை உண்டாக்கியவனின் உஜுதைப் பற்றி மலக்குகள் அறிந்திருந்த போதிலும் அவர்கள் தங்களுக்குள்ள எல்லா ஸிஃபாத்துகளையும் கொண்டு தங்களை அறியவும், அல்லாஹு தஆலாவின் ஸிஃபாத்துகள் எல்லாவற்றையும் கொண்டு அல்லாஹு தஆலாவை அறியவும் கூடிய எல்லைக்கு அவர்களது இல்மு (அறிவு) வந்து விடவில்லை. இதனால்தான் அவர்கள் **"உன்னை நாங்கள் தூய்மையாக்கி வைக்கிறோம்; நீ எங்களுக்கு அறிவித்ததைத் தவிர்த்து வேறு இல்மு (அறிவு) எங்களுக்கு இல்லை"** என்று கூறினர். எனவே இன்ஸான் கிலாஃபத்தைக் கொண்டு தன்னை அறியவும் அல்லாஹு தஅலாவினது எல்லா அஸ்மாக்களையும் (திருநாமங்களையும்) அறியவும் சொந்தமாக்கப்பட்டவனாக இருக்கிறான்.

மஅனாவில் கலீஃபாவாக இருக்கிறான் என்பதற்கு விபரமாவது:- அல்லாஹு தஆலாவின் நூறு (பிரகாசம்) என்கிற நெருப்பைக் கொண்டு வெளிச்சம் எடுத்துக் கொண்டு, அவனுடைய ஸிஃபாத்துகள் என்ற பிரகாசங்களை பூமியில் அவனுக்கு பதிலாக வெளியிடவும் கூடிய விளக்கு இன்ஸான் என்ற விளக்கைத் தவிர வேறொன்றுமில்லை. எவ்வாறெனில், இன்ஸானானவன் அல்லாஹு தஆலாவினது பிரகாசத்தினுடைய பைஜை (அருளை) ஒப்புக் கொள்வதற்கு (ஏற்றுக் கொள்வதற்கு வாங்கிக் கொள்வதற்கு) தகுதியுள்ளவனாக இருக்கிறான். ஏனெனில், அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா கல்பு என்ற பளிங்கியில் ஸிர்ரு (இரகசியம்)

என்கிற விளக்கைக் கொடுத்திருக்கிறான். அந்தப் பளுங்கியானது உடலம் என்ற மாடத்தில் இருக்கிறது. இன்னும் கல்புடைய பளிங்கியில் ரூஹு என்கிற ஜைதூன் எண்ணெய் இருக்கிறது. இன்னும் பிரகாசம் என்கிற நெருப்பு அதனைத் தொடாமலிருந்த போதிலும் சரியே, அக்லு (அறிவு விவேகம்) என்கிற ஸிஃபாத்துகளினால் அதனுடைய ஜைத்தூன் எண்ணெய் பிரகாசிக்க முடிகிறது. இன்னும் ஸிர்ரு என்கின்றன விளக்கில் கிபாஉ (மறைவு) என்ற திரி இருக்கிறது. ஆகவே, அல்லாஹு தஆலா பூமியில் கலீஃபாவை ஏற்படுத்த நாடுவானாயின் தன்னுடைய ஜமாலுடைய பிரகாசத்தை (நூரை)க் கொண்டு ஸிர்ரே இன்ஸானி (மனிதனுடைய இரகசியம்) என்ற விளக்குக்கு தஜல்லியாகுகின்றான். ஆகவே, அவன் தனது பிரகாசத்திற்கு கிபாஉ என்கிற திரிக்கு தான் நாடியவர்களுக்கு வழி காண்பிக்கிறான். ஆகவே, அல்லாஹு தஆலாவின் நூறு (பிரகாசம்) என்கிற நெருப்பைக் கொண்டு தன்னுடைய விளக்கிற்குப் பிரகாசத்தை எடுத்துக் கொள்கிறான். ஆகவே, அவன் (மனிதன்) தன்னுடைய றப்பின் பிரகாசத்தின் பேரிலிருக்கிறான். அப்பொழுது அவன் அல்லாஹு தஆலாவுக்கு அவனுடைய பூமியில் கலீஃபாவாக ஆகிவிடுகிறான். ஆகவே அவனுடைய ஸிஃபாத்துகள் என்கிற பிரகாசங்கள் இந்த ஆலத்தில் நீதம், தர்மம், உபகாரம், கருணை ஆகியவற்றைக் கொண்டு அவற்றிற்கு உரியவர்களிடத்திலும், அடக்குமுறை, கோபம், பழி வாங்குதல் ஆகியவற்றைக் கொண்டு அவற்றிற்கு உரியவர் களிடத்திலும் வெளியாகின்றன. (தப்ஸீர் ரூஹுல் பயான்)

"ஆதமை கலீஃபாவாக ஆக்குவதிலுள்ள நலவையும், சந்ததியினரில் எனக்கு கீழ்ப்படிந்தவனும் கீழ்ப்படியாதவனும் உண்டாவான், அவர்கள் இடத்தில் நீதம் வெளியாகும். அல்லது அவருடைய சந்ததியினரில் நபிமார்கள் ஒலிமார்கள் உண்டாவார்கள் அல்லது உங்களிலும் எனக்கு மாறு செய்கிறவன் இருக்கிறான், அல்லது அவர்கள் எனக்கு மாறு செய்வார்கள், நான் அவர்களுக்குப் பிழை பொறுப்பேன் என்று நான் அறிவேன் என்பதுதான் إِنِّي أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ **நீங்கள் அறியாததை நான்**

நிச்சயமாக அறிவேன் என்று அல்லாஹு தஆலா கூறியதன் கருத்தாகும்.

அப்படி அல்லாஹு தஆலா சொல்லவே "நம்முடைய இறைவன் நாடினதைச் செய்யட்டும்; அவன் யாரைப் படைத்தபோதிலும் நம்மைப் பார்க்கினும் சங்கை பொருந்தியவர்களைப் படைக்க மாட்டான்; அப்படிப் படைத்தாலும் குற்றமில்லை; நம்மை அந்த படைப்பை விட முந்திப் படைத்த படியாலும், அந்த படைப்பு காணாததை நாம் கண்டிருப்பதாலும் நாம் அவர்களைவிட அறிந்தவர்களாக இருக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டார்கள். பிறகு இறைவன் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்தான்.

தஸ்பீஹ் என்பது அல்லாஹு தஆலாவின் அந்தஸ்துக்குத் தகாததை விட்டு அவனைத் தூய்மைப்படுத்தல்.

தக்தீஸ் என்பது அல்லாஹு தஆலாவுக்குத் தகுதியானவை களைத் தரிபடுத்தல்.

وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلَائِكَةِ
فَقَالَ أَنْبِئُونِي بِأَسْمَاءِ هَٰؤُلَاءِ إِنْ كُنْتُمْ صَادِقِينَ ۝

31. இன்னும் ஆதமுக்கு (பூமியிலுள்ள) எல்லா (பொருட்களின்) பெயர்களையுங் கற்றுக் கொடுத்துப் பின்னர், அவற்றை அந்த வானவர்களுக்கு முன்பாக்கி 'நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இவற்றின் பெயர்களை எனக்கு அறிவியுங்கள்' என்று கூறினான்.

வஹபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுவதாவது:- அல்லாஹு தஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைக்க நாடியபோது பூமியை நோக்கி, "உன்னிலிருந்து ஒரு கலீஃபாவைச் சிருஷ்டிக்கப் போகிறேன். அவரின் சந்ததியில் எவர் எனக்கு வழிப்படுகிறாரோ அவரை நான் சுவர்க்கத்தில் புக வைப்பேன்.

இன்னும், அவர்களில் எவர் எனக்கு மாறு செய்கிறாரோ அவரை நரகத்தில் புக வைப்பேன்" என்று அல்லாஹு தஆலா அறிவித்தான். அதற்குப் பூமி அல்லாஹு தஆலாவை நோக்கி "நரகத்திற்கு அனுப்பப்படும் ஒரு படைப்பை என்னிலிருந்தா நீ படைக்கப் போகிறாய்?" என்று வினவிற்று. அதற்கு, அல்லாஹு தஆலா "ஆம்" என்று கூறினான். உடனே, பூமி அழுதது. அதனால் அதிலிருந்து நீரூற்றுகள் உண்டாகி, கியாமத்து நாள்வரை ஒலித்தோடவாரம்பித்தன.

பிறகு, அல்லாஹு தஆலா ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை பூமியிலுள்ள கரும் பிரதேசம், வெண்மையான பிரதேசம், மலைப் பிரதேசம், பள்ளத்தாக்கான பிரதேசம், கரடுமுரடான பிரதேசம், மிருதுவான பிரதேசம் ஆகியவற்றிலிருந்து நான்கு கோணங்களிலிருந்தும், ஒரு பிடிமண் எடுத்துவரும்படி கட்டளையிட்டு அனுப்பினான். எனவே, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமியில் மண் எடுப்பதற்காக பூமிக்கு வந்தபோது, பூமி அவரை நோக்கி "உம்மை அனுப்பி வைத்த அல்லாஹு தஆலாவின் மீது சத்தியமாகத் தாங்கள் என்னிலிருந்து எதையும் எடுக்க வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டது. ஏனெனில், அரசனது தர்பாரில் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்வதால் அநேக நன்மைகள் ஏற்படுகின்றன என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், அதில் பெரும் அபாயமும் இருக்கிறது. ஆகவே, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அங்கிருந்து மண் எடுக்காமல் திரும்பச் சென்று விட்டார்கள். அல்லாஹு தஆலா ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி, "பூமியிலிருந்து மண் கொண்டு வந்தீரா" என்று வினவியபோது "இறைவா! எனது றப்பே! உனது வலுப்பமான திருநாமத்தைக் கொண்டு அந்தப் பூமி சத்தியம் செய்தது. ஆதலின், அதனை லட்சியம் செய்யாமல் மண் எடுக்க நான் விரும்ப வில்லை" என்று கூறினார்.

பிறகு, ஹளரத் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலா அனுப்பி வைத்தான். அவர் பூமிக்கு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சத்தியம் செய்து கெஞ்சிக்

கேட்டுக் கொண்டது போல ஹளரத் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகியமவர்களிடத்திலும் இந்த பூமி சத்தியம் செய்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டது. ஆகவே, ஹளரத் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அல்லாஹு தஆலாவிடம் திரும்பச் சென்று ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தெரிவித்தது போலவே தெரிவித்துக் கொண்டார்கள்.

பிறகு, ஹளரத் இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலா அனுப்பி வைத்தான். அவரிடமும் பூமி ஹளரத் ஜிப்ரயீல், மீக்காயில் அலைஹிமுஸ்ஸலாம் ஆகியவர்களிடம் சத்தியம் செய்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டது போலவே கெஞ்சிக் கேட்டுக் கொண்டது. ஆகவே, அவரும் அல்லாஹு தஆலாவிடம் சென்று ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்கள் கூறியதுபோலவே கூறினார். ஆகவே, இம்மூன்று மலக்குகளும் அல்லாஹு தஆலாவின் திருநாமத்தைக் கூறி சத்தியம் செய்ததை மதித்து மண் எடுக்காமலே திரும்பச் சென்று விட்டார்கள்.

பிறகு, மலக்குல் மவ்த் ஹளரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலா பூமியிடம் அனுப்பி வைத்தான். அவர் பூமியிடம் வந்தபோது "என்னிலிருந்து இன்றைய தினம் எடுக்கிற மண்ணில் ஒரு பாகம் நாளைய தினம் நரகத்திற்குப் பங்காக இருக்கும்படி ஏற்படுத்தி என்னிடம் தங்களை அனுப்பிய இறைவனின் சங்கையைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன். தாங்கள் என்னிலிருந்து மண் எடுக்க வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டது. அதற்கு ஹளரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அல்லாஹுதஆலாவுடைய கட்டளைகளில் ஒன்றுக்கு நான் மாறு செய்வதை விட்டு அவனுடைய சங்கையைக் கொண்டு காவல் தேடுகிறேன்" என்று கூறி, பூமியின் வேண்டுகோளை நிராகரித்து விட்டு, பூமியிலிருந்து ஒரு பிடிமண் எடுத்துக் கொண்டார். அதாவது பூமியினுடைய நான்கு மூலைகளிலிருந்தும் 40 முழ அளவிற்கு பூமியின் மேற்பரப்பிலிருந்து மண் எடுத்தார். இதனால்தான் மனிதர்கள் அந்த மண்ணிலுள்ள நிறத்திற்கும், இனத்திற்கும் தக்கவாறு

வெவ்வேறு விதமான நிறமும் குணமும் உள்ளவர்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே, மனிதரில் வெள்ளையரும், கருப்பரும், சிவப்பரும், மிருதுவான தன்மையுள்ளவரும் வன்னெஞ்சம் உள்ளவரும் இருந்து வருகின்றனர்.

அந்த ஒரு பிடி மண்ணிலிருந்த ஒவ்வொரு அணுவும் மனிதனுக்குரிய உடலின் அசலாக ஏற்பட்டு விட்டது. எனவே, மனிதன் மரணித்து விட்டால் எந்த இடத்திலிருந்து அந்த மண் எடுக்கப்பட்டதோ அந்த இடத்தில் அவன் அடக்கப்பட்டு விடுகிறான்.

பிறகு, ஹளரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்த ஒருபிடி மண்ணுடன் வானத்தின்பால் சென்றார். அல்லாஹு தஆலா அந்த மலக்கிடம் "நீர் பூமிக்குச் சென்றபோது அது உம்மிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதல்லவா? அந்தக் கெஞ்சுதலுக்காக நீர் பூமியின் மீது கருணை காட்டி இரக்கம் கொண்டு விட்டீரோ?" என்று வினவினான். அதற்கவர் "அந்தப் பூமி சொன்னதைப் பார்க்கினும் உனது கட்டளை மிகவும் கடமையானது என்பதை நான் கண்டு கொண்டேன்" என்று பதில் கூறினார். அப்பொழுது அல்லாஹு தஆலா அவரை நோக்கி "நீர்தான் அந்தப் பூமியில் உண்டாகும் புதல்வர்களின் உயிர்களைக் கைப்பற்றுவதற்குத் தகுதியானவர்" என்று கூறினான்.

இதனால்தான் ஹளரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயிர் வாங்கும் வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாக **இன்ஸானுல் காமில்** போன்ற கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பூமியிலிருந்து ஒரு பிடிமண் எடுத்து விட்டதால் அந்தப் பூமியின் ஒருபிடி அளவுக்குக் குறைவேற்பட்டு விட்டதல்லவா? இந்தக் குறைவைக் குறித்து பூமி அல்லாஹுதஆலாவிடம் "எனது றப்பே! என்னில் குறைவு ஏற்பட்டு விட்டது" என்று முறையிட்டது. அல்லாஹு தஆலா அந்த மண்ணைப் பார்க்கிலும் மிகவும் மணமானதையும் அழகானதையும் உன்னில் திரும்பக் கொண்டு வருவது எனது கடமையாகும் என்று கூறி அதன் வருத்தத்தை அல்லாஹு தஆலா

சாந்தப்படுத்தினான். இதனால்தான் இறந்தவர்கள் கஸ்தூரி முதலிய மணமான பொருட்களால் பூசப்பட்டு அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்று **ரௌலத்துல் உலமா** என்ற கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிறகு, அந்த மண்ணை மக்கத்துக்கும் தாயிஃபுக்கு மிடையிலுள்ள 'வாதியே நுஃமான்' என்ற பள்ளத்தாக்கில் வைக்கும்படி ஹளரத் இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹு தஆலா கட்டளையிட்டான். கருணை, தயை என்ற மழையை அதன் மீது பெய்யும்படி செய்து, அதனைக் களிமண்ணாக்கி, அதிலிருந்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உருவத்தை உண்டாக்கினான்.

"ஆதமுடைய மண்ணை என் கையால் நாற்பது நாட்கள் வரை குழைத்தேன்" என்பதாக ஹதீஸ் குத்ஸியில் கூறப்பட்டிருக்கிறது. அந்த நாள் ஒவ்வொன்றும் இந்த உலகத்திலுள்ள நாள் கணக்கின்படி ஆயிரம் வருடத்திற்குச் சமமாக இருக்கிறது. பிறகு, அது உலருவதற்காக நாற்பது வருடம் போட்டு வைத்திருந்தான். பிறகு அதன் மீது, ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது உடல் என்ற குகையின் மீது 39 வருட காலம் "துக்கம்" என்கிற மழையை பெய்யச் செய்து, ஒரு வருடகாலம் சந்தோஷம் என்கிற மழையை பெய்யச் செய்தான். இதனால்தான் ஆதமுடைய மக்களில் துக்கம் அதிகமாக இருக்கிறது. எனினும், அந்தத் துக்கத்தின் முடிவு சந்தோஷமாகத்தான் இருக்கும்.

தவிர, மலக்குகள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய உருவத்தின் உடல் (குகை) கிடக்கு மிடத்தின் வழியே நடந்து செல்பவர்களாகவும், அந்தக் குகையின் (உடலின்) அழகையும், நீளத்தையும் பார்த்து ஆச்சரியப்படுபவர்களாகவும் இருந்தார்கள். அவருடைய நீளம் 500 முழமுள்ளதாக இருந்தது. ஆனால், அந்த முழம் எவ்விதமான முழம் (நமது மனிதருக்குள்ள முழமா அல்லது வேறு விதமான முழமா?) என்பதை அல்லாஹுதஆலாதான் மிகவும் அறிந்தவன். அவருடைய தலை வானத்தைத் தொடுவதாக இருந்தது. அந்த மலக்குகள் இது போன்ற உருவத்தை இதற்கு முன் பார்த்ததில்லை. ஆதலால், இதனைப் பார்த்து அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

ஒரு முறை இப்லீஸ் அந்த குகை (உடல்) இருக்கும் வழியே சென்றான். ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது குகை (உடல்) கிடப்பதை அவன் பார்த்து "எதற்காக இது படைக்கப்பட்டது?" என்று கூறி தனது கையால் அதனைத் தட்டிப் பார்த்தான். அது குழாய்களைப் போல் நடுவில் ஓட்டை யுள்ளதாக இருக்கக் கண்டு, அதன் வாய் வழியே நுளைந்து பின் துவாரத்தின் வழியே வெளியேறினான். பிறகு, தன்னுடன் இருந்த மலக்குகளை நோக்கி "இது நடுவில் பொறை விழுந்த ஒரு படைப்பு. இது நிலைக்காது" என்றும் கூறினான். பிறகு, அவன் அந்த மலக்குகளை நோக்கி "உங்களைப் பார்க்கினும் இது மேன்மையானதாக ஆக்கப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று வினவினான். அதற்கு அந்த மலக்குகள் "எங்களது றப்புக்கு நாங்கள் கீழ்ப்படிவோம்" என்று பதில் கூறினார்கள். அப்பொழுது அவன் தனது மனதுக்குள் "என்னைப் பார்க்கினும் இதற்கு மேன்மை கொடுக்கப்பட்டால் அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் இதற்கு வழிப்பட மாட்டேன். இன்னும், நான் இதனைப் பார்க்கினும் மேன்மை யாக்கப் பட்டால் இதனை நான் அழித்து விடுவேன்" என்று சொல்லிக் கொண்டான்.

பிறகு, அவன் தனது வாயின் எச்சில்களை ஒன்று கூட்டி, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது குகையின் (உடலின்) மீது துப்பினான். இப்லீஸுடைய அந்த எச்சில் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது தொப்புள் இருந்த இடத்தின் மீது விழுந்தது. எனவே, அல்லாஹு தஆலா ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட்டதன்படி, அவர் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது வயிற்றிலிருந்த எச்சில் பட்ட இடத்தைத் தோண்டி எடுத்து விட்டார். ஆகவே, தொப்புள் குழி ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தோண்டி எடுத்ததால் ஏற்பட்டது.

பிறகு, அல்லாஹு தஆலா இப்லீஸுடைய எச்சில் பட்ட அந்த மண்ணிலிருந்து நாயைப் படைத்தான். ஆகவே நாய்க்கு மூன்று விதமான தன்மைகள் இருக்கின்றன.

1. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது

மண்ணிலிருந்து நாய் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் அது மனிதருடன் சேர்ந்து இருக்கிறது.

2. ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கைபட்டதாக இருப்பதால், அது இரவு நேரங்களில் தூங்காமல் வெகு நேரம் வரை விழித்திருக்கிறது.

3. அதில் இப்லீஸுடைய எச்சில் கலப்பு இருப்பதால் மனிதரையும் மற்றவைகளையும் அது கடித்துத் துன்புறுத்துகிறது.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது குகையில் (உடலின்) (ரூஹை) உயிரை ஊத அல்லாஹு தஆலா நாடியபோது உயிரை நோக்கி, அந்தக் குகைக்குள் நுழையும்படி கட்டளை யிட்டான். அது இருண்ட இடத்திற்குள் நுழையமாட்டேன் என்று கூறிற்று. அல்லாஹு தஆலா இரண்டாவது தடவையும் கூறினான். இரண்டாவது தடவையிலும் உயிர் அப்படியே கூறி மறுத்தது. மூன்றாவது தடவையும் கூறினான். மூன்றாவது தடவையும் அப்படியே கூறி மறுத்தது. அப்பொழுது அல்லாஹு தஆலா அந்த ஆத்மாவை நோக்கி "நீ திருப்தியில்லாமலே அதற்குள் நுழைந்து, திருப்தி யில்லாமலே அதிலிருந்து வெளியேறு" என்று கூறினான். அது நுழைந்தது. இதனால்தான் உயிர் உடலிலிருந்து சந்தோஷமாக வெளியேறு வதில்லை.

பிறகு, உயிர் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது தலை, நெற்றி, செவி, நாக்கு வரை நிறைந்தது. பிறகு, உடலுக்குள் வந்து காலுக்கும் வந்தது. அதற்கப்புறம் செல்ல வழியில்லாமல் அந்த உயிர் மீண்டும் மூக்குத் துவாரத்திற்கு வந்தது. அப்பொழுது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தும்மல் வந்தது. ஆகவே, அந்தத் தும்மலுக்கு பதிலாக **அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்** என்று சொல்லும்படி அல்லாஹு தஆலா கட்டளையிட்டான். அவர் அவ்வாறே சொன்னார். அதற்கு அல்லாஹு தஆலா **யர்ஹமுகல்லாஹு** (உமக்கு அல்லாஹ் கிருபை செய்வானாக) என்று சொல்லிக் கொண்டு, "ஆதமே! இதற்காகத்தான் நாம் உம்மைப் படைத்தோம்" என்று சொன்னான்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது முட்டுக் காலுக்கு உயிர் வந்தபோது அவர் குதிக்க நாடினார். ஆனால், அப்படிக் குதிக்க அவரால் முடியவில்லை. எனினும் அந்த உயிர் அவருடைய பாதம் வரை வந்தபோது அவர் குதித்தார். இதனால்தான் அல்லாஹு தஆலா மனிதரைக் குறித்து **மனிதன் அவசரப்பட்டவனாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறான்** ஸூரத்துல் இஸ்ரா 11 என்று கூறி இருக்கிறான்.

இவ்விதமாக அல்லாஹுதஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ ஸலாம் அவர்களைப் படைத்த பின்பு அவருக்கு எல்லா பொருட்களின் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். ஆகவே, எல்லா பெயர்களும் தௌக்கீஃபிய்யா வாக இருக்கின்றன. எனவே, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வார்த்தைகளையும், வார்த்தை களுக்குள்ள பொருள்களையும், இன்ன பொருளுக்கு இன்ன வார்த்தைதான் தகும் என்றும் தெரிந்து கொள்ளத் தக்கவாறு ஒரு அறிவை அல்லாஹு தஆலா அவருக்குச் சிருஷ்டித்தான் என்று கல்விமான்களில் பெரும்பாலோர் கூறியிருக்கின்றனர்.

ரிவாயத்து:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹு தஆலா 40 ஆயிரம் பாஷைகளைக் கற்றுக் கொடுத்திருந்தான். அவர் கோதுமைக் கனியைப் புசித்தபோது அல்லாஹு தஆலா அவருக்கு அறிவித்திருந்த பாஷைகளில் அறபிப் பாஷையைத்தவிர மற்ற பாஷைகள் அனைத்தையும் அவரிலிருந்து அகற்றிவிட்டான். பிறகு அவருக்கு அல்லாஹு தஆலா நுபுவ்வத்தைக் கொடுத்த போது மறுபடியும் அந்தப் பாஷைகள் அனைத்தையும் அவர் உணர்ந்து கொள்ளும்படி செய்தான். ஆகவே, கியாமத்து நாள் வரையுள்ள அவரது சந்ததியினராகிய மனிதர்கள் பேசும் சகல பாஷைகளையும் அவர் பேசுபவராக இருந்தது அவருக்குள்ள முஃஜிஸாத்துகளில் ஒன்றாகும்.

சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுவதாவது:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹு தஆலா ஆயிரம் தொழில்களைக் கற்றுக் கொடுத்து "ஆதமே! உமது சந்ததியினரை நோக்கி நீங்கள் உலகத்தைத் தேடுவதாக இருந்தால்

இந்தத் தொழில்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு தேடுங்கள். மார்க்கத்தையும் ஷரீஅத்தினுடைய கட்டளைகளையும் கொண்டு உலகத்தைத் தேடாதீர்கள்'' என்று கூறிவிடும் என்பதாகக் கூறினான். தவிரவும், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தச்சுவேலை செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தையல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் ஸாலிஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உருக்குச் சட்டை செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தாலும், பைத்துல் மாலிலிருந்து ஒரு காசும் தமது சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்வதில்லை. தம்முடைய சொந்த செலவுக்காகப் பிரத்தியேகமான ஒரு தொழில் செய்து கொண்டிருந்தார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஆட்டுப் பண்ணைகள் வைத்து அவற்றை மேய்ப்பவர்களாகவும் இருந்தார்கள். இன்னும், நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது வீட்டில் பெரும்பாலும் தையல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆடவர்களில் அப்றார்களாக இருப்பவர்களின் தொழில் தையல் என்பதாகவும் பெண்களில் அப்றார்களாக இருப்பவர்களின் தொழில் நூல் நூற்பது என்பதாகவும் ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

قَالُوْا سُبْحٰنَكَ لَا عِلْمَ لَنَآ اِلَّا مَا عَلَّمْتَنَا ؕ اِنَّكَ اَنْتَ الْعَلِيْمُ الْحَكِيْمُ ۝

32. (அதற்கு) அவர்கள் **''நீ கற்றுக் கொடுத்ததைத் தவிர எங்களுக்கு (வேறு) அறிவு கிடையாது; நீ தூய்மையானவன்; நிச்சயமாக நீயே மிகவும் அறிந்தவன்; விவேகமுள்ளவன்''** எனக் கூறினார்.

لَا عِلْمَ لَنَآ اِلَّا مَا عَلَّمْتَنَا **நீ எங்களுக்கு கற்றுக்கொடுத்ததைத் தவிர (வேறு) அறிவு எங்களுக்கு இல்லை** என்று மலக்குகள் கூறியதிலிருந்து, மேற்கண்ட ஆயத்தில் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் ''பூமியில் விஷமஞ் செய்பவர்களையா நீ அதில் ஏற்படுத்த போகின்றாய்'' என்று வினவியது ''அல்லாஹு தஆலா செய்யும் காரியம் சரியில்லை'' என்று ஆட்சேபித்துக் கூறியதன்று என்பதும், அவர்கள் விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காகவே அவ்விதம் கேட்டார்கள் என்றும் தெரிய வருகிறது.

அடியார்கள் தங்களுக்கு இருக்கிற குறைகளையும், அல்லாஹு தஆலா தங்களுக்குக் கொடுத்திருக்கிற அருள்களையும் பற்றி மறந்திருக்கக் கூடாது என்பதும், தனக்குத் தெரியாத விஷயத்தைப் பற்றி ஒருவர் கேட்டால் ''எனக்குத் தெரியவில்லை'' என்று சொல்வதற்குக் கூச்சப்படலாகாதென்பதும், தனக்குத் தெரிந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டால், அதனை மறைக்காமல் சொல்ல வேண்டும் என்பதும் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது. ''எனக்குத் தெரியவில்லை'' என்று கூறுவது அறிவில் ஒரு பகுதி என்பதாகப் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அபூயூசுஃபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் ஒரு சட்டத்தைப் பற்றி வினவியபோது ''அவர் எனக்குத் தெரியவில்லை'' என்று கூறினார். அப்பொழுது ஜனங்கள் ''உமக்குத் தெரியவில்லை என்றால் நீர் பைத்துல் மாலிலிருந்து தினந்தோறும் சம்பளம் வாங்கிக் கொள்கிறீர், அப்பால் எனக்குத் தெரியாது என்று கூறுகிறீரே'' என்பதாகக் கூறினார்கள். அதற்கு அவர் ''எனக்குத் தெரிந்திருக்கிற அளவிற்கு நான் பைத்துல் மாலிலிருந்து சம்பளம் வாங்கிக் கொள்கிறேன்; நான் தெரிந்து கொள்ளாமலிருக்கிற அளவிற்கு எனக்கு சம்பளம் கொடுக்கப்படுமாயின் இந்த உலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் எனக்குக் கொடுத்தாலும் போதாது'' என்று பதில் கூறினார்.

ஹிக்காயத்து:- ஒரு ஆலிமிடம் ஒரு சட்டத்தைப் பற்றிக் கேட்கப் பட்டது. அப்பொழுது அந்த ஆலிம் மின்பரின்மீது இருந்தார். தன்னிடம் கேட்கப் பட்ட சட்டம் தனக்குத் தெரியாது என்று அவர் பதில் கூறினார்.

அதற்கு `ஜாஹிலான (அறியாத) வர்களுக்கு மின்பர் தகுதியான இடமல்ல' என்று சொல்லப்பட்டது. அதற்கு மறுமொழியாக அந்த ஆலிம் "நான் உயர்த்தப்பட்டிருப்பதெல்லாம் எனக்குள்ள கல்வியின் அளவுக்குத்தான். ஆனால், எனக்குள்ள அறியாமையின் (ஜஹ்லின்) அளவிற்கு நான் உயர்த்தப் பட்டிருப்பேனாயின் நான் வானத்திற்கு உயர்ந்திருப்பேன்" என்று கூறினார்.

قَالَ يَآدَمُ أَنْبِئْهُمْ بِأَسْمَآئِهِمْ ۚ فَلَمَّآ أَنْبَأَهُمْ بِأَسْمَآئِهِمْ
قَالَ أَلَمْ أَقُلْ لَّكُمْ إِنِّىٓ أَعْلَمُ غَيْبَ السَّمٰوٰتِ وَالْأَرْضِ
وَأَعْلَمُ مَا تُبْدُوْنَ وَمَا كُنْتُمْ تَكْتُمُوْنَ ۝

33. (பின்னர் அல்லாஹ்) "ஆதமே! நீர் அவற்றின் பெயர்களை (அமரர்களாகிய) அவர்களுக்கு அறிவியும்" எனக் கூறினான். அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அவர் அறிவித்தபோது "நிச்சயமாக நான் வானங்களிலும், பூமியிலும் (உள்ள) இரகசியங்களை அறிவேன் என்றும் இன்னும் நீங்கள் வெளிப்படுத்தியதையும் நீங்கள் மறைத்து வைத்திருப்பதையும் அறிவேன் என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்று (அல்லாஹ்) கூறினான்.

"வானங்களிலும் பூமியிலும் மறைந்திருக்கிறதை நான் அறிவேன், இன்னும் நீங்கள் வெளிப்படுத்தி இருப்பதையும் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன்" என்று அல்லாஹு தஆலா இதற்கு முன் மேலே சொல்லவில்லையே, அப்படி யிருக்க மலக்குகளைப் பார்த்து இறைவன் இப்படிக் கூறுவது சரியா? என்ற சந்தேகம் இந்த இடத்தில் சிலருக்கு உண்டாகக்கூடும். அவ்வாறு சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் **நீங்கள் அறியாததை நான் அறிவேன்** என்று அல்லாஹு தஆலா இதற்கு முந்திய 30வது ஆயத்தில் கூறியிருக்கிறான். அந்த வாக்கியம் சுருக்கமாகக் கூறப்பட்ட வாக்கியம். சுருக்கமாக கூறிய இதே

விஷயத்தைத்தான் அல்லாஹு தஆலா இந்த ஆயத்தில் கொஞ்சம் விபரமாகச் சொல்லிக் காண்பித்திருக்கிறான். ஆதலின், இந்த ஆயத்தில் கூறிய விஷயங்கள் அனைத்தும் "நீங்கள் அறியாததை நான் அறிந்திருக்கிறேன்" என்ற வாக்கியத்திற்குள் அடங்கி இருக்கின்றன.

தவிர, அல்லாஹு தஆலா மலக்குகளுக்கு இப்படிச் சொல்லிக் காட்டியதில் மற்றொரு விஷயமும் இருக்கிறது. அதாவது அவசரப்பட்டுக் கேள்வி கேட்பதைப் பார்க்கினும் தங்களுக்கு அல்லாஹு தஆலா அறிவித்துக் கொடுக்கட்டும் என்று எண்ணி, அவனிடம் கேள்வி கேட்காமல் இருப்பதுதான் சிறந்தது என்பதும் நமக்கு அறிவிக்கப் படுகிறது.

இன்னும், இந்த ஆயத்து மனிதனுக்குள்ள சிறப்பையும், கல்வியின் பெருமையையும் எடுத்துக் காண்பிக்கிறது. எவ்வாறெனில் மலக்குகள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்க்கினும் அதிகமாக வணக்கம் புரிபவர்கள். அப்படி இருந்தும் அவர்கள் கிலாஃபத் பதவிக்கு அருகதையுள்ளவர்களாக வில்லை. ஆகவே, கிலாஃபத் பதவியை வகிப்பதற்கு கல்வி இருக்க வேண்டியது அவசியமென்றும், மிகவும் முக்கியமென்றும் தெரிகிறது. இன்னும், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்த மலக்குகளைப் பார்க்கினும் அதிகம் அறிந்தவராக இருக்கிறார். அதிகம் அறிந்தவர்தான் அதிகமான மகத்துவமுள்ளவராவார். இதன்படி அந்த மலக்குகளைப் பார்க்கினும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதிகம் மகத்துவ முள்ளவராக இருக்கிறார் என்ற விஷயமும் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

இதனைக் குறித்துத்தான் அல்லாஹு தஆலா தனது திருமறையில் மற்றொரு இடத்தில் **"அறிந்தவர்களும் அறியாதவர் களும் சரியாவாரா? என்று (நபியே) நீர் கூறுக"** சூரத்துஜ்ஜுமர் 9 என்பதாகக் கூறி இருக்கிறான். ஆகவே, கல்வி மிகவும் சிறந்தது என்று ருஜுவாகிறது. என்றாலும் கல்வியுடன் இபாதத் என்னும் வணக்கமும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், கல்வி மரத்தைப்

போலவும், வணக்கம் அந்த மரத்தின் கனியைப் போலவும் இருக்கிறது. எனவே, மரத்துக்குத்தான் சிறப்பு அதிகம். ஆனாலும், பிரயோஜனம் அடைவது அம்மரத்தின் கனியைக் கொண்டே இருக்கிறது.

ஹதீஸ்:- கல்வியுடைய சபையில் இருப்பது ஆயிரம் ரக்அத்து (நஃபில்) தொழுவதைப் பார்க்கினும், ஆயிரம் நோயாளிகளை நலம் விசாரிப்பதைப் பார்க்கினும், ஆயிரம் ஜனாஸாவுக்குச் செல்வதைப் பார்க்கினும் சிறந்தது'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது "அல்லாஹ் வுடைய ரசூலே! குர்ஆன் ஓதுவதைப் பார்க்கினுமா?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "கல்வி இல்லாமல் குர்ஆன் பிரயோஜனம் செய்யுமா?'' என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் ஹளரத் அபுதர்ரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "பெற்றோர்கள் முகத்தைப் பார்ப்பதும் வணக்கமாகும்; சங்கையாக்கப்பட்ட கஅபாவைப் பார்ப்பதும் வணக்கமாகும். குர்ஆன் ஷரீபைப் பார்ப்பதும் வணக்கமாகும். ஆலிமுடைய முகத்தைப் பார்ப்பதும் வணக்கமாகும். ஒரு ஆலிமை எவர் சந்திக்கிறாரோ அவர் என்னை சந்தித்தவரைப் போலாகிறார். ஒரு ஆலிமுடன் எவர் முஸாபஹாச் செய்கிறாரோ அவர் என்னுடன் முஸாபஹாச் செய்தவரைப் போலாகிறார். ஒரு ஆலிமிடத்தில் எவர் உட்கார்ந்திருக்கிறாரோ அவர் என்னுடன் உட்கார்ந்தவரைப் போலாகிறார். இன்னும் எவர் என்னுடன் இம்மையில் உட்கார்ந் திருந்தாரோ அவரை அல்லாஹு தஆலா கியாமத்து நாளில் என்னுடன் உட்கார வைப்பான்''.

ஹதீஸ்:- நரகத்தை விட்டு விடுதலை பெற்றவர்களைப் பார்க்க வேண்டுமென்று ஒருவர் நாடுவாராயின் அவர் கல்வி கற்பவர்களைப் பார்க்கட்டும். முஹம்மதுடைய உயிர் எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக கல்வி கற்கும் ஒருவர் ஒரு ஆலிமுடைய தலைவாசலுக்கு (கல்வி கற்பதற்காக) நடந்து செல்வாராயின் கல்வி கற்கச் செல்லும் அவரின் ஒவ்வொரு அடிக்கும் ஒரு வருடத்தினுடைய

வணக்கம் எழுதப்படுகிறது. இன்னும் ஒவ்வொரு அடிக்கும் சுவர்க்கத்தில் ஒரு மாளிகை உண்டாக்கப்படுகிறது. இன்னும் அவர் பூமியில் நடப்பாராயின் அந்த பூமி அவருக்காக மன்னிப்புக் கேட்கிறது. இன்னும் கல்வி கற்கும் அவர் காலையிலும் மாலையிலும் மன்னிக்கப் பட்டவராகி விடுகிறார்.

وَإِذْ قُلْنَا لِلْمَلَٰٓئِكَةِ ٱسْجُدُوا۟ لِءَادَمَ فَسَجَدُوٓا۟ إِلَّآ إِبْلِيسَ
أَبَىٰ وَٱسْتَكْبَرَ وَكَانَ مِنَ ٱلْكَٰفِرِينَ ۝

34. அப்பால், "ஆதமுக்கு நீங்கள் சுஜூது செய்யுங்கள்" என்று நாம் வானவர்களுக்குக் கூறியபோது 'இப்லீ'ஸைத்தவிர, அவர்கள் யாவரும் (அவருக்கு) 'சுஜூது' செய்தார்கள். அவன் மட்டும் (கட்டளைக்குக் கீழ்ப்படிவதை விட்டு) விலகிப் பெருமை கொண்டு நிராகரிப்பவர்களிலாகி விட்டான்.

சுஜூது என்பது அசலில் பணிவதற்குச் சொல்லப்படுகிறது. சுஜூது என்பதற்கு ஷரீஅத்தில் வணக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் நெற்றியை தரையில் வைத்தல் என்பது பொருளாகும். ஷரீஅத்துடைய அர்த்தத்தின்படி ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாமுக்கு அவர்கள் சுஜூது செய்யவில்லை என்றும், அவர்கள் அல்லாஹு தஆலாவுக்குத்தான் சுஜூது செய்தார்கள். ஆயினும் அவருடைய சங்கைக்காக அவரைத் தங்கள் சுஜூதுக்குக் கிப்லாவாக ஆக்கி அல்லாஹு தஆலாவுக்கு சுஜூது செய்தார்கள் என்றும் சில இமாம்கள் கூறுகிறார்கள். அகராதிப் பொருள்படி கவனிப்போமானால் ஹளரத் யூசுஃபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு, அவருடைய சகோதரர்கள் மரியாதைக்காக சுஜூது செய்ததுபோல் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக மலக்குகள் பணிந்தனர் என்று அர்த்தம் செய்யலாம். முற்காலத்தில் மரியாதைக்காக (காணிக்கைக்காக) சுஜூது செய்வது ஜாயிஸாக இருந்தது. பிறகு, ஹளரத் ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு

சுஜூது செய்ய விரும்பியபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரியாதைக்காக (காணிக்கைக்காக) சுஜூது செய்வதையும் மாற்றி விட்டார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “சிருஷ்டிக்கப்பட்ட பொருள் எதுவும் அல்லாஹ்ற ஒருவனைத் தவிர வேறு ஒருவருக்கும் சுஜூது செய்வது தகாது. ஒருவருக்கு சுஜூது செய்யும்படி நான் ஒருவரை ஏவுவேனாயின், பெண் தனது கணவனுக்கு சுஜூது செய்ய வேண்டும் என்று நான் ஏவி இருப்பேன்” என்று கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த உம்மத்துகளாகிய முஸ்லிம்கள் ஒருவருக் கொருவர் காணிக்கை செலுத்துவது என்பது ஸலாம் சொல்லிக் கொள்வதுதான். ஆனால், ஸலாம் சொல்லும்போது குனிவது மக்ரூஹாகும். ஏனெனில், குனிந்து ஸலாம் சொல்வது யூதர்களுடைய வழக்கத்திற்கு ஒப்பாக இருக்கிறது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சிருஷ்டித்த போது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் அதிகம் அறிந்தவர்களா? அல்லது தாங்கள்தானா? என்ற விஷயம் மலக்குகளுக்குத் தெரியாமல் பிசகிக் கொண்டது. பிறகு, எல்லா பொருட்களின் பெயர்களையும் கூறும்படி அல்லாஹு தஆலா கட்டளையிட்ட போது மலக்குகளால் சொல்ல முடியாமலாகி, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்த பெயர்களைக் கூறிய போதுதான் தங்களைப் பார்க்கினும் ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம்அவர்கள்தான் அதிகம் அறிந்தவர்கள் என்ற விஷயம் மலக்குகளுக்கு வெளியாயிற்று. ஆனாலும், தாங்கள்தான் சிறந்தவர்களா? ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் சிறந்தவர்களா? என்ற விஷயத்தில் மறுபடியும் மலக்குகளுக்குப் பிசகு ஏற்பட்டது. அப்பால், ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுஜூது செய்யும்படி அல்லாஹு தஆலா மலக்குகளுக்குக் கட்டளையிட்டபோதுதான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் சிறந்தவர்கள் என்ற விஷயம் மலக்குகளுக்கு வெளியாயிற்று என்று கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுஜூது செய்யும்படி அல்லாஹு தஆலா மலக்குகளுக்கு ஏவி இருக்கிறான். ஆனால், மனிதர்களாகிய நாம் அவனைத் தவிர வேறு யாருக்கும் சுஜூது செய்யக் கூடாதென்று விலக்கி இருக்கிறான். **“நீங்கள் சூரியனுக்கோ சந்திரனுக்கோ சுஜூது செய்யாதீர்கள். இவற்றைப் படைத்த அல்லாஹ்றவுக்கே சுஜூது செய்யுங்கள்”** சூரத்துல் ஃபுஸ்ஸிலத் ஹாமீம் ஸஜ்தா 37 என்று திருமறையில் கூறி இருக்கிறான். இது அவன் நமக்குச் செய்த பெரும் அருள்களில் ஒன்றாகும்.

فَسَجَدُوْا **உடனே அவர்கள் சுஜூது செய்தார்கள்** மலக்குகள் ஒளியினால் (நூரினால்) படைக்கப்பட்டவர்கள். கீழ்ப்படிதல் பணியுதல் என்ற தன்மைகள் (ஒளி என்னும்) நூருக்கு இருக்கின்றன. ஆதலால், மலக்குகள் இந்தக் கட்டளைக்கு உடனே பணிந்து சுஜூது செய்தார்கள்.

இவர்களில் முதலாவதாக சுஜூது செய்தவர் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்றும், இதனால்தான் நபிமார்களுக்கு வஹி கொண்டு வரும் வேலையை ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுத்து அவரை அல்லாஹு தஆலா கண்ணியப் படுத்தினான் என்றும், இவருக்குப் பிறகு ஹளரத் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம், அப்பால், ஹளரத் இஸ்றாபீல் அலைஹிஸ் ஸலாம், அதற்குப் பிறகு ஹளரத் இஸ்றாயீல் அலைஹிஸ் ஸலாம் ஆகியவர்களும், அதற்குப் பிறகு இதர மலக்குகளும் சுஜூது செய்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹளரத் இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் முதல் முதலாக சுஜூது செய்தார்கள் என்றும், அவர் சுஜூது செய்து விட்டுத் தலையை உயர்த்தியபோது, அவருடைய நெற்றியில் குர்ஆன் ஷரீஃபு முழுவதும் எழுதப் பட்டிருப்பது வெளியாயிற்று என்றும், இது அவர் வழிபடும் விஷயத்தில் எல்லாரைப் பார்க்கினும் முந்தியதற்காக அல்லாஹு தஆலா அவருக்கு இந்த கண்ணியத்தை ஏற்படுத்தினான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்லீஸ் என்பவன் நெருப்பினால் சிருஷ்டிக்கப்பட்டவன். நெருப்புக்குப் பெருமை கொள்ளுதல் உயர்வைத் தேடுதல் ஆகிய

குணங்கள் இருக்கின்றன. ஆதலால்தான் இப்லீஸ் பெருமைகொண்டு, கீழ்ப்படியாமல் மீறினான். இப்லீஸ் மலக்கா அல்லது ஜின்னா என்ற விஷயத்தில் உலமாக்கள் ஏகோபித்த அபிப்பிராயம் சொல்லவில்லை. இப்லீஸ் ஜின்களில் உள்ளவன், அவனது வணக்கத்தினால் அவன் மலக்குகளுடன் சேர்ந்து விட்டான் என்று சிலர் சொல்கிறார்கள். சுஜூது செய்யும்படி கட்டளையிட்டது மலக்குகளுக்குத்தான். ஆகவே, இப்லீஸ் மலக்குகளில் ஒருவனாக இல்லாமலிருந்ததால் அவன் சுஜூது செய்யாமலிருந்ததற்காக அவன் லஅனத்துச் செய்யப்பட (சபிக்கப்பட) முடியாது. ஆதலின், இப்லீஸ் மலக்குகளில் உள்ளவன் என்று சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். இமாம் பகவி ரஹ்மத்துல்லாஹு அலைஹி அவர்களும் இதைத்தான் ஆதரித்திருக்கிறார்கள். ஜின் என்பதும் மலக்கு என்பதும் ஒன்றுதான். ஜின்களில் சுத்தமாகி விட்டவர்கள் மலக்குகள் என்றும், தாழ்ந்து கெட்டுப்போனவர்கள் ஷைத்தான்கள் என்றும், இரண்டுக்கும் நடுவில் இருப்பவர்கள் ஜின்கள் என்றும் வேறு சிலர் கூறி இருக்கிறார்கள்.

மலக்குகள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுஜூது செய்தபோது இப்லீஸ் மட்டும் சுஜூது செய்யாமல் விலகிக் கொண்டதுடன் நிற்காமல் அவர் பக்கம் முன்னோக்காமல் முதுகைத் திருப்பிக் கொண்டும் இருந்தான். இவ்விதமாகவே அவர்கள் சுஜூதிலிருந்து எழுந்திருக்கும் வரை நின்றான். மலக்குகள் 100 வருட காலம் இம்மாதிரி ஒரே சுஜூதில் இருந்தார்கள். 500 வருட காலம் ஒரே சுஜூதிலிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு, அவர்கள் சுஜூதிலிருந்து தலையை உயர்த்தினார்கள். அப்பொழுது இப்லீஸ் முதுகைத் திருப்பி நின்று கொண்டிருந்தான். தான் சுஜூது செய்யாமல் இருந்ததற்காகக் கைசேதப்பட்டு அவன் வருத்தப்படவு மில்லை; இனிமேல் சுஜூது செய்ய வேண்டும் என்று நாடவுமில்லை. இவ்வித நிலைமையில் சுஜூது செய்வதற்கு அல்லாஹு தஆலா தங்களுக்கு தௌஃபீக் செய்ததற்காக அந்த மலக்குகள் அல்லாஹு தஆலாவுக்கு இரண்டாம் முறையாக சுஜூது செய்தார்கள். ஆகவே, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஒரு ஸஜ்தாவும், அல்லாஹு தஆலாவுக்கு ஒரு ஸஜ்தாவும் ஆக இரண்டு ஸஜ்தாக்கள் ஏற்பட்டன.

அல்லாஹு தஆலா அந்த இப்லீசுடைய நிலைமை, லட்சணம், நிறம், உருவம், கோலம், தன்மை ஆகியவற்றை மாற்றி விட்டான். ஆகவே அவன் அவலட்சணத்திலும் அவலட்சணமாக மாறிவிட்டான். அவனுடைய உடல் பன்றியின் உடலைப் போன்று அவனுடைய முகம் குரங்கின் முகத்தைப் போன்று மாறிவிட்டன என்று சொல்லப் பட்டிருக்கிறது.

கபர்:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கப்ருக்கு சுஜூது செய்தால் உனது தவ்பாவை நான் ஒப்புக் கொள்வேன், உனது பாவத்தை மன்னித்து விடுவேன் என்று அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்து இப்லீசுக்குச் சொல்லப்பட்டது. அப்போது அவன் நான் அவருடைய உடலுக்கு சுஜூது செய்ய மறுத்திருக்கிறேன். அப்படி இருக்க இப்போது அவருடைய கப்ருக்கு எப்படி நான் சுஜூது செய்வேன்? என்று கூறிவிட்டான்.

கபர்:- அல்லாஹு தஆலா ஒவ்வொரு லட்சம் வருடத்திற்கும் பிறகு இப்லீசை நரகத்திலிருந்தும், ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைச் சுவர்க்கத்திலிருந்தும் வெளியேற்றிக் கொண்டு வந்து, ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சுஜூது செய்யும்படி இப்லீசுக்குக் கட்டளையிடுவான். அப்பொழுது அவன் சுஜூது செய்யமாட்டேன் என்று கூறி விலகிக் கொள்வான். ஆகவே, அவன் மறுபடியும் நரகத்திற்கு அனுப்பப் படுவான்.

وَقُلْنَا يَا آدَمُ اسْكُنْ أَنْتَ وَزَوْجُكَ الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا
حَيْثُ شِئْتُمَا وَلَا تَقْرَبَا هَٰذِهِ الشَّجَرَةَ فَتَكُونَا مِنَ الظَّالِمِينَ ۝

35. மேலும், (நாம் அவரை நோக்கி) "ஆதமே! நீரும் உமது மனைவியும் இந்தச் சோலையில் வசித்திருங்கள்; இன்னும், இதில் நீங்கள் இருவரும் விரும்பிய இடங்களிலெல்லாம் தாராளமாகப் புசியுங்கள்; ஆனால், இந்த மரத்தை நெருங்காதீர்கள். (என்னுடைய இக்கட்டளையை மீறினால்) நீங்கள் இருவரும் வரம்பு மீறியவர்களில் ஆகிவிடுவீர்களென்று கூறினோம்.

இப்லீஸ் அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்தவுடன் அவனைச் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றி அப்புறப்படுத்தி விட்டு ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சுவர்க்கத்தில் இருக்கும்படி இறைவன் கூறினான் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை என்பதாக அல்லாமா அல்கர்த்தபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது தஃப்ஸீரில் கூறி இருக்கிறார்கள்.

ஜவ்ஜுக என்ற வார்த்தைக்கு உமது மனைவி என்று இவ்விடத்தில் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. **ஜவ்ஜு** என்பது கணவன் என்றும், **ஜவ்ஜத்** என்பது மனைவி என்றும் சிலர் பாகுபாடு செய்யக்கூடும். ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு அவனுக்கு மனைவியாக இருப்பவளை ஜவ்ஜ் என்றும் ஜவ்ஜத் என்றும் சொல்லலாம். அதிலும் ஜவ்ஜத் என்று சொல்வதைப் பார்க்கினும் ஜவ்ஜ் என்று சொல்லுவதுதான் மிகவும் கௌரவமான நாகரீகமான பதம் என்று **தஃப்ஸீர் அபுல்லைதில்** சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்தில் "நீங்களிருவரும் சுவர்க்கத்தில் குடியிருங்கள்" என்று ஒன்று சேர்த்துக் கூறாமல் "நீரும் உமது மனைவியும்" என்று பிரித்துக் கூறியிருப்பதின் கருத்தாவது:- இந்தக் கட்டளையில் முக்கியமாக நாடப்பட்டிருப்பது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் என்பதும், அவரது மனைவி ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் இந்த ஹுக்மில் பிரதானமானவரல்ல என்பதும் தெரியவருகிறது.

ஜன்னத் என்ற பதத்திற்கு நற்கூலி அளிக்கப்படும் இடம் என்பதாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விரிவுரை செய்திருக் கிறார்கள். ஆனால், முஃதஜிலாக்களும், கத்திரிய்யா என்ற வகுப்பாரும் ஜன்னத் என்பது ஒரு சோலை என்று விரிவுரை செய்வதுடன் அந்தச் சோலை பாலஸ்தீன் என்னும் தேசத்திலோ அல்லது பாரிசுக்கும் கிர்மானுக்கு மிடையிலோ இருந்ததென்றும், இதனை அல்லாஹு தஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சோதிப்பதற்காகவே படைத்தான் என்றும் கூறுகிறார்கள். சுவர்க்கத்தை விட்டு அவ்விருவரும் இறங்கினார்கள் என்று வருகிற இடத்தில் இறங்குதல் என்பதற்கு அந்த இடத்திலிருந்து இந்தியாவிற்கு மாறியது

என்பதாகப் பொருள் செய்கிறார்கள். (பாரீஸ் என்பது ஈரான் தேசத்திலுள்ள ஒரு மாநிலம். இந்த மாநிலத்தில்தான் ஈரானின் தலை நகரான தெஹ்ரான் நகர் இருக்கிறது. கிர்மான் என்பது அந்த தேசத்திலுள்ள மற்றொரு மாநிலம்.) ஆனால், இந்த இடத்தில் இம்மாதிரி பொருள் கொள்ள இடமில்லை.

ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்ற விஷயத்தில் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவர்க்கத்தில் நுழைவதற்கு முன்பே ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்களது ரிவாயத்து ஆதாரமாக இருக்கிறது. அந்த ரிவாயத்து வருமாறு.

அல்லாஹு தஆலா (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சுவர்க்கத்தில் நுழைய வைக்க வேண்டுமென்று நாடியபோது) மலக்குகளில் ஒரு கூட்டத்தாரை அனுப்பினான். அவர்கள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களையும் மாணிக்கம், வைடூரியம், மரகதம், முத்து ஆகியவைகள் பதிக்கப்பட்ட தங்கக் கட்டிலின் மீது வைத்துச் சுமந்து கொண்டு வந்தார்கள்.

ஹளரத் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது ரிவாயத்தின்படி ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவர்க்கத்திற்கு வந்தபிறகுதான் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. அந்த ரிவாயத்து வருமாறு.

அல்லாஹு தஆலா சுவர்க்கத்தைப் படைத்து, அதில் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குடியிருக்கச் செய்தபோது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதில் தனித்திருந் தார்கள். அப்பொழுது அல்லாஹு தஆலா அவருக்கு தூக்கத்தை ஏற்படுத்தினான். பிறகு, அவர் தூங்கும்போது அவருடைய இடது

பக்கத்து விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அதிலிருந்து ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாமைப் படைத்தான். அந்த ஒரு எலும்பு இருந்த இடத்தில் இறைச்சி உண்டாகும்படி செய்து விட்டான். பிறகு அவர் தூக்கம் தெளிந்து எழுந்த போது அவரது தலையின் பக்கமாக ஹவ்வா அலைஹஸ்ஸலாம் உட்கார்ந்திருப்பதைக் கண்டு "நீ யார்?" என்று வினவினார். அதற்கு ஹவ்வா அலைஹஸ்ஸலாம் "நான் ஒரு பெண்" என்று பதில் கூறினார். பிறகு, "நீ எதற்காக படைக்கப்பட்டாய்" என்று வினவினார். அதற்கு ஹவ்வா அலைஹஸ்ஸலாம் "நான் தங்களுடன் வசிக்கவும் தாங்கள் என்னுடன் வசிக்கவும்" என்று கூறினார். அப்பொழுது மலக்குகள் ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் "ஆதமே! அவளுடைய பெயர் என்ன?" என்று வினவினார்கள். அதற்கு அவர் "ஹவ்வா" என்று கூறினார்.

ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் உயிருடன் இருப்பவரிலிருந்து படைக்கப்பட்டதால் ஹவ்வா என்ற பெயர் வந்தது என்று சிலர் சொல்லுகிறார்கள். தவிரவும், உயிருடனிருப்பவர் களுக்கெல்லாம் ஹவ்வாதான் அசலாக இருப்பதால் அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுகிறார்கள். இன்னும் ஹளரத் ஹவ்வாவின் தொண்டைக்குளியில் அல்லது உதட்டில் கருஞ்சிகப்பு மச்சம் ஒன்று இருந்ததாகவும் அதனால் இந்தப் பெயர் வந்ததாகவும் சொல்கிறார்கள். எனவே, ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களுக்கு இந்தப் பெயர் வந்ததற்கு மேலே கண்ட மூன்று காரணங்கள் இருக்கின்றன என்று தெரியவருகிறது. இன்னும் பூமியினுடைய மேற்தொலியில் இருந்து ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிருஷ்டிக்கப் பட்டதால் அவருக்கு ஆதம் என்று பெயர் வந்தது போல, ஆண் பிள்ளையிலிருந்து ஹளரத் ஹவ்வா சிருஷ்டிக்கப்பட்டதால் மர்அத் என்ற பெயர் வந்தது என்றும் சொல்லப்படுகிறது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் 7 வருடமும் 7 மாதமும் உயிருடன் இருந்தார்கள். அவர் 997 வருட காலம் உயிருடன் இருந்தார்.

அறிந்துகொள்:- அல்லாஹு தஆலா ஒருவரைத் தாயில்லாமல் தந்தையிலிருந்து படைத்திருக்கிறான். அப்படிப் படைக்கப் பட்டவர்தான் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம். மற்றொருவரை தந்தை இல்லாமல் தாயிலிருந்து மட்டுமே படைத்திருக்கிறான். அவர்தான் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம். இன்னும் மற்றவர்களைத் தாய் தந்தை ஆகிய இருவரிலிருந்தும் படைத்திருக்கிறான். அவர்கள்தான் ஹளரத் ஆதம் ஹவ்வா ஆகிய இருவருடைய பிச்சளங்கள். இன்னொருவரைத் தாய் தந்தை ஆகிய இருவருமே இல்லாமல் படைத்திருக்கிறான். அவர்தான் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். அல்லாஹு தஆலா தனது சிருஷ்டிகளை மிகமிக நூதனமான முறைகளால் வெளியாக்கி இருக்கிறான். அவற்றை அறியும் போது அறிவுகளெல்லாம் மிகவும் பிரமிக்கின்றன.

தவிர, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனியே இருப்பதால் ஏற்படும் வெறுப்பை நீக்குவதற்காகவும், அவருடைய சந்ததியினர் கியாமத்து நாள்வரை இருப்பதற்காகவும் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாமை அல்லாஹு தஆலா படைத்திருக்கிறான். ஏனெனில் அவருடைய சந்ததிகள் இருப்பதுதான் நபிமார்கள் அனுப்பப்படுவதற்கும், ஷரீஅத்துகள் ஏற்படுவதற்கும் அல்லாஹு தஆலாவுடைய மஅரிஃபத்து உண்டாகுவதற்கும் காரணமாக இருக்கிறது. ஆகவே, கணவன் மனைவி என்று கூடி வாழ்வதில் பல பிரயோஜனங்கள் இருக்கின்றன. தவிரவும், நபிமார்களில் திருமணம் செய்து கொள்ளாதவர்களை அல்லாஹு தஆலா தனது திருவேதத்தில் கூறவில்லை. ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நபிமார்களின் சுன்னத்தை நிலை நிறுத்துவதற்காக திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால், அவர் துறவியாக இருந்ததால் அவரது மனைவியுடன் சேரவில்லை. இதனால்தான் அல்லாஹு தஆலா அவரை ஹுஷ்ரா என்று புகழ்ந்திருக்கிறான்.

وَلَا تَقْرَبَا هٰذِهِ الشَّجَرَةَ **இந்த மரத்தை நீங்கள் இருவரும் நெருங்க வேண்டாம்** என்று அல்லாஹு தஆலா ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு கூறியதன் கருத்து இதிலிருந்து புசிக்காதீர்கள்

என்பதாகும். இந்த மரம் எது என்பதில் உலமாக்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. கோதுமை என்றும், முந்திரியென்றும் அத்தியென்றும் மூன்று விதமாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் அதை இன்னமரம்தான் என்று குறிப்பிடாமல் விட்டுவிடுவதுதான் சிறந்தது.

நீங்களிருவரும் இந்த மரத்தை நெருங்க வேண்டாம் என்று அல்லாஹு தஆலா விலக்கியது அவர்கள் அந்த மரத்திலிருந்து புசிக்கவே கூடாது என்பதற்காகவோ அல்லது, அந்த மரத்திற்குப் பக்கத்தில் போகவே கூடாது என்பதற்காகவோ அல்ல என்றும், அதிலிருந்து அவர்களிருவரும் புசிக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹு தஆலா அம்மாதிரி விலக்கினான் என்றும் ஷெய்கு நஜ்முத்தீன் குத்திஸ ஸிர்ருஹு கூறி இருக்கிறார்கள். ஏனெனின், மனிதன் தடுக்கப்பட்டதைச் செய்வதில் பேராசையுள்ளவனாக இருந்து வருகிறான். இதற்கிணங்க ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மனம் ஹளரத் ஹவ்வாவினாலும், சுவர்க்கத்தினாலும் நிம்மதி பெற்றிருந்தது. அந்த மரத்தை அவர் கவனிப்பதுமில்லை. ஆனால், அல்லாஹு தஆலாவுக்கு உலகில் ஒரு கலீஃபாவை ஏற்படுத்த வேண்டும் என்பதும் தன்னுடைய ஜலால் ஜமால் ஆகிய தன்மைகளின் மல்ஹர்களை உண்டாக்க வேண்டும் என்பதும் நோக்கம். இதற்காக ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தான். எனவே அவர் அந்த மரத்திலிருந்து அவர் புசிப்பார் என்பதை அல்லாஹு தஆலா அறிந்தே அவரை விலக்கினான். ஏனெனில், அவர் அந்த மரத்திலிருந்து புசிப்பது பாவமாக ஏற்பட வேண்டும். பாவம் ஏற்பட்டால் தவ்பா ஏற்படும். தவ்பா ஏற்பட்டால் பிரியம் ஏற்படும். பிரியம் ஏற்பட்டால் பாவத்தை விட்டுச் சுத்தமாக்குதல் ஏற்படும். தவிரவும் இந்த தடையை மீறி அந்த மரத்திலிருந்து புசிப்பதற்கு அல்லாஹு தஆலா மறதியைக் காரணமாக்கினான்.

فَأَزَلَّهُمَا الشَّيْطَٰنُ عَنْهَا فَأَخْرَجَهُمَا مِمَّا كَانَا فِيهِ ۖ وَقُلْنَا
اهْبِطُوا بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۖ وَلَكُمْ فِي الْأَرْضِ مُسْتَقَرٌّ

وَمَتَاعٌ إِلَىٰ حِينٍ ﴿٣٦﴾

36. ஆயினும், ஷைத்தான் அவர்களிருவரையும் அதைவிட்டு நீங்கும்படி செய்து, அவ்விருவரும் எந்த அந்தஸ்)தில் இருந்தார்களோ அதை விட்டு வெளிப்படுத்திவிட்டான். ஆகவே, 'உங்களிற் சிலர் வேறு சிலருக்கு விரோதியாக (இச்சோலையிலிருந்து) இறங்கி விடுங்கள்; அன்றியும் உங்களுக்குப் பூமியில்தான் தங்குமிடமும் சிறிது காலம்வரை சுகமும் உண்டு' என்று கூறினோம்.

ஷைத்தானாகிய இப்லீசுக்கு அவ்விருவரையும் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமென்ற நாட்டமிருக்கவில்லை. அவ்விருவருக்கும் இருந்து வந்த உயர்ந்த அந்தஸ்தை (மர்த்தபாவை) விட்டு அவ்விருவரையும் வெளியேற்றி விடவேண்டும் என்று இருந்தான். ஆகவே, ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவ்பாச் செய்யவே சுவர்க்கத்தில் இருந்த அந்தஸ்தைக் காண உயர்ந்து விட்டார்கள். எவ்விதத்திலும் இப்லீசுடைய நாட்டம் நிறைவேறாமல் தவறிவிட்டது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வா அலைஹஸ்ஸலாமும் சுவர்க்கத்தில் இருந்தபோது இவர்களிடம் செல்ல இப்லீசு நாடினான். சுவர்க்கத்தின் அதிபதிகளான மலக்குகள் அவனை உள்ளே போக விடாமல் தடுத்து விட்டார்கள். அப்பொழுது சுவர்க்கத்தில் நாற்கால் மிருகம் போல ஒரு பாம்பு இருந்தது. இது இப்லீசுக்குக் கூட்டாளியாக இருந்தது. ஆகவே, இப்லீஸ் அந்தப் பாம்பிடம் போய் "நான் உன் வாயில் புகுந்து கொள்கிறேன்" என்று கேட்டுக் கொண்டான். அந்தப் பாம்பு இவனை வாயிலெடுத்துக் கொண்டு போய் சுவர்க்கத்தில் விட்டு விட்டது. இவ்வண்ணம் அவன் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களிடம் சென்று அவர்கள் சலிக்கும்படி ஒப்பாரி வைத்து அழுதான். அவன் அழுவதைப் பார்த்து அவ்விருவரும் "நீ ஏன் அழுகிறாய்" என்று வினவியதற்கு, அவன் "நீங்கள் இறந்து விட்டால் இந்தச் செல்வம் கிடையாதே என்று

அழுகிறேன்" என்றான். அது கேட்டு ஹளரத் ஆதமுக்கும் ஹவ்வாவுக்கும் மன திகில் பட்டுச் சலிப்படைந்தார்கள். அவன் இதனை உணர்ந்து கொண்டபின் சில நாள் கழித்து ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து "சுவர்க்கத்தில் ஒரு மரமிருக்கிறது. அந்த மரத்தின் கனியைப் புசிப்பவர்கள் மரண மடையமாட்டார்கள். நான் அதை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று கூறினான். அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். அப்பொழுது அவன் நான் உங்களுக்கு உண்மையாகவே நல்லுபதேசம் கூறுகிறவனே யன்றி வேறில்லை என்று சத்தியம் செய்து அந்த மரத்தையும் காண்பித்தான். அல்லாஹு தஆலாவின் மீது எவரும் பொய்ச் சத்தியம் செய்ய மாட்டார்கள் என்று அவ்விருவரும் நம்பிக்கை கொண்டிருந் தார்கள். ஆதலால், ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் அந்த மரத்தினண்டையில் சென்று அதிலிருந்த பழத்தைப் பறித்துத் தாங்களும் தின்று கொண்டதுடன் தங்களது கணவரான ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் கொடுத்தார். இவ்விருவரும் அம்மரத்தின் கனியைப் புசித்து விட்டார்கள். அப்பொழுது அல்லாஹு தஆலா அவரை நோக்கி "ஆதமே! நீர் இந்தக் காரியத்தைச் செய்யும்படி ஏற்பட்ட காரணமென்ன?" வென்று வினவினான். அதற்கு அவர் "இறைவா! ஹவ்வா என்னைக் கெடுத்தாள்" என்று சொன்னார்.

அதற்கு அல்லாஹு தஆலா "ஹவ்வா பிள்ளை பெறும் போதெல்லாம் அவள் வருத்தப்படும்படி செய்து, அவளுக்கு ஒவ்வொரு மாதமும் ரத்தக் குறி காட்டுவேன்" என்று கூறினான். இதனைக் கேட்டு ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் முணுமுணுத்தார்கள். அப்பொழுது உனக்கும் உன்னுடைய பெண் மக்களுக்கும் இதுவே முணுமுணுப்பு என்று சொல்லப்பட்டது. ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கனியைத் தின்றவுடன் அவரது புடவை களைந்து விட்டது, வயிற்றையும் கலக்கி விட்டது. ஆகவே, அவர் சுவர்க்கத்தில் இடம் தேடிச் சுற்றித் திரிந்தார். அப்பொழுது அல்லாஹு தஆலா ஒரு மலக்கை அனுப்பி அவர் ஏன் சுற்றித் திரிகிறார் என்று வினவச் செய்தான். அந்த மலக்கு கேட்டதற்கு அவர் வயிற்றுக்குள்ளிருப்பதை

வெளியில் வைத்து விடுவதற்கு என்று பதில் கூறினார். அதற்கு அந்த மலக்கு அதனை வைப்பதற்கு இது இடமல்ல. பூமியில் போய் விடலாம் என்று கூறினார்.

மற்றொரு ரிவாயத்து:- ஹளரத் ஆதம், ஹவ்வா ஆகிய இருவரும் பழத்தைத் தின்றபோது அல்லாஹு தஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "நாம் உமக்குத் தந்த நிஅமத்தில் (அருட்கொடையில்) இந்த மரத்திலிருந்து தின்னாதிருக்க கூடாதா? என்று கேட்டான். அதற்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "இறைவா உன் மீது ஒருவன் பொய்ச் சத்தியம் செய்வான் என்று நான் நினைக்க வில்லை" என்று பதில் கூறினார்கள். அதற்கு அல்லாஹு தஆலா "நான் உம்மை பூமியில் இறக்குவேன். அப்போது நீர் நிர்வாகத்தை வருத்தமாகவே தவிர பெறமாட்டீர்" என்று சொன்னான் என்பதாக வருகிறது.

மற்றொரு ரிவாயத்தில்:- ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (அக்லு என்னும்) அறிவு இருக்கும் போது அந்த மரத்துக் கனியைப் புசிக்கவே இல்லை. என்றாலும் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மதுவைக் கொடுத்து மயக்கி மரத்தின் பக்கம் இழுத்துச் சென்று பழத்தைப் பறித்துத் தின்னச் சொல்லித் தின்றதாகவும் வருகிறது.

ஃபாயிதா:- இந்தியாவில் இலங்கை என்ற தீவில் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறக்கப்பட்டார்கள். அவர் சுவர்க்கத்திலிருந்து வந்ததால் அவர் மீது சுவர்க்கத்து வாடை இருந்து கொண்டிருந்தது. இதனால்தான் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கி இருந்த ஆதம் மலையைச் சுற்றிலும் அக்கம் பக்கத்திலுள்ள மரங்களிலும் நல்ல மணமான வாடை இருந்து கொண்டிருக்கிறது. ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் ஜித்தாவில் இறக்கப்பட்டார்கள். இப்லீஸ் யாஜ்ஜூ மாஜ்ஜூடைய நாட்டில் அல்லது ஏலா என்ற ஊரில் இறக்கப்பட்டான். பாம்பு இஸ்பஹான் என்னும் ஊரில் இறக்கப்பட்டது. இவர்கள் சுவர்க்கத்திலிருக்கும் போது நல்ல

ஆரோக்கியமாக துன்பம் கஷ்டம் என்பது இல்லாமலிருந்தனர். ஆனால் அவர்கள் உலகுக்கு வந்த பின் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விவசாயம் செய்யும்படியும், ஹளரத் ஹவ்வா அவர்கள் மாதவிடாய் முதலியவற்றைக் கொண்டு கஷ்டப் படும்படியும் செய்யப்பட்டது. சுவர்க்கத்தில் காலால் நடந்து கொண்டிருந்த பாம்பு தனது வயிற்றினால் ஊர்ந்து திரியும்படியும், மண்ணை உணவாக ஏற்படுத்திக் கொள்ளும்படியும் ஆயிற்று. இப்லீஸ் பன்றியைப் போல் வேஷம் மாற்றப்பட்டான். ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமும், ஹவ்வா அலைஹஸ்ஸலாம் சுவர்க்கத்தில் லுஹருடைய வேளையிலிருந்து அஸருடைய வேளை வரையில்தான் இருந்தார்கள். ஆனால், அந்த வேளை சுவர்க்கத்துடைய கணக்கில் சேர்ந்தது. மறுமையின் ஒரு நாள் இந்த உலகத்தினுடைய ஆயிரம் வருடத்திற்குச் சமமாக இருப்பதால் இந்த உலகத்தினுடைய கணக்குப்படி அந்த சொற்ப நேரம் நூற்றுக் கணக்கான உலக வருடத்திற்குச் சரியாக இருக்கிறது.

ரிவாயத்து:- சுவர்க்கத்தில் பாம்பு ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தது. பிறகு அது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய பகைவனான இப்லீசுக்கு இடங் கொடுத்து ஆதம் அலைஹிஸ் ஸலாமவர்களுக்குச் சதி செய்தது. ஆகவே, அதனுடைய பகைமையான எண்ணம் அங்கேயே வெளியாயிற்று. ஆதலால், அவர்கள் எல்லோரும் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப் பட்டபோது அந்தப் பகை மேலும் அதிகமாகியது. தவிரவும், அங்கிருந்து வெளியேற்றப்பட்டபோது அந்தப் பாம்பிடம் "நீ ஆதமுடைய மக்களுக்கு விரோதி; அவர்கள் உனக்கு விரோதி; இன்னும் அவர்களில் ஒருவர் உன்னைச் சந்திக்கும் இடத்திலேயே உனது தலையை அவர்கள் நசுக்கி விடுவர்" என்றும் சொல்லப்பட்டது.

தாவீலாத்துன்னஜ்மிய்யா என்ற கிரந்தத்தில் எழுதி இருப்பதாவது:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கல்பில் (இதயத்தில்) முஹப்பத் (பிரியம்) என்ற விதை தரிபட்டது.

ஆகவே, ஆதம் என்ற மனிதரை கல்பு (இருதயம்) தங்குவதற்குள்ள இடமாகவும், பூமியை மனிதன் தங்குவதற்குள்ள இடமாகவும் அல்லாஹு தஆலா ஏற்படுத்தி விட்டான். இன்னும் "உங்களுக்கு பூமியில் தங்குமிடமும் ஒரு காலம்வரை (சுகத்திற்குரிய) பொருளும் இருக்கிறது" என்று கூறி இருக்கிறான். அதாவது முஹப்பத் (பிரியம்) என்ற வித்து மஃரிஃபத் என்ற கனியை அடையும் காலம் வரையில் வணக்கம் செய்தல், வழிப்படுதல் என்ற தண்ணீரைக் கொண்டு சுகமும் பிரயோஜனமும் அடைகிறது. இதனைக் குறித்துத்தான் இறைவன் தனது திருமறையில் "**தன்னுடைய றப்பின் கட்டளைப்படி ஒவ்வொரு கணத்திலும் தனது கனியைக் கொடுக்கிறது**" (சூரத்து இப்ராஹீம் 25) என்று கூறி இருக்கிறான். நன்கு ஆராய்ச்சி செய்து பார்த்ததிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்ற மரத்திற்குக் கனியானது மஃரிஃபாவைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பது தெரியவருகிறது. இதனைக் குறித்துத்தான் இறைவன் தனது திருமறையில் "**மேலும் நான் மனிதரையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவே தவிர (வேறு எதற்காகவும்) படைக்கவில்லை**" (சூரத்தாரியாத் 56) என்று கூறி இருக்கிறான். மஃரிஃபா என்ற கனி இபாதத் (வணக்கம்) என்ற வாதுகளில் வெளியானாலும் முஹப்பத் என்ற வித்து இல்லாமல் அது உண்டாக மாட்டாது. இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடத்தில் "எனது றப்பே! நீ எதற்காகச் சிருஷ்டிகளைச் சிருஷ்டித்தாய்?" என்று வினவினார்கள், அதற்கு அல்லாஹு தஆலா நான் மறைவான பொக்கிஷமாக (கன்ஜேமக் பியாவாக) இருந்து கொண்டிருந்தேன். அப்பால் நான் அறியப்பட வேண்டும் என்று விரும்பினேன். ஆகவே நான் அறியப் படுவதற்காக சிருஷ்டிப் பொருள்களைச் சிருஷ்டித்தேன் என்று கூறினான்" என்பதாக கூறியிருக்கிறார்கள். ஆகவே, மஃரிஃபாவுக்கு வித்து முஹப்பத் (பிரியம் விருப்பம்) என்பதுதான் என்ற விஷயம் இந்த ஹதீஸிலிருந்து ருஜுவாகிறது.

فَتَلَقّٰۤى اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَيْهِ ؕ اِنَّهٗ هُوَ التَّوَّابُ

الرَّحِيمُ ۝

37. அப்பால், ஆதம் தன் "ரப்பி"டமிருந்து (பாவமன்னிப்புப் பிரார்த்தனைக்குரிய) வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டார். ஆகவே, (அவரின் பிரார்த்தனையினால்) அவரை (அல்லாஹ்) மன்னித்து விட்டான். நிச்சயமாக அவன்தான் மிகவும் மன்னிப்போனும் பேரன்புடையோனுமாக இருக்கின்றான்.

அல்லாஹு தஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அந்த வார்த்தைகளை உதிக்கும்படிச் செய்தான் என்பதுதான் فَتَلَقَّىٰ آدَمُ مِن رَّبِّهِ كَلِمَاتٍ **ஆதம் தனது றப்பிலிருந்து சில சொற்களை** கற்றுக் கொண்டார் என்பதன் கருத்தாகும்.

"எங்கள் றப்பே! எங்களுக்கு நாங்களே அநியாயம் செய்து கொண்டோம். இன்னும் எங்களுக்கு நீ பிழை பொறுத்து எங்களுக்கு கிருபை செய்யாவிடில் நாங்கள் நஷ்டவாளர்களில் உள்ளவர்களாகி விடுவோம்" என்பனவாகும்.

ரிவாயத்து:- "ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மதுடைய பொருட்டால் எனக்கு மன்னிப்புச் செய்தருள்" என்று அல்லாஹு தஆலாவைக் கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா "முஹம்மதை நீர் எப்படி அறிந்தீர்?" என்று கேட்டான். அப்பொழுது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "என்னை நீ படைத்து என்னில் நீ ஆன்மாவை ஊதியபோது எனது கண்ணை நான் திறந்தேன். அப்பொழுது அர்ஷின் தூணில் **லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி** என்று எழுதப்பட்டிருந் ததைக் கண்டேன். ஆகவே, அவர் உன்னிடத்தில் சிருஷ்டிப் பொருள்களில் மிகவும் கண்ணியம் பெற்றவர் என்றும், அப்படி கண்ணியம் பெற்றிருப்பதினால்தான் உனது திருப்பெயருடன் அவரது பெயரையும் சேர்க்கப்பட்டு இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டேன்" என்று சொன்னார். அதற்கு அல்லாஹு தஆலா "ஆம்" என்று கூறினான். இன்னும் அவருடைய திருப்பெயரின் பொருட்டால் அவருக்குப் பிழைபொறுக்கப்பட்டது.

ரிவாயத்து:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடத்தில் "(இறைவா) நீ என்னை உனது கையால் படைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவன் "ஆம்" என்றான். அப்பொழுது அவர் "நீ என்னை உன்னுடைய சொர்க்கத்தில் குடியிருக்கச் செய்யவில்லையா?" என்றார். அதற்கவன் "ஆம்" என்றான். பிறகு, அவர் "உன்னுடைய ரஹ்மத் தென்னும் கிருபை உன்னுடைய கோபத்தைப் பார்க்கினும் முந்தவில்லையா?" என்று கேட்டார். அதற்கவன் "ஆம்" என்றான். அப்பொழுது அவர் "நான் தவ்பாச் செய்து மீண்டால் என்னை இனியும் சுவர்க்கத்தில் மீளவைப்பாயா?" என்று கேட்டார். அதற்கவன் "ஆம்" என்றான். அப்பொழுது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவ்பாச் செய்தார்கள்.

தவ்பா என்ற பதம் **தவ்பு** என்பதைச் சேர்ந்தது. தவ்பு என்பதற்கு "மீளுதல்" என்பது பொருள். ஆகவே, அல்லாஹு தஆலாவுடன் இந்தப் பதத்தைச் சேர்த்துச் சொல்லும்போது அல்லாஹு தஆலா வேதனை செய்வதை விட்டு மன்னிப்புச் செய்வதன்பால் மீண்டான் என்று கருத்துக் கொள்ள வேண்டும். அடியார்கள்பால் இந்தப் பதத்தைச் சேர்க்கும் போது "பாவத்தை விட்டு வழிபடுவதன்பால் மீண்டார்" என்று கருத்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் அல்லாஹு தஆலா தவ்பாவை ஒப்புக் கொண்டான் என்பதற்கு "அவர்பால் அல்லாஹு தஆலா கிருபையைக் கொண்டு மீண்டு, அவருடைய மன்னிப்பை ஏற்றுக் கொண்டான்" என்பது கருத்து.

التَّوَّابُ الرَّحِيمُ **அத்தவ்வாபுர் ரஹீம்** என்று இரண்டு வார்த்தைகளையும் இந்த இடத்தில் ஒன்று சேர்த்துக் கூறி இருப்பதானது மன்னிப்புச் செய்து பிழைபொறுத்தல் என்ற விஷயத்தில் அல்லாஹு தஆலா மிகவும் தாராளமானவன் என்பதைப் பாவிகளுக்கு வாக்களித்திருக்கிறான் என்பது கருத்து.

ரிவாயத்து:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களும் சுவர்க்கத்துடைய நிஅமத்து (அருட்கொடை) கள் தவறிப் போனதற்காக 200 வருடகாலம்

அழுதார்கள். நாற்பது நாள்வரை அவ்விருவரும் சாப்பிடவுமில்லை தண்ணீர் அருந்தவுமில்லை. நூறு வருட காலம் வரை ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹளரத் ஹவ்வா அலைஹஸ் ஸலாம் அவர்களும் பிரிந்திருந்தார்கள் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமிக்கு இறக்கப்பட்டதிலிருந்து 300 வருட காலம் வரை தமது தலையை உயர்த்தாமல் இருந்தார்கள், என்று தமக்குத் தெரிய வருவதாக ஹளரத் ஷஹ்ருப்னு ஹுஷப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பூமியில் உள்ளவர்கள் அனைவருடைய கண்ணீரையும் ஒன்று சேர்த்தாலும் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீர்தான் அதிகமாக இருக்குமென்றும், ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீரையும் பூமியிலுள்ளவர் களின் கண்ணீரையும் ஒன்று சேர்த்தாலும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீர்தான் அதிகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

சிறு பாவமாகக் கூட இல்லாமல் தவறு செய்து விட்டவரின் நிலை இப்படி இருந்தால் பாவக் கடலிலேயே மூழ்கி இருப்பவரின் நிலை என்னவாகும்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

தவிரவும், தவ்பா சோப்புடைய அந்தஸ்தில் இருக்கிறது. சோப்பு புற அழுக்கை அகற்றுவதுபோல தவ்பா அக அழுக்கை அகற்றுகிறது. ஆகவே, அடியான் தனது பாவத்தை விட்டு மீண்டு, தனது செயல்களைத் திருத்திக் கொண்டால் அல்லாஹு தஆலா அவருடைய அந்தஸ்தையும் சீர்திருத்தி, அவரிடமிருந்து தவறிப் போன அருட்கொடையையும் மீண்டும் கொடுக்கிறான்.

قُلْنَا اهْبِطُوا مِنْهَا جَمِيعًا ۚ فَإِمَّا يَأْتِيَنَّكُم مِّنِّي هُدًى فَمَن تَبِعَ
هُدَايَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

38. (ஆதத்தை சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றும் போது) நாம் கூறினோம், "அதைவிட்டு நீங்கள் யாவரும் இறங்கிவிடுங்கள்" பின்னர் நிச்சயமாக என்னிடமிருந்து நேர்வழி காட்டிவரும். (அந்த) என்னுடைய நேர்வழி காட்டியைப் பின்பற்றுபவர் எவரோ, அவருக்குப் பயமும் கிடையாது; அவர்கள் கவலைப்படவுமாட்டார்கள்.

ஹுதன் என்பது நேர்வழி என்பதாக மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆயினும், **ஹுதன்** என்ற அப்பதத்திற்கு ஷரீஅத்து என்றும் வேதம் என்றும் கருத்துக் கொள்ளலாம்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "உங்களிடம்" என்று கூறப்பட்டிருக்கும் பதத்திற்கு ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய சந்ததியினராகிய மனித வர்க்கம் என்று கருத்துக் கொள்ள வேண்டும். இப்லீஸையும் அவனுடைய சந்ததி யினரையும் இதில் சேர்த்துக் குறிப்பிடவில்லை. ஏனெனில், இப்லீஸிடத்திலும் அவனுடைய சந்ததியினரிடத்திலும் ரசூலோ அல்லது வேதமோ அனுப்பப்படவுமில்லை. அவர்களில் எவரும் வேதத்தையோ ரசூலையோ பின்பற்றவுமில்லை.

தவிரவும் **ஹுதன்** என்ற பதம் இந்த ஆயத்தில் இரண்டு முறை சொல்லப்பட்டிருக்கிறது. அறபி இலக்கணப்படி முதலில் சொல்லப்பட்ட ஹுதன் என்ற ஒரு வார்த்தையை மட்டும் வெளிரங்கமாகக் கூறிவிட்டு, இரண்டாவது முறை அதற்குரிய பிரதிச் சொல்லைக் கூறினால் போதுமானது. அவ்வாறு கூறாமல் வெளிப்படையாகக் கூறி இருப்பதற்கு ஹுதன் என்ற அவ்வார்த்தையின் முக்கிய அம்சத்தை நாம் உணரவேண்டும் என்பதும், முதலாவது கூறப்பட்ட "நேர்வழி" என்ற அந்த வார்த்தைக்குள்ள பொருள்களைப் பார்க்கினும் இரண்டாவது கூறப்பட்ட "நேர்வழி" என்ற வார்த்தைக்கு விரிவான பொருள்கள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது கருத்தாகும்.

وَالَّذِينَ كَفَرُوا وَكَذَّبُوا بِآيَاتِنَا أُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۖ

هُمْ فِيهَا خَٰلِدُونَ ﴿٣٩﴾

39. ஆனால், "எவர்கள் மாறு செய்து நம்முடைய (வேத) வசனங்களைப் பொய்ப்பிக்கின்றனரோ அவர்கள் நரகவாசிகளே. அதில் (அவர்கள்) என்றுமே தங்கிவிடுவார்கள்" (என்று அவர்களை அதைவிட்டு அப்புறப்படுத்திவிட்டோம்).

وَالَّذِينَ كَفَرُوا وَكَذَّبُوا **வல்லதீன கஃபரூ பிஆயாத்தினா** என்ற வாக்கியத்தில் மொழிபெயர்ப்பில் எழுதி இருப்பதைத் தவிர்த்து வேறு அர்த்தமும் கொள்ளலாம். அதாவது நமது ஆயத்துகளை உருப்புகளின் மூலமாக அதாவது செய்கையின் மூலமாக நிராகரித்து நாவினால் பொய்யென்று மறுத்துக் கூறியவர்கள் என்றும் அர்த்தங் கொள்ளலாம்.

ஆயாத் என்ற பதம் பன்மைச் சொல்லாகும். **ஆயத்** என்பது அதற்கு ஒருமைச் சொல்லாகும். ஆயத் என்பதற்கு திருஷ்டாந்தம், அத்தாட்சி என்பது பொருள். அல்லாஹு தஆலாவால் இறக்கப்பட்ட வேத வசனத்தையும் **ஆயத்** என்று கூறுவர். நபிமார்களுக்கு அவனால் இறக்கப்பட்ட அற்புதங்களையும் **ஆயத்** என்று கூறுவர்.

يَٰبَنِىٓ إِسْرَٰٓءِيلَ ٱذْكُرُوا۟ نِعْمَتِىَ ٱلَّتِىٓ أَنْعَمْتُ عَلَيْكُمْ
وَأَوْفُوا۟ بِعَهْدِىٓ أُوفِ بِعَهْدِكُمْ وَإِيَّٰىَ فَٱرْهَبُونِ ﴿٤٠﴾

40. இஸ்ரவேலின் சந்ததிகளே! நான் உங்களுக்கு அளித்த என்னுடைய கொடையை எண்ணிப் பாருங்கள்; எனக்கு வாக்குறுதி அளித்ததை நிறைவேற்றுங்கள்; நான் உங்களுக்கு (மறுமையில் அளிப்பதாக) வாக்குறுதி அளித்ததை நிறைவேற்றுவேன். அன்றியும் என்னையே அஞ்சுங்கள்.

இஸ்ராயீல் என்று ஹளரத் யாக்கூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஒரு பெயர் இருந்தது. இஸ்ராயீல் என்ற இவ்வார்த்தைக்கு அப்துல்லாஹ், அதாவது அல்லாஹு தஆலாவின்

அடிமை என்பது பொருள். இஸ்ரா என்ற பதத்திற்கு அடிமை என்பதும், ஈல் என்ற பதத்திற்கு அல்லாஹ் என்பதும் பொருள். யூதர்களிலுள்ள பன்னிரண்டு வகைக் கூட்டத்தாரும் ஹளரத் யாக்கூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களது 12 மக்களுடைய கூட்டத்தாரும் சந்ததியினரே யாவர். ஆதலால் இஸ்ராயீலின் மக்கள் என்றாலும், பனீ இஸ்ராயீல் என்றாலும், யூதர்களுடைய 12 கூட்டங்களையுமே குறிக்கும். யூதர் என்றாலும் பனீ இஸ்ராயீல் என்ற பதம் குறிப்பிடுவதுபோல் அவ்வளவு பலமாக யூதர்கள் எல்லோரையும் இந்தப்பதம் குறிப்பிடாது. ஏனெனில், ஹளரத் யாக்கூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய 12 மக்களில் எஹூதா என்ற பெயருள்ள ஒருவர் இருந்தார். அவருடைய மக்களுக்கு எஹூதிகள் என்று சொல்வதுண்டு. சட்டப்படி யூதர்களிலுள்ள 12 வகைக் கூட்டத்தினரில் இந்த ஒரு கூட்டத்தினரைத்தான் எஹூதி என்ற பதம் குறிப்பிடும். ஆனாலும், சிலரைச் சொல்லி எல்லாரையும் கருதுவது இலக்கிய சட்டத்தில் ஒரு முறையாக இருந்து வருவதால், இக்காலத்தில் எஹூதி என்றாலும் இந்த 12 வகைக் கூட்டத்தினரையும் குறிப்பிட முடியும்.

இப்னு என்ற பதம் ஆண் மகவுக்கும் **பின்து** என்ற பதம் பெண் மகவுக்கும் சொந்தமாக இருந்தாலும் இப்னு என்ற பதத்தைப் பன்மையாக்கி பனூ என்று கூறினால் அது ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய எல்லோரையுமே பொதுவாகக் குறிப்பிடும். இதன்படி இந்த இடத்தில் **பனீ இஸ்ராயீல்** என்ற பதத்திற்கு ஹளரத் யாக்கூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சந்ததியிலுள்ள ஆண் பெண் அனைவரும் என்பது கருத்தாகும்.

தவிரவும், திருக்குர்ஆனில் "பனீ இஸ்ராயீல்களே" என்று அல்லாஹு தஆலா அழைத்துக் கூறி இருப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் மதீனாவிலும் அதனைச் சுற்றிலுமிருந்த யூதர்களைத்தான். என்றாலும், அதிலுள்ள விஷயம் எல்லா யூதர்களுக்குமே பொதுவானது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் மதீனமா நகரைச் சுற்றிலுமிருந்த யூதர்கள் பனூ குறைலா என்ற கோத்திரத்தாரும் பனீ நுளைர் என்ற கோத்திரத்தாருமாவர்கள். அல்லாஹு தஆலா

உலகத்திலுள்ளவர்களில் பனீ இஸ்ராயீல்களை மட்டும் அங்கு குறிப்பாக அழைத்துக் கூறி இருப்பது மற்றவர்களைப் பார்க்கினும் அதிகமான அருட்கொடைகளை இந்தக் கூட்டத்தார் பெற்றிருந்தும், மற்றவர்களைப் பார்க்கினும் அதிகமாகவே அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்தனர் என்பதற்காகவேயாகும்.

அருட்கொடை என்ற பதம் அறபி இலக்கணத்தில் இஸ்மு ஜின்ஸாக இருக்கிறது. ஆதலால், இந்தப் பதம் ஒருமையையும் பன்மையையும் குறிக்கும். எனவே, எனது அருட்கொடையை என்பதற்கு எனது பாக்கியத்தை என்பது கருத்து.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறபிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பொறாமை கொண்டிருந்தனர். தவிரவும் ஒருவருக்கு ஒரு பாக்கியம் கிடைக்கு மானால் அதனைப் பார்த்து மற்றவர்கள் பொறாமை கொள்வது மனித சமூகத்திலேயே சகஜமாக இருந்து வருகிறது. ஆகவே, பிறருக்குக் கிடைத்த ஒரு பாக்கியத்தைக் கவனித்துப் பொறாமை கொள்வதைப் பார்க்கினும் அல்லாஹு தஆலா தனக்குச் செய்துள்ள அருட்கொடை களை எண்ணிப்பார்த்தால் அம்மாதிரியான பொறாமை யுண்டாக மாட்டாது. ஆதலால்தான் அல்லாஹு தஆலா யூதர்களை நோக்கி நீங்கள் பிறருக்குக் கிடைத்துள்ள அருட்கொடை களைக் கண்டு ஏன் பொறாமை கொள்கின்றீர்கள்? உங்களுக்கு நான் செய்துள்ள அருட்கொடைகளை எண்ணிப் பாருங்கள் என்று கூறி இருக்கிறான்.

அறுதிமானம் என்பது மீதாக்குடைய நாளில் நீங்கள் ஒப்புக் கொண்டுள்ள வாக்குறுதி. இந்த வாக்குறுதி பொதுவானது. ஈமான் கொள்தல், கீழ்ப்படிதல் முதலிய சகல ஏவல்களும், விலக்கல்களும், வஸிய்யத்துகளும் சேர்ந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று தவ்ராத் வேதத்தில் அல்லாஹுதஆலா அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கும் அறுதிமானமும் இதில் அடங்கி இருக்கிறது. "நான் உங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவேன்" என்று அல்லாஹு தஆலா கூறி

இருப்பதற்கு உங்களது நற்கிரியைகளுக்குரிய நற்பயனை நான் பூர்த்தியாகத் தருவேன் என்பது கருத்தாகும்.

وَآمِنُوا بِمَا أَنزَلْتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ وَلَا تَكُونُوا أَوَّلَ كَافِرٍ بِهِ ۖ وَلَا تَشْتَرُوا بِآيَاتِي ثَمَنًا قَلِيلًا وَإِيَّايَ فَاتَّقُونِ ۝

41. மேலும் உங்களிடமுள்ளதை மெய்ப்பித்து நாம் இறக்குவ(தான இவ்வேதத்)தை விசுவாசியுங்கள்; இன்னும் இதை மறுப்பவர்களில் நீங்கள் முதன்மையானவர்களாகிவிட வேண்டாம். மேலும் (எனது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றி உங்கள் வேதங்களில் கூறியுள்ள) என்னுடைய வசனங்களை அற்பக் கிரயத்திற்கு விற்று விடாதீர்கள். இன்னும் எனக்கே அஞ்சுங்கள்.

مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ **முஸத்திகன் லிமா மஅகும் உங்களுடன் இருக்கிற (தவ்ராத்)தை மெய்ப்பித்து** என்று கூறி இருப்பதானது, யூதர்களிடமிருக்கிற தவ்ராத் வேதம் அல்லாஹு தஆலாவால் இறக்கப்பட்ட வேதம்தான் என்று திருக்குர்ஆன் ஒப்புக் கொள்கிறது என்பதைக் குறிக்கிறது. தவிரவும் அவர்களிடம் இருக்கிற தவ்ராத்தை உண்மை யென்று ஒப்புக் கொள்கிற குர்ஆனையும் அவர்கள் ஏற்று விசுவாசம் கொள்வது அவர்களது கடமையாகும் என்பதையும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறது.

وَلَا تَكُونُوا أَوَّلَ كَافِرٍ بِهِ **"இதை மறுப்பவர்களில் முதன்மை யானவர்களாகி விடவேண்டாம்"** என்பதற்கு திருக்குர்ஆனை நிராகரிப்பவர்களில் முதலாவது கூட்டத்தாராக இருக்காதீர்கள் என்பது கருத்து. ஏனெனில், இவர்களைப் பார்த்துத்தான் மற்றவர்களும் நடந்து கொள்ள வேண்டும். மதீனாவிலுள்ள யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முதல் முதலாக நிராகரித்தார்கள். இவர்களைப் பார்த்து மதீனாவிற்கு அக்கம் பக்கத்திலுள்ள பனூ குறைலா